சிவயோகம்



அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

கும்பாபிஷேக மலர்

21.03.2008

அருள்மிகு இலண்டன்
முத்துமாரி அம்மன் திருக்கோயில்

கும்பாபிஷேக மலர்

2008



தமிழ் நெறிக்கிழார்

பொன் பாலசுந்தரம்

மலர் ஆசிரியர்



சிவயோகம் **SIVAYOGAM**

ARULMIHU LONDON MUTHTHUMARI AMMAN TEMPLE

180-186 Upper Tooting Road, Tooting, London SW17 7EJ

Tel : 020 8767 9881 Fax : 020 8711 5333

E-mail: sivayogam1050398@yahoo.co.uk

©உரிமை : சிவயோகம், இலண்டன்

ISBN: 0-9549647-2-1

தலைப்பு : அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் கும்பாபிஷேக மலர் 2008

உள்ளடக்கம் : கவிதைகள், கட்டுரைகள், ஓவியங்கள்

மலர் ஆசிரியர் : பொன் பாலசுந்தரம்

பதிப்பு : முதல் பதிப்பு தி.வ.ஆ. 2039 பங்குனி மார்ச்சு 2008

அளவு : 27.5 X 21 செ.மீ

பக்கங்கள் : 184

அச்சாக்கம் : உலகத் தமிழர் பதிப்பகம்
4, சௌராட்டிரா நகர் 7ஆம் தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
பேசி: +91 44 6518 0155 / 94441 11951
மின்னஞ்சல்: eramathi@rediff.com
utpmathi@yahoo.co.in

வெளியீடு : சிவயோகம், இலண்டன்

மலரின் இதழ்களில்

சமர்ப்பணம்	5
நிறுவனர் உள்ளத்தில் இருந்து... - சக்தி ஆன்மீகச் சுடரொளி நாகேந்திரம் சீவரத்தினம்	6
காணிக்கை - பொன் பாலசுந்தரம்	8
கயிலை மாமுனிவர் சாந்தலிங்க இராமசாமி அடிகள் வாழ்த்து	9
திருவாவடுதுறை ஆதீனம் ஆசி	10
காசிவாசி முத்துகுமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் ஆசி	11
ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீஞானசம்பந்த தேசிக பரமாச்சாரியார் ஆசீர்வாதம்	12
ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் ஆசி	13
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள் ஆசி	14
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் கலாநிதி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி ஆசி	15
ஆலய குருமார்கள் படம்	16
சைவ முன்னேற்றச் சங்கம் வாழ்த்து	17
மலேசிய பொதுப் பணித்துறை அமைச்சர் - டத்தோஸ்ரீ டாக்டர்.ச. சாமிவேலு வாழ்த்து	18
தமிழ்நாடு, இந்து அறநிலையத் துறை அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் வாழ்த்து	19
பதிப்புரை - உழைப்புச் செம்மல் இரா. மதிவாணன்	20
தமிழ்த்தாய் வாழ்த்து	21
அனைத்தும் அவளால் வந்த ஆக்கம் - முனைவர் குமாரசுவாமித் தம்பிரான்	22
தொல்காப்பியப் பூங்கா - முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு. கருணாநிதி	25
பாரதி போற்றும் தெய்வ வாழ்வு - முனைவர் இரா. மோகன்	27
ஈழத்தின் சக்தி வழிபாட்டுத் தொன்மை - பேராசிரியர். சி.க. சிற்றம்பலம்	30
பரதமும் பரதத்துவமும் - அம்பிகை சீவரத்தினம்	34
அன்னை அருள்மிகு முத்துமாரி - பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்	37
சிவாகம வழிபாடும் கும்பாபிஷேக மகிமையும் - சிவஸ்ரீ. கி. பிச்சைக்குருக்கள்	39
சங்கும் மகிமையும் - பண்டிதர் சுந்தரனார்	41
தமிழக சிற்பக் கலை	43
இலண்டன் முத்துமாரியம்மன் பதிகம் - அருட்கவிதையரசர் சி. வீரபாண்டியத் தென்னவன்	50
திருவாசகத்தில் நாட்டுப்புறப் பாங்கு - அருள்நிதி தா. கோபாலகிருஷ்ணன்	52
திருத்தல வரலாறு - கவிஞர் ப.வை. ஜெயபாலன்	56
சக்தி தரும் சித்தி பெருமை - ஸ்ரீ. நா. முரளிக் குருக்கள்	60
இலண்டன் முத்துமாரி அம்மன் திருத்தல மகிமை	61
காஞ்சிப் பட்டும் தங்க ஆபரணங்களும்	68
The ultimate Prayer - Professor Kopan Mahadeva	69
Understanding Hinduism - Vanathy Ravindran	72
இயற்கையில் இறைவனைக் காண்க - வ. குமாரவேலு	74
இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் - ஆலய குருமார்களின் ஆசிச் செய்தி	75
அடி-முடிப் போட்டியில் உதித்த திருவண்ணாமலைத் தீபம்	76
தமிழும் கடவுட் கொள்கையும் - பேராசியர். சாலமன் பாப்பையா	77
சிவயோகம் அன்பர்கள் வாழ்த்து	80
தொன்மைத் தமிழர்கள் வாழ்வும் தாழ்வும் - சட்டத்தரணி யாழ். பாலசுந்தரம்	81
மெஞ்ஞான வீடடைய அஞ்ஞான இருளகற்றும் தேசிகன் - சி. வீரபாண்டியத் தென்னவன்	85
நல்லை நகர் நிகரில் நாவலர் - பேராசிரியர் சு. சண்முகவேல்	87
தந்தை 70க்குப் பிள்ளைத் தமிழ் - கவிஞர் அறிவுமதி	90

காலந்தோறும் சிற்பக் கலையும் பண்பாடும் - முனைவர் ஜெ.ஆர். இலட்சுமி 91
சைவ நன்னெறியில் மறுமலர்ச்சி - முனைவர் மா. மீனாட்சிசுந்தரம் 95
இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் - அறங்காவலர் சபை உறுப்பினர்கள் 97
திருமூலர் - திருமந்திரம் - பேராசிரியர் அரங்க இராமலிங்கம் 98
கிழக்கில் உதித்த அறிவொளி தவத்திரு விபுலானந்த அடிகள் - எம். கௌரி மலர் 101
அறிவியல் நோக்கில் இலக்கிய வளர்ச்சி - பேராசியர் முனைவர் கி. இராசா 104
பெரியபுராணத்தில் பண்பாடு - முனைவர் சாந்தா பழனிச்சாமி 107
சிதம்பரம் - மு. ஞானப்பிரகாசம் 109
இந்துப் பண்பாட்டைப் பரப்பிய ஈழத்துப் பெரியார்கள் - ப. கணேசலிங்கம் 113
சிதம்பரம் நடராஜர் ஆலயம் 117
வெம்பிளி நடராஜர் ஆலயம் 118
அன்னை பராசக்தி ஆனந்தமடைந்த ஒன்பது நாள்கள் 119
தேர் அமைப்புக் கலை 120
Thought for Healthy Life - Dr. S. Gnanachelvan 122
Concept of Maya in Saivism - Prof. S. Shanmugavel 125
தமிழ்த் திருஞானசம்பந்தனான ஞானசம்பந்தன் - பா. குஞ்சிதபாதம் 127
காப்பியர் கூறும் கடவுள் வணக்கம் - முனைவர். சாம்பசிவனார் 129
தமிழ் கற்போம்... தரணியை வெல்ல..! - முனைவர் கு. ஞானசம்பந்தன் 131
சைவர்களுக்கு ஒரு நந்திக்கொடி - ஐ.தி. சம்பந்தன் 133
திருமந்திரம் - முதுமுனைவர் ம.சா. அறிவுடைநம்பி 135
சைவ சித்தாந்தச் செந்நெறிகள் - முனைவர் கே. பாக்கியம் 137
ஞான ஒளிபரப்பிய மாமுனிவர் சிவயோக சுவாமிகள் 139
சிவனைச் சிந்தனை செய் மனமே - சிவநெறிக் கவிஞர். இராகவன் முத்து 140
புலம்பெயர் இளையோர் வாழ்விற் சைவம் - பாவலர் கந்தையா இராஜமனோகரன் 142
காரைக்கால் அம்மையாருக்கு முக்தி வழங்கிய ஆடலரசன் 145
சைவசித்தாந்தப் பக்திநெறியும், வினைக்கோட்பாடும் - த. மேரி ஜான்சிராணி 146
மட்டக்களப்பு - இந்து மதத்தின் இன்றைய போக்கும் இளைஞர்களும் - கி. புண்ணியமூர்த்தி 148
கோயில்களின் முக்கியத்துவம் - ஒதுவார் கதிர்பாரதி 152
சைவ ஆகமங்கள் - கலைமாமணி இரா. செல்வகணபதி 153
இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் - விசேட தினங்கள் 156
உலகப் பொதுமறையில் பக்தி உணர்வு - பேராசிரியர் பரிமளா இந்திரமோகன் 157
மரகத லிங்கேஸ்வரர் 161
1992 குடமுழுக்கு விழாப் படங்கள் 162
மாதா, பிதா, குரு, தெய்வம் 163
முத்தமிழ் விழாக் காட்சிகள் 164
ஈழ இந்துக்களிடம் ஏற்படுத்த வேண்டிய சீர்திருத்தங்கள் - செஞ்சொற் செல்வர் ஆறு. திருமுருகன் 165
வானியலும் சோதிடமும் - செ. மோகனப் பிரியா 169
கவிஞர் இரா. இரவி 172
The Oldest Religion Hinduism 173
இலண்டன் சிவயோகம் ஈழத்தில் பராமரிக்கும் இல்லங்களும், குழந்தைகளும் 175
2008 குடமுழுக்கு விழா அழைப்பிதழ் 177
இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் நிதிநிலை செயற்பாட்டறிக்கை 180
இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் அறங்காவலர் குழு மற்றும் நிர்வாகிகள் 181
நெகிழும் நன்றிகள் - சக்தி ஆன்மீகச் சுடரொளி நாகேந்திரம் சீவரத்தினம் 182

சமர்ப்பணம்




மனிதரும் தேவரும் மாயா
முனிவரும் வந்து சென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே
கொன்றைவார் சடைமேல்
பனிதரும் திங்களும் பாம்பும்
பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும் என்புந்தி
எந்நாளும் பொருந்துகவே!

மனிதர்களும், தேவர்களும், அமரரான முனிவர்களும் தஞ்சமென வந்து தலை தாழ்த்தி வணங்குகின்ற சிலந்த திருவடிகளை உடைய அழகு மிக்க அபிராமி அம்மையே!

கொன்றை மாலை அணிந்த நீண்ட சடையின்மீது குளிர்மிகு சந்திரனையும், அரவத்தையும், வற்றாத கங்கை நதியினையும் தாங்கி அருள்கின்ற நின் பதி சிவபெருமானும், நீயும் எம்முடைய உள்ளத்தில் எக்காலத்திலும் இணைந்து எழுந்தருளி அருள்புரிய வேண்டும்!

[அம்பிகையையும், சிவனையும் சேர்த்துத் துதிக்கும் பாடல்]

நிறுவனர் உள்ளத்தில் இருந்து...





இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தியாக எழுந்தருளி அருள்பாலித்துக் கொண்டிருக்கும் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மனுக்குக் கும்பாபிஷேகப் பெருவிழா நல்லடியார்களின் வேண்டுதலாலும், நல்லாசிகளினாலும் இப்போது நடைபெறுகிறது. இப்பெரு விழாவை நினைக்கும்போது அம்பாளின் பணியில் தொண்டனாக நிற்கும் அடியேனாகிய நானும் என்னையே மறந்த நிலையில் நிற்கிறேன்.

மாதா, பிதா, குரு, தெய்வம் – அவர்களே இந்தத் திருத்தலத்தில் அம்பாள் எழுந்தருளக் காரணமாக இருந்தார்கள். அவர்கள் எம்மை இப்பணிக்கு ஆளாக்கியமையும் ஆண்டவன் சித்தமாகும்.

சைவாகம விதிகளின்படி பன்னிரண்டு வருடங்களுக்கு ஒரு முறை மிகப் புனிதமும் புண்ணியமும் நிறைந்த குடமுழுக்கு விழா ஒரு ஆலயத்தில் நடந்தேறவேண்டும். கும்பாபிஷேக விழா எனவும், நன்னீராட்டு விழா எனவும் இவ்விழாவை அழைப்பார்கள்.

இலண்டன் முத்துமாரி அம்பாள் இந்தப் புனித தலத்தில் எழுந்தருளிப் பன்னிரண்டு ஆண்டுகளாக எமக்கெல்லாம் மனச்சாந்தி அளித்துக் கொண்டிருப்பது ஈழ நாட்டிலிருந்து அனாதைகளாக இந்த நாட்டிற்கு வந்த நாம் செய்த பூர்வபுண்ணியம்தான்.

எல்லாம் வல்ல முத்துமாரி அம்மன் இச்சேத்திரத்தில் எழுந்தருளிய அந்தக் காலம் நினைவுக்கு வருகிறது. அது –1996ஆம் ஆண்டு.

கண்கள் நீர் சொரிகின்றன. நெஞ்சம் கலங்கி நிற்கிறது. ''தாயே நீதான் கதி'' என்ற வார்த்தைகளை வாய் புலம்புகிறது. திக்குத் தெரியாத காட்டில் தவிக்கின்ற மனோநிலை வாட்டுகிறது. கொடிய புயலில் சிக்கிய கப்பலின் பாய்மரம் சரிந்தது போல ''வாழ்வா அல்லது தாழ்வா'' என்னும் தத்தளிப்பு.

ஈழத் தமிழர்களின் வாழ்க்கை இவ்வாறான உணர்வுகளைத்தான் ஏற்படுத்தியது. அடியேனுக்கு மட்டுமல்ல, சூழ்ந்து இருந்தவர்களுக்கும் இதே மனோ நிலைதான்.

''வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்'' என இராமலிங்க வள்ளலார் கூறினார்! அது எமது மக்களின் நிலைக்குப் பொருத்தமாக உள்ளது.

துன்பங்களை அனுபவிக்கும் போதெல்லாம் சிந்தைக்கு ஆறுதல் அளிப்பவள், தாய்க்குத் தாயாக – பார்வதியாக, துர்க்கையாக, இலட்சுமியாக, சரஸ்வதியாக – யாதுமே அவளாக இருக்கும்போது அவளையே அடைக்கலமாக நாடவேண்டுமென்ற மனத்தின் வழிகாட்டலால் அன்னை இங்கு எழுந்தருளினாள்.

சொந்த நாடு, பிறந்த மண், உடன்பிறப்புகள், உடமைகள், குலதெய்வங்கள், கல்விக் கூடங்கள் – இப்படி எல்லாவற்றையும் இழந்து புகலிடம் தேடி இந்த அந்நிய நாட்டிற்கு வந்து எமது மக்களுக்கு நிம்மதி தரும் சந்நிதி ஒன்று அமைவது காலத்தின் தேவை என்பதன் நிர்ப்பந்தத்தில்தான் இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோயில் உதயமானது.

அருள்மிகு அம்பாள் பிரதிஷ்டை செய்யப்பட்ட அன்றில் இருந்து இப்புனிதமான கும்பாபிஷேகம் நடைபெறும் இன்று வரையில் தம் தாயைத் தேடி வருவதுபோல அடியார்கள் தினமும் அன்னையை நாடி வருகிறார்கள். இவர்களின் வருகை திருத்தலத்தின் மகிமைக்கு திருவண்ணாமலை ஜோதியாக விளங்குகிறது.

''அன்னையின் திருப்பார்வை கிடைத்துவிட்டால் பாவங்கள் தீர்ந்துவிடும். வளங்கள் கொழித்துவிடும், மக்கள் வாழ்வு மலர்ந்துவிடும், நம் வறுமை நீங்கிவிடும், வாட்டங்கள் தீர்ந்துவிடும். வேதங்கள் கண் விழிக்கும். சத்தியங்கள் பூச்சொரியும், தத்துவங்கள் ஒளிவீசும். அண்ட சராசரங்களும் ஆர்த்தெழுந்து பண்ணிசைக்கும்'' என ''அன்னையின் அருள்'' பற்றி 2001 ஆம் ஆண்டில் வெளிவந்த ''சிவயோகம்'' சிறப்பு மலரில் அம்மையார் ஒருவர் உளப் பூரிப்படைந்து இருந்தார்.

இவற்றை எல்லாம் தம் கண்களால் கண்டும், உள்ளங்களினால் உணர்ந்தும், தமக்கேற்பட்ட சித்திகளினால் மகிழ்ச்சியுற்றும் வாழ்ந்து கொண்டிருக்கும் பக்தர்களைக் காணும்போது உள்ளத்தில் உவகை பொங்குகிறது.

மக்களின் நிம்மதிக்காக எழுந்தருளிய அம்பாளினால் அடியார்கள் வாழ்க்கையில் பல அனுகூலங்கள் கைகூடுவது அன்னையின் கருணையேயாகும்.

இலண்டனிலுள்ள மூத்த அம்பாள் ஆலயமாக விளங்கும் இந்தத் திருக்கோயிலைப் புனிதமாகப் போற்றவும், உரிய நேரத்தில் பூசைகளையும், திருவிழாக்களையும் நடத்திச் சமயக் கோட்பாடுகளைப் பேணவும் சென்ற பன்னிரண்டு ஆண்டுகளாக ஆலயத்தோடு அணிதிரண்டு நின்ற அடியார்கள், அன்பர்கள், ஆதரவாளர்கள் பாராட்டுதற்கு உரியவர்கள். அவர்களுடன் அடியார்க்கும் அடியேனாகவும், சிவசக்தியின் பணிக்கு அர்ப்பணிப்புச் செய்பவனாகவும் இருக்கும் அடியேனும் உங்களில் ஒருவன்.

கும்பாபிஷேக விழாவின்போது எமது வழிபாட்டில் எமது உடன் பிறப்புகளுக்கு விடிவு கிடைக்கவும், எமது தாய் மண் விடுதலை பெறவும், எமது வாழ்க்கை எமது சொந்த மண்ணிலும், புகலிட நாடுகளிலும் மலரவும் இந்தப் புனித தினத்தில் அண்ட சராசரங்களுக்கும் தாயாக எழுந்தருளி அருள் பாலிக்கும் முத்துமாரி அம்பாளை வேண்டுவோமாக. இதுவே எமது பிரார்த்தனையாக அமையட்டும்.

தீயவை மறையவும், அநீதி அழியவும், காயங்கள் மாறவும் வேண்டி இலண்டன் முத்துமாரித் தாயின் பாதம் சரணடைவோமாக.

''நாமார்க்கும் குடி அல்லோம், நமனை அஞ்சோம்'' என்னும் திருவாக்குடன் யாவருக்கும் எல்லாம்வல்ல இலண்டன் முத்துமாரித் தாயின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திக்கிறோம்.

வணக்கம்

சிவசக்தியின் பணியில்
சக்தி ஆன்மீகச் சுடரொளி

நாகேஸ்வரம் சிவரத்தினம்

நிறுவனர்



காணிக்கை

தனந் தந்து, நல்ல மனம் தந்து, நல்லன எல்லாம் தந்து பன்னிரண்டு ஆண்டுகளாகத் தாய்க்குத் தாயாக வீற்றிருந்து எமக்கு அருள் வழங்கிய இலண்டன் முத்துமாரித் தாயே! சரணம் அம்மா!

துன்பமும், துயரமும் நிறைந்த உள்ளங்களுடனும், நீர் சொரியும் கண்களுடனும், நிலையற்ற வாழ்வுடனும் உன் திருவடிகளில் நாம் அன்று சரணடைந்தோம். நிம்மதி தரும் சந்நிதியில் முழுமதியாக எழுந்தருளி எம்மை அணைத்துக் கொண்டாய்.

உன் கடைக்கண் கருணையினால் எமக்கு வாழ்வளிக்கும் தாயாக இன்று நீ இத்திருத்தலத்தில் வீற்றிருக்கிறாய். என்னே உன் கருணை!

இப்போது உனக்குக் குடமுழுக்கு விழா. பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாமக விழா நடைபெறுவதுண்டு. அதே புனிதத்துடன் உனக்குக் குடமுழுக்கு விழா எடுக்கப்படுகிறது.

இப்புனித விழா எமது உள்ளங்களைப் புனிதமாக்கி நின் அடியைச் சேவிப்பதற்கு ஒரு மார்க்கமாக அமையட்டும்.

தாய்த் தரிசனத் திருக்கோயிலில் நிம்மதிதரும் அருட்சக்தியாக வீற்றிருக்கும் தேவி! எமக்குக் குறைவிலாத கருணையை அள்ளி வழங்கி எமது மக்களுக்கு நிம்மதியான வாழ்க்கையைத் தருக என வேண்டுகிறோம்.

குடமுழுக்கு விழாவின் சிறப்பம்சமாக உன் பாதார விந்தங்களில் சமர்ப்பிக்கும் இம்மலரை உருவாக்கும் பணிக்கு உரியவனாக என்னைப் பணித்த இலண்டன் முத்துமாரி அம்மன் ஆலய நிறுவனர் அன்புக்குரிய ''சக்தி ஆன்மீகச் சுடரொளி'' சீவரத்தினம் ஐயா அவர்களுக்கும், அறங்காவலர் சபையினருக்கும் என் நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

மணங்கமழும் மலராகப் படைப்பதற்கு ஆசி நல்கிய சமய ஞானிகள், மற்றும் துணைநின்ற எழுத்தாளர்கள், கவிஞர்கள், அறிஞர்கள், உதவிக்கரம் தந்த தொண்டர்கள் போன்ற சகலரதும் பணி தொடர துணை நிற்பாயாக.


அருள் மகளாய், பூ மகளாய், புவி மகளாய், இசை மகளாய், அலங்கார நாயகியாய், அண்ட சராசரங்களையும் இரட்சிக்கும் இலண்டன் முத்துமாரித் தாயாக வீற்றிருக்கும் அன்னையே! மலர்களில் முதன்மை மலரான தாமரை மலர் போன்ற இம்மலரை உன் பாதாரவிந்தங்களில் காணிக்கை ஆகச் சமர்ப்பிக்கிறோம்.



பொன் பாலசுந்தரம்
மலர் ஆசிரியர்







கயிலைமாமுனிவர் வித்துவான்
சாந்தலிங்க இராமசாமியடிகள்
பேரூராதீனம், பேரூர் (அஞ்சல்)
கோயமுத்தூர் - 641 010. தமிழ்நாடு.
தொலைபேசி: 2607995, 2608678

நாள் : 29-8-2007

வாழ்த்து

அம்மையின் தாள்கள் போற்றும் அடியவர் இலண்டன் தன்னில்
செம்மைசேர் அறங்கள் பேணித் திருக்கோயில் முத்துமாரி
அம்மையின் வடிவமைத்து அன்புடன் வழிபாடாற்றி
இம்மையும் மறுமைவாழ்வும் எய்திடப் பணிவார் வாழி.

ஆங்கில ஆட்சியாலே அடிமை நாடுகளில் ஒன்றாய்த்
தேங்கிய தமிழ் இலங்கைச் சிவநெறியாளர் வந்து
பாங்குற இலண்டன் முத்துமாரியின் பழைமைக் கோயில்
ஓங்கிடப் பணிகள் செய்தே உறவுடன் வளர்வார் வாழி.

செந்தமிழ் உணர்வும் சைவத்திருநெறி போற்றும் பண்பும்
வந்தனை வழிபாடாற்றும் வளமையும் உடையார் தங்கள்
சிந்தனை செழுமைக்காகத் திருக்கோயில் பலவும் கண்டார்
சந்தமார் முத்து மாரியம்மன்தாள் வணங்கும் அன்பர் வாழி.

திருமுறைத் தமிழாற் போற்றிச் சிந்தையில் தெளிவு பெற்றுப்
பெருமைசேர் அம்மைதாளைப் பெருவிருப்புடன் அருச்சித்து
உருகிய மனத்தராகி உவந்தன்பால் போற்றி செய்தே
திருக்குட நீராட்டன்பர் திருப்பணி வளர்க வாழி.

பத்தியோடு அடியேம் உன்னைப் பணிந்திடப் புரிவாய் போற்றி
புத்தியோடு உயரும் செல்வம் பொருந்திட அருள்க போற்றி
எத்திக்கும் புகழும் இலண்டன் மாநகர் இறைவி போற்றி
முத்து மாரித்தாய் போற்றி முத்திக்கு வித்தே போற்றி.

இலண்டன் முத்து மாரியம்மன் திருக்கோயில் திருக்குட நீராட்டு நடைபெறுவது குறித்து மகிழ்ச்சி. விழாவும் மலரும் சிறக்க அம்பலவாணப் பெருமான் தாள்மலர் நினைத்து வாழ்த்துகின்றோம்.

அன்புள்ள

தவத்திரு சாந்தலிங்க இராமசாமியடிகள்
பேரூராதீனம்.



திருவாவடுதுறை ஆதீனம்

ஆசி

'நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே'

– அப்பர் தேவாரம்.

03.09.2007



இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோயிலுக்குக் கும்பாபிடேகம் விரைவில் நடைபெற இருப்பது அறிந்து மகிழ்ச்சி அடைகின்றோம்.

அயல்நாட்டில் நமது ஆன்மிகப் பண்பாட்டிற்கு அரியதோர் விளக்கமாகத் திகழும் இத்திருக்கோயிலில் நித்திய பூசைகள் நியமமாக நடைபெறுவதோடு, திருவீதி உலாவும் தங்கத்தேர் பவனியாக நடைபெறுவதும் மிகுந்த சிறப்பிற்குரியது. தினமும் அடியார்களுக்கு மகேசுவர பூசையும் நடைபெறுவது போற்றுதற்குரிய புண்ணியச் செயலாகும்.

இலண்டன், அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோயில் கும்பாபிடேகம் சிறப்பாக நடைபெற்று, மக்களுக்கெல்லாம் இம்மை, மறுமை வளங்களும், இறையுணர்வும் கைகூடப் பெற்றுச் சிறந்திட வேண்டுமென நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப் பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

கயிலை மா முனிவர்
திருவளர் திரு காசிவாசி
முத்துகுமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

அதிபர், காசித்திருமடம்
திருப்பனந்தாள் – 612 504.
தஞ்சை மாவட்டம்
✆: 0435 2456655

ஆசி



'தாரமாய மாதராள்'
'மடந்தை பாகத்தர்'
'பெண்சுமந்த பாகத்தன்'
'எத்திறம் நின்றான் ஈசன்
அத்திறம் நின்றாள் அவளும்'
என்பன அருளாளர்கள் வாக்கு.



திருப்பனந்தாள் மடம்

இறைவனின் அருட்சக்தியாக விளங்கும் அம்பிகை உயிர்களுக்கு அருளும் வண்ணம் கருணை கொண்டு பல திருப்பெயர்களோடு, பல வடிவங்களில் பல இடங்களில் தனித்து நின்று அருள் செய்கின்றாள். அவ்வகையில் இலண்டன் மாநகரில் ஸ்ரீமுத்துமாரி அம்மனாக எழுந்தருளியிருப்பது மக்களின் ஒருமித்த, மாறா, அன்பையும் பக்தியையும் வெளிப்படுத்துவதாய் அமைந்துள்ளது.

ஸ்ரீ முத்துமாரியம்மன் மீது கொண்ட முதிர்ந்த பக்தியின் வெளிப்பாடாகக் குடமுழுக்கு விழா செய்யவிருப்பது பாராட்டிற்குரியது. தொடர்ந்து நாகரிகம், பண்பாடு, கலைகள், இலக்கியம் முதலியவற்றின் பதிவிடங்களாக நமது திருக்கோயில்கள் திகழ்கின்றன. வரலாற்றிலும் வாழ்விலும் பிரித்தறிய முடியாத அளவிற்குப் பிணைத்திருப்பன நமது திருக்கோயில்கள் என்பதனை உணர்த்துவிக்கின்ற வகையில் குடமுழுக்கு விழா மலரை அன்பின் வெளிப்பாடாக மலர்விப்பது சமயத்திற்கும், சிறப்பாகச் சமுதாயத்திற்கும் பெருந்தொண்டாகும்.

குடமுழுக்கு விழாவும், விழா மலரும் விழுமிய பயன் தரத்தக்கதாய் அமைய சீரலைவாய் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

உ

சிவபெருமான் போருள்



புனித மிக்க ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரியார்


292 ஆவது குருமகாசன்னிதானம் மற்றும் ஆதீனகர்த்தர் மதுரை ஆதீனம்,

தெற்காவணி மூல வீதி, மதுரை – 625 001.

தொலைபேசி : 0452 4377116, 4381005, 2347475 தொலைவரி : 'ஆதீனம்' மதுரை

திருச்செந்தூர் கிளை : 04639 245419

தேதி : 20-8-2007



ஆசீர்வாதம்!

நமது அன்பிற்குரிய திரு. பொன் பாலசுந்தரம் அவர்களுக்குத் திருவருளைச் சிந்தித்து, ஆசீர்வதித்து எழுதுவது.

தங்களின் 6-8-2007 ஆம் நாளிட்ட மடல் கிடைத்து, மகிழ்ந்தோம்!

நமது இலண்டன் அருள்மிகு முத்து மாரியம்மன் திருக்கோயிலின் மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடக்கட்டும்!

மக்கள் அனைவரும் ஒருவரை ஒருவர் நன்கு புரிந்து, மதித்து, மனித நேயத்துடன் திகழ்ந்து, ''நிலையாமையை'' உணர்ந்து, மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்திடப் பிரார்த்திக்கின்றோம். எல்லோர்க்கும் ஆசீர்வாதம்!

ஸ்ரீ ஞானசம்பந்த தேசிகன்



ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்

கட்டளை விசாரணை

தருமபுர ஆதீனம் மௌனமடம்

திருச்சிராப்பள்ளி



ஆசி

இலண்டன் மாநகரில் தாய்க்கோயிலான முத்துமாரி அம்மன் திருக்கோயில் குடமுழுக்கு நடைபெறுவது அறிந்து மகிழ்ச்சி. அதன் நினைவாக மலர் வெளியிடுவதும் பாராட்டுதற்குரியது. ஆன்மீக மலர்களின் ஆக்கங்களில் அனுபவமிக்க பொன் பாலசுந்தரம் அவர்கள் மலர் ஆக்கப் பணியைச் செய்வதும் மகிழ்ச்சிக்குரியது.

மாரி – செல்லி முதலியன நமக்கு மழைக்குரிய தெய்வங்களாகப் போற்றப் பெறுகின்றன. மிகப்பெரிய அர்த்தநாரீஸ்வர மூர்த்தத்தை இத்திருக்கோயில் பெற்று விளங்குவதும், நாளும் நாளும் ''உன்னைச் சிங்காரித்து உன் அழகு பார்த்தல்'' என்ற குருஞான சம்பந்தர் வாக்குக்கிணங்க அம்மையை அலங்காரச் சிறப்பில் பக்தர்கள் கண்டு மகிழ்வதும் சிறப்புடையதாகும்.

குடமுழுக்கு இனிதே நடைபெறவும், மலர் மணங் கமழவும், ஆலய நிறுவனர். அறங்காவலர்கள், செயலர், பொருளாளர் உள்ளிட்டோர் நீடினிது வாழவும், எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கநாதப் பெருமான் திருவருளையும், தருமை ஆதீன குருமணியின் குருவருளையும் சிந்தித்து வாழ்த்துகின்றோம்.

குமாரசுவாமித் தம்பிரான்
















ஆசிரியர் – ''உன்னைச் சிங்காரித்து அழகு பார்த்தல்'' என்பதற்கமைய தினமும் வெவ்வேறான அலங்கார நாயகியாக அம்பாள் அடியார்களுக்குக் காட்சி தருவது ஒரு விசேட அம்சமாகும். அன்னையின் அலங்காரத் தோற்றங்கள் தம்பிரான் சுவாமிகளின் ஆசிச் செய்தியை அலங்கரிப்பதில் மகிழ்ச்சி காண்போமாக.



நல்லை ஆதீனம்

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகள்

ஆசி

அம்பிகை அடியார்களுக்கு

இலண்டன் மாநகரில் எழுந்தருளியிருந்து அருள் புரியும் முத்துமாரி அம்பாளுக்கு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு மகிழ்ச்சி அடைகின்றோம். ஒரு ஆலயத்தில் கும்பாபிஷேகம் செய்வதும், செய்விப்பதும் புண்ணியப் பேறாகும்.

இதனை உணர்ந்தும் வகையில் நம் சமயம் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்", "ஆலயம் தொழுவது சாலவும் நன்று", "நித்தலும் எம் பிரானுடைய கோயில் புகு" என்று எமக்கு இயம்புகின்றது. இதனை உணர்ந்த ஈழத்துச் சைவத் தமிழ் மக்கள் எங்கெல்லாம் வாழுகின்றார்களோ அங்கெல்லாம் ஆலயங்கள் அமைத்து எமது சமயத்தைப் பார் போற்றும் சமயமாக வளப்படுத்தி வருகிறார்கள்.

இவ்வகையில் அண்டசராசரத்திற்கும் தாயாக விளங்கும் அன்னை பராசக்தி எனப் போற்றப்படும் முத்துமாரி அம்பாளுக்கு நிறைவான ஆலயம் அமைத்து கும்பாபிஷேகம் காண்பது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

இவ் ஆலயம் சிவயோகம் எனும் அறக்கட்டளை நிதியத்தை உருவாக்கி ஈழத்தில் வாழ்க்கைக்குப் போராடிக் கொண்டிருக்கும் தமிழர்களுக்கு உதவும் பணி போற்றுதற்கு உரியது.

கும்பாபிஷேக விழாவுக்கான சிறப்பு மலர் வெளிவருவது மகிழ்ச்சி தருகிறது. மலர் ஆன்மீக தத்துவப் பொக்கிஷமாக வெளிவர வாழ்த்துகள். மலர் ஆசிரியர் பொன் பாலசுந்தரம் அவர்களின் பணி நிறைவுற மனதார வாழ்த்துகின்றோம்.



ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை
தலைவர்
துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி,
கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P.

SRI DURGADEVI DEVASTANAM
Tellippalai, Sri Lanka.
President:
Durgaduranthari, Sivathamilselvi,
Dr. Miss. Thangamma Appacuddy, J.P.

ஆசி



இலண்டன் முத்துமாரி அம்பாளுக்கு குடமுழுக்கு விழா

மண்ணின் வெப்பத்தைக் குளிர்விக்கும் சக்தி முத்துமாரித் தாய்க்கு உண்டு. மழைபோன்று தண்ணளியை மக்கள் மனத்தில் இடம் பெறச் செய்பவள் முத்துமாரித்தாய். அன்னை பராசக்திக்கு ஆயிரமாயிரம் நாமங்கள் உண்டு என்றாலும் மாரி என்று சொல்லும் பொழுது உள்ளத்தையும் உதட்டையும் அது குளிர வைக்கிறது.

எமது தமிழ்மக்கள் தாங்கள் எங்கு சென்று குடியேறினாலும் அங்கு தாம் வழிபடுவதற்கென்று ஒரு கோயிலை அமைக்கத் தவறுவதில்லை. அந்த வகையில் இலண்டன் மாநகரில் அமைந்த முத்துமாரி அம்மன் கோயில் பிரசித்தி பெற்ற ஒரு திருத்தலமாகும். எங்கும் எதிலும் நல்லனவற்றைக் காணும் சிறப்பு எம்மவருக்கு உண்டு. ஆகவே அருள் குளிர்ச்சியினால் அகிலத்தை வாழ வைக்கும் முத்துமாரித் தாய்க்குக் குடமுழுக்கு விழா எடுக்க இருப்பது குறித்து நான் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
சமாதான நீதிபதி

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

சைவ முன்னேற்றச் சங்கம் (UK)

'சைவசமயக் கருத்துணர்வினூடாகச் சமூகசேவை'

SAIVA MUNNETTA SANGAM (UK)

"Community Service Through Hindu Concern"

2 Salisbury Road, Manor Park, London E12 6AB.
Tel/fax : 020 8514 4732 Fax : 01268 561805, E-mail : smsuk77@yahoo.co.uk

மகா கும்பாபிசேகம்

அகில உலகங்களையும் படைத்துக் காத்து அருளுகின்ற அன்னை ஆதிபராசக்தியானவள் வேண்டுவோர் வேண்டுவதைக் கொடுக்கும் அன்னையாக அன்பின் வடிவாக ஸ்ரீ முத்துமாரியம்மனாக இலண்டன் ரூற்றிங் பகுதியில் வீற்றிருந்து அருளாட்சி செய்கின்றாள்.

அன்னையின் ஆலயத்தில் பன்னிரண்டு வருடத்தின் பின்னர் உரிய காலத்தில் புனராவர்த்தன மகாகும்பாபிசேகம் நடைபெறவுள்ளதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம். நேரந் தவறாத ஆறுகாலப் பூசையும், உரிய காலத்தில் மகோற்சவமும் நடைபெறும் ஆலயம் இதுவென்றால் மிகையாகாது.

புலம் பெயர் நாடுகளில் ஆலயங்கள் மக்களின் ஆன்மிகத் தேடல்களைப் பூர்த்தி செய்வதோடல்லாமல் எம் இனத்தவர்களின் கலை, கலாசார, மொழி பாரம்பரியங்களையும் எம் இளம் சிறார்களுக்குப் போதிக்க வேண்டிய தேவையும் உள்ளது. அதனையும் இவ்வாலயத்தின் மூலம் திறம்படச் செய்து வருகின்றார்கள். அத்துடன் காலத்தின் தேவையாக இருக்கும் எம்மவர்கள் துயர்துடைப்பிலும் இவ்வாலயம் முன்னுதாரணமாகத் திகழ்ந்து பெரும் பங்காற்றி வருகின்றது. இவற்றிற்கெல்லாம் அன்னை முத்துமாரியின் அருள் கடாட்சமே காரணம்.

கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது முதுமொழி. இம்முது மொழியைக் கருத்தில் கொண்டு எம்மவர்கள் செறிந்து வாழும் ரூற்றிங் பகுதியில் இவ்வாலயத்தைப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன் அழகுற அமைத்து அதனைச் சிறந்த முறையில் பரிபாலித்து வரும் அறங்காவலர் சபையினர் போற்றுதற்குரியவர்கள்.

அன்னையின் அருள் எம் எல்லோருக்கும் கிடைக்கவும், இப் புனராவர்த்தன மகா கும்பாபிசேகம் திறம்பட நடந்தேறவும் அத்துடன் குறிஞ்சிப் பூ போல் மலரும் புனராவர்த்தன மகா கும்பாபிசேகச் சிறப்பிதழ் சுவடாக, அழியாத ஆவணமாகத் திகழவும், எல்லாம் வல்ல அன்னை முத்துமாரியம்மனைப் பிரார்த்திக்கின்றோம்.

சூ. பாலசிங்கம்

ஆட்சிக்குழுத் தலைவர்

2-12-2007

அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் ஆலய குருமார்கள்



1. சிவஶ்ரீ விஜயகுமாரக் குருக்கள்
2. சிவஶ்ரீ நா. சதீஸ் குருக்கள்
3. சிவஶ்ரீ ரவீந்திரக் குருக்கள்
4. சிவஶ்ரீ திருநாவுக்கரசு குருக்கள்
5. சிவஶ்ரீ பாலேந்திர குருக்கள்
6. சிவஶ்ரீ முரளீதர குருக்கள்
7. சிவஶ்ரீ பாலசுப்ரமணிய குருக்கள்
8. சிவஶ்ரீ ஆரூரன் குருக்கள்
9. சிவஶ்ரீ திவாகர குருக்கள்
10. சிவஶ்ரீ மா. சதீஸ் குருக்கள்
11. சிவஶ்ரீ சிவபிரகாச குருக்கள்

அருள்மிகு வெம்பிளி நடராஜர் ஆலய குருமார்கள்



1. சிவஶ்ரீ சோமசுந்தர குருக்கள்
2. சிவஶ்ரீ சந்திரசேகர குருக்கள்
3. சிவஶ்ரீ கோகுலநாத குருக்கள்
4. சிவஶ்ரீ சட்நாத குருக்கள்
5. சிவஶ்ரீ சங்கர் குருக்கள்

MENTERI KERJA RAYA MALAYSIA
MINSTER OF WORKS, MALAYSIA
KEMENTERIAN KERJA RAYA MALAYSIA
TINGKAT 5 BLOCK 'A' KOMPLEKS KERJA RAYA
JALAN SULTAN SALAHUDIN 50580 KUALA LUMPUR



மலேசிய இந்தியர் காங்கிரஸ் தேசியத் தலைவரும், பொதுப்பணி அமைச்சருமான மாண்புமிகு **டத்தோ ஸ்ரீ ச. சாமிவேலு** அவர்கள் வழங்கிய

வாழ்த்துச் செய்தி

இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோயில் நன்னீராட்டு விழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

மனிதன் முழுமை பெற வேண்டுமென்றால் இறைச்சக்தியோடு ஒன்றிணைய வேண்டும். ஒன்றே குலம் - ஒருவனே தேவன் என்பது இந்து தருமத்தின் கோட்பாடு. அந்தத் தேவனைக் காணும் அறிவே மெய்ப்பொருள் ஆகும். தேவனைப் பேருணர்வோடு நோக்கினால் காணும் தோற்றங்களில் அனைத்திலும் தெய்வத்தைக் காணலாம். இருப்பினும் வாழ்வின் பொருளை உணரும் வகையில் அவதாரம் எனப்படும் ஒவ்வொரு பிறப்பின்வழி நமக்கு வழிகாட்டிக் கொண்டிருப்பவை. இதிகாசங்கள் பிறப்பின் உண்மையையும் நிதர்சனத்தையும் எடுத்துக்காட்டுவதுதான் இறைவழிபாட்டின் பேருண்மை.

இந்த உண்மையை உணர்ந்த இந்துப் பெருமக்கள் உலகத்தில் எங்கு சென்று வாழ்ந்தாலும் தங்களது பாரம்பரியப் பண்பாடுகளையும் உடன் கொண்டு சென்று இன்று வரை அதனைக் கடைப்பிடித்து வருகின்றனர். அந்த வகையில் நமது கோயில்கள் அந்தந்த நாடுகளில் இந்தியப் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டும் சின்னங்களாக விளங்குகின்றன.

அந்த வகையில் இலண்டன் மாநகரில் 26 அடி உயரத்தில் தங்கக் குடையுடனான, சித்திர வேலைப்பாடுகள் அமைந்த தேரினைப் பெற்றுள்ளதாக அருள்மிகு இலண்டன் முத்துமாரியம்மன் ஆலயம் திகழ்ந்து வருகின்றது. திரைகடல் ஓடித் திரவியம் தேடி வாழ்ந்து கொண்டிருக்கும் இந்து ஆன்மிகப் பெருமக்களுக்கு ஏற்றதொரு வழிபாட்டுத் தலமாக அமைந்துள்ள இக்கோயில் நன்னீராட்டு விழா நடைபெறுவதை அறிந்து மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். இக்கோயில் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் உறுதுணையாக இருக்கும் கோயிலின் நிருவாகத்திற்கு எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன். கடல் கடந்து வாழ்ந்தாலும் நம் இனத்தின் பெருமைகளைப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் இக்கோயில் என்றென்றும் பாதுகாக்கப்பட வேண்டிய ஓர் அற்புத செல்வமாகும்.

கோயிலின் வளர்ச்சிக்கும் மேம்பாட்டுக்கும் பல வகையிலும் ஆதரவாகவும், ஒத்துழைப்பாகவும் இருந்துவரும் நிருவாகத்தினருக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்ளும் அதேவேளையில், நடைபெறவிருக்கும் கோயிலின் நன்னீராட்டு விழா எல்லா வகையிலும் சிறப்புடன் நடைபெற முத்துமாரி அம்மனின் தாள் பணிந்து எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன்.

அன்புடன்

டத்தோ ஸ்ரீ ச. சாமிவேலு

கே.ஆர். பெரியகருப்பன்
இந்து சமய மற்றும்
அறநிலையத் துறை அமைச்சர்



இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோயில், 2008 மார்ச்சு திங்களில் குடமுழுக்கு காணவிருப்பதையும் அதே நாளில் குடமுழுக்கு மலர் வெளியிடவிருப்பதையும் அறிந்து அகம் மகிழ்கிறேன்.

சங்க இலக்கியங்கள் தமிழுக்கு ஆணிவேராகத் திகழ்ந்தன என்றால், பக்தி இலக்கியங்கள் தமிழுக்குப் பக்க வேர்களாகத் திகழ்ந்தன என்று துணிந்து கூறலாம்.

நீள் நெடுங்காலமாகத் தமிழோடு ஆன்மிகமும் பின்னிப் பிணைந்து உறவாடி வருவதை இவ்வுலகு நன்கு அறியும். சமணத்தை நாலடியாரால் செழிக்க வைத்தது தமிழ். பௌத்தத்தை மணிமேகலையால் மலர வைத்தது தமிழ். கிறித்துவத்தைத் தேம்பாவணியால் கிளைவிடச் செய்தது தமிழ். இஸ்லாத்தைச் சீறாப்புராணத்தால் செழிக்க வைத்தது தமிழ். சைவத்தைத் திருவாசகத்தாலும் வைணவத்தைத் திவ்வியப் பிரபந்தத்தாலும் நடமாட விட்டது தமிழ். அனைத்து மத பக்திக்கும் அரவணைப்பாகவே இருந்து வந்துள்ளது தமிழ்.

உலகளாவிய நிலையில் பல நாடுகளுக்கும் தமிழை எடுத்துச் சென்ற பெருமை ஈழத் தமிழர்களுக்கு உண்டு. அந்தந்த நாடுகளில் நிலவும் பல்லினப் பண்பாட்டுச் சூழல்களுக்கிடையேயும் தமிழ்மொழி, இலக்கியம், கலை, பண்பாடு முதலான அனைத்து விழுமியங்களையும் மறந்துவிடாமல் உறுதியாகப் பேணி வருபவர்களும் அவர்களே.

அந்த வகையில், இலண்டன் மாநகரிலும் புகலிடம் தேடிச் சென்ற தமிழர்கள் தமிழ்ப் பள்ளிகளை நிறுவியும் ஆலயங்களை எழுப்பியும் கலைவளர்க்கும் நிறுவனங்களை உருவாக்கியும் தமிழ்ப்பணி ஆற்றிவருவதை அறிந்து மகிழ்கிறேன்.

இலண்டன் நகரில் அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோயிலைச் சிறப்பாகக் கட்டியெழுப்பி, 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை குடமுழுக்குச் செய்து ஆன்மிகம் வளரத் தொண்டாற்றிவருவது பாராட்டுக்குரியது. அம்மன் திருக்கோயில் அறங்காவலர்க் குழுத் தலைவர் ஆன்மிகச் செம்மல் நா. சீவரத்தினம் அவர்களின் வழிகாட்டலில் இயங்கும் குழுவினர் குடமுழுக்கு விழாவைச் சிறப்பாக 2008 மார்ச்சு திங்களில் நடத்திடவும், அவ்வேளையில் திரு. பொன் பாலசுந்தரம் மலராசிரியராக இருந்து உருவாக்கும் குடமுழுக்கு மலரை வெளியிடவும் உள்ளதை அறிந்து மகிழ்கிறேன். இக்குழுவினரைப் பாராட்டுகிறேன்.

குடமுழுக்குச் சிறப்பாக நடைபெறவும் குடமுழுக்கு மலர் வெளியிட ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி.

தங்கள் அன்புள்ள,

தலைமைச் செயலகம்
சென்னை - 600 009.

நாள் : 21-12-07

21/12/07

கே.ஆர்.பெரியகருப்பன்



பதிப்புரை

உழைப்புச் செம்மல் **இரா. மதிவாணன்,** எம்.எஸ்.சி.,
அதிபர், உலகத் தமிழர் பதிப்பகம்

இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோயில் குடமுழுக்கு விழா மலரைப் பதிப்பித்து வெளிக் கொணரும் நல்வாய்ப்புக் கிடைத்தமையை எண்ணிப் பெரிதும் மகிழ்கிறேன். பக்தியோடு அம்பாளின் திருமுகத்தைக் காண்பவர்க்கெல்லாம் சக்தி கிடைக்கும் என்பதும் தேம்பித் தவித்துத் தேடும் கண்களுக்கெல்லாம் உய்யும் வழியை அவள் காட்டுவாள் என்பதும் பக்தர்களின் நம்பிக்கை. கசிந்துருகிக் கண்ணீர் மல்கி அவளின் காலடி பற்றுவோர்க்கெல்லாம் கருணை மழையால் நனையவிட்டுக் கரம் பற்றி அரவணைப்பாள் எனப் பலரும் போற்றும் அந்தப் புனிதத் தெய்வத்தின் குடமுழுக்கு இந்த உலகு செழிக்கச் செய்யும் விடிகிழக்கு.

தனக்கு உகந்தவர்களைக் கொண்டு இறைவன் தன் பணியை நிறைவேற்றிக் கொள்ளுவான் எனும் நம்பிக்கையின் வெளிப்பாடாகத் திகழ்பவர் சக்தி ஆன்மிகச் சுடரொளி **நா. சீவரத்தினம்** ஐயா அவர்கள். ஈழ மண் தந்த இந்த இறையன்பர் இலண்டனில் காலூன்றி இமயமாய் ஆன்மிகத்தை வளர்க்கும் பாங்கு போற்றிப் புகழத்தக்கது. வெறும் பக்தியொடு நின்றுவிடாமல் சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகளையும் ஒருங்கிணைத்துத் தொண்டாற்றிவரும் பேருள்ளத்தர். தமிழ்ச் சிறார்களின் கல்வியிலும், கலைகளிலும் கவனம் செலுத்தி வருபவர். பூமிப் பந்தில் தமிழர்கள் எங்கு இன்னல்களுக்கு ஆளாக நேர்ந்தாலும் அவர்களின் கண்ணீரைத் துடைத்தெறியும் கரங்களுக்குச் சொந்தக்காரர். பன்முகத் தன்மையில் ஆன்மிகத் தொண்டும், தமிழ்த் தொண்டும், தமிழ்ச் சமுதாயத் தொண்டும் ஆற்றிவரும் இவரின் அறிவார்ந்த திறன் வியப்புக்குரியது. 'தமிழன் எங்கிருப்பினும் தமிழனே' என்னும் தத்துவத்தின் வித்தாகவும் வேராகவும் விழுதாகவும் செயற்படுபவர் மிகச் சிலரே. அவர்களும் குறிப்பிடத்தக்க சிறப்புக்குரியவர் ஐயா சீவரத்தினம் அவர்கள். அவருடைய பெருமுயற்சியால் தமிழையும், ஆன்மிகத்தையும், சைவத்தையும் இலண்டன் வாழ் தமிழர்கள் காற்றாகச் சுவாசித்து உயிர் வாழ்கின்றனர். அவருடைய தொண்டுகள் தொய்வின்றித் தொடர வாழ்த்துகிறோம்.

அறப்பணியிலும் ஆன்மிகப் பணியிலும் இலக்கியப் பணியிலும் ஈடுபட்டு இவற்றை வாழ்வியலோடு இணைத்துச் செல்லுகின்ற அதிசயத் தமிழர் திரு. **பொன் பாலசுந்தரம்** அவர்கள். மூத்த பத்திரிகையாள ராகவும் சிறந்த எழுத்தாளராகவும் இம்மலரின் ஆசிரியராகவும் திகழ்கின்ற இவர இக் குடமுழுக்கு விழா மலரைத் திறம்படத் தொகுப்பதற்காக நல்கிய கடும் உழைப்பு பாராட்டுக்குரியது. ஆன்மிக மலர்கள் பல அடுக்கடுக்காய் வந்தாலும் இதுபோன்ற மலர் இதுவரையும் வந்ததில்லை என வியப்புறும் வண்ணம் அவரின் பணி செழிப்புற்றது. அவரை வெகுவாகப் போற்றுகிறோம்.

இக் குடமுழுக்கு மலரில் அரிய கருத்துகள் அடங்கிய கட்டுரைகள் பல இடம் பெற்றுள்ளன. அன்னையின் அற்புதங்கள் பற்றிய செய்திகள் நிரம்பி வழிகின்றன. தங்களின் அனுபவ உணர்வுகளையும், இலக்கிய வயலில் அறுவடை செய்த விளைச்சல்களையும் படைப்பாளர்கள் பக்கத்துக்குப் பக்கம் வாரி வழங்கியுள்ளனர்.

இக் குடமுழுக்கு மலரைப் பதிப்பிக்கும் நற்பணியில் ஈடுபடும் நல்வாய்ப்பை எமக்கு நல்கிய சக்தி ஆன்மிகச் சுடரொளி நா. சீவரத்தினம் ஐயா அவர்களுக்கும், மலர் ஆசிரியர் திரு. பொன் பாலசுந்தரம் ஐயா அவர்களுக்கும், விழா ஏற்பாட்டுக் குழுவினருக்கும், இம்மலர் மாலிகையைக் கட்டியெழுப்ப உரிய பங்களிப்புச் செய்த அனைத்துப் பெருமக்களுக்கும் இதயம் நிறைந்த நன்றி மலர்களைக் காணிக்கையாக்கி மகிழ்கிறோம்.



தமிழ்த்தாய் வாழ்த்து



புலவர் சிவானந்தன்

சீருடைச் செந்தமிழ் மகள் வாழி! எம்
சிந்தையில் நிறைந்தே அவள் வாழி!
போருடைப் புறமும் அன்புடை அகமும்
போர்த்த பேரழகாள் புகழ் வாழி!
ஆரமாய் இயலொடு தேனிசை நாடகம்
அணிந்தவள் சங்கம் தனில் ஊறிச்
சாரமாய் விந்த காவியச் சோலையில்
களி நடம் பயின்றவள் பேர் வாழி!
ஏருடை நிலமும் காருடை வளமும்
தாருடை அரசும் இல்லாமல்
பாரெலாம் அலையும் தமிழரை இணைத்தே
வீறுடைச் செல்வியாய் அவள் வாழி!
குறள் எனும் முடி கொண்ட தமிழ் மகளே-ஒரு
குவலயப் புகழ் கொண்ட மொழி மலரே!
இறைமை கொள் இளமை கொண்டவளே -உயிர்
இனித்திட அணைத்திடும் இனியவளே!
குறிஞ்சியும் முல்லையும் நெய்தலும் மருதமும்
பிரிந்தவர் பாலையும் கொண்ட அகம்
எறிந்தவர் வேலினை ஏந்திய நெஞ்சுடன்
சரிந்தவர் போர் மறம் பேசும் புறம்
இலக்கியச் செழிப்புடன் இலக்கணச் செறிவும்
துலக்கிடும் பெட்டகம் ஆனவளே!
உயிர்க்கலை அறிவும் உலகியல் நுண்மையும்
பயின்றிடும் பெருமை கண்டவளே!
ஆட்சியும் அரசும் அறஞ்செறி மானமும்
மாட்சியாய் மதித்தவர் மாதரசே!
வீழ்ச்சியில் வீழ்ந்து போன உன் குடிகளை
ஆட்சியில் அமர்த்திட அருள் மகளே!



குறிப்பு : வருடாவருடம் சிவயோகம் முத்தமிழ் விழாத் தொடக்கத்தில் இசைக்கப்படும் வாழ்த்துப்பா.



அனைத்தும் அலளால் ஏந்த ஆக்கம்

முனைவர் ஸ்ரீமத் மௌன குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்
கட்டளை விசாரணை, தருமபுரம் ஆதீனம்
மௌனமடம், திருச்சிராப்பள்ளி

உலகிலுள்ள ஆன்மாக்களின் ஈடேற்றம் கருதி இறைவன் பல்வேறு வடிவங்களை எடுக்கிறான். வழிபாட்டு முறையில் பின்னர் சிவனை வழிபடுபவர்கள் சைவர்களென்றும், அம்மையை வழிபடுபவர்கள் சாத்தர்களென்றும் பெயரமைப்பில் பலரும் பல நெறிகளை வகுத்துக் கொண்டனர்.

''சக்தியின் வடிதென்னில் தடையிலா ஞானமாகும்'' என்று சக்தியின் வடிவம் ஞானம் என்று காட்டுகிறது சித்தியார்.

இறைவனின் அருளே சக்தியாகப் போற்றப்படுகிறது. ''அருளது சத்தியாகும், அரன் தனக்கு என்றும், ''கருணையும் நீயும் அவனியும் புகுந்து எம்மை ஆட்கொள்ள வல்லாய்'' என்றும், ''பின்னமிலான் எங்கள் சக்திபிரான்'' என்றும் தோத்திர நூல்களும், சாத்திர நூல்களும் இறைவனுடைய கருணையையும், அருளையும் அம்மையென்று காட்டுகின்றது.

இறைவன் ஆன்மாக்கள் உய்தல் பொருட்டுச் செய்யும் ஐந்தொழிலை விளையாட்டாகச் செய்கின்றான். அவன் அருளும், உடனிருந்து இதனைச் செய்கின்றது.

''சத்திதான் பலவோ என்னில் தானொன்றே அநேகமாக
வைத்திடும் காரியத்தான் மந்திரி ஆதிக்கெல்லாம்
உய்த்திடும் ஒருவன் சத்திபோல் அரனுடையதாகிப்
புத்தி முத்திகளை எல்லாம் புரிந்தவன் நினைத்தலாகும்'' என்கிறது சிவஞான சித்தியார். பிரமனாக இருந்து படைத்தலைத் தொழிலாகச் செய்யும் போது பிராமியாகவும், திருமாலாக இருந்து காத்தல் தொழிலை அனுஷ்டிக்கும் போது வைஷ்ணவியாகவும், மகேஸ்வரராக இருக்கும்போது மகேஸ்வரியாகவும், கௌமாரனாக இருக்கும்போது கௌமாரியாகவும், இப்படி,

''எத்திறன் நின்றான் ஈசன்
அத்திறம் அவளும் நிற்பள்'',

என்று சாத்திரம் காட்டுகின்றது.

உலகத்திலுள்ள அனைத்துக் காரியங்களையும் நம்முடைய கையைக் கொண்டுதான் செய்கின்றோம். எப்படி நம்முடைய கையைக் கொண்டு நாம் காரியங்களைச் செய்கின்றோமோ அதுபோல இறைவன் நங்கையைக் கொண்டு அனைத்துக் காரியங்களையும் செய்கின்றான்.

நங்கை - நம் + கை - நம்முடைய கை - இதனைத் திருக்களிற்றுப்படியார், ''நங்கையினால் நாம் அனைத்தும் செய்தாற்போல
நாயகனும் நங்கையினால் செய்தளிக்கும்'', என்று காட்டுகிறது.

அறக்கருணையும் மறக்கருணையும்

நடராஜர் மூர்த்தத்தின் பக்கத்தில் உள்ள சிவகாமி அம்மை நம்மைப் பார்க்காமல் சற்று நடராஜரைப் பார்த்த வண்ணம் இருக்கும் தத்துவமே இறைவன் சக்தியின் மூலமாக ஆன்மாக்களுக்கு அனுக்கிரஹம் செய்கிறான் என்பதை உணர்த்தும். இது எப்படியென்றால், மூன்று மாதக் குழந்தைக்கு உடல் நோய் ஏற்பட்டால் தாய் மருந்து சாப்பிட்டுத் தன் முலைப்பால் மூலமாகக் குழந்தைக்கு ஊட்டி, அதன் நோயைத் தணிப்பது போல இறைவனின் அறக்கருணையையும், மறக்கருணையையும் அம்மை வாங்கி ஊட்டுகிறாள்.

''பாலுண் குழவி பசுங்குடர் பொறாதென
நோயுண் மருந்து தாயுண் டாங்கு''

என்பார் குமரகுருபரர்.

மணிவாசகரும்

''நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான்'' - என்பார்.

மிகப்பெரிய சோதியாக இருப்பது சிவம். சோதியில் சூடாக இருப்பது கருணை. சோதி - சிவம், கருணை - சத்தி. இதனை அழகுபட மணிவாசகர், ''கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை'' என்பார்.

நாணயத்தை எடுத்துக்கொண்டால், ஒரு பக்கம் அது எவ்வெவ்விடங்களில் செல்லும் என்பதற்கான அரசு முத்திரையும், மறுபக்கத்தில் அந்த நாணயத்தின் மதிப்பும் குறிப்பிடப்பட்டிருக்கும். அதேபோல் எங்கே எல்லாம் செல்லும் என்பது சிவம்; எவ்வளவிற்கு செல்லும் என்பது சத்தி.

இப்பின்னமிலா அம்மையப்பர் தத்துவத்தை சங்ககாலந்தொட்டுப் போற்றுவதே மரபாக இருந்திருக்கிறது. ''நீலமேனி வாலிழைப் பாகத்தன்'' என்பது சங்க

காலப் பாடல். காலப்போக்கில் சத்தியை முழுமுதற் கடவுள் எனக் கொண்டு சாக்தம் என்ற வழிபாட்டுக் குழுவினர் உருவாயினர்.

வேதத்தில் அனைத்தும் சத்தி மயம்

உலகம் எல்லாம் 'சிவமயம்', 'சிவமயம்' என்று பேசப்படுகிறது. நாம் எழுதுகின்ற போதும் ''சிவமயம்'' என்று எழுதுகின்றோம். ஆனாலும், வேதத்தில் ''சர்வம் சக்தி மயம்'' என்று வாசகத்தை இணைத்துப் பார்த்த புலவர் ''இறைவா, உன்னுடைய திருமேனியில் பாதி மோகினி அவதாரமான திருமால் பாகங்கொண்டார்; மற்றொரு பாதியில் மலைமகள் பாகம் கொண்டாள். இரு பெண்களும் உன் திருமேனியில் பங்கு கொண்டதால், உனக்கு உருவமில்லையென்றும், நீ அருவத் திருமேனி என்றும் அறிந்துகொண்டேன். ''சிவமயம்'', ''சிவமயம்'' என்று சொல்லிக் கொண்டிருந்தவர்கள் நாவெல்லாம், உன் திருமேனி முழுவதையும் இரு பெண்கள் பாகமாகக் கொண்டதால், ''சிவமயம்'' எனபதை நாங்கள் ''சர்வம் சக்தி மயம்'' என்று எண்ணுவதாயிற்று.

''மாயவ னாயோர் பாதியி லவளாய்
மற்றோர்பா தியுங்கவர்ந் தனையால்
நாயகன் மேனி யெனினவன் வடிவ
நாடொறு மறைந்ததா யிருக்கச்
சேயமண் சத்தி மயமெனா தந்தோ
சிவமய மென்பதென் னுரையாய்
காயமீ தெழுந்த மதிற்றிரு வானைக்
காவகி லாண்டநா யகியே.''

என்பார் மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம் பிள்ளை

ஒரு மட்பாண்டம் செய்வதற்குப் பானை செய் வோனுக்குச் சக்கரம், மண் தேவைப்படுகின்றன. இதனை நிமித்த காரணம், முதற் காரணம், துணைக் காரணம் எனச் சாத்திரம் பகுக்கிறது. இதில் குயவன் நிமித்த காரணமாக விளங்குகிறான். சக்கரமாக சிற்சக்தி யும், மண்ணாக மாயையும் இலங்குகின்றன. ஆனால் அம்மை இறைவன் வடிவில் பாதி பெற்றும், அதனால் மனம் முழுமை பெறாமல் உலகம் முழுவதும் தமக்கே சொந்தமென்று உரிமை பாராட்டுகிறாள். ''உமக்கு உரிமை கொண்டாட ஏதேனும் சட்டத்தில் இடம் இருக்கிறதா'' என்று இறைவன் கேட்க, ''வேதத்தில் அனைத்தும் சக்திமயம்'' என்ற கூற்றின்படி உடலில் மட்டும் பாதி கூடாது; உலகத்திலுள்ள அனைத்துப் பொருள்களும் என் பெயரிலேயே விளங்க வேண்டுமென்று கேட்டு ''சர்வம் சக்தி மயம்'' என்பதை நிறுவுகிறார். இதனைக் குமரகுருபரர்

''கும்பாதி காரிய மெனத்தமை நிமித்தமாகக்
கொண்ட வகிலாண் டங்களின்
குழுவுக்கு மற்றுத்த மிருவர்குறி யுந்தலைக்
கூடினுந் தான் றனக்குச்
சொம்பாதி யன்மைக் களைத்துந்தன் மயமெனும்
சுருதிகரி யாவைத்து'' என்று பாடுகின்றார்.

இதனைத் திருமூலரும், ''அனைத்தும் அவளால் வந்த ஆக்கம்'' என்பார். பாரதிதாசன் ''எங்கெங்குக் காணினும் சக்தியடா'' என்று காட்டுவார்.

அம்மையின் அருட்டிறன் அருளாளர் வாயிலாக மேலும் அறியப்படுகிறது. திருக்கடவூரில் தை அமாவாசைத் திதியை பௌர்ணமி திதியாக மாற்றிக்காட்டி அருளியும் அதனால் அபிராமிப்பட்டர் அபிராமி அந்தாதியையும், அபிராமி பதிகத்தையும் பாடி அம்மையின் அருள் ஆற்றலை வெளிப்படுத்துகிறார்.

குமரகுருபரர் மீனாட்சியம்மையால் முத்துமாலை பெறப்பட்டும், கலைமகளால் இந்துஸ்தானி மொழியும் கற்பிக்கப்பட்டார். அதன் விளைவாகக் குமரகுருபரர் பின்னர் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ், மதுரை மீனாட்சியம்மை இரட்டை மணிமாலை, மதுரை மீனாட்சியம்மை குறம், தில்லைச் சிவகாமியம்மை இரட்டை மணிமாலை, சகலகலாவல்லி மாலை முதலிய அம்மை புகழ்பாடும் நூல்களை அருளினார். இன்னும் காளிதாசர், தாயுமானவர் உள்ளிட்ட அருளாளர்கள் வரலாற்றினைத் தனித்தனியே சிந்திக்க வேண்டும்.

அன்பு-கருணை-அருள் பிரதிபிம்பங்கள்

சிவவழிபாடு செய்கின்றவர்கள், சமய விசேட முதலான தீக்கைகளைப் பெற்று சிவபூஜை செய்து சிவவழிபாட்டிற்குத் தம்மை அர்ப்பணித்துக்கொண்டு முத்திச் செல்வத்தை நாடிச் செல்வர். சரியை கிரியா யோகம் செய்து ஞானம் பெற முயல்வர். சாலோக சாமீப சாரூபம் புதுப்பித்து சாயுச்சத்தில் திளைப்பர். அறுபான்மும்மை நாயன்மார்கள் முதலான அருளாளர்கள் வன்தொண்டு, மென்தொண்டு என்ற நிலையில் பணிசெய்து சிவனருள் துய்ப்பர். இப்படிச் செய்கின்றவர்களுக்கு மட்டுமே இறைவன் அனுக்கிரகம் செய்கிறார் என்ற நிலையினை மாற்றி எல்லோருக்கும் அனுக்கிரகம் செய்யும் கருணை-அருள் அன்னையிடம் இருப்பதால் குழந்தைகளாகிய ஆன்மாக்கள் அன்னையின் பாதத்தைப் பற்றத்தானே நினைப் பார்கள். இதனாலேயே ஆழ்வாராதிகள்,

''தருதுயரத் தடாயேல் சரண் அல்லால் சரண் இல்லை
விரை குழுவும் மலர்ப் பொழில் சூழ்
வித்துவக்கோட்டு அம்மானே!
அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும்
மற்றவள்தன்
அருள்நினைந்தே அழும் குழவி அதுவே
போன்று இருந்தேனே''

என்று காட்டுவர். மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை மேலும் காட்டுவார். அம்மையே! கண்ணில் குருதி வடித்ததால் தன் விழியைத் தோண்டி இறைவனுக்கு அப்பிய கண்ணப்பரைப் போன்றும், இறைவன் பசியாறுவதற்காகத் தன் ஒரே மகனை அரிந்து இறைவனுக்கு அமுது படைத்த சிறுத்தொண்ட நாயனாரைப் போன்றும், சிவநிந்தனை செய்த தன் தந்தையை மழுவால் தடிந்த சண்டிகேசுவர நாயனாரைப் போன்றும், உலகம் பழிக்கின்ற அளவிற்குத் தன் மனைவியை இறைவனுக்கு உதவி செய்தும், மற்றும் இன்னும் பல செயற்கரிய செயல்கள் செய்தார்க்கே நின் கணவன் அருள்செய்வான் என்று வரலாறு காட்டுகின்றது. அம்மே! என்னால் அது முடியாது. காரணம் பிறந்து, பிறந்து சோர்ந்து போன என்னை எடுத்துச் சுமப்பது நீயல்லவா? அதனால் உன்தாளை அடைந்தேன். அகிலாண்ட நாயகியே! என்று காட்டுவார்.

''விழியிடந் தப்பி மகவரிந் தூட்டி
விருப்புறு தந்தைதா டடிந்து
பழியகன் மனையை யுதவிமற் றின்னும்
பலசெயற் கரியசெய் தார்க்கே
மொழியுநின் கொழுந னருள்செய்வா னென்னான்
முடிதரா தென்றுனை யடைந்தேன்
கழியுணர் வுடையார் புகழ்திரு வானைக்
காவகி லாண்டநா யகியே!!

என்பது அத்திருப்பாடல்.

அன்பு, கருணை, அருள் - இவை அம்மா, அன்னை சொரூபத்தினுடைய பிரதிபிம்பங்களாகும். ஒரு கவிஞனிடம் அன்பு என்ற தலைப்பில் மிகச் சிறிய கவிதையைக் கேட்டார்கள். அக்கவிஞர் ''அம்மா!'' என்று கவி எழுதிக் கொடுத்தார். ஒரே சொல்லாயிற்றே என்றார்கள். கவிஞர் சொன்னார். இப்படி ஒரு கவிதையை என் தாய் கேட்டிருந்தால், ''நீ'' என்று ஒரே எழுத்தில் சொல்லியிருப்பேன் என்று! தெரிகிறதா? அன்னையின் அன்பும், அன்பின் வடிவமும் அன்பு செய்யும் அடியவர்களுக்கு, அவளுடைய கடைக் கண்களே.

''தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவுந் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள் அபிராமி கடைக்கண்களே''.

செல்வங்களைத் தரும் திருமகள்

உலகில் உள்ள அனைத்துச் செல்வங்களும் திருமகளின் வடிவேயாகும். அஷ்ட இலட்சுமிகளாய் எங்கும் நிறைந்து அருளோச்சும் மகாலட்சுமியின் திருவருள் இருந்தால் என்றும், எதிலும் வெற்றிதான்.

இடைவிடாத பொருள்வரவு, நிலையான உடல் நலம், அன்பான மனைவி, பணிவான மைந்தன், நல்ல நண்பன், செல்வம் தரும் கல்வி ஆகியன இன்ப வாழ்வைப் பெற்றுத்தரும் செல்வங்களாகும். இந்த ஆறு பாக்கியங்களையும் பெறுபவர்கள் மகாலட்சுமியின் அருட் கடாட்சம் பெற்றவர்கள் ஆவார்கள். இப்படியான ஐஸ்வரிய யோகம் எவர்க்குக் கிடைக்கும் என்பது பற்றித் திருமகளே கூறுகிறாள்.

ஒருமுறை திருமாலோடு திருமகள் மேருமலைக்கு வந்திருந்தாள். அச்சமயத்தில் சிவபெருமானிடத்தில் தரிசனம் பெறுவதற்காக ''சுகர்'' மாமுனிவரும் வந்திருந்தார். அப்போது முனிவர் திருமகளை வணங்கிப் பின்வருமாறு கேட்டார்.

''அன்னையே! நீங்கள் நித்திய வாசம் செய்ய வேண்டுமாயின் அந்த வீடும், மனிதனும் எப்படி இருக்க வேண்டும்?

அக்கேள்விக்குத் திருமகள் பின்வருமாறு பதிலளித்தாள்.

''வெண்ணிற மாடப் புறாக்கள் வாழும் வீடு, தானியங்களின் குவியல், உமி அற்ற அரிசி நிறைந்த வீடு, கலகத்தை அறியாத பெண், புனிதம், அமைதி பேணும் இல்லம், பகிர்ந்து உண்டு வாழும் மனிதர்கள் உள்ள இடம், இனிமையாகப் பேசியும், பணிவோடும் வாழும் மனிதர்கள் உள்ள இடம், நாவடக்கமுள்ள மனிதர்கள் வாழும் இடம், பெண்களைத் தெய்வமாக மதிக்கும் மனிதர்களின் இல்லங்கள், பால், தயிர், நெய் சொரியும் இடங்கள் போன்றவற்றில் நான் நிரந்தரமாகக் குடிகொள்கிறேன். மேலும், சங்கு, நெல்லிக்காய், கோமயம், தாமரை, வெண்மையும், பரிசுத்தமும் நிறைந்த ஆடைகளில் நான் நித்தியமாக வாசம் செய்கிறேன்.''

இது தவிர வேத ஓமங்கள், நித்திய வழிபாடுகள் நிறைந்த இடங்களிலும், தெய்வீக மந்திரங்கள் உச்சரிக்கப்படும் நாவினிலும் திருமகள் உறைகிறாள். மேலும், தன்னை இறைஞ்சி நிற்கும் அடியார்களின் இல்லங்களைத் தேடிவரும் நாட்டம் கொண்டவள் திருமகள். மகாலட்சுமியின் நாமாவளிகளைத் தியானித்து உள்ளங்களிலும், இல்லங்களிலும் திருமகளைக் குடியேறச் செய்து இன்பமாக வாழலாம்.

தொல்காப்பியப் பூங்கா

கலைஞர் மு. கருணாநிதி
தமிழ்நாடு முதலமைச்சர்



வெகுளி நான்கே!

தடி எடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்ற நிலையில் வன்முறை, அடக்குமுறை வாயிலாக குடிமக்களின் தலை அறுத்தல், கை கால்களை வெட்டுதல் போன்ற வெறியாட்டங்களையும், எதிர்ப்போர் எவராயினும் அவர் பக்கம் இருக்கும் நியாயம் உணராமல் அவர்களின் பெண்டு பிள்ளைகளுக்குக் கேடிழைக்கும் கொடுஞ் செயல்களையும், அலை எனப்படும் அடித்தல், உதைத்தல் போன்ற அரசு ஆதரவுடன் நடக்கும் அநீதிகளையும், கேட்பாரற்ற முறையில், தடுப்பாரற்ற நிலையில் நடக்கும் கொலைகளையும் தாங்கிக் கொள்ள முடியாமல் தணலில் இட்ட புழுக்களாய்க் குடிமக்கள் புலிகளாக மாறுவதுதான் ''வெகுளி''யின் உச்சமாகும்.

'உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற
வெறுப்ப வந்த வெகுளி நான்கே'
(பொருளதிகாரம் - மெய்ப்பாட்டியல் - நூற்பா:10)



போரில் மகளிர்

மெல்லியலார் என மதிப்பளித்துப் பரிவு காட்டி மகளிரைப் பாராட்டி வாழ்ந்த காலம் என்பதாலே ஆபத்தான இடங்களிலே அவரை அணுகிடச் செய்யாது அமர்க்களத்துக்கான வெளிப்புறப் பணிகளில் மட்டும் அன்று பாசறைகளில் பாவையர் தொண்டு தொடர்ந்ததாம்! இப்போது பண்பாடு மாற்றமில்லை; பழையகால ஏற்பாடு மட்டுமே மாற்றம்!

''எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்''
(பொருளதிகாரம் கற்பியல் - நூற்பா 34)

''புறத்தோர் ஆங்கண் புரைவதென்ப''
(பொருளதிகாரம் கற்பியல் - நூற்பா 39)

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் எழுதிய
''தொல்காப்பியப் பூங்கா'' என்னும் நூலில் இருந்து எடுக்கப்பட்டவை.

கயிலைமாமுனிவர் வித்துவான்
சாந்தலிங்க இராமசாமியடிகள்



பேரூராதீனம், பேரூர் (அஞ்சல்)
கோயமுத்தூர் - 641 010. தமிழ்நாடு
தொலைபேசி: 2607995, 2608678

03.01.08

வாழ்த்துப்பா

அறமும் பண்பும் அருள் உணர்வும் அகத்தில் பொருந்த வழிபாட்டில் திறம்சேர் அன்பர் இலண்டன் நகர்த் தெய்வம் முத்துமாரியம்மன் சிறந்த கோயில் சீவரத்தினம் செய்தார் அன்பர் திருக்கூட்டம் மறவாதேத்திப் பலவளமும் வாய்த்துச் சிறக்க வாழ்த்துகின்றோம்.

கல்வி செல்வம் மிகப் பெருகக் கடலைக் கடந்து பல நாடும் வல்லமைசேர் ஆற்றலினால் வளைத்தோர் வாழும் இலண்டனில் அல்லும் பகலும் உழைத்துயர்ந்து அருள்சேர் கோயில் உருவாக்கி நல்லோர் முத்து மாரியினை நாளும் பணிந்து வரம்பெறுவார்.

சிவம்சேர் ஈழத்திருநாட்டில் இடர்கள் பலவால் திசைதோறும் இவர்ந்தே உழைத்து வளம் பெருக்கி இசைசேர் தமிழை இளைஞர் உளம் உவந்தேற்றிடச் செய்திருக்கோயில் உயர்வாம் குடநீராட்டதனால் கவலை நீங்கி எல்லோரும் கலந்து வாழ வாழ்த்துகின்றோம்.

உலகில் மூத்த செம்மொழியாம் உயர்ந்த தமிழால் வழிபட்டு நலம்சேர் முத்துமாரியம்மன் குடநீராட்டு விழா நடத்தி நிலவும் கோயில் பணி வளர்த்து நெஞ்சம் நெகிழ்ந்து அன்பதனால் வலம் வந்தேத்திக் குடும்பங்கள் வளமாய் வாழ வாழ்த்துகின்றோம்.



வேண்டுந்தங்களன்பு

(தவத்திரு. சாந்தலிங்க இராமசாமியடிகளார்)
பேரூராதீனம்

பாரதி போற்றும் 'தெய்வ வாழ்வு'



முனைவர் இரா. மோகன்,
மூத்த பேராசிரியர், தமிழியற்புலம்,
காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.


நமக்குத் தொழில் கவிதை. நாட்டிற்கு உழைத்தல். இமைப்பொழுதும் சோராதிருத்தல் (ப.10) என்னும் உயரிய குறிக்கோளுடன் தம் வாழ்வின் இறுதி மூச்சுவரை வாழ்ந்து காட்டியவர் கவியரசர் பாரதியார். தெய்வ பக்தியும் தேச பக்தியும் அவருக்கு இரு கண்களைப்போல. பாப்பாவுக்குப் பாடினாலும் 'புதிய ஆத்திசூடி' படைத்தாலும் அவர் தெய்வ பக்தியையும் தேச பக்தியையும் போற்றத் தவறுவதில்லை. தோத்திரப் பாடல் ஒன்றில்,

''பயனெண்ணாமல் உழைக்கச் சொன்னாள்
பக்தி செய்து பிழைக்கச் சொன்னாள்'' (ப. 93)

எனப் பயன் கருதாத உழைப்பு, பக்தி என்னும் இரண்டையே வாழ்வில் பின்பற்ற வேண்டிய நெறிகளாக மஹாசக்தி தம்மிடம் சொன்னதாகக் குறிப்பிடுகின்றார் பாரதியார். மேலும் 'பக்தி' என்னும் தலைப்பில் பாடிய பிறிதொரு தோத்திரப் பாடலில் தெய்வ பக்தியினால் இந்தப் பாரினில் எய்திடும் மேன்மைகளை- நன்மைகளை-அழகாகப் பட்டியல் இட்டுள்ளார் பாரதியார்.

''சித்தந் தெளியும் - இங்குச்
செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்,
வித்தைகள் சேரும், - நல்ல
வீர ருறவு கிடைக்கும், மனத்திடைத்
தத்துவ முண்டாம், - நெஞ்சிற்
சஞ்சல நீங்கி உறுதி விளங்கிடும்'' (ப.17)

இன்னும் உண்மை பக்தியினால் விளையும் நன்மைகளை நிரல்படுத்திக் கூறி வரும் பாரதியார் 'பக்தி' என்னும் தலைப்பில் அமைந்த ஐந்தாம் பாடலில் குறிப்பிடும் ஒரு கருத்து கூர்ந்து நோக்கத்தக்கது. ஆழ்ந்த சிந்தனையைத் தோற்றுவிக்கும் அக்கருத்து வருமாறு:-



''.....மெய்
வல்லமை தோன்றும் - தெய்வ
வாழ்க்கையுற்றே யிங்கு வாழ்ந்திடலாம், உண்மை
பக்தியினாலே'' (ப.18)

இங்கே பாரதியார் சுட்டியிருக்கும் 'தெய்வ வாழ்க்கை' என்னும் தொடர் மனங்கொளத்தக்கது. அவரது கருத்தில் வாழ்க்கை என்பது வாடிக்கை அன்று; வேடிக்கையும் அன்று. வாழ்க்கை என்பது வெறும் கேளிக்கை அன்று; கோரிக்கைகளின் தொகுப்பும் அன்று. மண்ணில் நல்ல வண்ணம் - வையத்துள் வாழ்வாங்கு-வாழும் வாழ்க்கை 'அமரத் தன்மை' பொருந்தியது. இன்னும், சொல்ல வேண்டும் என்றால், இவ்வாழ்க்கையில் பதற்றம் அல்லது படபடப்பு அல்லது பரபரப்பு (Tention) என்பதே சிறிதும் இருக்காது. 'விநாயகர் நான்மணி மாலை'யில் ஒரு பாடலில் பக்தியுடையார் தம் வாழ்வில் எங்ஙனம் செயல்படுவார்கள் என்பதைப் பாரதியார் நல்லதோர் உவமையைக் கையாண்டு வெளிப்படுத்தியுள்ளார்.

''பக்தி யுடையார் காரியத்திற்
பதறார், மிகுந்த பொறுமையுடன்
வித்து முளைக்குந் தன்மை போல்
மெல்லச் செய்து பயனடைவர்'' (ப.10)

சஞ்சலம் இல்லாமல் - எந்தவிதச் சலனமும் இல்லாமல் -சற்றும் பதற்றம் கொள்ளாமல் - மிகுந்த பொறுமையுடன் இருப்பதே செயல் படுவதே - பக்தியுடையாரிடம் காணப்படும் நல்லியல்பு ஆகும். இவ்வியல்பினை மனிதராகப் பிறந்த ஒவ்வொருவரும் பெறவேண்டும் என்பதே பாரதியார் வலியுறுத்திக் கூறும் வாழ்வியல் நெறி ஆகும்.

யாவர்க்கும் இன்றியமையாத நான்கு கடமைகள்

பாரதியாரின் கருத்தியலில் உலகில் மனிதராகப் பிறந்த எவர்க்கும் இன்றியமையாத கடமைகள் நான்கு. அவையாவன:-

''கடமை யாவன தன்னைக் கட்டுதல்,
பிறர்துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல்...
உலகெலாங் காக்கு மொருவனைப் போற்றுதல்...
இந்நான்கே யிப்பூமி யிலெவர்க்கும்
கடமை யெனப்படும்; பயனிதில் நான்காம்,
அறம், பொருள், இன்பம், வீடெனு முறையே'' (ப.4)

இந்நான்கு கடமைகளுள் முதன்மையானது - முக்கியமானது -தன்னைக் கட்டுதல், 'தன்னை யாளும் சமர்த்து' என இதனைச் சுட்டுகின்றார் பாரதியார். 'தனைத்தானாளுந் தன்மை நான் பெற்றிடில், எல்லாப் பயன்களுந் தாமே யெய்தும்' என ஆழமாக நம்புகின்றார் அவர். முடிவாக, 'என்ன வரங்கள், பெருமைகள், வெற்றிகள், எத்தனை மேன்மைகளோ - தன்னை வென்றாலவையாவும் பெறுவது சத்தியமாகும்' (ப.120) என்றே முன்னை முனிவர் உரைத்த மறைப்பொருளை உணர்த்தி, 'தன்னை வென்றாளும் திறமை' கைவரப் பெற்று வாழ்வில் உயருமாறு மனிதனுக்கு அறிவுறுத்துகின்றார் பாரதியார்.

அடுத்ததாகப் புதுவை மணக்குள விநாயகப் பெருமானிடம் பாரதியார் வேண்டுவது 'அசையா நெஞ்சம்', யார்க்கும் அஞ்சாமல், எதற்கும் அஞ்சாமல், எங்கும் அஞ்சாமல், எப்பொழுதும் அஞ்சாமல், வஞ்சகக் கவலைக்கு இடங்கொடாமல், உரத்துடனும் நேர்மைத் திறத்துடனும் வாழுமாறு அவர் தம் நெஞ்சிற்கு அறிவுறுத்துகின்றார். மேலும் அவர் முடிந்த முடிபாக, 'தலையிலிடி விழுந்தால் சஞ்சலப் படாதே; ஏது நிகழினும் நமக்கென்ன என்றிரு; பராசக்தியுளத்தின்படியே எல்லாம் நிகழும்' என்றும் அழுத்தம் திருத்தமாக உரைக்கின்றார்.

முத்தாய்ப்பாக, 'உயிரெல்லாம் இன்புற்றிருக்க வேண்டி, நின்னிரு தாள் பணிவதே தொழில் எனக் கொண்டு, வாழ்வேன் களித்தே' எனக் கணபதி தேவனிடம் ஒப்புதல் வாக்குமூலம் தருகின்றார் பாரதியார்; இங்ஙனம் வாழ்வதற்கான அடிப்படைப் பண்புகளாகப் 'பிறர்துயர் தீர்த்தல், பிறர் நலம் வேண்டுதல்' என்னும் இரண்டையும் அவர் சுட்டிக் காட்டுகின்றார்.

''மனத்திற் சலன மில்லாமல்
மதியி லிருளே தோன்றாமல்
நினைக்கும் பொழுது நின்மவுன
நிலை வந்திட நீ செயல் வேண்டும்'' (ப.3)

என 'விநாயகர் நான்மணி மாலை'யில் பாரதியார் கணபதியிடம் கேட்கும் வரம் இங்கே நினைவுகூரத் தக்கது. தாயுமானவர் போன்ற அருளாளர்கள் 'சும்மா இருக்கும் சுகம்' என்றது போல், பாரதியார் 'மவுன நிலை' எனச் சுட்டுகின்றார்.

தவ மேன்மை பொருந்திய தெய்வ வாழ்வு

பாரதியாரின் தோத்திரப் பாடல்களுள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்க ஒன்று 'யோக சித்தி' என்பது. 'வரங் கேட்டல்' என்னும் உள்தலைப்பில் அன்பு கசிந்து கசிந்துருகிப் பாடிய பத்துப் பாடல்களில் 'வீரை', 'சக்தி', 'காளி', 'வலிய சாமுண்டி', 'ஓங்காரத் தலைவி', 'ராணி', 'கரு நீலி', 'தாய்', 'அன்னை' முதலான பெயர்களால் அவர் உலகத்தின் மூல சக்தியைக் குறித்து உள்ளார். திருஞான சம்பந்தரைப் போல் மகன்மை நெறியில் நின்று உலகைக் காக்கும் அன்னையிடம் பாரதியார் உரிமையுடன் கேட்கும் வரங்கள் இவை:

''நின்னைச் சிலவரங்கள் கேட்பேன் - அவை

நேரே யின்றெனக்குத் தருவாய் - என்றன்
முன்னைத் தீயவினைப் பயன்கள் - இன்னும்
மூளா தழிந்திடுதல் வேண்டும் - இனி
என்னைப் புதிய வுயிராக்கி - எனக்
கேதுங் கவலை யறச்செய்து - மதி
தன்னை மிகத் தெளிவு செய்து - என்றும்
சந்தோஷங் கொண்டிருக்கச் செய்வாய்'' (ப.70)

முன்னைத்தீய வினைப் பயன்கள் இன்னும் மூளாது அழிந்திடுதல் வேண்டும். தன்னைப் புதிய உயிராக்கிடல் வேண்டும், கவலை எதுவும் இல்லாமல் செய்திடல் வேண்டும். மதியினை மிகத் தெளிவு செய்திடல் வேண்டும். மனத்தில் என்றும் மகிழ்ச்சி குடி கொண்டிருக்கச் செய்திடல் வேண்டும் என்றெல்லாம் அன்னை சக்தியிடம் வரங்கள் கேட்கும் பாரதியார், இவற்றுடன் நில்லாது இன்னும் சில வரங்களையும் சேர்த்துக் கொடுத்து அருளுமாறு கேட்கின்றார்:

''தோளை வலியுடைய தாக்கி - உடற்
சோர்வும் பிணி பலவும் போக்கி - அரி
வாளைக் கொண்டு பிளந்தாலும் - கட்டு
மாறா வுடலுறுதி தந்து - சுடர்
நாளைக் கண்டதோர் மலர் போல் - ஒளி
நண்ணித் திகழு முகந் தந்து - மத
வேளை வெல்லு முறை கூறித் - தவ
மேன்மை கொடுத் தருளல் வேண்டும்'' (ப.70)

இரத்தினச் சுருக்கமான சொற்களில் சொல்ல வேண்டும் என்றால் புதிய உயிர், கவலையற்ற உள்ளம், தெளிந்த மதி, கட்டுமாறா உறுதியான உடல் ஆகிய இவை நான்கும் ஒருங்கே கொண்ட வாழ்வே தவ மேன்மை பொருந்திய-அமரத் தன்மை வாய்ந்த-தெய்வ வாழ்வு எனக் கருதுகின்றார் பாரதியார், முத்தாய்ப்பாக,

''இன்றுபுதி தாய்ப் பிறந்தோ மென்று நீவிர்
எண்ண மதைத் திண்ணமுற இசைத்துக் கொண்டு
தின்றுவிளை யாடியின்புற்றிருந்து வாழ்வீர்''
(ப.118)

என்பதே மனித குலத்திற்குப் பாரதியார் விடுக்கும் அன்பு வேண்டுகோள் ஆகும். பக்தி நெறியைப் பொறுத்த வரையில்,

''ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள்
உலகின்பக் கேணி'' (ப.142)

என்பதே பாரதியார் பறைசாற்றும் கொள்கை முழக்கம் ஆகும்.

தெய்வ வாழ்வைத் தாங்கி நிற்கும் ஆறு தூண்கள்

''இச்சிறிய செய்யுள் நூல் விநோதார்த்தமாக எழுதப்பட்டது. இதன் இயல்பு தன்கூற்றெனப்படும். அதாவது, கதாநாயகன் தன் சரிதையைத் தான் நேராகவே சொல்லும் நடை. இக்காவிய முறை நவீனமானது'' (ப.226) என்னும் முன்னுரைக் குறிப்புடன் பாரதியார் எழுதிய தன் வரலாற்று நூல் 'ஸ்வசரிதை'. அதன் இறுதிப் பாடலில் அவர் பரம்பொருளிடம் விடுக்கும் விண்ணப்பம் இது:

''அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி,
அகத்திலே யன்பினோர் வெள்ளம்,
பொறிகளின் மீது தனியரசாணை,
பொழுதெலா நினதுபே ரருளின்
நெறியிலே நாட்டம், கரும யோகத்தி
னிலைத்திட லென்றிவை யருளாய்,
குறிகுண மேதுமில்ல தாயனைத்தாய்க்
குலவிடு தனிப்பரம் பொருளே!'' (ப.239)

'அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையொடு, ஐந்து சால்பு ஊன்றிய தூண்' (குறள், 983) என்பது போல், அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, அகத்திலே அன்பு, ஐம்பொறி ஆட்சி, பேரருளின் நெறியிலே நாட்டம், கரும யோகத்தில் நிலைத்திடல் என்னும் இவை ஆறுமே பாரதியார் போற்றும் தெய்வ வாழ்வைத் தாங்கி நிற்கும் ஆறு வலிமையான தூண்கள் ஆகும். ○○○



பேராசிரியர் சாலமன் பாப்பையா
1, விசுவாசபுரி 4வது தெரு,
ஞான ஒளிபுரம், மதுரை - 625 016.
தொலைபேசி: 0452 - 260 2536
அலைபேசி: 94421 26025

திருமிகு. நா. சீவரத்தினம் அவர்கள்

அன்புள்ளவர்களுக்கு,

வணக்கம்.

தமிழ் மக்களின் இறைச் சிந்தனையை வையகம் எல்லாம் பரப்பும் மனவளம் படைத்த இலண்டன் தமிழ் மக்களின் திருவடிகளில் வீழ்ந்து பணிகிறேன்.

ஆயிரம்மாயிரம் அல்லல்களுக்கு இடையேயும் அன்னை முத்துமாரி அம்மனின் ஆலயம் கட்டி ஆன்மீகப் பணி செய்யும் தங்களுக்கு மதுரை மீனாட்சியின் அருளாசியை வேண்டி அன்னையின் பாதம் பணிகிறேன்.

தங்கள் பணிசிறக்க வாழ்த்துக்கள்

அன்புடன்

சாலமன்

ஈழத்தின் சக்தி வழிபாட்டுத் தொன்மை

பேராசிரியர் சி.க. சிற்றம்பலம்

சிரேஷ்ட பேராசிரியர், வரலாற்றுத் துறை, யாழ். பல்கலைக்கழகம், ஈழம்



ஈழத்தின் இந்துமதத்தின் சிற்பக் கலைக்குச் சிறந்த உரைகல்லாக அமைவன பொலநறுவை, திருகோணமலை ஆகிய பகுதிகளிற் கண்டெடுக்கப்பட்ட செப்புத் திருமேனிகளாகும். பொலநறுவைச் சிற்பங்களில் அன்னை பார்வதியாகவும், உமாமகேஸ்வரியாகவும், சோமாஸ்கந்த மூர்த்தத்தில் அமையும் தாயாகவும் காட்சி கொடுக்கின்றாள். இவற்றில் சரஸ்வதி சிலை ஒன்றுங் காணப்படுகின்றது. இப்பட்டியலில் **அர்த்தநாரீஸ்வர மூர்த்தத்தில்** காணப்படும் சிவன், உமை உருவங்களும் குறிப்பிடத் தக்கவை.

இன்று உலகில் வழக்கிலிருக்கும் வழிபாட்டு நெறிகளில் தாய்த்தெய்வ வழிபாடு மிகவும் தொன்மையானது. இதுவே பிற்காலத்தில் சக்திவழி பாடாகத் தனித்துவம் பெற்றுப் பல்வேறு மூர்த்தங்களில் வளர்ச்சி பெற்றுள்ளது. இவ்வழிபாட்டின் தொன்மைக் குரிய சான்றுகள் இன்றைக்கு முப்பதாயிரம் ஆண்டு களுக்கு முன்னரே உலகின் பல பகுதிகளிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. இந்தியாவிலும் பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சக்தியின் உருவங்கள் கிடைத்துள்ள தோடு சிந்துவெளிக் கால கலாச்சாரத்தைத் தொடர்ந்து இது பெற்றிருந்த வளர்ச்சிக்குரிய சான்றுகள் இந்தியாவின் பல பகுதிகளிலும் கிடைத்துள்ளன. ஈழத்தின் நாகரிகத்தின் தோற்றமும் இந்திய நாகரிகத்தின் படர்ச்சியே எனலாம். இதனால் ஈழத்தில் பௌத்தம் கி.மு. 3ஆம் நூற்றாண்டில் புகுவதற்கு முன்னர் இவ்வழிபாடு வேரூன்றி இருந்ததற்கான இலக்கியத் தொல்வியல் சான்றுகள் காணப்படுகின்றன. பௌத்த வரலாற்றைக் கூறும் பாளி நூல்களாகிய மகாவம்சம் போன்றவற்றில் இதற்கான தடயங்கள் காணப் படுகின்றன. இவ்வாறே ஈழத்தில் சுடுமண் பாவைகளாகவும் பழைய சிற்பங்கள் காணப் படுகின்றன. அத்துடன் தனித்துவமான சிற்பங்களாக இவை காணப்படுவதோடு நாணயங்களிலும் சக்தியின் பல்வேறு மூர்த்தங்களும் காணப்படுகின்றன. இத்தகைய சான்றுகள் சக்தி வழிபாட்டின் தொன்மையையும் தொடர்ச்சியையும் இன்றும் பறைசாற்றி நிற்கின்றன என்றால் மிகையாகாது.

ஈழத்திற்கும் நீலகிரிக்கும் உள்ள ஒருமைப்பாடு

ஈழத்தின் பல்வேறு பகுதிளிலுஞ் சுடுமண்ணில் அமைந்த பெண்பாவை உருவங்கள் காணப்படு கின்றன. கிளிநொச்சியிலுள்ள உருத்திரபுரம், வவுனியா விலுள்ள மாமடுவ, சிகிரியாவிலுள்ள இலுக்கேவ, பொலநறுவை, மாத்தளை, புத்தளம், அம்பாறை ஆகிய பிரதேசங்கள் இவற்றுள் அடங்கும்! இவை முழு உருவிற் காணப்படுவதற்குப் பதிலாகப் பெரு மளவிற்கு உடலில் அரைவாசிப் பகுதி மட்டுமே சித்திரிக்கப்பட்டுக் காட்சி தருகின்றன. இவற்றில் உடலுறுப்புகள் திறம்படச் சித்தரிக்கப்படவில்லை. இதனால் இவற்றில் அதிக அளவு கலை அம்சத்தைக் காணமுடியவில்லை. இவற்றைப் பல்வேறு மூர்த்தங்களிலுள்ள பெண்பாவை உருவங்கள் எனலாம். இவற்றுக்கும் தமிழ் நாட்டிலுள்ள நீலகிரி மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட பெண் தெய்வப் பாவைகள் பௌத்தம் வருமுன் இங்கு நிலவிய தாய்மை வழிபாட்டின் எச்சங்களே எனலாம். இப்பாவைகளோடு இலிங்கங்களும் காணப்பட்டமை குறிப்பிடத் தக்கது. கி.மு. 4ஆம் நூற்றாண்டில் அநுராதபுரத்தை ஆண்ட பந்துகாபயன்கால வழிபாட்டு முறைகள் பற்றி மகாவம்சம் பேசுகையில் ''சிவிகசாலா'' பற்றியும் குறிப்பிடுகிறது. இக்குறிப்பு, சிவலிங்க வழிபாட்டுத் தலம் பற்றியதே எனப் பரணவித்தானா குறிப்பிட்டு உள்ளார். இதனால் நம் நாட்டில் கிடைத்த சுடுமண் பெண் தெய்வ உருவங்களும், இலிங்க வழிபாடு பற்றிய சான்றுகளும் தாய்த்தெய்வம் சக்தியாகவும், அருஉருவ நிலையில் இலிங்க வழிபாட்டுடன் சேர்ந்தும் வழிபடப்பட்டதை எடுத்துக் காட்டுகின்றன.

பாளி நூல்களில் யக்ஷ வழிபாடு பற்றிய சான்றுகளும் தாராளமாக உண்டு. இவ்வழிபாடு கூட இந்தியாவைப் போன்று நம்நாட்டிலும் நிலவிய நாட்டார் வழிபாடாகிய பெண் தெய்வ வழிபாடே ஆகும். 'யக்ஷ' என்றால் பூசிக்கப்படுபவள் என்பது பொருளாகும். வடமொழியில் 'யஜ்' என்றால் பூசித்தல் எனப் பொருள்படும். இக்கருத்து ஒருகால் மக்களின் வழிபாட்டுத் தெய்வங்களாக இவை இருந்தமையை எடுத்துக் காட்டுகின்றது. அன்று இவர்கள் தேவிகள் நிலையில் வைத்து வணங்கப்பட்டார்கள். பிற்காலத்

திற்றான் இவர்கள் பயங்கரமானவர்கள் என நம்பப் பட்டது. மகாவம்சம் ஈழத்து ஆதிக்குடிகளாக யக்ஷரையும், நாகரையும் பற்றிப் பேசுகின்றது. இவ் வாதிக் குடிகள் யக்ஷ, நாக வழிபாட்டில் திளைத் திருந்ததால் இவ்வாறு அழைக்கப்பட்டனர் எனலாம். வழிபாட்டை மையமாகக் கொண்டு மக்கட் கூட்டத் தினர் அழைக்கப்படும் மரபு இன்றும் உண்டு. இவ் யக்ஷ, நாக வழிபாட்டு முறைகள்பற்றி விஜயன், பந்துகாபயன் கதைகளில் குறிப்புகள் உண்டு. இச்சம்பவங்கள் பௌத்தமதம் இங்கு வருவதற்கு முற்பட்டவையே. நாக, யக்ஷ வழிபாட்டிற் பெண்தெய்வங்களாக நாகினி, யக்ஷி ஆகியவை விளங்கின எனலாம். பந்துகாபய மன்னன் யக்ஷிகட்கு அமைத்த கோயில் பற்றி மகாவம்சத்தில் குறிப்புண்டு. இவற்றுள் 'வடமாமுகி', 'பச்சிமராமி' ஆகியவை குறிப்பிடத் தக்கவை. இதனால் நம் நாட்டில் வழக்கிலிருந்த தாய்த் தெய்வ வழிபாடே இவ்வாறு பௌத்த நூல்களில் 'யக்ஷி' வழிபாடாகக் குறிக்கப்பெற்றது எனலாம்.

பொலநறுவையிலும் தாய்த் தெய்வ வழிபாடு

இந்தியப் பின்னணியும் இக்கருத்தை அரண் செய்கின்றது. பௌத்தம் இங்குப் புகுந்த போதும் ஈழத்து மேற்கூறிய வழிபாட்டு முறைகளை அது அழிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்தும் விதத்திற் பல தொல்லியற் சான்றுகள் காணப்படுகின்றன. உதாரணமாக, பௌத்த மதத்தின் பழைய கட்டடங்களான அபயகிரி, சேதவனராம ஆகியவற்றிற் படைப்புச் சிற்பங்களாகக் காணப்படும் யக்ஷி, நாகினி உருவங்களைக் கூறலாம். அபயகிரியில், கையிற்றாமரை மலருடன் நிற்கும் ஒரு யக்ஷி உருவம் உண்டு. இவ் யக்ஷி உருவத்தை இலட்சுமியின் உருவம் எனக் கொள்ளல் பொருத்தமுடையதாகும். இவ்வாறே சேதவனாராமவிற் காணப்படும் ஒரு யக்ஷி வலக் கையிலும், இன்னொரு



யக்ஷி இடைக்கையிலுந் தாமரை மலரை ஏந்தி நிற்கின்றனர். உண்மையிலேயே இதுவும் தாய்த்தெய்வத்தின் ஒரு மூர்த்தமாகிய இலட்சுமியின் உருவமே. ஏன்? பிற்காலத்தில் கூட, கி.பி. 11 ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் செதுக்கப்பட்டு ஆனால், இதே காலத்திலுள்ள பொலநறுவைக்காலக் கட்டடத்திற் பயன்படுத்தப்பட்டதென நம்பப்படும் தூணொன்றிற் செதுக்கப்பட்ட விரிந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் பெண் உருவமும் இலட்சுமியின் உருவமே. பொலநறுவையிலே காணப்படும் ''கல் பொத்தவில்'' கூட அதன் பக்கங்களில் கஜலட்சுமியின் உருவம் தீட்டப்பட்டிருப்பது யாவருக்குந் தெரிந்ததே. இச்சான்றுகள் இந்நாட்டில் வேரூன்றி வளர்ந்த தாய்த் தெய்வ வழிபாட்டையே எடுத்துக் காட்டுகின்றன. விஜயன் காலச் செய்தி பற்றி யாழ்ப்பாண வைபவ மாலையில் ஒரு குறிப்புண்டு. இதில் வடபால் இக் காலத்தில் விளங்கிய ''திருத்தம்பலேஸ்வரி'' ஆலயம் பற்றி வருகிறது. இது இப்பகுதியில் நிலைத்திருந்த அன்னை வழிபாட்டு ஸ்தலம் எனலாம். இவ்வாறே கால ஓட்டத்தில் நாக, யக்ஷ வழிபாடுகளும் ஒன்றோடொன்று சங்கமிக்கத் தவறவில்லை. நயினையிலுள்ள நாகேஸ்வரி ஆலயம் அன்னை, நாக வழிபாடுகளின் சங்கமிப்புக்குச் சிறந்த உரை கல்லாகும். இவ்வாறேதான் நாகர் கோயிலிலும் இன்றும் நிலைத்திருக்கும் வழிபாட்டு முறை நாக, சிவ வழிபாடுகளில் சங்க மிப்பை எடுத்தியம்புகின்றது.

தமிழகத்தில் இவ்வன்னை வழிபாடு கொற்றவை வழிபாடே எனலாம். இவளே துர்க்கை எனவும் அழைக்கப்பட்டாள். கிறித்தவ சகாப்தத்திற்கு முந்திய ஈழத்துப் பிராமிக் கல்வெட்டுகளில் துர்க்கை பற்றிய குறிப்புண்டு. இதேகாலத்தைச் சேர்ந்த இலட்சுமி உருவம் பொறித்த நாணயங்களுங் காணப்படுகின்றன. இங்கே இலட்சுமி கஜலட்சுமியாகச் சித்திரிக்கப் பட்டுள்ளாள். இக்காலத்தை அடுத்து வெளியிடப்பட்ட செப்பு நாணயங்களிற் பெண் தெய்வம் பலவாறு சித்திரிக்கப்பட்டுள்ளது. இவற்றுள் நிற்கும் நிலையில் தலைவிரி கோலமாய்ச் சூலத்தைக் கையிலேந்திய உருவத்தைத் துர்க்கை என்பர் 'பாக்கர்'. அத்துடன் இந்நாணயங்கள் யாவும் கிறித்தவ சகாப்தத்திற்கு முந்தியவையே என்பதும் அவரது கருத்தாகும். இருந்தும் கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் வீர வழி பாட்டின் ஓரம்சமாகிய கண்ணகி வழிபாடு (பத்தினி) ஈழத்திற்குப் புகுந்தது. இந்தியாவைப் போன்று இங்கும் இது சக்தி வழிபாட்டம்சங்களைத் தன்னுடன் சேர்க்கத் தவறவில்லை. சிலப்பதிகாரத்திலேயே கொற்றவை கண்ணகியாக வழிபடப்பட்டதற்குச் சான்று உண்டு. இவ்வாறேதான் இக்கண்ணகி வழிபாடு ஈழத்திற் புகுந்ததும் இங்கு நிலவிய சக்தி வழிபாட்டைத் தன்னுடன் இணைத்து மேலோங்கியது எனலாம். பௌத்த மதத்தைத் தழுவிய சிங்கள மக்கள் பத்தினி வழிபாட்டை அன்னை வழிபாட்டின் ஓரம்சமெனக் கொண்டனர். பௌத்தத்தின் வருகையால் அன்னை வழிபாடும் அவர்கள் மத்தியில் தளர்வடையப் பத்தினி இதனிடத்தைப் பெற்றாள். ஆனால், இந்துக்களாகிய தமிழ் மக்கள் மத்தியில் அன்னை வழிபாடு ஆழப் பதிந்திருந்ததால் பத்தினி வழிபாடு அன்னை வழிபாட்டோடு கூடி வளர்ச்சி பெற்றது எனலாம். தமிழ்ப் பிரதேசங்களில் மட்டக்களப்பு, புத்தளம் போன்ற இடங்களிற்றான் பத்தினி கண்ணகியாக, திரௌபதை அம்மனாக இன்றுஞ் செல்வாக்குடன் காணப்படுகின்றாள்.

கோணேஸ்வரத்தில் பல்லவர் காலச் சிலைகள்

தாய்த் தெய்வ வழிபாடு அநுராதபுர அரசர் காலத்திலுஞ் சிறந்து விளங்கியது. இக்காலத்தில் வெளியிடப்பட்ட நாணயங்கள் ''ககபண'' அல்லது ''கர்ஷபண'' என அழைக்கப்படும். இவற்றின் ஒரு பக்கத்தில் ஆண் தெய்வத்தின் உருவமும் ''இலங் கேஸ்வர'' என்ற குறிப்புங் காணப்படுகின்றது. மறு பக்கத்தில் இலட்சுமி உருவங் காணப்படுகின்றது. இதனால் இவ் 'விலங்கேஸ்வர', உண்மையிலே சிங்கள நாட்டார் வழிபாட்டில் முன்னணித் தெய்வமாக விளங்கும் உப்புல்வனைக் (மாயோன், விஷ்ணு) குறிக்கிறது எனலாம். இலட்சுமி விஷ்ணுவின் மனைவியே. மாயோனும், விஷ்ணுவும் ஒன்றே. எனவே இந்நாணயங்கள் காத்தற் கடவுளாகிய விஷ்ணுவையும், அவரது சக்தியாகிய இலட்சுமியையுங் குறிக்கின்றன என ஊகிக்க இடமுண்டு. பல்லவர் கலைப் பாணியிலமைந்த விஷ்ணு, இலட்சுமி ஆகியோரது சிலைகள் கோணேஸ்வரத்திற் கண்டெடுக்கப்பட்டமை ஈண்டு நினைவுகூரற்பாலது. திருகோணமலையில் உலோகத்திலான பத்தினி சிலை யொன்றுங் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

நாணயங்களில் மட்டுமன்றிச் சிவனின் சக்தி, சிற்பங்களிலும் இடம் பெறத் தவறவில்லை. இவற்றுள் கி.பி 7 ஆம், 8 ஆம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த இசுறு முனியாவிற் காணப்படும் இரு சிற்பங்களைக் குறிப் பிடலாம். இதில் ஒன்று, ஆணும் பெண்ணும் அன்யோன்யமாக இருக்கும் காட்சியைச் சித்திரிக் கின்றது. இதை இசுறுமுனியாக் காதலர்கள் என அழைப்பர் பரணவித்தானா போன்றோர். ஆனால் இச்சிற்பத்தின் அமைப்பும், அதில் வீசும் தெய்வீக ஒளியும் இவர்கள் மானிடர்கள் அல்லர் என்பதை எடுத்துக்காட்டி, ஆலிங்கன மூர்த்தியாகிய சிவனும், பார்வதியுமே இவை என்பதை விளக்குகின்றன. அதே இடத்திற் காணப்படும் இன்னொரு சிலையில் ஆண், பெண், மகன் இவர்களது பரிவாரம் ஆகியவை

காணப்படுகின்றன. பரணவித்தானாவோ எனில் இச் சிலையில் சித்திரிக்கப்படும் மகன் துட்டகைமுனுவின் மகனாகிய சாலியா எனவும், பரிவாரத்துடன் காணப் படும் பெண் அவன் காதலியாகிய அசோகமாலா எனவுங் கூறி இவர்கள் இருவரும் துட்டகை முனுவினதும், அவன் மனைவியினதும் முன்னிலை யில் இருக்கும் காட்சியையே இது சித்திரிக்கின்றது என விளக்கமளித்துள்ளார். ஆனால் இச்சிலையின் அமைப்பு சிவகுடும்பத்தையே சித்திரிப்பதை எடுத்துக் காட்டுகிறது.

ஈழத்திற்கு உரிய செப்புத் திருமேனிகள்

இக்காலத்தில் அன்னைக்கெனத் தனியாகக் கோயில்களுங் காணப்பட்டன. அநுராதபுரப் பழைய நகரிற் காணப்படும் அழிபாட்டு நிலையங்களிற் காளி கோயிலொன்றுங் குறிப்பிடத்தக்கது. இவ்வழி பாடிருந்தமைக்குச் சான்றாக, தலையுடைந்த நிலை யிலுள்ள காளி உருவமும் கிடைத்துள்ளது. இங்குக் கிடைத்த ஏனைய வழிபாட்டுச் சின்னங்களில் சிவலிங்கங்களும் அடங்கும். பழைய பொலநறுவை இராசதானியிற் கூடச் சிவ, விஷ்ணு கோயில்களுடன் ஒரு காளி கோயிலும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவற்றோடு இங்குள்ள இரண்டாவது சிவதேவாலயத் திற் சப்தமாதிருகைகளுக்குரிய ஒரு சிறு கோயிலுங் காணப்பட்டது. சப்தமாதிருகைகள், உருவங்கள் புடைப்புச் சிற்பங்களாகவும் இவற்றிற் காணப்பட்டன. இவ்வாறே இங்கு கண்டெடுக்கப்பட்ட மகிஷாசுர மர்த்தினி உருவங்களுங் கொழும்பு நூதனசாலையில் உள. பதவியாவிற்கூடச் சிவலிங்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன. எவ்வகையிலும் ஈழத்து இந்து மதத்தின் சிற்பக் கலைக்குச் சிறந்த உரைகல்லாக அமைவன பொலநறுவை, திருகோணமலை ஆகிய பகுதிகளிற் கண்டெடுக்கப்பட்ட செப்புத் திருமேனிகள் ஆகும். பொலநறுவைச் சிற்பங்களில் அன்னை பார்வதியாகவும், உமாமகேஸ்வரியாகவும், சோமா ஸ்கந்த மூர்த்தத்தில் அமையுந் தாயாகவுங் காட்சி கொடுக்கின்றாள். சரஸ்வதி சிலை ஒன்றுங் காணப் படுகின்றது. இப்பட்டியலில் அர்த்தநாரீஸ்வர மூர்த்தத்திற் காணப்படும் சிவ, உமை உருவங்களும் குறிப்பிடத்தக்கவை. 1950ஆம் ஆண்டில், திருகோண மலையில் அகழ்ந்தெடுக்கப்பட்ட சிலைகளிற் சிவனுடன் சக்தியாகக் காட்சிதரும், அமர்ந்து இருக்கும் பாவனையிலுள்ள சக்தி சிலையும், நிற்கும் பாவனை யிலுள்ள சிலையும் குறிப்பிடத் தக்கவையாகும். நல்லூரிற் கண்டெடுக்கப்பட்ட கஜலட்சுமி சிலையும் பின்னர் யாழ் நகரிற் 'கமால்' வீதியிற் கண்டெடுக்கப்பட்ட துர்க்கையின் செப்புத் திருமேனியும் அண்மையிற் கண்டெடுக்கப்பட்ட அன்னையின் ஏனைய மூர்த்தங்களாகும். யாழ்ப்பாண அரசர் காலத்தில் நல்லூரில் வீரமகாகாளி அம்மன் கோயில் அமைக்கப்பட்டது. இதே காலத்திற் கோட்டை ராஜதானியிற்கூட அன்னைக்கெனத் தனியாக அமைக்கப்பட்ட காளி கோயில்கள் இருந்தன. தென்மாகாணத்தில் தேவேந்திர முனைக்கும் பெந்தோட்டைக்குமிடையே காணப்பட்ட காளி கோயில் ஒன்று பற்றிச் சந்தேச இலக்கியத்திற் குறிப்பு உண்டு. இவ்வாறே இக்காலத்திற் களுத்துறையிலும் ஒரு காளி கோயில் இருந்தது. இது வணிகக் குழுவினரால் நிருமாணிக்கப்பட்டது. இக்கோயிலுக்கு மன்னன் மானியமாக வயல், தோட்டங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட வருமானத்தைக் கொடுத்ததாக இங்குள்ள தமிழ்க்கல்வெட்டுப் பேசுகின்றது.

எனவே ஈழத்து மத வரலாற்றிலும் சக்தி வழிபாடு பழைமையும் பாரம்பரியமும் உடையதாகிறது. இதை இலக்கிய, தொல்லியற் சான்றுகள் உறுதி செய்கின்றன. ஆரம்பத்தில் பராசக்தியாகத் தனித்து வளர்ந்த இவ்வழிபாடு காலகதியில் இந்து மதத்தின் ஏனைய கடவுளர்களதும் சக்தி வழிபாடாக விரிந்தது. பௌத்த மதத்தில் இது பத்தினி வழிபாடாகப் பரந்தது. ஈழத்தைப் போன்றே தென்கிழக்காசிய நாடுகளிலும் இந்து மதம் கிறித்தவ சகாப்தத்திற்கு முன்னரே பரந்திருந்தது. இவ்வித பரவலுக்கு இந்நாடுகளுக்குச் சென்ற இந்திய வர்த்தகரின் பங்களிப்புக் கணிச மானது. இன்று இந்நாடுகளிற் பௌத்தம், இஸ்லாம் ஆகிய மதங்கள் மேலோங்கிக் காணப்பட்டாலுங்கூட, இந்நாடுகளிற் கண்டெடுக்கப்பட்ட இந்துமத உருவங்கள், கோயில்கள், கல்வெட்டுகள் பண்டைய காலத்தில் இப்பிராந்தியத்தில் இந்து மதம் பெற்றிருந்த செல்வாக்கை எடுத்துக் காட்டுகின்றன. சிவ, விஷ்ணு, பிரம்மா வழிபாட்டோடு இவர்களின் சக்திகளும் இவ்வழிபாட்டில் முக்கியம் பெற்றிருந்தன. பகவதி, சதுர்புஜர்தேவி, துர்க்கை, கங்கை, கௌரி, இந்திராணி, உமா, சரஸ்வதி, இலட்சுமி, மகிஷாசுரமர்த்தினி போன்ற அம்சங்களில் தேவி இங்கே துதிக்கப்பட்டாள். சிவசக்தியின் இணைப்பைக் கண்டு எடுக்கப்பட்ட சிவலிங்கங்களும் விளக்குகின்றன. ○○○

பேராசிரியர் சிற்றம்பலம் அவர்கள் இந்து சமயம், அதன் வரலாறு, சிற்பங்கள் தரும் விளக்கம், அகழாய்வு, இந்து சமயத்திற்கு ஆதாரமாகக் கிடைக்கும் கலைப் பொருள்களின் ஆய்வு போன்ற வற்றில் அனுபவமிக்க பேராசிரியர். இவைபற்றி உலகத் தமிழ், சைவ மாநாடுகளில் ஆய்வுரைகளை நிகழ்த்திய பெருமைக்குரியவர். ஈழத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.



பரதமும் பரதத்துவமும்



அம்பிகை சீவரத்தினம்,
இயக்குனர், கலாலயம்,
ஐக்கியராச்சியம்.



பாவ ராக தாளங்கள் சேர்ந்து பெரும் சுவை ததும்ப ஆடப்படும் தமிழர் பாரம்பரியக் கலை பரதக்கலை. பரம்பொருளையே ஆடல் நாயகனாகக் கொண்ட தனிப்பெருமை வாய்ந்தது பார்வதியும் ஆடி மகிழ்ந்த வித்தையைப் பரதமுனி, தாண்டு முனி, உசை போன்றோர் பயின்று இவ்வுலகத்தோர் உய்வுற வழங்கப்பட்ட அமிர்தம் இக்கலை என்றால் மிகையாகாது.

வேதமாம் இருக்கு தன்னுள் பாட்டியமும், மேன்மையாம் யசுர்வேதம் தன்னுள்
அரிதென விளங்கும் அபிநயமும், பேர் ஆகிய சாமவேதத் துள் அகி
லங்கொண் டாடும் கீதமும், மற்றும் அதர்வண வேதத் துள் ரசமும்,
முறைகொளக் கண்டு, சாத்திரம் திரட்டி, முப்பத் திரண்டு லட்சமதாய்
முழங்கிய கிரந்தம், தர்மார்த்த காம மோகசம்ஈந் திடுமென, பின்னும்
திரைகொளும் துக்கம் பயம்சோகம் வெறுப்புத் தீங்குறு பேதங்கள் தீர்த்துத்
திறம்பெறும் ஆனந் தம்தரும் எனவே செப்பியே வாழ்த்தினன் மலரோன்! - அபிநயதர்ப்பணம்



வேதம் கற்றறியாத பாமரரும் வேதத்தில் கூறப்பட்ட சுவையை உணர்ந்து அனுபவித்து மகிழ இருக்கு, யசுர், சாம, அதர்வண வேதங்களின் சாராம்சமாக முறையே பாட்டியம், அபிநயம், கீதம், ரசத்தைச் சேர்த்து ஐந்தாவது வேதமான பிரம்மனால் படைக்கப்பட்டதே நாட்டிய வேதம். இவ்வேதம் அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவை அளித்துத் துக்கம், பயம், சோகம், வெறுப்புப் போன்ற தீமைகளை நீக்கிப் பரமானந்தம் அளிக்கவல்லது என அயன் கூறியதாக அபிநய தர்ப்பணம் கூறுகிறது.

பரத நாட்டியத்தின் தற்காலப் பரிமாணங்கள் பல. ஈடு இணையில்லா நுண்கலையாக, சிறந்ததோர் உடற்பயிற்சியாக, அரிய இயற்கை நோய் நிவாரணியாக, மனத்திற்கும் உடலிற்கும் புத்துணர்ச்சி தரும் பொழுதுபோக்காக, எமது கலாச்சாரத்தைப் பேணும் உயரிய ஒழுக்க நெறியாக, வாழ்வின் வெற்றிக்கு அடிகோலும் அத்திவாரப் பண்பு நெறியாக, சர்வதேச சர்வமத மொழியாக, இறைவனை அடையும் மார்க்கமாகப் பல பரிமாணங்களில் இன்று வீறுநடை போடுகிறது. ஓரினம் நிமிர, ஓரினம் சிறப்புறத் தேவையான பற்பல அம்சங்களில் முக்கிய அம்சமாகத் தன் பங்கினை இக்கலை சிறப்புறச் செய்து தமிழரை, தமிழினத்தைப் பெருமையுறச் செய்கிறது.

பல பரிமாணங்களைக் கொண்டுள்ள இக் கலைக்கும் பரதத்துவத்திற்கும் உள்ள தொடர்பை இக்கட்டுரை ஆராய முனைகிறது.

பரம்பொருளை அடையும் மார்க்கம்

தத்துவம் என்பது மெய்ப் பொருள். சாங்க்ய தர்சன் அடிப்டையில் இருபத்தைந்து தத்துவங்களுள்ளன. இருபத்தைந்தாவது தத்துவம் ஜீவாத்மன்.



இத்தத்துவம் பரமாத்மனைப் பற்றிக் கூறுவதில்லை. வேதாந்த தர்சனம் பரமாத்மாவையே தத்துவமாகக் கொண்டது. பரதவேதமோ பரமாத்மாவைப் பிரிந்து உழலும் ஜீவாத்மனின் தவிப்பையும், மீண்டும் பரமாத்மனுடன் இணையும் அவாவையும் சித்திரிக்கின்றது. அதன் மூலம் எமது வாழ்க்கையின் அடிப்படைக் குறிக்கோளை அடைய ஒரு வழிகாட்டியாகவே பரதத்தை அடியேன் உணர்கிறேன். பரதக் கலையை அறிந்தோர் சப்தத்திற்குப் பின்வரும் உருப் படிகளில் இதனை உணர்வர். ஆடும் ஜீவாத்மன்களை நாயகியாகவும், பரமாத்மாவை நாயகனாகவும், நாயகியை நாயகனுடன் இணைக்கும் சகியை ஞான குருவாகவும் உருவகப் படுத்துவது நடன உலகறிந்த விடயம். பயிற்சித் தொடக்கக் காலத்தில் பரம் பொருளை அறிமுகப்படுத்தி, அப்பரம் பொருளிற்கு அர்ப்பணிக்கும் கலையாக வளர்ந்து, அப்பரம் பொருளை அடையும் மார்க்கமாகப் பரிணபித்து முதுநிலையில் விளங்குவது பரதக்கலை.

மாயையின் தோற்றங்கள் அனைத்திற்கும் இகம் என்றும் இதற்கு அப்பாற்பட்ட பெருநிலையைப் பரம் என்றும் கூறலாம். மாயைக்கு அதீதத்தில் இருக்கும் பரமனை அடைவதே வாழ்வின் முக்கியகுறிக்கோளாகும்.

பரமாத்மா பரம்பொருள் மத, மொழி, பிரபஞ்ச வேறுபாடுகளைக் கடந்த ஆதி அந்தம் இல்லா அன்பே வடிவான மாபெரும் சக்தி. அதனைச் சைவர்கள் சிவன் என்றும் வைணவர் திருமாலென்றும், கிறித்துவர்கள் பரமபிதா எனவும், இன்றைய புத்தமதம் கௌதம புத்தர் எனவும் பற்பல பெயர்களால் அழைக்கின்றனர். ஒரு பொருளை விவரிக்கும் பொழுது நாம் நமக்குப் பழகிய ஆளுமை பெற்ற மொழியில் அதை உணர்ந்து விளக்குகிறோம்.




ஆகையினால் அப்பொருள் அம்மொழிக்கு மட்டுமே சொந்தமானது என்பது உண்மைக்குப் பொருந்தாது. அவ்வாறே பரதக்கலையும் தனக்குப் பரிச்சயமான சிவத்தை, நடராஜனை, சைவ, வைணவக் கடவுளைக் கொண்டு பரதத்தை விளக்க முயல்கிறது என்பதனால் இது மதம் சார்ந்தது என்பது உண்மைக்குப் பொருந்தாது. பரதக்கலையும் பரதத்துவமும் ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற அடிப்படை உண்மையை உணர்த்துகின்றது.

இகம், பரம் எனப் பொருளின் காட்சியானது இருதரப்படுகிறது. ஐம்பொறிகளைக் கொண்டும், அந்தக் கரணங்களைக் கொண்டும் நுகர்வது இகம். பின்பு ஞானக் கண்கொண்டு நுகர்வது பரம். அது போலவே பரதத்திலும் ஆங்கிக, வாசிக, ஆகார்ய, சாத்விக அபிநயங்கள் மூலம் சீரிய பயிற்சியுடன் உயர்ந்த நெறியாழ்கையில் கட்டுப்பட்டு ஆடும் நடனத்தில் ரசம் பிறக்கிறது. ஆடுபவர் உணர்ந்து ஆடும் பொழுது பார்வையாளர்கள் அதே ரசத்தினை அனுபவிக் கின்றார்கள். இவ்வரிய ரசானுபவங்களை நுகர்ந்து அதில் திளைத்த ஆத்மன் அதிற்கூறப்படும் மெய்ப்பொருளை ஞானக்கண் மூலம் காணும் பொழுது பரமானந்த நிலையை எய்துகிறது.

இகந்தையும் பரத்தையும் இணைக்கும் பாலம்

ஜீவாத்மாவானது பலகோடிப் பிறவிகளில் பரிணாபித்துப் பக்குவமாய்க் கொண்டுவரும் பொழுது மாயாசக்தி தாயின் நிலையிலிருந்து ஜீவாத்மனைப் பேணிவருகிறது. இது இகத்தில் இன்றியமையாத பரிணாம வளர்ச்சியாகும். அவ்வகையே பரதத்திலும் அடிப்படைக் கட்டுப்பாடுகள், பயிற்சிகள், அபிநயங்கள், நிருத்தம், நிருத்தியம் நாட்டியம் எனும் மும்மலப் பயிற்சிகள் தாயின் வடிவிலிருந்து ஆடும் ஜீவாத்மனைப் பக்குவப்படுத்துகிறது. எவ்வாறு ஜீவனைப் பக்குவப் படுத்தும் நிலையில் மாயை மும்மலத்தில் ஒன்றாகாதோ அவ்வாறே நிருத்த, நிருத்திய, நாட்டியப் பயிற்சிகள் பயிற்சிக்காலத்தில் மும்மலமாகா. தாயின் கருப்பகத்தில் வள்ர்ந்துவரும் சிசுவிற்குத் தாயின் வயிற்றினுள் வளரும் வளர்ச்சி அவசியம். இதை இகத்துடன் ஒப்பிடலாம். அதே வேளை வளர்ந்த சிசு குறித்த காலத்திற்குள் தாயின் கருப்பத்தை விட்டு நீங்க வேண்டும். அந்தச் சமயத்தில் வளர்த்த கருப்பமானது அந்தச் சிசுவிற்கு மலமாக மாறுகிறது. அந்த மலத்திலிருந்து வெளியேறாவிட்டால் சிசு அழிக்கப்படுகிறது. இதே விதத்தில் மாயை எனும் பிரகிருதித்தாய் ஜீவாத்மனை வளர்த்துப் பக்குவப்படுத்திப் பரமாத்மனிடம் சேர்க்கும் பொழுது




மாயை மலமாகிறது. இவ் வகையே நிருத்த, நிருத்திய நாட்டியத்தினால் பக்குவப்பட்ட நடனமேதை பரதத்தின் உட்பொருளாம் பரமனை பரம்பொருளை உணரும் தருணம் இவை மலமாகிறது. அந்நிலையில் ஜீவாத்மன் பரமாத்மனுடன் இணைந்து பேரின்பம் காண்கிறது. இவ்வகையில் நோக்குங்கால் பரதக்கலை இகத்தையும் பரத்தையும் இணைக்கும் பாலமாக, மார்க்கமாக இளநிலையில் இருந்து, முது நிலையில் ஜீவாத்மனைப் பரமாத்மனாக்கும் மார்க்கமாகப் பரிணமிக்கின்றது. இவ்வாறாகப் பரதக் கலையில் ஒவ்வொரு பிரிவும் இகம், பரம் என்ற இரு தரங்களையும் அடையும் நிலையை உணரமுடியும்.

''அவனின்றி ஓரணுவும் அசையாது'', ''அவனருளாலே அவன்தாள் வணங்கி'' என்றனர் எம் முன்னோர். ஆம்! அவன் தாள் பணியவும் அவன் அருள் வேண்டும். அவ்வகையே அப்பரம்பொருள் தன்னையடையும் மார்க்கமாக, இகத்திலும் பரத்திலும் பேரின்பம் சேர்க்கும் பரதக் கலையினை அருளிப் பரம்பொருள் ஒன்றே, அது அன்பே வடிவமானதென உணர்த்திட பரதத்துவத்தின் பிரதிநிதியாக விளங்குவதே பரதக்கலை என்றால் மிகையாகாது. இவ்வரும் ஐந்தாம் வேதம்தனைப் பயில்வோரும் பார்த்து உணர்வோரும் இவ்விகத்தில் பேரின்பம் பெற்று அஞ்ஞானம் அகன்று மெஞ்ஞானம் பெற்றுப் பரமானந்தம் அடைவோமாக! ○○○

அன்னை அருள்மிகு முத்துமாரி

பெருங்கவிக்கோ வா.மு. சேதுராமன்





உலகத்தின் திசைகள் எல்லாம்
உயர்தமிழ் ஈழ மக்கள்
கலகத்தார் கொடுமை யாலே
காலங்கள் போரா டித்தான்
நலம்பல கண்டே வாழ்வர்
நடைதெளி சோத னைக்குள்
நிலம்தமிழ்த் தெய்வங் கட்கே
நிலைகோயில் எடுத்துள் ளாரே!



ஒங்கருள் தெய்வங் கட்கே
உன்னத ஆல யங்கள்
வீங்கருள் பாலிக் கும்சீர்
வினைமாட்சி அமைத்தார் வையம்
தாங்குஇத் திசைநா டெல்லாம்
தவச்சிவன், முருகன் அம்மை
பாங்கருள் கோயில் கண்டார்
பைந்தமிழ் ஈழ மக்கள்!



சைவத்தின் காவ லர்கள்
தாய்அன்னை முத்து மாரி
கைவந் தமுத மாகக்
காலத்தின் ஒளியுமாக
வையவம் வைக றைபோல்
மாவருள் புதைய லைப்போல்
ஐவகை நிலத்தாள் அன்னை
ஆலயம் இலண்டன் கண்டார்!



அம்மைநம் முத்து மாரி
ஆத்தாளின் மகிமை என்னே!
செம்மைசேர் அழகுத் தேவி
செந்தூரச் சிவப்பின் மாலை
விம்மித உயிர்ப்பின் கோர்வை
விரிவையும் வளைக்கும் பார்வை
தம்மடி யார்கள் வாழச்
சம்பத்தே ஈயும் மாரி!



நீலவான் வண்ண ஆடை
நிறைவாக உடுத்தி விஞ்சும்
கோலவான் கிழக்குத் திக்குள்
கொடைக்கதிர்ச் செந்தீ யாகச்
சாலவான் பூர ணத்துச்
சந்திரன் பொட்டு வைத்துக்
காலவான் மகளாய் மாரி
கவின்லண்டன் பவனி வந்தாள்!

விண்ணக விண்மீன் கள்தாய்
வியன்கழுத்து முத்துமாலை
கண்களோ மின்னல் வீச்சு
கரங்கால்கள் வைரத் தொங்கல்
மண்ணக எழில்கள் சேர்ந்த
மாவெழில் உடலின் மாட்சி
பண்ராக மாலி கைகள்
பார்தாயின் குரல்கள் அம்மா!

இருளொழி விளக்கைப் போலும்
இடர்நாளி ஆற்றல் போலும்
மருளொழி அறிவைப் போலும்
மாண்புசேர் நிறைவைப் போலும்
தெருதெளிவுச் சித்தி போலும்
சிந்தனைக் கருவைப் போலும்
அருள்தரும் அன்னை முத்து
ஆனந்த மாரி அன்னை!

தங்கத்தின் தேரி ருந்தே
தாய்மாரி உலாவந் தக்கால்
செங்கதிர் ஒளிகள் ''தேம்சு''
திகழ்நதி படர்ந்தே மின்னும்
பொங்கழகு தனையும் வெல்லும்
பூரிப்பின் மகுடம் சூடும்
மங்கல மாரித் தாயின்
மாமாட்சி அழகும் என்னே!

பெண்மைக்குப் பெருமை சேர்க்கும்
பீடுறும் அன்னை மாரி
கண்மையின் பூச்சோ வானக்
கருமேகங் கள்சூழ் காட்சி
தண்ணருள் ஏசு பெற்ற
தவத்தாயே மேரி மாரி
மண்இலண்டன் ஆங்கி லேயர் - தாமும்
மதித்துத்தாய் வணங்கு வாரே!

அலங்கார நாய கிக்கோ
அணிகுட முழுக்காட்டம்மா
தலமுளார் அனைவ ரும்நம்
தாய்தொழு தேத்து கின்றார்!
வலம்வந்தே கோயில் சுற்றி
வாயார வாழ்த்தி சைத்தே
பலம்காணப் பணிகின் றாரே
பயன்குட முழுக்காட் டம்மா!

ஆவியில் கலந்தாள்! பக்தர்
அருஞ்செயல் கலந்தாள்! வெற்றிச்
செயல்களில் கலந்தாள்! அன்பு
தாவிடும் பணிகள் எல்லாம்
தலமாகக் கலந்தாள், பண்பின்
மேவிய குடிமக் கள்தம்
மேன்மையில் கலந்தாள்! அம்மா!
அருள்மிகு முத்து மாரி!









பன்முறை இலண்டன் சென்றேன்
பதிமுதல் முத்து மாரி
அன்னையின் அருளின் வாசல்
அகம்வைத்தேன் தாள்கள் பற்றி
என்னையே இழந்தேன் அம்மா!
இருவிழி நீர்ப்பெ ருக்கில்
மன்னுசீர் அருளின் ஆட்சி
மாண்பினால் உய்ந்தேன் அம்மா!


குடமுழுக்கோ உனக்கே அம்மா
குருதிமுழுக்கோ ஈழ மண்ணில்!
கடல்முழக்கம் போல்எம் மக்கள்
கதறியே அலறு கின்றார்
இடர்தீர்த்தே ஈழ மக்கள்
எம்மின மக்கள் வாழ
உடன்பாடு காண வைப்பாய்
உரிமைகள் வெல்க அம்மா!

அலைமோதும் கப்ப லுக்கோ
அடங்கநங் கூரம் உண்டு
நிலைஆடும் பாம்பு கூட
மகுடியிசை யடங்கும்! மண்ணின்
கொலைவெறி அடங்க வைக்கக்
குடமுழுக்கு நாளில் யாங்கள்
தலைதாழ்த்தி வணங்கு கின்றோம்
தாய்முத்து மாரி வாழி! ○○○

மனம் - மொழி - மெய்

இறைவனை வழிபடுவதற்குரிய வாயில்கள் மூன்று.
அவை மனம், மொழி, மெய் என்பன. இம்மூன்றும் இயைந்திலங்கும்
வழிபாட்டிற்குத் திரிகரண வழிபாடு என்று பெயர். இவற்றில் மனத்தால்
செய்யப்படுவது மானசபூசை (ஆழ்நிலைத் தியானம்) எனப்படும். இப்பூசையினை
மேற்கொள்வோர் முதலில் மனத்தில் ஒரு கோயிலை எழுப்புவர்.
அக்கோயில் மானசக் கோயில் எனப்படும்.
பின்பு அதில் இறைவனை எழுந்தருளச் செய்து பூசையினை நிகழ்த்துவர்.
நாயன்மார்களுள் மானசப் பூசை மேற்கொண்டு மகேசனை அடைந்தவர்கள் இருவர்.
ஒருவர் பூசால நாயனார். மற்றொருவர் வாயிலாய நாயனார்.

சிவாகம வழிபாடும் கும்பாபிஷேக மகிமையும்



சிவஸ்ரீ கி. பிச்சைக்குருக்கள்
தலைமை அருச்சகர்
ஸ்ரீ கற்பக விநாயகர் திருக்கோயில்,
பிள்ளையார்பட்டி

உலக வரலாற்றில் மனித குலத்தைப் பண் படுத்தத் தோன்றிய பல்வேறு மதங்களில் சைவநெறி மிகவும் தொன்மை வாய்ந்தது. சிவவழிபாட்டை வலியுறுத்தி காஷ்மீரச்சைவம், கருநாடக சைவம், தமிழக சைவம் என்று பல பிரிவுகள் உள்ளன. வேத சிவாகமங்கள் சிவபெருமானால் உயிர்கள் உய்யும் பொருட்டு வழங்கப்பெற்றன. ''அண்ணல் அருளால் அருளும் சிவாகமம்'' என்பது திருமூலர் வாக்கு.

வேதம் நான்கு பெரும் பிரிவுகளை உடையது. ரிக், யஜுர், சாமம், அதர்வணம் எனப்படும். சிவாகமங்கள் இருபத்து எட்டு. ''அஞ்சோடு இருபத்து மூன்றுள ஆகமம்'' என்பதும் திருமூலர் வாக்கு. காமிகம் முதல் வாதுளம் ஈறாகக் கூறப்படும். இருபத்து எட்டு ஆகமங்களும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற படிவரிசையில் நான்கு பாதங்களாகக் காணப்படுகின்றன. வேதசிவாகமங்கள் குருகுல முறையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றன.

சிவாகமம் கூறும் ஞானபாதம் சைவசித்தாந்தம். இறைவன், உயிர்கள், தளை எனப்படும். பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள் உண்மைகளை விளக்கும். இதற்குரிய வடமொழி நூல்களும் சிவஞானபோதம், சிவஞானசித்தியார் உள்ளிட்ட மெய்கண்ட சாஸ் திரங்கள் எனப்படும். செந்தமிழ் நூல்களும் சைவத்தின் பெருமைகளை நிலைநாட்டி வருகின்றன. பல்வேறு பத்ததிகள் எனப்படும் வழிநூல்களும் தோன்றிப் பேருதவி புரிந்தன.

சைவ வழிபாடு ஆன்மார்த்தம், பரார்த்தம் என இரண்டு வகையானவை. தனக்காகவும், தன் குடும்ப நலத்திற்காகவும் சிவதீட்சை பெற்று இல்லங்களில் சிவாகம முறைப்படி வழிபடுவது ஆன்மார்த்தம். திருக்கோயில் அமைத்து திரு உருவங்களுக்கு அஷ்ட பந்தனம், ரஜதபந்தனம், சுவர்ணபந்தனம் முதலியன செய்து ஸ்திரமாக ஓர் இடத்தில் அனைத்து உயிர்களின் நலன் வேண்டி வழிபடுவது பரார்த்தம் எனப்படும்.

உருவ வழிபாடு சைவத்தில் மிகமிக முக்கிய மானதாகக் கருதப்படுகிறது. வ்யக்தம், அவ்யக்தம், வ்யக்தாவ்யம் என மூன்று நிலைகளில் இறை வழிபாடு சிவாகமங்களில் வலியுறுத்தினாலும் திருக்கோயில் வழிபாட்டிற்குத் திருஉருவம் மிக மிக அவசியம்.

உயிர் பல்வேறு தகுதிகளில் விளங்குவது, ஆணவம், கன்மம், மாயை என மும்மலச்சேர்க்கை கொண்டு விளங்குவது. சகலவர்க்கத்து ஆன்மா, ஆணவம், கன்மம் இரண்டும் மட்டும் உள்ளவை பிரளாயகலர். ஆணவம் மட்டும் உள்ளது விஞ்ஞான கலர் என சைவசித்தாந்தம் கூறும். மூன்றுவிதமான தகுதியுடைய உயிர்களை இறைவன் அதன் பக்குவத்திற்கேற்ப தம் கருணையினால் உய்யச்செய்வார். உயிர்கள் மலநீக்கம் பெற்றுப் பேரானந்தம் பெற வேண்டுமானால் இறைவன் குருவடிவாக எழுந்தருளி வந்து ஆட்கொள்வதுதான் வழி எனச் சிவஞான போதம் எட்டாம் சூத்திரம் கூறும். திருவுருவங்களில் எழுந்தருள்வது சிவாகம மரபு. திருக்கோயில்களின் கட்டடக் கலையைப் பழங் காலத்தில் மூன்று பிரிவாகச் செய்துள்ளனர். நாகரம் எனப்படும் பிரிவைச் சார்ந்தவை வட இந்தியக் கோயில்கள். இவை அடி முதல் உச்சி வரை சதுரமாகக் காணப்படும். வேசரம் எனப்படும் பிரிவைச் சார்ந்த பௌத்த கோயில்கள் வட்ட வடிவமாகவும், சில

கும்பாபிஷேக தரிசனம் செய்தால் எல்லையற்ற பலன்கள் உண்டு. பாவம் நீங்கி மன மகிழ்ச்சியோடு நோயின்றி வாழ்வார்கள். பரம்பரை செழிக்கும். ஓர் அறிவுடைய உயிர்கள் முதல் ஆறறிவுடைய உயிர்கள் வரை உய்ய வழிசெய்பவை திருக்கோயில் வழிபாடும் சைவ நன்னெறியும் என்பதைப் பன்னிரண்டு ஆண்டுகட்கு ஒருமுறை நிகழும் கும்பாபிஷேக மகிமை அனைவருக்கும் உணர்த்தும்.

அரைவட்ட வடிவமாகவும் காணப்படுகின்றன. தென் இந்திய, இலங்கை மற்றும் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் காணப் படுவது திராவிடம் என்ற வகைக் கோயில்கள்.

சேர, சோழ, பாண்டியர்கள் எனப்படும் தமிழக மன்னர்களாலும், ஹோய்சாலர்கள், சாளுக்கியர்கள், விஜயநகர மன்னர்கள், பல்லவர்கள் அதைத்தொடர்ந்து நாயக்க மன்னர்கள் திராவிட முறைப்படி கோயில்களை அமைத்து உள்ளனர். இறைவனுக்கு மட்டும் கோயில்களை அமைப்பது கேவலாலயம். இவை வட இந்தியாவில் அதிகம். இறைவனுக்கும், இறைவிக்கும் அமைவது மிஸ்ராலயம், பரிவாரங்களுடன் விரிந்து அமைவது சங்கீர்ணாலயம் எனப்படும்.

சிவாகமங்களில் கோயில் அமைய வேண்டிய இடம், சிற்பக்கலைகள், முகூர்த்தம், கர்ஷணம் எனப்படும் உழும் கிரியை தொடங்கி பிரதிஷ்டை, உற்சவம், பிராயச்சித்தம் என்பன விரிவாக விளக்கப் பெற்றிருந்தன. அதை வழியாகக்கொண்டே இன்றைய கோயில்கள் சிறப்புற நடந்து வருகின்றன.

இதில் கும்பாபிஷேகம் என்பது விரிவான கிரியையாகும். உலகம் முழுவதும் பரந்துள்ள சர்வ வியாபகமான பரம்பொருளை விநாயகராகவோ, முருகனாகவோ, சிவலிங்கவடிவிலோ, பார்வதி, மஹாமாரி போன்ற பல்வேறு வடிவங்களை உள்ளன் போடு தியானித்து சிவாகம மந்திரம் கூறி யாகசாலை களில் வழிபட்டு, வழிபட்ட கலசங்களைத் திருவுருவங் களில் சுப முகூர்த்தத்தில் அபிஷேகம் செய்வது கும்பாபிஷேகம் என்பது அனைவரும் அறிந்ததாகும்.

இதை நான்கு பெரும் பிரிவுகளாகச் சிவாகமம் கூறும். அநாவர்த்தனம் என்பது புதிய கோயில் கட்டுதல். ஆவர்த்தம் என்பது ஏற்கெனவே இருந்து இயற்கையின் பேரிடர், எதிரிகளின் படையெடுப்பு போன்றவற்றால் நித்யபூஜை இல்லாது பல வருடம் சிதைந்த நிலையில் உள்ள கோயில்களைப் புதுப்பித்துக் கும்பாபிஷேகம் செய்வது.

ஏற்கெனவே நித்யபூஜை நடந்துவரும் கோயில் களில் ஜீர்ணோத்தாரணம் எனப்படும் பழுது நீக்கம் செய்து புதிய வண்ணங்கள் தீட்டிக் கும்பாபிஷேகம் செய்வதைப் புனராவர்த்தனம் என்பர்.

சிவாகம விரோதமான செயல்கள் திருக்கோயிலினுள் நிகழ்ந்தால் உடனடியாகச் செய்வது அந்தரிதம் எனப்படும். மற்ற மூன்றும் சுபமுகூர்த்தங்களில் செய்தல் வேண்டும். அந்தரிதப் பிரதிஷ்டைக்கு சுபமுகூர்த்தம் அவசியமில்லை.

அநுக்ஞை, விக்னேஸ்வர பூஜை, தன பூஜை, வாஸ்து சாந்தி, மிருத்சங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷாபந்தனம், கடஸ்தாபனம், யாகபூஜை, பூர்ணாகுதி, உபசாரங்கள், அஷ்டபந்தனம், ஸ்பர் சாகுதி, கும்பாபிஷேகம் முதலியன மிக விரிவாகப் பிரதிஷ்டைக்கு தக்கவாறு மூலாகமங்களிலும், பத்ததி களிலும் கூறப்படுகிறது.

மன அமைதிக்காக அலையும் மனிதவர்க்கம் மன நிம்மதியும், மகிழ்ச்சியும் வேண்டிச் சரணடையும் இடம் திருக்கோயில்கள்

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர், நீந்தார்
இறைவனடிசேராதார்''

''தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க்கு
அல்லால்
மனக்கவலை மாற்றலரிது''

என்பவை திருவள்ளுவர் வாக்கு.

ஆகவே, மனித குலம் நலன் வேண்டிச் செல்லும் திருக்கோயில்களை முறைப்படி அமைத்துக் கும்பாபிஷேகம் செய்வது பெரும் புண்ணியமாகும். பழங்காலத்தில் மன்னர்கள் மாபெரும் கோயில் கட்டினார்கள். அதன்பின் தமிழகத்தின் பாடல்பெற்ற தலங்களைத் தேடித்தேடி நாட்டுக்கோட்டை நகரத் தார்கள் பல திருக்கோயில்களைக் கட்டினார்கள். தற்போது உலகம் முழுவதும் பலவழிபாட்டுத் தலங்கள் அமைக்கப்பெற்றுச் சமய, சமூக நலப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

''கல்லினால் கோயில்செய்தவர் கயிலைவிட்ட கலாதாரே'' போன்ற வரிகளும் பெருமையை உணர்த்தும். ○○○

யோகம் தரும் சித்தி

உடலை அழியாமலும், வெய்யில் மழை முதலிய இயற்கைப் பாதிப்புகளால் வேதனைப் படாமலும் திடமாகத் தவம் புரிவதற்கு இடையூறு இல்லாமலும் இருக்கவே யோகப் பயிற்சிகள் மூலம் சித்திகளைச் சித்தர்கள் அடைகிறார்கள்.

சித்தர்களின் நோக்கம் சித்திகளை அடைந்து மகிழ்வதல்ல. சித்திகளின் மூலம் மனோலயம் பெற்றுத் தவம் புரிவதே குறிக்கோளாகும். சித்திகள் தவத்திற்கு உதவும் சாதனங்களேயாகும்.

சங்கும் மகிமையும்


பண்டிதர் சுந்தரனார்

சங்கு தெய்வாம்சம் பொருந்தியது. பூஜிக்கத் தக்கது. மகாவிஷ்ணுவின் இடது கரத்தை அலங்கரிப்பது. ஆலயங்களில் அபிஷேக ஆராதனைக்காக உபயோகிக்கப்படுவது. வீடுகளில் வைத்துப் பூஜை செய்யப்படுவது. இல்லங்களின் பாதுகாப்புக்குரியது.

சகல தேவதைகளும் சங்கில் இருப்பதாக ஐதீகம். சங்கைத் தூய நீரினால் நீராட்டி ஒரு பீடத்தில் வைத்து மஞ்சள், குங்குமம், சந்தனம் பூசி புஷ்பங்களினால் அலங்கரித்து நீர், பால் நிரப்பி பூஜிக்க வேண்டும். இப்படிப் பூஜித்தால் சகல நன்மைகளையும் பெறலாம். சகல தோஷங்களையும், பாபங்களையும் போக்கவல்லது சங்கு பூசை. ஆலயங்களில் சங்கு பூசை ஒரு அம்சமாக இருக்கிறது.

''கோழி சிலம்பச்
சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப
இயம்பும் வெண்சங்கெங்கும்''

எனத் திருவெம்பாவை சங்கின் முக்கியத்துவத்தைக் கூறுகிறது.



வைகறைப் பொழுது, காலையின் குளிரான இளமைக் காலம். எங்கும் கோழிகள் கூவுகின்றன. நாதஸ்வரங்களின் ஓசை காற்றுடன் கலந்து ஒலிக்கின்றன. அவற்றுடன் வெண் சங்குகள் முழங்குகின்றன.

சங்கின் மகிமை இப்படிக் கூறப்பட்டிருக்கிறது.

இனி, திருப்பாவை கூறுவதைப் பார்ப்போம்.

''செங்கல் பொடிக்கூரை
வெண்பல் தவத்தவர்
தங்கள் திருக்கோயில்
சங்கிடுவார் போகின்றார்''

செங்கல் பொடியைப் போன்ற நிறமுடைய காவி உடைகளையும், வெண் பற்களையும் கொண்ட தவசிகள் வைகறையில் தங்கள் திருக்கோயில்களில் சங்குகளை இசைப்பதற்காகச் செல்கின்றனர் என்பதாகும்.

சங்கொலி விடியலின் வரவை அறிவிக்கவும், கோயில்களில் இறை வழிபாடுகள் தொடங்குகின்றன என்பதை உணர்த்தவும், அந்த வழிபாடுகளில் பங்கேற்கப் பக்தர்களை அழைக்கவும் முழங்குகின்றன. இப்படி எமது சமயத்துடனும், வழிபாட்டுடனும் சங்கு தொடர்புள்ளதாக இருந்து வருகிறது.

சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் ஆட்சிக் காலங்களிலும், காலத்திற்குக் காலம் ஆட்சிசெய்த தமிழ் மன்னர்களது காலத்திலும் சங்கொலிக்கு முக்கியத்துவம் இருந்து வந்திருப்பதற்கான சான்றுகள் உள்ளன. விவேக சிந்தாமணியில் இடம்பெற்றுள்ள பாடல் ஒன்று ''சங்கு முழங்கும் தமிழ் நாடன்'' என மன்னனைக் குறிப்பிட்டுள்ளது. சங்கொலி அரச நிர்வாகத்திலும் பிரதான இடத்தைப் பெற்று இருந்துள்ளது.

சைவ மக்களின் சமயச் சடங்குகளிலும், வழிபாட்டிலும் சங்கு முக்கியமான இடம் பெறுவதைக் காணலாம்.

சங்குகளில் ''பாஞ்சசன்யம்'' என்று சொல்லப்படும் சங்கே தலைமைச் சங்காகும். இந்த அரிய சங்கினைச் சிவபெருமானிடமிருந்து பெருமாள் இறைஞ்சிப் பெற்ற திருத்தலமே தலைச்சங்காடு.

சீர்காழிக்கு அண்மையில் திருவலம் புரம் என்னும் தலமுள்ளது. பெருமாள் வலம்புரிச் சங்கினை வழிபட்டு வலம்புரிச் சங்கினைப் பெற்றபடியால் இத்தலம் இப் பெயரைப் பெற்றது.

இப்படிச் சங்குடன் தொடர்புடைய தலங்களும், தீர்த்தங்களும் தமிழ்நாட்டில் நிறைய உள்ளன.

உவர் நீர் கலந்த கடலில் சங்குகள் விளைவதைப் போல நன்னீரிலும் சங்குகள் விளைவதுண்டு. ஆனால், கடலில் விளையும் சங்குகளுக்குத்தான் சக்தி

அதிகமாகும். இவைதாம் வழிபாட்டுக்கு உகந்தவை.

இடம்புரி, வலம்புரி, சலஞ்சலம், பாஞ்சசன்னியம் சங்குகளில் இடம்புரி, வலம்புரி, சலம்சலம், பாஞ்சசன்னியம் என நான்கு வகை உள்ளன.

இடம்புரி : ஆயிரம் சிப்பிகள் சூழ்ந்த நிலையில் காணப்படுவது இடம்புரியாகும். இவைகள் இடப் பக்கச் சார்பாக வரிகளைக் கொண்டிருப்பன. கடல் படுக்கையில் அதிகமாக இவை காணப்படும்.

வலம்புரி : ஆயிரம் இடம்புரிச் சங்குகள் புடை சூழக் காணப்படுவது வலம்புரிச் சங்காகும். வலப் பக்கச் சார்பான ரேகைகளைக் கொண்டவை இவை. இவை அரிதாகத்தான் கிடைக்கும். அரிய இந்த வலம்புரிச் சங்குகள் போற்றிப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. ஆலயங்களில் சங்கு பூசைக்குப் பயன் படுத்தப்பட்டு வருகின்றன. அதிக விலை கொடுத்துத் தான் இவற்றைப் பெற்றுக்கொள்ள முடியும்.

சலஞ்சலம் : ஆயிரம் வலம்புரிச் சங்குகள் சூழக் காணப்படுவது சலஞ்சலமாகும். இது வலம்புரிச் சங்கு களில் முதன்மையானது.

பாஞ்சசன்னியம் : ஆயிரம் சலஞ்சலஞ் சூழ்ந்தது பாஞ்சசன்னியம் என்னும் கிடைப்பதற்கரிய சங்காகும். சங்கு சக்கரதாரியாகக் காணப்படும் பெருமாளின் இடக்கையில் காணப்படுவது இச்சங்காகும்.

பெருமாளின் கையில் பாஞ்சசன்னியம் இருக்கும் போது பஞ்சபாண்டவர்களது கைகளிலும் சங்குகள் இருந்துள்ளன. அவை -

தருமன்-அனந்த விஜயம், பீமன்-பௌண்டரம், அருச்சுனன்-தேவதத்தம், நகுலன்-சுகோசம், சகாதேவன் -புஷ்பகம்.

இவ்வகைச் சிறப்புகளினால்தான் வீடுகளிலும் வலம்புரிச் சங்கை வைத்துப் பூசை செய்யும் பழக்கம் ஏற்பட்டது. நவதானியங்கள், பணம், மஞ்சள், அறுகு, மலர்கள் போன்றவற்றால் சங்கினை அலங்கரித்து வணங்கலாம். பௌணர்மி தினங்களில் சங்கை நீரினால் புனிதமாக்கி பால் நிரப்பிப் பௌணர்மிச் சந்திரனைப் பார்க்க வைப்பதும் விசேஷமாகும்.

ஆலயங்களில் சங்கொலிக்காக உபயோகத்தில் இருப்பது இடம்புரிச் சங்காகும். இதிலும் முதன்மை யான சங்குகள் உள்ளன. அவை மனத்தைக் கவரும் ஓசை உடையவையாக இருக்கின்றன. முந்திய காலங்களில் இச்சங்கினங்கள் பெறுமதிப்புள்ளவையாக இருந்துள்ளன. அதனால் சமயச் சார்பானவர்களும், வசதி படைத்தவர்களும் தமது இல்லங்களில் ஓசை நிறைந்த சங்குகளைத் தமது வழிபாட்டு அறைகளில் வைத்துப் பாதுகாத்து வந்திருக்கிறார்கள்.



இச்சங்குகள் எப்படி ஆலய உற்சவங்களில் உபயோகிக்கப் பட்டன என்பது பற்றிச் சில முக்கியமான தகவல்களைத் தந்து உதவி உள்ளார் இலண்டன் சைவ முன்னேற்றச் சங்கப் பிரமுகர் திரு. **வ.இ. இராமநாதன்** அவர்கள். அத்தகவல்கள் வருமாறு:-

வீடுகளில் வைத்து உபயோகிக்கப்பட்ட சங்குகள் அந்தந்த ஊர்களில் நடைபெறும் ஆலய உற்சவங் களின்போது வீடுகளிலிருந்து சேமக்கல ஒலியுடனோ அல்லது மேளதாள வாத்திய இசையுடனோ ஊர்வலமாக ஆலயங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்டு வந்துள்ளன. சில கிராமங்களில் சங்கிற்கான ஊர்வலம் இன்றும் நடைபெறுவதாக அறிகிறேன். ஆலயங்களுக்குக் கொண்டுவரப்பட்ட சங்குகள் மறுபடியும் அதேபோன்ற சீருடன் உரித்தான வீடுகளில் சேர்ப்பிக்கப்பட்டு விடுகின்றன.

சிலர் தமது வீடுகளுக்குப் பாதுகாப்பாக வீட்டின் வெளிப்புறத்தின் நான்கு மூலைகளிலும் சங்கினைப் பதித்து வைத்தும் வந்திருக்கிறார்கள். இப்படிச் சங்கைக் காவலுக்குப் பதிக்கும் வழக்கம் இன்றும் நமது மக்களிடம் இருந்துவருகிறது. தமிழ் நாட்டில் உள்ள முஸ்லிம்களும் இப்படிச் சங்குகளை வீட்டுக் காவலுக் காக உபயோகித்து வருகிறார்கள் என அறிகிறேன்.

மலேசியாவில் குடியேறிய தமிழர்களிடத்தும் சங்கு பிரபல்யம் அடைந்துள்ளது. இங்குள்ள அனேகரிடம் பெறுமதியான வலம்புரிச் சங்குகள் உள்ளன.

சங்கின் புனிதம் அதன் குணத்தில் உள்ளது எனலாம். ''சங்கு சுட்டாலும் வெண்மை தரும்'' என்பது முதுமொழியாகும். வெண்மை புனிதமானது. புனிதம் வெண்மையானது எனத் திரு. இராமநாதன் ஒரு விளக்கத்தையும் தந்துதவினார்.

முத்துமாரிஅம்பள் சந்நிதியில் சங்காபிஷேகப் பூசையை 108 வலம்புரிச் சங்குகளை வைத்தே செய்து வருவது உண்டு.

தினமும் அன்னைக்குப் பன்னீர் அபிஷேகத்திற்கு உபயோகிக்கப்படும் வெள்ளிக் கவசத்தினால் அலங்கரிக்கப்பட்ட வலம்புரிச் சங்கு. இலண்டன் முத்துமாரியம்பாளின் காணிக்கையாக இதே அமைப்பில் மூன்று வலம்புரிச் சங்குகள் கீழ்க்காணும் ஆலயங்களுக்கு வழங்கப்பட்டன.

1. கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயம்
2. மன்னார் திருக்கேதீஸ்வரர் ஆலயம்
3. தெல்லிப்பழை துர்க்கை அம்பாள்

தமிழக சிற்பக் கலை

தமிழகக் கோயில்கள் தொன்றுதொட்டே மக்களின் பண்பாடு, பழக்க வழக்கங்கள், கலை ஆகியவற்றைப் பேணிக்காத்து வளர்க்கும் உறைவிடங்களாக இருந்து வந்திருக்கின்றன. இந்தியக் கட்டடக் கலை, பொறியியல், சிற்பக் கலை ஆகியவற்றின் சிறப்புகளை எடுத்துக்காட்டும் இறவாவரம் பெற்ற இலக்கியங்களாக இக்கோயில்கள் விளங்குகின்றன. கோயில் கட்டடக்கலை, முறையே பல்லவர்கள், சோழர்கள், பாண்டியர்கள், விசயநகர மன்னர்கள், நாயக்கர்கள் காலங்களில் தொடர்ந்து படிப்படியாக வளர்ச்சியடைந்து வந்துள்ளது.

பழங்காலத்திலிருந்தே தமிழகத்தில் சிற்பக்கலை இருந்து வந்திருக்கிறது என்றாலும் பல்லவர்கள் காலத்திலிருந்துதான் (கி.பி. 6ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 9 ஆம் நூற்றாண்டு வரை) சிற்பக் கலையின் வளர்ச்சி ஆதாரபூர்வமான சான்றுகளுடன் ஆரம்பமாகிறது. கி.பி. 8 ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 10 ஆம் நூற்றாண்டு வரை உள்ள காலத்தில் சிற்பக்கலை ஒப்புயர்வற்ற நிலையை அடைந்தது.

பல்லவர் கால சிற்பங்கள் பெரும்பாலும் ஏதாவது ஒரு நிகழ்ச்சியைச் சித்திரிப்பனவாகவே அமைந்து உள்ளன. பல்லவர்கள் சிற்பக்கலையில் கைதேர்ந்தவர்கள். கட்டடக் கலையின் ஓர் அங்கமாகச் சிற்பக்கலை இருந்தாலும் இவர்களது கைத்திறனால் அவை தனித் தன்மையோடு விளங்குகின்றன. பார்ப்போரின் கவனத்தைத் தம்வசம் ஈர்த்துக்கொண்டு அவற்றுக்கு ஆதாரமாக நிற்கும் கட்டடக் கலையின் தன்மையை மறக்கச்செய்துவிடுகின்றன. மாமல்லபுரம், பல்லவர்களின் சிற்பத் திறனுக்கு எடுத்துகாட்டாகும்.

பல்லவர்கள் காலத்துச் சிற்பங்களில் காணப் படும் ஒசிந்த தோற்றம் சோழர்கள் காலத்தில் ஒரு விதநளினத்தைப் பெற்றது. மெல்லிய வடிவமைப்பு துல்லியமான உருவம் பெற்றது. இக்காலச் சிற்பங்கள் அழகானவை, நேர்த்தியானவை. பார்ப்போர் உள்ளத்தில் கவிதை உணர்ச்சியைத் தூண்டவல்ல தன்மை வாய்ந்தவையாக இருந்த பல்லவர்கள் காலச் சிற்பங்கள் படிப்படியாகக் **கல்லில் கவிபாடி நிற்கும் கலைக் களஞ்சியமாகச்** சோழர்கள் காலத்தில் மாற்றம் அடைந்தது. சோழர்கள் கட்டடக் கலையில் வல்லவர்கள். அவர்களது நெடிதுயர்ந்த கோயில்களின் கம்பீர மான தோற்றத்தில் சிற்பக்கலை ஐக்கியமாகிவிடுகிறது. சீனிவாசநல்லூர், கும்பகோணம், தஞ்சை, கங்கை கொண்ட சோழபுரம் போன்ற இடங்களில் உள்ள கோயில்கள் சோழர் கால சிற்பங்களின் சிறப்பை விளக்கும் கலைக்களஞ்சியங்களாகும்.

சோழர்கள் காலப் பிற்பகுதியில் தொடங்கப் பட்ட ஆடை அணிகலன் முதலிய அழகிய நுட்ப வேலைப்பாடுகள் பிற்காலச் சிற்பங்களில் முக்கியத்துவம் பெற்றன. இக்காலத்தில் எவரும் வியப்புறும் அளவிற்கு ஏராளமான சிற்பங்கள் உருவாக்கப் பட்டன. அவை அளவில் பெரியவை, நுட்பவேலைப் பாடுகள் அமைந்தவை. மதுரை, நெல்லை, தென்காசி, பேரூர், சுசீந்திரம் போன்ற இடங்களில் உள்ள சிற்பங்கள் இத்தன்மை வாய்ந்தவை.


தமிழகத்தில் உள்ள எல்லாக் கோயில்களுமே தனித்தன்மை வாய்ந்தவை; இத்தகைய சிறப்புமிகு சிற்பங்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டவை. அவற்றில் தேர்ந்து எடுக்கப்பட்ட சிலவற்றை மட்டும் **சில்பியின்** கைவண்ணத்தில் யாவரும் பார்த்து மகிழும் வண்ணம் இதில் வெளியிட்டிருக்கிறோம்.

ஓவியர் 'சில்பி'

சில்பி என்ற பெயர் தமிழ் வாசகர்கள் நன்கறிந்த ஒன்றாகும். இப் புனை பெயரில் கடந்த இருபதாண்டு களுக்கும் மேலாகக் கோயில் சிற்பங்களின் ஓவியங்களை வரைந்து வரும் ஓவியர் திரு. பி.ம. ஸ்ரீனிவாசன் 1919ஆம் ஆண்டில் சேலத்தில் பிறந்தவர். தமிழகமெங்கும் ஆயிரக்கணக்கில் உள்ள கோயில்களில் காணும் கவின்மிகு சிற்பங்களின் ஓவியங்களை வரைவதையே தமது வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர். புகழ்மிக்க பெரிய கோயில்கள் மட்டு மின்றித் தமிழகத்தின் மூலை முடக்குகளில் உள்ள எல்லாக் கோயில்களுக்கும் நேரில் சென்று அவற்றின் சிற்பங்களை ஓவியமாக்கியுள்ளார்.


சிறு வயது முதலே ஓவியத்தில் ஈடுபாடு கொண்ட இவர் சென்னை ஓவியக் கல்லூரியில், ஓவியக் கலையில் பயிற்சி பெற்றார். கோயில் ஓவியங்கள் வரைவதில் இவரை ஈடுபடுத்தியவர் புகழ்பெற்ற நகைச்சுவைச் சித்திரம் வரையும் திரு. மாலி என்பவராவார். சில்பி ஆனந்த விகடனில் வெளியான தென்னிந்தியக் கோயில்களைப் பற்றிய தொடர் கட்டுரைக்கு ஓவிய விளக்கப்படம் வரைந்து உள்ளார். வேறு பல பத்திரிகைகளுக்கும் இவர் ஓவியங்கள் வரைந்துள்ளார். சென்னையைத் தமது இருப்பிடமாக்கிக் கொண்ட சில்பி மதக்கோட்பாடுகளில் சிறிதும் பிறழாமல் எளிமையான வாழ்க்கை நடத்திவருகிறார். குறிப்பாக கோயில் சிற்பங்களை வரையும்போது ஒரு முனிவரைப் போலவே வாழ்ந்து வருகிறார்.

[தமிழ்நாடு சுற்றுலாத் துறை 1973இல் வெளியிட்ட ஓவியங்களும் குறிப்பும்].




1. கபாலீச்வரர் கோயில்
சென்னை

சென்னை மாநகரின் கண்ணமைந்த புகழ்மிகு கோயில்கள் பலவற்றில் முக்கியமானது அழகுமிகு கபாலீச்வரர் கோயில். உமா பிராட்டியார் சிவபெருமானை இவண் மயிலுருவில் வழிபட்டதாக வரலாறு. இத்தலத்திலே இறந்த பெண்ணொருத்தியை திருஞானசம்பந்தர் உயிர்ப்பித்த அதிசயமும் நிகழ்ந்ததாகக் கூறப்படுகிறது. திராவிடக் கோயில் கட்டடக் கலைக்கு இக்கோயிலின் நுழைவாயில் கோபுரம் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும். சுமார் 300 ஆண்டுகட்கு முன் கட்டப்பட்ட இக்கோயில் நுழைவாயில் கோபுரத்தின் ஒரு தோற்றம் இது.



2. நடராஜர்
கங்கைகொண்ட சோழபுரம்

தஞ்சைப் பெருவுடையார் கோயில் பாணியில் இராசேந்திர சோழனால் பதினோராம் நூற்றாண்டில் கட்டப்பட்ட கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள சிவன் கோயிலின் கற்பக் கிருகத்தின் வெளிப்புறத்தில் நேர்த்திமிகு சிலைகள் பல பெருமாடங்களில் வைத்திருப்பதைக் காணலாம். இவற்றில் ஒன்று தெற்குப் பக்கத்தில் காணப்படும் நடராசர் சிலையாகும். எருதின்மேல் கை ஊன்றிய வண்ணம் இச்சிற்பத்தின் வலது பக்கத்தில் பார்வதி காட்சி தருகிறார். இடது பக்கத்தில் விநாயகர், சுப்பிரமணியர் தத்தம் ஊர்திகளில் காட்சி தருகின்றனர். வலது கை ஒன்றில் உடுக்கையுடனும், மற்றொரு கை வரமளிக்கும் (அபயகஸ்தம்) நிலையிலும், இடது கை ஒன்றில் தீயுடனும், மற்றொரு கை உடலின் குறுக்கேயும், சடாமுடி நடனத்திற்கேற்ப விரிந்தாடும் நிலையிலும் சித்திரிக்கப்பட்டுள்ள இச்சிற்பம் ஓர் அற்புதப் படைப்பாகும்.




3. பிச்சாடனர்
சிதம்பரம்

சிவபெருமானின் பிச்சாடனர் தோற்றம் தில்லை நடராசர் கோயில் கோபுரங்களில் காணப்படுகின்றது. இங்கு சித்தரிக்கப்பட்டிருக்கும் பிச்சாடனர் சுப்பிர மணியர் ஆலயத்தின் பின்புறம் கிழக்கு வாயில் கோபுரத்தில் காணப்படுகிறார். இடது முன்கையில் பிரம்ம கபாலம், பின் கையில் திரிசூலம், வலது பின் கையில் உடுக்கை, பாதக் குறடுகள் ஆகியவற்றோடு, பிச்சாடனர் இங்கு மிகவும் தத்ரூபமாகக் காட்சி யளிக்கிறார். இக்கோபுரம் 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது.



4. அறங்காக்கும் அன்னை
திருபுவனம்

தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திலிருந்து திருவிடைமருதூர் செல்லும் வழியில் 8 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள திருபுவனத்தில் அமைந்துள்ள கம்பகரேச்வரர் கோயில் மூன்றாம் குலோத்துங்க சோழனால் 13ஆம் நூற்றாண்டில் கட்டப்பெற்றது. கோயிலில் முதலில் வழிபாட்டில் இருந்த அறங்காக்கும் அன்னையின் (தர்மசம்வர்த்தினி) சிலை மிகச் சிறப்பு வாய்ந்தது. வரமளிக்கும் (அபயகஸ்த) நிலையில் இருந்த வலதுகையும் தாமரை மலர் தாங்கிய (பத்மம்) நிலையில் இருந்த இடது கையும் பழுதடைந்த காரணத்தால் 6 அடி உயரம் உள்ள இந்த அற்புதச் சிலை தற்போது வெளிப்பிரகாரத்தில் வைக்கப்பட்டுள்ளது.



5. பிரம்மா
திருக்கண்டியூர்

பிரம்மாவிற்கும் சிவனைப் போலவே ஐந்து தலைகள் இருந்ததாகவும் அவற்றுள் ஒன்றை சிவன் இவ்வூரிலே துண்டித்து விட்டதாகவும் ஒரு புராண வரலாறு கூறுகிறது. நான்கு முகங்கள் உடைய பிரம்மாவின் தோற்றமே இங்கு ஒரு தோற்றத்தில் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இக்கோயில் 11ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது எனக் கூறப்படுகிறது. இவ்வூர் தஞ்சையில் இருந்து திருவையாறு செல்லும் வழியில் 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.



6. மீனாட்சி கல்யாணம்
மதுரை

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள சுந்தரேச்வரர் ஆலயத்தில் கம்பத்தடி மண்டபத்தில் காணப்படும் மீனாட்சி கல்யாணச் சிற்பம் அபூர்வ அழகு வாய்ந்தது. மீனாட்சி அம்மனைச் சுந்தரேச்வருக்குத் திருமால் தாரை வார்த்துக் கல்யாணம் செய்து கொடுக்கும் காட்சி கவினுறச் சித்திரிக்கப் பட்டிருக்கிறது. பிரம்மா திருமணச் சடங்குகளைச் செய்கிறார். இச்சிற்பத்தில் ஆடைகளும், மணி மாலைகளும், முத்தாரங்களும், அதி நுட்பமாகச் செதுக்கப் பட்டுள்ளன. பன்னிரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தது என்றாலும் இக்கோயிலின் பல பாகங்கள் பின்னர் சேர்க்கப்பட்டவை.



7. அக்கினி வீரபத்திரர்
தென்காசி

திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள தென்காசியில் இருக்கும் காசி விசுவநாதர் ஆலய மண்டபத்தில் பிரம்மாண்டமான அளவில் சிற்பங்கள் அமைந்து உள்ளன. அவற்றில் ஒன்று மிகவும் வேலைப் பாடமைந்த அக்கினி வீரபத்திரர் சிலையாகும். எட்டுக் கைகள், ஒவ்வொரு கையிலும் பாம்பு ஆபரணங்கள், கத்தி, கேடயம், உடுக்கை, திரிசூலம், கபாலம் ஆகியவற்றுடன் இச்சிலை நேர்த்தியான தோற்றத்துடன் விளங்கும் காட்சி வியப்பூட்டுவதாகும். சுமார் 400 ஆண்டுகட்கு முற்பட்டது இம்மண்டபம்.

8. குறத்தி மகளிர்
ஸ்ரீவைகுண்டம்

இரு குறத்திப் பெண்டிர் நாட்டியம் ஆடுவது போலச் செதுக்கப்பட்டிருக்கும் இச்சிற்பம் 1¾ அடி உயரத்தில் ஒரே கல்லில் செய்யப்பட்டுள்ளது. ஸ்ரீவைகுண்டம் கள்ளர் பிரான் கோயிலில் திருவேங்கடமுடையான் மண்டபத்தில் இவ்வற்புதச் சிற்பத்தைக் காணலாம். குறமகளிர் இருவரும் கூடை ஒன்றை இடுப்பின் மேல் கையால் இடுக்கிக்கொண்டு அதே கையில் உணவு வைத்துக்கொண்டு தோளில் அமர்ந் திருக்கும் குழந்தை உண்ண உதவுவதைக் காணலாம். கீழேயும் இரு சிறுவர்கள் உணவு உண்கின்றனர். உற்றுக் கவனித்தால் குறமகளிர் மார்பின் கீழே கைக் குழந்தையைக் கட்டிக் கொண்டிருப்பதும் தெரியும். பச்சை மணி, பவள மணி, பாசி மணி முதலிய மணிகளால் தங்களை அலங்கரித்துக் கொண்டிருக்கின்றனர்.

இக்கோயில் 900 ஆண்டுகட்கு முற்பட்டது. நெல்லையில் இருந்து 17 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.





9. கருடாழ்வார்
சுசீந்திரம்


குமரி மாவட்டத்தில் உள்ள சுசீந்திரம் தாணு மாலயன் ஆலயத்தில் உள்ள கருட மண்டபம் திருமலை நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டது. நுட்ப வேலைப்பாடுகள் அமைந்த பெரிய கருடாழ்வார் சிலை இம்மண்டபத்தில் இருக்கிறது. அதன் அருகில் திருமலை நாயக்கர் உருவம் செதுக்கப்பட்டுள்ளது. திருமலை நாயக்கர் சிலையின் வலது மூக்கில் ஒரு குச்சியை விட்டால் அது இடது காதின் வழியே வெளிவரும். இடது மூக்கின் ஒரு குச்சியை விட்டால் அது வலது காதின் வழியே வெளிவரும். இந்தச் சிற்பங்கள் யாவும் ஒரே கல்லில் செதுக்கப்பட்டவை.

சுசீந்தரம் கன்னியாகுமரியிலிருந்து திருவனந்தபுரம் போகும் வழியில் 13 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.




10. இரதி, மன்மதன்
சுசீந்திரம்

சுசீந்திரம் கோயில் ஊஞ்சல் மண்டபத்தில் இரதி, மன்மதன் சிலைகள் உள்ளன. வலது கையில் பூ அம்பும் இடது கையில் கரும்பும் வில்லும் ஏந்தி அம்பு எய்யத் தயாராக நிற்கிறான் மன்மதன். அருகில் இரதி தேவி அன்னத்தின் மேல் ஏறிக்கொண்டு இடது கையில் அன்னத்தின் வாகனைப் பிடித்துக் கொண்டு வலது கையில் இருக்கும் பூச்செண்டினால் ஒட்டிய வண்ணம் காணப்படுகிறாள். பூ, அம்பு, கரும்பு, வில், பூச்செண்டு ஆகியவற்றில் கிளி கொத்திக் கொண்டிருப்பதைக் காணலாம்.



11. நூற்றுக்கால் மண்டபம்
காஞ்சிபுரம்

காஞ்சி வரதராசர் கோயிலில் உள்ள நூற்றுக்கால் மண்டபம் விசயநகர மன்னர்கள் காலத்திய சிற்பக் கலைக்கு ஒப்பற்ற எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இம்மண்டபத்தின் முகப்புத் தோற்றமே இதற்குச் சான்றாகும். முதல் இரு தூண்களில் இரதியும் மன்மதனும் முறையே கிளி அன்னம் வாகனங்களில் அமர்ந்திருப்பது அற்புதமாக அமைந்துள்ளது. மூன்றாவது தூணில் வீரன் குதிரைச் சவாரி செய்வது சித்திரிக்கப்பட்டிருக்கிறது. இத்தூணில் ஒரே கல்லில் மூன்று குதிரைகள் செதுக்கப்பட்டுள்ளது. அதற்கு மேலே மண்டபத்தின் மூலையில் இருந்து ஒரே கல்லில் செதுக்கப்பட்ட சங்கிலித் தொடர் தொங்குவதையும் காணலாம். இம்மண்டபம் சுமார் 400 ஆண்டுகட்கு முற்பட்டது.



12. மாதவி
பூம்புகார்

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதி காரத்தின் பிறப்பிடம் சோழர்களின் துறைமுகப் பட்டினமான காவேரிப் பூம்பாட்டினமாகும். இவ் வூருக்குப் பூம்புகார் எனவும் பெயருண்டு. இங்கு கடற்கரையோரத்தில் சிலப்பதிகாரக் காட்சிகளைச் சித்திரிக்கும் கலைக்கூடம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டது. இக்கலைக்கூடத்தில் உள்ள சிற்பங்கள் யாவும் மாமல்லபுரம் சிற்பிகளால் உரு வாக்கப்பட்டவை. அச்சிற்பங்களில் ஒன்றான மாதவி யின் சிலையை ஓவியர் கைவண்ணத்தில் இங்கே காண்கிறோம்.

பூம்புகார் தில்லையிலிருந்து சுமார் 40 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது.

அருட்கவிதையரசர்
சி. வீரபாண்டியத் தென்னவன்,
மதுரை.



இலண்டன் முத்துமாரி அம்மன் பதிகம்



மூவருடன் யாவருமே தோன்றி
முக்திதரும் சக்தியினை வேண்டி
ஆவலுடன் கைகூப்பிக் கேட்க
ஆதிபரா சக்தியதை ஏற்க
தேவருடன் யாவருமே காணாத்
தெய்வமான தேவியங்கு தோன்றி
காவலாக நானிருப்பேன் என்றாள்
காக்கின்றாள் மாரியாகி இன்று!

ஒன்பது கோணமான சோதி
ஓம்சக்தி ஆதியான தேவி
சொன்னபடி வந்தாளே இங்கு
சோதியாக உள்ளாளே எங்கும்
நன்மைதரும் தாயவளே நேரில்
நிற்கின்றாள் இன்றுபல ஊரில்
அன்னைமாரி வாழ்இலண்டன் ரூட்டிங்
ஆலயமே நல்லெடுத்துக் காட்டே!

சூலமுடன் தான்பிறந்த மாரி
சொக்கவைக்கும் சோதியாக மாறி
ஓலமிடும் தீவினையை ஓட்ட
உடுத்தாளே வேப்பிலையில் ஆடை
வாலறிவுத் தேவியான அம்மை
வாழவைப்பாள் தேசமெல்லாம் நம்மை
காலமெல்லாம் காக்கவந்த தாலே
கோவில்கொண் டாள்ரூட்டிங் கில்தானே!

கலிகால மாசுகளால் பூமி
கந்தலாக மாறலாமா? சாமி! நீ
மலிந்திருக்கும் தீமைகளைக் கொல்லு! ஈழ
மக்களையே காக்கவழி சொல்லு! எம்
நலிவினையும் போக்கிலிடும் தாயே!
நன்மைதந்து வாழவைப்பாய் நீயே!
வலிமைதந்து வாழவழி காட்டு! நல்
வரம்தந்து வெற்றிமாலை சூட்டு!

பூமாரி பொன்மாரி தேவி
பொட்டுவைத்த சின்னநெற்றிக் காரி
மாமாரி ஓம்சக்தி ஆதி
மாணிக்க சோதிமுத்து மாரி
நாமாகக் கேட்டஉடன் ஈவாள்
நம்பிக்கை மூலதனம் ஆவாள்
ஓமான மந்திரமாய்த் தானே
உள்ளொளியாய்ப் பூத்திடுவாள் மானே!

முடியழகி மூக்கழகி மாரி
முத்துமணிப் பல்லழகி மாரி-நல்
வடிவழகி வாக்கழகி மாரி
வந்தாரை வாழவைக்கும் தேவி-பூங்
கொடியழகுக் கோப்பழகி மாரி
கோலவிழி நோக்கழகி மாரி-உன்
அடிதொழுத ஈழமக்கள் வெல்ல நீ
அருளம்மா எங்கமுத்து மாரி!

சிங்கமாரி முத்துமாரித் தாயே
சிங்கார அம்பிகையே நீயே
தங்கமாரி முத்துமாரித் தாயே
தீந்தமிழர் வெற்றிபெற வாழ்த்தே
எங்கமாரி முத்துமாரித் தாயே
என்றுநிற்கும் ஈழத்தில் போரே!
சங்கரியே முத்துமாரி அம்மே
செங்குருதி சிந்தலாமா? அங்கே!

ஆரமணி மார்பழகி மாரி
ஆயிரங்கண் ஆத்தாளே மாரி
பூரணியே பொன்னழகி மாரி-இப்
புலம்பெயர்ந்த செந்தமிழர் தாயே
தாரணியே எங்கமுத்து மாரி
தங்கரதம் போலவரும் தேவி
காரணியே செல்வமுத்து மாரி-உன்
கடைக்கண்ணைக் காட்டம்மா இன்றே!

நவசக்தி நாயகியே மாரி
நவராத்ரி நாயகியே மாரி-ஓம்
சிவசக்தி சங்கரியே மாரி
செம்மைதரும் அம்மைமுத்து மாரி
தவறுகளைப் போக்கவந்த நீயே
தன்மான ஈழமக்கள் வாழ
அவதாரம் தானெடுத்து நில்லு-நல்
அமைதிகாண வாய்திறந்து சொல்லு!

இல்லையெனச் சொல்லாத மாரி
என்றுமுள எங்கமுத்து மாரி
தொல்லைகளைப் போக்குதிரி சூலி-நீ
துலங்கவைக்கும் ஆதிமுத்து மாரி
வல்லமைகள் தந்தமுத்து மாரி-எமை
வாழவைக்க வந்தமுத்து மாரி
இல்லமெலாம் தீபஒளி ஏற்று!
ஈழமக்கள் கண்ணீரை மாற்று!





திருவாசகத்தில் நாட்டுப்புறப் பாங்கு

அருள்மிகு தா. கோபாலகிருஷ்ணன், எம்.ஏ., எம்.பில்.,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர்.

பக்தி என்பது தன்னை மறந்த லயம். தன்னில் மறந்த லயம். தலைவனைத் தேடும் லயம். தலைவனில் தேடும் லயம்.

கற்றறிந்த மக்களிடத்தும், கல்லா மக்களிடத்தும் பக்தி இயக்கம் சென்று சேர வேண்டுமானால், செல்வாக்குப் பெற வேண்டுமானால் பக்திப் பாடல்கள் நாட்டுப்புறக் கோலம் பூண வேண்டும். அப்போது தான் மக்கள் அனைவருக்கும் சென்று சேரும். மக்கள் இலக்கிய மாகிய நாட்டுப்புற இலக்கியக் கூறுகள் பல பைந்தமிழ்ப் புலவர்களின் பாக்களில் இடம்பெற்றன. கற்றறிந்த புலவர்களின் நாட்டுப் புறப் பாக்களின் சாயலில் பல பாக்களை யாத்துத் தந்தனர். நாயன் மாரும், ஆழ்வாரும் பல பக்திப் பதிகங்களை நாட்டுப்புறப் பாடலின் சாயல் கொண்டு அருளியுள்ளனர்.

மாணிக்கவாசகர் தாம் இயற்றிய திருவாசகத்தில் திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருத்தோள்நோக்கம் போன்ற பதிகங்களில் நாட்டுப் புற மரபுகளைப் பின்பற்றி, மக்களுக்கு எளிய முறையில் இறைவனை அடைய பக்திப் பதிகங்களை அருளியுள்ளார்.

நாட்டுப்புற இலக்கிய வளர்ச்சிக்குத் திருவாசகத்தின் பங்கு

மாணிக்கவாசகரின் திருவாசகம், நாட்டுப்புற இலக்கிய வளர்ச்சிக்கு அடிகோலியது. இவரது பாடல்கள் தனித்தன்மை வாய்ந்தவை. இப்பாடல்களில் இடம் பெறுவது போன்று நாட்டுப்புற மரபுகள் வேறு எந்தப் பக்தி இலக்கியத்திலும் இடம் பெறவில்லை எனலாம். மக்களின் மனத்தில் ஆன்மீக உணர்வினை வளர்ப்பதற்கு, மாணிக்கவாசகர் எளிய வழியைத் தேர்ந்தெடுத்தார். நாட்டுப்புற வடிவமே மக்களின் மனத்தில் எளிய முறையில் பதியும். இதனால் மாணிக்கவாசகர் பாடல்கள் நாட்டுப்புற இலக்கிய வளர்ச்சிக்கு அடிகோலியது எனலாம்.

திருவாசகத்தில் நாட்டுப்புற மரபுகள்

மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் திருவெம்பாவை, திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருத்தோள் நோக்கம் போன்ற பதிகங்களில் நாட்டுப்புற மரபுகள் இடம் பெறுகின்றன.

திருவெம்பாவை

திருவெம்பாவை என்பது திருவாசகத்துள் ஒரு பகுதியாகும். இது மாணிக்கவாசகரால் அருளிச் செய்யப்பட்டது. இந்நூல் திருப்பாவையைப் போன்றதே. மார்கழி மாதத்தில் கன்னிப் பெண்கள் விடியுமுன் ஒருவரை ஒருவர் துயிலெழுப்பி, அனைவரும் ஒருங்குகூடிக் குளத்திற்குச் சென்று நீராடும் வரலாற்றினைக் கூறுவதாகும். நீராடச் செல்லும்போது கன்னியர் தாம் வழிபட்டு வந்த தேவியின் திருஉருவாகிய பாவையை உள்ளத்து அமைத்து அதனை விளித்து, தம் இயல்புகளை அறிவித்து மற்றவர்களையும் எழுப்புவதால், இப்பதிகள் திருவெம்பாவை எனப்பட்டது. இந்தப் பிரபஞ்சத்தைப் படைத்து ரட்சிக்க இறைவனாகிய சதாசிவ மூர்த்தியின் திருவருளால் நவசக்திகள் தோன்றிச் செயல்படுவதைக் குறிக்கின்றது. ஒரு சக்தி மற்றொரு சக்தியை எழுப்புவதே திருவெம்பாவையின் தத்துவக் கருத்து.





''மலவிருள் உற்று உறங்கமன்னு பரிபாகர் அருள் செலமுழுக வருக எனச் செப்பல் திருவெம்பாவை'' என்று குறிப்பிடுகிறார். திருப்பெருந்துறைப் புராணத்தை இயற்றியவர்.

அது மார்கழி மாதம். திருவாதிரைக்கு இன்னும் பத்து நாள்கள் இருந்தன. இளமங்கையர்கள் பலர் விடியற்காலத்தில் எழுந்து தங்கள் இல்லங்களைச் சுத்தம் செய்துவிட்டுக் குளத்திற்கு நீராடச் செல்லும் பொருட்டு ஒருவரையொருவர் அழைக்கின்றனர்.

இந்த இனிய நல்ல காட்சியே இறைத் தத்துவத்தைக் கவிதைகளாக அவருடைய உள்ளத்தில் பெருக்கெடுக்கச் செய்தது. இதன் காரணமாகத் திருவெம்பாவைப் பாடல்களை நாட்டுப்புற வடிவில் அருளினார்.

மனத்தை நல்வழிப்படுத்தல்

சிவபெருமானின் புகழைப் பலவாறு வியந்து பேசிய பெண்ணே! நீ இன்று வாயிற்கதவைக் கூடத் திறக்காமல் தூங்குகிறாயே! என்று ஒரு பெண் மற்றொரு பெண்ணை எழுப்புவது போல் மாணிக்க வாசகர் கீழ்வரும் பாடலைப் பாடுகிறார்.

''முத்தன்ன வெண்நகையாய் முன்வந்
தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதனென் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற்
பொல்லாதோ''
.....''

அழகிய நல்ல உள்ளம் படைத்தோர் ஆண்ட வனைப் பாடிப் புகழ்வர். நாமும் இறைவனைப் புகழ்ந்து பணிவோம் என்று தோழிகள் கூறுகின்றனர்.

பலவீனமான எண்ணம் தோன்றினால் அப்போது உறுதிவாய்ந்த சிந்தனைகள் தோன்றி மனத்தை நல்வழியில் செயல்படுத்த முயல வேண்டும் என்பது இப்பாடல் வழி அறியலாகிறது.

''ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ'


என்றும்

''மானேநீ நென்னலை நாளை வந்துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமா''

என்று கூறி இறைவனைப் பாட எழுந்து வந்து எங்களுடன் சேர்ந்து கொள்வீர்களாக எனப் பாவை களை அழைப்பதாகத் திருவெம்பாவையில் கூறுகிறார்.

நற்கதி பெறுதல்

வண்டுகள் மொய்க்கின்ற மலர்களையுடைய திருக்குளத்தில் மூழ்கி நீராடி இறைவனைப் பாடித்



திருவடிப் பெருமையை அடைவோம் என மாணிக்கவாசகர் பின்வருமாறு கூறுகிறார்.

''மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேர் என்னக்
கையால் குடைந்து குடைந்துன் கழல்பாடி

.....

ஐயாநீ ஆட்கொண்டு அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகைஎல்லாம்
உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்''

பார்வதி மணாளனே! நீ அடியார்களை எப்படி ஆட்கொள்கிறாயோ அந்த விளையாட்டுக் காரணமாக நற்கதி பெறுவோருடைய வழியிலேயே சென்றோம். எங்களை நல்வழி மாறாமல் காப்பாயாக என்று பாடுகின்றனர்.

மனத்தில் எந்தவிதமான சஞ்சலமுமின்றி அடியார் களின் வழியைப் பின்பற்றிச் சென்றால் நற்கதியை அடையலாம் என்பது இப்பாடலில் விளங்குகிறது.

மழை வேண்டுதல்

தன்னலம் கருதாது பிறர்நலம் கருதி நாட்டு மக்கள் அனைவரும் இன்பம் எய்தி எல்லா உயிர்களும் மகிழ்ச்சி பெற வேண்டும் என்று மாணிக்கவாசகர் இறைவனிடம் வேண்டுகிறார்.

''முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்''

நீருண்ட மேகமே! இறைவனின் கருணையைப் போல் மழையாக இறையருள் பொழியட்டும். மழையே பொழிக என்று குறிப்பிடுகிறார்.

''ஆழிமழைக்கண்ணா'' என்ற பாசுரத்தில் உலக மக்கள் வாழ மழை பெய்ய வேண்டும் என்று பாடுவார் ஆண்டாள்.

இவ்வாறு மாணிக்கவாசகர் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் இறைவன் மீது பக்தி கொள் வதையும் வழிபடும் முறையையும் நாட்டுப்புற மரபின் அடிப்படையில் தமது பாடலில் விளக்குகின்றனர்.

திருப்பொற்சுண்ணம்

மணிவாசகப் பெருமான் தில்லையில் எழுந் தருளியிருக்கின்ற காலத்தில் ஒரு நாள் மகளிர் சிலர் கைகளில் வளைகள் ஒலிக்க, அரையில் கிண்கிணி மாலை ஒலிக்க, கூந்தலின் மேல் வண்டுகள் எழுந்து ஆர்ப்பரிக்க, முகத்தில் குறுவியர்வை பொடிப்ப, விழிபுரளச் சுண்ணம் இடித்தார்கள்.

அப்பொழுது அவர்கள் ''தில்லையம்பல நாதனின்'' புகழை உலக்கைப் பாட்டாகப் பாடி னார்கள். அது கேட்ட மாணிக்கவாசகர் திருப்பொற் சுண்ணமாக இப்பதிகத்தை அருளிச் செய்தார்.

மெய்ப்பொருள்

''உலகில் மங்கலமான பொருள் மெய்ம்மை ஆகும். இதுவே இறைவனுக்கு உகந்த திருமஞ்சனப் பொருள்'' என்று மாணிக்கவாசகர் பின்வருமாறு பாடுகிறார்.

''வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கை நாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறைய அட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடி
.....''

இந்த மாபெரும் உலகத்தை உரலாகக் கொண்டும்,

மேருமலையை உலக்கையாகக் கொண்டும், உண்மை என்ற மஞ்சளை இட்டு இடிப்போம். இதுவே இறைவன் மக்களிடம் விரும்புவது என மாணிக்க வாசகர் பாடுகிறார். இறைவனின் புகழ் பாடுதல்

திருவையாற்றில் கோயில் கொண்டிருக்கும் இறைவனுக்குப் பல்லாண்டு பாடிப் பொற்சுண்ணம் இடிப்போம் என்று மாணிக்கவாசகர் பாடுகிறார்.

''முத்துநல் தாழம்பூ மாலைதூக்கி
முளைக்குடம் தூநல் தீபம் வைம்மின்
சக்தியும் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
.....
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே''

முத்து மாலைகளையும், பூமாலைகளையும் தொங்க விட்டு, முளைக்குடத்தையும், தூபத்தையும் வைத்து சிவபெருமானைப் புகழ்ந்துப்பாடி பொற்சுண்ணம் இடிப்போம் என்று பாடுகிறார்.

திருத்தெள்ளேணம்

ஏழு தோல் கருவிகளில் ஒன்று தெள்ளேணம். இதனைப் ''படகம்'' என்றும் சொல்வர். இதைப் ''பறை'' அல்லது ''கொட்டு'' என்றும் சொல்லலாம்.

இது ''கவரிமான்'' உரி போர்த்தப்பட்டது என்று பண்டைத் தமிழ் இலக்கியங்கள் கூறும். கை கொட்டி ஆடும் ஒருவித விளையாட்டு என்றும், ''பொய்தல்'' விளையாட்டு என்றும் கூறுவர் என்று ''திருவாசக விருந்து என்ற நூலில் திரு. சம்பந்தம் கூறுகிறார்.

இவ்வாறு ''படகம்'' கொட்டி பாடி ஆடுவதையே திருத்தெள்ளேணம் என்கிறார் மாணிக்கவாசகர்.

ஆட்கொண்ட முறை :

இறைவனால் ஆட்கொள்ளப்படுவது என்பது பெரும்பேறு ஆகும். இறைவன் தன்னை ஆட்கொண்ட தன்மையினைப் பின்வருமாறு மாணிக்கவாசகர் கூறுகிறார்.

''கல்நார் உரித்தென்ன அன்னையுன்றன்
கருணையினால்
பொன்னேர் கழல் பணிந்தாண்டபிரான் புகழ்பாடி
பின்னேர் நுடங்கிடைச் செந்துவர்வாய்
வெண்நகையீர்
தென்னா தென்னாவென்று தெள்ளேணம்
கொட்டாமோ''

என் உள்ளம் நல்லவரின் நட்பு இல்லாததால் கல்போன்று இருந்தது. அத்தகைய மனத்தைக் கல்லில் நார் உரித்தது போன்று கனியவைத்து என்னை ஆட் கொண்ட இறைவனின் பேரருளைத் தென்னாதென்னா எனப் பண்ணிசை எழுப்பித் தெள்ளேணம் கொட்டுவோம் என்கிறார்.

திருச்சாழல் ''சாழல்'' என்பது விளையாட்டாகக் கைகொட்டி நகைத்துப் பேசுதல் ஆகும். ''சாழல்'' என்றால் ''தோழி'' என்றும் பொருள் கூறுவதுண்டு.

பௌத்த மதம் சார்ந்த ஈழ அரசகுமாரியை சிவன் அருளால் ஊமை நீக்கிப் பேசுவித்தபோது சொன்னதாகவும் ஒரு செய்தி உண்டு.

''பெண் பாகத்தை உடையோன்
தென்பால் உகந்தாடும் தில்லைச்சிற் றம்பலவன்
பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணே
பெண்பால் உகந்திலனேல் பேதாய் இருநிலத்தோர்
விண்பாலி யோகெய்தி வீடுவார்காணச் சாழலோ''

இப்பாடல் பெண்கள் இருவரும் உரையாடுவதாக அமைந்துள்ளது.

ஒரு பெண் : ஏடி தோழி, உன் சிவன் பெண் பித்தன் என்று நிருபணம் ஆகும்படி, பெண்ணையே தன் உடலில் பாதி ஆக்கிக் கொண்டது ஏனடி என்று வினவுகிறார். அதற்கு

மற்றொரு பெண் : அப்படிச் செய்யாவிட்டால் ஜீவர்கள் எல்லாம் யோக நிலைக்கே சென்று விடுவர். ஆண், பெண் உறவும், சிருஷ்டித் தொழிலும் அற்றுப் போகுமே என்று விடை கூறுகிறேன்.

இவ்வாறு வினாவும் விடையுமாகப் பாடி மகிழ்ந்து இறைவனது பெருமையைக் கூறி வழிபடுவதாக மாணிக்கவாசகர் நாட்டுப்புற மரபினைத் தமது பாடலில் இறை பக்தியாக வெளிப்படுத்துகின்றார்.,

திருப்பூவல்லி :

''பூவல்லி'' என்பது பூக்கொய்து விளையாடும் பெண்கள் விளையாட்டுகளில் ஒன்று. அது அல்லி பதித்தாடும் ஆடல். அது மாலைக் காலத்திற்குரியது. ஆன்மாவை மாயா காரியங்களிலிருந்து விலக்கி ஆண்டவன் அருளில் கலத்தல் என்பதாகும்.

தொகுப்புரை :

இயற்கையோடு இறைவனை இணைத்துக் கண்டநம் தமிழ்ப் புலவர்களும், அடியார்களும் பக்திப் பனுவல்களைப் பல பா அமைப்புகளில் பாடி மகிழ்ந்தனர். அவற்றுள் ஒன்று நாட்டுப்புறப் பாடல்கள் வழி நடைப்பதம், அம்மானை, ஊஞ்சல், சிந்து, தெம்மாங்கு, ஏற்றப்பாட்டு என எல்லையற்று விரிந்தன அப்பாடல்கள்.

இவ்வாறு மாணிக்கவாசகரின் திருவாசகத்தில் நாட்டுப்புற வடிவத்தைப் பின்பற்றி இறை உணர்வை வெளிப்படுத்தும் பல பாடல்கள் பக்தி இலக்கிய வரலாற்றில் மிளிர்கின்றன. ○○○



திருத்தல ஒரலாறு

கவிஞர் ப.வை. ஜெயபாலன்



கோயில் உள்ள ஊரே குடியிருக்கச் சிறந்தது என உணர்த்துகிறது மூதாட்டி ஔவையின் முதுமொழி. தாயகத்தின் சமய நம்பிக்கை. ஒவ்வோர் ஊரும் ஆலயங்களையும், மடாலயங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கக் காரணமானது. ஆண்டவன் நிகழ்த்திய அற்புதங்கள் பெரும் திருத்தலங்கள் அமைய காரணமாயின. அரண் தாள் வணங்கி அருள்பெற்ற அரசர் முதலான மெய் அடியார்களின் திருத்தொண்டு அத்திருத்தலங்கள் அழகுறக் கட்டி எழுப்பப்பட்டுக் காலாகாலமாகத் தொடரக் காரணமாயின. பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகத் தோற்றம் எடுத்து வானுயரும் கோபுரங்களோடும், மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மகிமையோடும் அமைந்துள்ள தாயகத் திருத்தலங்கள் சொல்லும் வரலாறு இது. இன்று பரந்துபட்டுப் பல நாடுகளிலும் புலம் பெயர்ந்தது. இந்து சமயத்தோர் வாழும் இடங்கள் எங்கும் கோயில்கள். இந்த வரிசையில் முதன் நிலையில் எழுந்து நிற்பது பெரிய பிரித்தானியா இலண்டன் மாநகரில் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்பாள் ஆலயம். இது ரூற்றிங் நகரத் திருத்தலம்.

ஆலயச் சிறப்பு

திருப்பதி முதலான திருத்தலங்களின் கீர்த்தியைத் தினமும் அங்கு கூடும் பக்த கோடிகள் தொகை தெளிவுபடுத்துகின்றன. அருள் வேண்டும் அடியார்கள் பெற்ற பெரும் பேறுகள் காணிக்கையாக நிறைந்து அத்திருத்தலங்கள் சமூக நலன்களுக்கும் வாரி வழங்க உதவுகின்றன. மேற்கு உலகில் இதுபோன்ற போற்றத் தக்க வளர்ச்சி நிலையில் இந்த அம்பாள் திருத்தலம். சிவயோகம் என்ற அறக்கட்டளை ஆரம்பமாகி 12 வருடங்கள். இதற்குள் அம்பாளின் அருளாட்சிச் சிறப்பு, இன்னொரு நடராசர் ஆலயமும் இதன் உழைப்பால் உதிப்பு. ஒன்பது இலட்சம் பவுண் கொள் முதலில் சொந்த நிலம் இருப்பு. வருடாந்தம் இரண்டரை இலட்சம் பவுண் அளவான காணிக்கை வரவு. தாயக துயர்துடைப்பு நிதியாக 4,31,328 பவுண் வரை ஈந்த நிறைவு. சிவயோக சேவைக்கான அருச்சகர்கள் 16 ஆக உயர்வு. ஆயிரக்கணக்காக மெய்யடியார்கள் அம்பாளைப் பரவசத்துடன் அணுகும் நெகிழ்வு.

ஆரம்ப முகிழ்வு

முப்பதாண்டுகளின் முன்னர் ஈழநாட்டின் யாழ் கொக்குவிலில் ஒரு விடியற்காலைப் பொழுது, பொன்னுத்துரைப் பெரியார் தன் வீட்டுத் தலை வாசலில் பட்டயக்கணக்காளர் ஒருவருக்குக் காண்டம் வாசிக்கிறார். தன் குலதெய்வமான அம்பாளுக்குக் கருப்பக்கிரகம் அமைக்கும் பலன் அந்தப் பட்டயக் கணக்காளருக்கு உண்டு என்றது அவர் வாசித்த சப்தரிஷி நாடி வாக்கியம். அம்பாளின் இலண்டன் எழுந்தருளலுக்கான முளையின் முகிழ்வு அன்றே உதயமானது. அரசதிறைச்சேரியில் பதவி வகித்த அந்தப் பட்டயக்கணக்காளர் தமிழர் என்பதால் அவர் பெறவேண்டிய உயர் பதவித்தகைமையை அரசு அவருக்குத் தர மறுத்ததும் அதனால் மனமுடைந்த

அவர் உத்தியோகத்தை உதறிவிட்டுக் குடும்பத்தோடு நைஜீரியா நாட்டுக்குப் பயணமானதும் அங்கு தன் தொழிலோடும் தமிழர் விடுதலைப் போராட்டத் தோடும் இணையமானதும் பின் தன் சேவை தேவை எனக் கருதப்பட்ட இலண்டன் மாநகருக்கு 1987 பயணப்படுத்தப்பட்டதும் ஓர் அருள் வழிகாட்டலின் தொடர் எனலாம். ஆம், அவ்வாறாக இங்கு வந்து தாயக சேவையாக அம்பாள் ஆலயத்தையும் அமைக்கும் அருள்பெற்ற பட்டயக்கணக்காளர் ஐயா நாகேந்திரம் சீவரத்தினம் அவர்களே.

1987 இல் இலண்டன் வந்த சீவரத்தினம் ஐயா உயர்வாசல் குன்று முருகன் ஆலயம், இலண்டன் தமிழ் நிலையம் என்பவற்றோடும் ஒன்றி உழைத்தார். ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் மனைவியோடு இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்துக்குச் சென்று திருவிளக்கு முதலான பித்தளைப் பாத்திரங்களை விளக்கிக் கொடுக்கும் தொண்டிலும் ஈடுபட்டார்.



இவற்றுடன் ஈடுபாடுகளின் ஊடாக ஒரு முன்மாதிரியான ஆலயம் எழுப்பப்பட வேண்டும் என்றும், அந்த ஆலயம் அம்பாள் ஆலயமாக அமைந்து அவள் அருட்கரம் ஈழம் வரை நீளும் வழி செய்து தாயாகத் துயர்துடைக்கும் நேயத்தையும் கொள்ள வேண்டும் எனவும் நினைத்தார். இந்த எண்ணத்தைச் செயலாக்க அறக்கட்டளை ஒன்றை அமைக்கும் யாப்பை இந்நாட்டுச் சட்டதிட்டத்தை ஒட்டித் தயாரித்தார்.

யாப்பின் நோக்கம்

ஆரம்பமாகும் ஆலயம் தனியாருக்குச் சொந்தமாக அமையக்கூடாது என்பதே இலக்கு. அதேவேளை பதவிப் போட்டிகள் எழுந்து ஆசைகளால் செயற் பாடுகள் மோசமாகிவிடக்கூடாது என்ற நினைப்பு. இன்நிலைப்பாட்டில் அறக்கட்டளை அமைப்புக்கு ஐந்து அங்கத்தவர்கள். அமைப்பின் பேரிலேயே அனைத்து சொத்து உடைமைகள். அமைப்பின் எந்தச் சொத்தையும் யாரும் தன்கைப்படுத்தி விடமுடியாது என்ற சட்டவிதி. அறக்கட்டளையின் அறங்காவலர் கவனக்குறைவால் எழும் நட்டங்களை இட்டு நிரப்பவும், அறக்கட்டளைக்கு வாங்கிய கடனை வங்கிக்குக் கட்ட இயலாத நிலைவரும் இடத்திலும் அந்த அறங்காவலர்களின் சொந்தச் சொத்து உடைமை களைப் பறிக்கும் அதிகாரம் கொண்ட அறக்கட்டளை ஆணையத்தின் கட்டுப்பாடு. ஆரம்பித்தவர் தவிர்த்த ஏனைய அங்கத்தவர் ஐந்தாண்டுகள் கடமையைத் தொடரவும் மட்டுப்படுத்தப்பட்ட சட்டவிதி இவற்றைக் கொண்டு நடத்த விரும்பும் பக்தர்களுக்கென திருப்பணிச்சபை. அங்கத்தவர்களின் பணிகளை அவதானிக்கவும் அறிவுறுத்தவும் ஒரு அறிவுறுத்தல் குழு கணக்குகளை மேற்பார்வை செய்ய கணக்காளர் எவருக்கும் குறை பாடுகளை முறையிடும் அதிகாரம் எதனையும் விசாரிக்க அதிகாரம் பெற்ற அறக்கட்டளை ஆணையம் (Charity Commission) இவற்றை உள்ளடக்கியதாக அமைப்புக்கான யாப்பு வரையப்பட்டது.

சிவயோக உதயம்

வடிவு பெற்ற அறக்கட்டளைக்கான யாப்பு இலண்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் அம்பாளின் திருப்பாதங்களில் ஒப்புதல் பெற வைக்கப்பட்டது. சிவஸ்ரீ நாகநாதசிவம் ஐயா அவர்கள் அமைப்புக்குத் தற்காலிகமாக சீவரத்தினம் ஐயா இட்ட "சிவயோகம்" என்ற பெயரே சிறப்பானது என்பது தன்னுடைய எண்ணமும் என்று கூறி யாப்பை ஆசிர்வதித்து யாப்பைப் பதிவு செய்ய மறுநாள் நல்ல நாள் எனக் கூறி வங்கிக் கணக்கு ஆரம்பிக்க தன் கரத்தால் 101 பவுணும் தந்து சிவயோகத்தை ஏடுதொடக்கி வைத்தார்.

அறங்காவலர் சபைக்கு ஆரம்பத்தில் மூவர் அங்கத்துவம் பெற்றனர். பற்றுஉறுதியோடு பணியை இட்டுச்செல்ல கங்கணம் கட்டி நின்ற ஐயா நாகேந்திரம் சீவரத்தினம் தலைவராகவும் திரு. கமால்சிங்கம் செய லாளராகவும், நிதி நிலைப்பாட்டைக் கட்டுப்பாடாகக் கொண்டு நடத்தவல்ல நாகேந்திரம் கருணாநிதி பொருளாளராகவும் இயங்க ஏற்பாடானது. வைத்திய கலாநிதி திரு. கணபதிப்பிள்ளை நடேசலிங்கம், திரு. குலசேகரம், சிவாஜி ஆகிய இருவரும் இவர்களோடு அறங்காவலர் சபையில் இணைக்கப்பட்டனர்.

தொடர் ஈடுபாடு

சிறுவயது முதலாகத் தாம் பிறந்து தவழ்ந்து வளர்ந்த மயிலிட்டி அம்பாள் ஆலயத்துடன் சீவரத்தினம் ஐயா, திரு. கருணாநிதி ஆகியோர் கொண்ட ஐக்கியம் ஆரம்பமானது. இவர்களின் தந்தையார் நாகேந்திரமும் நயினை அம்பாளின் அருளால் பிறந்தவர். நாகேந்திரன் எனப் பெயரிடப்பெற்றவர். நீண்டகாலம் ஆண் குழந்தை இல்லாத துயரில் வருந்தி அம்பாளிடம் வேண்டிய இவர்களின் அப்பம்மா படுத்திருந்த வேளை நெஞ்சில் நாக பாம்பு ஒன்று படமெடுத்ததாகவும் அம்பாளை வேண்ட அது ஆரவாரம் இன்றி அகன்றதாயும் அந்த மாதமே அப்பம்மா வயிற்றில் இவர்கள் தந்தை நாகேந்திரம் கருவாக உருவானதாகவும் அப்பம்மா அடிக்கடி கூறி மகிழ்வார். கண்ணகை அம்மன் ஆலயம் என அழைக்கப்படும் மயிலிட்டி இராஜேஸ்வரி அம்பாள் ஆலயம் இவர்கள் குல தெய்வத் திருத்தலம். இந்தத் தெய்வீகப் பின்னணியில் உதயமானதே இந்தச் சகோதரர்களின் திருத்தலப்பணி. சீவரத்தினம் ஐயாவின் நைஜீரியா நாட்டு வாழ்விலும் பத்து மாகாணங்களில் வாழும் தமிழர்களை

ஒன்றிணைக்கும் தலைநகரான ''கடுணா'' வில் இவரது இல்லத்தில் ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் நூறு தமிழ்க் குடுபங்கள் வரை ஒன்று கூடும். இவரது ஆன்மீக ஈடுபாடு ஆட்டம் காணாது வாழ்க்கை ஓட்டத்தோடு தொடர்ந்தும் சிவ யோகப் பணியில் செறிவான, நிறைவான ஈடுபாடு நிலைக்க இவை காரணமாயின. ஒவ்வொரு சனிக் கிழமையிலும் கலாநிதி நடேசலிங்கம், திரு. கமால் சிங்கம், திரு. கருணாநிதி ஆகியோர் குடும்பம் ஆலயத்துக்கு வருகைதந்து திருத்தொண்டில் ஈடுபடுவதும், அங்கம் வகிக்கும் காலம்வரை திரு. சிவாஜி லிங்கம் குடும்பமும் அமைதியாக இவர்களோடு ஒன்றிச் செயற்பட்டதும் சிவயோகப் பணிகள் சிறப்பாக நடக்க உதவியாக இருந்தன.

திருத்தலம்

ஆலயத்தின் அமைவிடமாகத் தற்போதைய ஸ்தலம் தெரிவானது. ஸ்தபதியார் கரங்களில் கைவரப் பெற்ற அருட்பேறு அழகிய விக்கிரகங்களாக, வழமையை விட அளவில் உயர்வாக வந்துசேர்ந்தன. நாட்டுச் சட்டப்படி பெறவேண்டிய திட்ட அனுமதி பெற முன்பாகவே தேவையான திருத்தங்களுடன் ஆலயம் கட்டி எழுப்பப்பட்டது. 1996 ஆம் ஆண்டு ஏப்பிரல் 4, 5, 6 ஆம் திகதிகளில் அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆலய கும்பாபிஷேகச் சிறப்புடன் தொடக்கம் கண்டது. அடியார்கள் திரள ஆரம்பித்தார்கள். அனுமதி கோரி அரச உள் ஊராட்சி சபைக்கு அனுப்பப்பட்ட மனு தள்ளுபடியானது. அதே ஆவணி மாதம் அனுமதி பெறாது ஆலயம் தொடர்வது சட்டவிரோதம் என்றும் எச்சரிக்கை அரசிடம் இருந்து வந்தது. ஆயினும் அம்பாளின் அருள் புரட்டாசி மாதம் அனுப்பப்பட்ட மீள்மனு எவ்வித நிபந்தனைகளும் இன்றி ஆலயம் தொடர அனுமதி தந்தது. குளிர் தாங்கும் கண்ணாடிகள் யன்னல்களுக்குப் பொருத்தப் படவேண்டும் என்ற நிபந்தனையும் ரத்தானது. பண வசதி குறைந்த அந்த ஆரம்ப காலத்தில் நிபந்தனை ரத்தானதும், அனுமதி பெற்றதானதும் அற்புதம்தான்.

அன்னையின் சன்னதியில் அருள்பாலிக்கும் மூர்த்திகளாக அருள்மிகு சக்தி விநாயகர், அருள்மிகு சுந்தர விநாயகர், அருள்மிகு வள்ளிதேவசேனா சமேத முருகப்பெருமான், மரகதலிங்கேஸ்வரர், அர்த்தநாரீஸ்வரர், அருள்மிகு இராமபிரானுடன் சீதாபிராட்டி, ஸ்ரீ லட்சுமணன், பக்த அனுமான், அருள்மிகு அமிர்த லிங்கேஸ்வரர், அருள்மிகு அபிராமி, அருள்மிகு குருவாயூரப்பன், அருள்மிகு வள்ளிதேவசேனா சமேத ஷண்முகப் பெருமான், அருள்மிகு எழுந்தருளி அம்பாள், அருள்மிகு சிவகாமசுந்தரி சமேத நடராசப் பெருமான், சைவம் வளர்த்த அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கர், அருணகிரிநாதர், காரைக்கால் அம்மையார் அபிராமிப் பட்டர், வள்ளலார், இராமலிங்க சுவாமிகள், கிருபானந்த வாரியார், பாரதியார், திருவள்ளுவர், அருள்மிகு லட்சுமி, சரஸ்வதி, துர்க்காதேவி, நவக்கிரக மூர்த்திகள், அருள்மிகு ஞான வைரவர் என்ற பரிவார மூர்த்திகள் புடைசூழ அருள்மிகு முத்துமாரி அம்பாள் ஆதி மூலத்தில் அருள்மிகு ரேணுகாதேவியோடும் அர்த்த மேரு மேலாக வீற்றுள்ளாள். கொடிமரம் மூலஸ்தானத்திற்கு முன்னாக அமைந்துள்ளது.

பூசைச் சிறப்புகள்

தினமும் காலை எட்டு மணிக்குப் படிகலிங்க அபிஷேகத்துடன் பூசை ஆரம்பித்து லலிதாசகஸ்ர நாமம் பாராயணம் செய்யப்பட்டு வருகிறது. சித்திரா பௌர்ணமியைத் தீர்த்த உற்சவ தினமாகக் கொண்டு 15 நாள்கள் நடைபெறும் வருடாபிஷேக உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. ஆண்டுதோறும் வரும் விடுமுறை நாள்களைத் தேர், தீர்த்த தினங்களாக்கி விதிமுறையை மாற்றும் கோயில்கள் போலல்லாது திதியோடு ஒட்டித் திருவிழா நடத்துவதும் இவ்வாலயச் சிறப்பு. ஆறு நடேசப்பெருமான் அபிடேகங்களும் மாதாந்த கார்த்திகை நட்சத்திரத்தில் முருகப்பெருமான் அபிடேகமும், ஒவ்வொரு புதன் கிழமைகளிலும் அர்த்தநாரீஸ்வரருக்கான அபிடேகமும், ஏகாதசியில் குருவாயூரப்பனுக்கு அபிடேகமும், ஒவ்வொரு மாத நிறைவு ஞாயிற்றுக்கிழமைகளிலும் வைரவப் பெருமான் அபிடேகமும் இடம் பெறுகின்றன. புதுவருடம், தைப் பொங்கல், தமிழ்ப் புதுவருட கைவிசேடம் வழங்கல், தீபாவளி போன்ற விசேட தினங்களிலும் சிறப்புப் பூசைகள் இடம் பெறும். செவ்வாய் தோறும் ராகுகாலப்பூசை பக்தர் கூட்டத்தோடு சிறப்பாக நடைபெறுவதும், தினமும் காலை 8 மணி முதல் இரவு 9.30 மணிவரை ஆலயம் திறக்கப்பட்டு இருப்பதும், மூன்றுகாலப் பூசையும், மரகதலிங்கேஸ்வரருக்கு ஆறுகாலப்பூசையும் நித்தம் நடைபெறுவதும், திரு ஏற உரு ஏறும் என்ற அருள்வாக்கைத் தெய்வீகத் திரு உருவங்கள் மெய்ப்பிக்கின்றன. நாளாந்தம் அன்னை விதம் விதமான ஆடை அலங்காரங்களோடும், அலங்கார அணிகலன்கள், பூமாலைகளோடும் எழுந்தருள்வது கண்கொளாக்காட்சி ஆகும்.

அருச்சகர்களின் அர்ப்பணிப்பு

அருச்சகர்கள் ஒவ்வொருவரின் முகத்திலும் அருள்களை, ஒரே வகை மஞ்சள் வேட்டி சால்வை, சுறுசுறுப்பான செயற்பாடு, பூசை மட்டும் அல்லாது

அலுவலகப் பணி முதல் ஆலயப் புனிதம் காப்பது வரையான ஒவ்வொரு பணியிலும் தம்மை ஈடுபடுத்துகிறார்கள்.

மண்டப சேவை

ஆலயத்தின் இரண்டாம் மாடியில் அமைந்து உள்ள மண்டபம் இங்கு உள்ளவர்களின் இலக்கிய, கலாசார, சமய விழாக்கள் நடக்க உதவுகின்றது. இராசியான திருமண மண்டபம் என்ற முத்திரையையும் இது பெற்றுள்ளது. சமூக நலக் கூட்டங்கள் புத்தக வெளியீட்டு விழாக்கள் நடத்த இலவசமாகவும் தரப்படுகிறது.

தாயக சேவை

தாயகத் துயர் துடைப்புப்பணியை ஆலயம் இலட்சிய நோக்கமாகக் கொண்டுள்ளது. செலவு நீக்கிய வருவாய் அனைத்தும் ஆதரவு குறைந்த சிறுவர் பராமரிப்பு நோயாளர், விதவைகள் பராமரிப்புக்குக் கொடுத்து உதவப்படுகின்றது.

முத்தமிழ் விழா

ஆலயம் ஆரம்பமான காலம் முதலாக ஆண்டு தோறும் கொடியேற்ற உற்சவத்தின் முந்திய சனிக் கிழமைகளில் முத்தமிழ் விழா கொண்டாடப் படுகின்றது. காலை முதல் இரவு வரையான முழு நாள் நிகழ்வு இது. புலம் பெயர்ந்து வாழும் தமிழ்ச் சிறுவர்களிடையே தாய்மொழி ஆர்வத்தை மேம்படுத்த பேச்சு, வாசிப்பு, பண்இசை, திருக்குறள் மனனம், நடனம், நாடகம் முதலான போட்டி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு முத்தமிழ் விழாவில் பரிசில் வழங்கப்படுகின்றது. பரிசு பெற்றோர் முத்தமிழ் விழாவில் மேடை ஏற்றப்படுகிறார்கள். ஆண்டுதோறும் சாதனை படைத்தோருக்கான விருது வழங்கல், பட்டிமன்றம், கவியரங்கங்கள், நடன, இன்னிசை நிகழ்வுகள், நாடகம் என்பன அரங்க நிகழ்வுகளாக அமைகின்றன. மதிய, இரவு உணவும் வழங்கப்படுகிறது. இயல், இசை, நாடகம் என்ற முக்கலைகளையும் எம்மவர் இந்நாட்டிலும் தொடர்ந்து பின்பற்ற இந்நிகழ்வு தளம் அமைத்துத் தருகிறது. சாதனையாளர்களான எம்மவர் உருவப்படம் திரை நீக்கம் செய்யப்பட்டு மண்டபத்தில் மாட்டப்படுகிறது. பேச்சாளர்கள், அறிஞர்கள் இவ்விழாவுக்காக ஈழத்திலும், தமிழ்நாட்டிலும் இருந்து அழைக்கப்படுகிறார்கள்.

வங்கி விடுமுறை தேர்த்திருவிழா:

ஒவ்வோர் ஆகஸ்ட் வங்கி விடுமுறை அன்றும் அம்பாள் விசேட தேரில் ஊர் உலா வருகிறாள். பிச்சம் நகர் பிக்ஸ் மார்ஷ் பார்க்கில் காலை 11 மணிக்குச் சென்று கொலுவிருக்கும் அம்பாள் ஆயிரக்கணக்கான பக்தர்களின் வழிபாட்டுக்கு உரியவளாகிறாள். அன்று ஆடல், பாடல், மேடை நிகழ்வுகள், தவில், நாதஸ்வர கச்சேரியும் மைதான அரங்கில் நடைபெறுவதுண்டு. தேர் உலாச்செல்லும் வீதிகளில் வர்த்தக நிலையங்கள் வழங்கும் வரவேற்பும் அமோகம். திருத்தேரை வடம்பிடித்து இழுப்பதே பெரும்பேறு என முன்வரும் பெண் பக்தர்கள் அநேகம். பஜனையோடும், சிறுவர் களின் விநோத அலங்கார உடைகளோடும், பக்தர் களின் அரோகரா கோசத்தோடும் நடைபெறும் அம்பாள் வீதி வலம் உள்ஊரார்களையும் கவர்ந்த ஒன்றாகும். கடைகளும் தொடர் அன்னதானங்களுமாக மிச்சம் மைதானத்தில் காட்சி அளிக்கும்.

சோதனைகளோடு சாதனை

பன்னிரண்டு ஆண்டுத்தொடர் பயணம். அம்மன் ஆலயத்தில் அளப்பரிய வளர்ச்சி. நடராசர் ஆலயத்தின் எழுச்சி சிவயோக அறங்காவலர்களுக்கே உரிய இச்சீரிய பணிக்கான புகழ்ச்சி. நிலைத்த நாள் முதல் நிறைவான தொண்டைத் தந்த திருவாளர்கள் கமால் சிங்கம், சிவாஜி. குமரேசன், கருணாநிதி, ரவீந்திரநாத் அயித், கேதீஸ்வரன், டாக்டர் நடேசலிங்கம் ஆகிய அனைவரும் அம்பாள் திருத் தொண்டில் தம் கடமைக் காலத்தில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டவர்கள் என்கிறார் நன்றி நெகிழ்வோடு சிவயோக நிறுவனர் சீவரத்தினம் ஐயா அவர்கள். மத்தியச்சகக் குழுவில் நிலைத்துச் சேவையாற்றும் வைத்திய கலாநிதி ஞானச்செல்வன், திரு. ஜெகதீஸ்வரம் பிள்ளை, திரு. ஆனந்ததியாகர், ஆலோசனைக் குழுவில் பணியாற்றும் பட்டயக்கணக்காளர், கே. மாணிக்கவாசகர், சண் தனராஸ், சைவப் பணியாளர் வ.இ. இராமநாதன், சட்டத்தரணி நடராசா கிருஷ்ணராசா, திரு. பொன் பாலசுந்தரம், திரு. ப.வை. ஜெயபாலன் அவர்கள் பணியும் சிவயோகப் பணியில் இணைந்தது என்கிறார் ஸ்தாபகர்.

நிறைவாக

அம்பாள் அருள் பொழிபவள், அற்புதம் நிறைந்தவள், அண்டிய அடியார்களின் குறைகளை நிவர்த்திப்பவள். பதினைந்து ஆண்டு இல்லற வாழ்வில் பிள்ளைப்பேறு இல்லாமல் தவித்த எனக்கும், மனைவிக்கும் இப்பேற்றைத் தந்தவள் இலண்டன் முத்துமாரி அம்பாள். அன்னையை அண்டிய நாள் அன்றே நாம் வைத்த நேர்த்தி ஏழு செவ்வாய் வாரங்களுள் இப்பாக்கியத்தைத் தந்தது. இப்போ தாயகன், ஜெனனி என இரண்டு இனிய இணைச் செல்வங்கள்.

அருள்மிகு முத்துமாரி அம்பாள் அருள் நிறைந்த அன்னை. அவள் அற்புதங்களைக் கண்டு மகிழ ஆலய தரிசனத்தில் அனைவரும் இணைந்து மகிழ்வோமாக.

ooo



சக்தி தரும் சித்தி பெருமை

ஸ்ரீ. நா. முரளிக் குருக்கள்

ஆன்மாக்களின் வழிபாட்டில் சக்தி வழிபாடு மிகவும் முக்கியமானதாகும். சர்வம் சக்தி மயமே.

''அவளை அறியா அமரரும் இல்லை
அவள் அன்றிச் செய்யும் அருந்தவம் இல்லை
அவள் அன்றி ஐவரால் ஆவது ஒன்று இல்லை
அவள் அன்றி ஊர் புகும் ஆறு அறியேனே''

ஐந்தொழிலை முறையே ஆற்றும் நான்முகன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன், ஆகியோரும் படைத்தலாதி முத்திப் பேறு அடைதல் வரையும் உலக இயக்கமும் வாழ்வும் இந்த வாழ்வில் நாம் செய்யும் தவமும், தவத்தின் பயனால் வீடுபேறு அடைதலும் சக்தி இல்லாமல் இல்லை என்கிறார் திருமூலர்.

ஆன்மாக்களின் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் நீக்குபவள் என்ற பொருளில் திரிபுரை என்றும் திரிபுர சுந்தரி என்றும் அழைக்கப்படுகிறாள்.

உயிரை ஓர் உடம்பில் புகுந்து வாழ வைக்கிறான் இறைவன். உயிர் எந்த உடலில் புகுகிறதோ அந்த உடம்பு உயிர்ப்போடு இருக்கிறது. ஓர் அறிவுடைய தாவரம் முதல் ஆறறிவுடைய இந்த ஆன்மா உடம்பு வரை பொருந்தும். உடம்பு உணவைச் சீரணித்துத் தேய்மானங்களை ஈடு செய்கிறது. அதனால்தான் உடம்பு எப்பொழுதும் இயங்குகின்ற நிலையில் உள்ளது. இவ்வாறு உடம்பு உயிர்ப்போடு இருக்கிறது என்றால் அது இறையாற்றல் அதாவது சக்தியின் ஆற்றல்தான் என்பதை

தாவித் தவப்பொருள் தானவன் எம்இறை
பாலித்து உலகம் படைக்கின்ற காலத்து
மேவிப் பராசக்தி மேலோடு கீழ் தொடர்ந்து
ஆவிக்கும் அப்பொருள் தான் அதுதானே!

என்று திருமந்திரத்தில் அழகாகக் கூறப்படுகிறது.

சக்தியின் பெருமையை நோக்குமிடத்துத் திரு முறைகளில் ஞானப்பால் ஊட்ட சிவநெறியே சிந்திக்கும் சிவஞானம் பெற்றுப் பால் கொடுத்த அன்னையின் செவிகளில் அலங்காரமான தோடு என்ற சொல்லில் தோடுடைய செவியன் எனப்பாடிய சம்பந்தரும், அம்மையுடன், அப்பனைக் கண்டு கொண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன் என்று வழிபட்டவருமான அப்பரடிகளும், காஞ்சி காமாட்சியை வழிபட்டு இடக்கண் பெற்ற சுந்தரரும் பாவை பாடி சக்தியை வியந்த மணி வாசகரும் அம்மன் (சக்தி) அடியார்களே ஆவர்.

தாயாகித் தந்தையுமாய்த் தாங்குகின்ற தெய்வம் என்றும், வடிவுடைய மாணிக்க வல்லி அம்பிகையைத் தரிசித்தால் தமக்கு உள்ளம் மட்டுமல்ல உயிரும் மகிழ்ந்தது என்றும் கூறிய வள்ளலாரும், அலைமகள், கலைமகள், மலைமகள் மூவரையும் பாடி அவர்கள் அருள்பெற்ற குமரகுருபரரும் சக்தியின் அருள் பெற்றவர்களே.

ஆன்மாக்களின் வாழ்விலே வேண்டிய செல் வங்களைச் சக்தி வாயிலாகவே பெற முடிகிறது. வீரத்தையும் வெற்றியையும் தரவல்ல துர்க்கா தேவியாகவும், செல்வத்தையும் ஐஸ்வரியத்தையும் தரவல்ல மகாலட்சுமியாகவும், கல்வியையும் வாக்குப் பலத்தையும் தரவல்ல சரஸ்வதி தேவியாகவும் சக்தி விளங்குகிறாள். அதேபோன்று விரத வழிபாடுகளிலும் சக்தியின் பெருமை கந்தபுராணம் போன்றவற்றில் தெளிவாகக் கூறப்படுகின்றது.

புண்ணிய நதிகள், நட்சத்திரங்கள் போன்றவற்றில் கூட சக்தியின் நாமமும் பெருமையும் தெளிவாகின்றன. ஆதலால் மனித வாழ்வில் பெருமைமிக்க சக்தியின் வழிபாடு விரதங்களும் முதன்மை பெறுகின்றன.

இலண்டன் மாநகரில் ரூட்டிங் பதியில் அருள் பாலிக்கும் அருள்மிகு முத்துமாரி அம்பிகை சக்தியின் பெருமைக்கு உரியவளாக மிளிர்கிறாள். சிவ வழிபாடும் சக்தி வழிபாடும் விரத நியமங்களும் மிகச்சிறப்பாக நடைபெறுகின்றன. நிலைச் சக்தியைச் சிவம் என்றும், இயங்கு சக்தியை உமை என்றும் போற்றி வழிபடுகிறோம். பாலும் அதன் சுவையும், மலரும் அதன் மணமும், நீரும் அதன் தன்மையும் போன்றவை சிவமும் சக்தியும் ஆகும்.

பலவித நெறிகளாய் நின்று உயிர்களுக்கு அருள் புரிகிறாள் சக்தி. அச்சக்தி ஒருவன் ஆகிய சிவனின் வேறு ஆகாதவள். ஆதலால் அம்மையப்பரிடம் பணிந்து ஆனந்தப் பெருவாழ்வு அடையலாம்.

அந்த வகையில் சிவயோக அறக்கட்டளை சிவனுக்கோர் ஆலயத்தையும் பெருமைமிக்க சக்திக்கோர் ஆலயத்தையும் ஸ்தாபித்து அருள் வடிவான சக்தியானவள் ஞான வடிவான சிவபெருமானை நீங்காது திருமேனியின் இடதுபாகத்தில் அம்பிகை வீற்றிருக்கும் அதாவது ''ஒற்றிப்பூரணன் தன் அருளே. ஒற்றியார் இடங்கொண்ட அருமருந்தே'' என்ற வள்ளலாரின் வாக்குக்கு அமைய சிவசக்தி சின்னத்துடன் பெருமை பெறுகிறது. இகபர நன்மை எளிதில் அடைய சிவம், சக்தி திருத்தாள் போற்றி வாழ்வோம். ○○○

இலண்டன் முத்துமாரி அம்மன் திருத்தல மகிமை



காஞ்சி காமாட்சி

மருவும் அடியார்கள்
மனதில் குடிகொள்ளும்
அருள்மிகு இலண்டன்
முத்துமாரி அம்மன்
திருத்தல மகிமை



காசி விசாலாட்சி

சைவ ஆகம மரபு
சம்பிரதாயம் பேணும்
நிம்மதி தரும் சந்நிதி



மதுரை மீனாட்சி

நல்லருள் பாலித்து
அடியார்களை
அரவணைக்கும்
அருள்மிகு
குலதெய்வங்கள்

புனிதம்பேணும் தலமாக
உலகத் தலைநகரில்
உயர்வு பெற்ற திருத்தலம்




இலண்டன் முத்துமாரி



சுந்தர விநாயகர்

சுற்றுப்பிரகாரத்தில் தென்மேற்கு மூலையில்
வீற்றிருக்கும் சுந்தர விநாயகர்




மூலஸ்தான அம்பாள்

எல்லா நலன்களையும், வளங்களையும்
அள்ளி வழங்கும் இலண்டன் முத்துமாரி அன்னை
தாய்க்குத் தாயாக இருந்து
அடியார்களை இரட்சிக்கும் பெருந்தேவி



சக்தி விநாயகர்

அன்னையின் மூலஸ்தான வாசலில் வலது பாகத்தில்
வல்வினைகள் தீர்க்கவென எழுந்தருளி
அருள்பாலிக்கும் சக்தி விநாயகர்



முருகன்

அன்னையின் இடது பாகத்தில் எழுந்தருளி
வேலுண்டு வினையில்லை என அபயமளிக்கும்
வள்ளி தேவயானை சமேத சுப்பிரமணியர்



அர்த்தநாரீஸ்வரர்

சிவபெருமான் அருட்சக்தியை இடதுபுறத்தே வெளிப்படுத்தித் தானும் அன்னையின் திருவுருவுக்குப் பாகமாகி அர்த்தநாரீஸ்வரராக எழுந்தருளி ஆலயத்தின் மேற்குப் பிரகாரத்தில் அருள் பாலிக்கின்றார்




ஸ்ரீ ராமர், சீதாபிராட்டி ஸ்ரீலக்ஷ்மன், பக்த அனுமன்

சீதாபிராட்டி, ஸ்ரீலக்ஷ்மன், பக்த அனுமான் சமேதராய் மகாவிஷ்ணுவின் அவதார புருஷர் இராமச்சந்திரமூர்த்தி




அமிர்தலிங்கேஸ்வரர்

குறைவற்ற வரத்தையும், நிறைவான அருளையும் பாலிக்கும் அருள்மிகு அமிர்தலிங்கேஸ்வரர்



அபிராமி அம்மன்

பதினாறு செல்வங்களையும் அள்ளி, அள்ளி வழங்கும் அமிர்தநாயகியாம் அபிராமி அம்மன்



குருவாயூரப்பன்

காக்கும் தெய்வம் கண்ணனின் பாலகத் தோற்றத்துடன்
எழுந்தருளி இருக்கும் அருள்மிகு குருவாயூரப்பன்




சண்முகர்

சரவணப் பொய்கையில் உதித்த
சூரசம்கார மூர்த்தியாம் சிவ சண்முகர்



எழுந்தருளி அம்மன்

ஆலயத்தின் திருவிழாக்களிலும்,
தேர்வீதி உலாவிலும் எழுந்தருளி
அடியார்களுக்கு அருள்பாலிக்கும் அம்மன்



நடராஜர்

ஐந்தொழிலின் தத்துவத்தை உணர்த்தும்
ஆனந்த தாண்டவ மூர்த்தியாம்
அருள்மிகு சிவகாம சுந்தரி சமேத சிவதாண்டவ மூர்த்தி



துர்க்கை

மங்கல நாயகியாக வீற்றிருக்கும் மகிஷாசுரமர்த்தினி
அருள்மிகு துர்க்காதேவி



லக்ஷ்மி

வாழ்வில் அஷ்ட ஐஸ்வர்யங்களையும் தரும்
அருள்மிகு மகாலக்ஷ்மி



கலைமகள்

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும் அள்ளி வழங்கும்
வித்யா ரூபினி அருள்மிகு கலைமகளாம் சரஸ்வதி



நவக்கிரக நாயகர்கள்

ஆன்மாக்களின் வாழ்வில் தோஷ நிவர்த்திகளையும்,
பரிகாரங்களையும் தந்தருளும் நவக்கிரக நாயகர்கள்




ஞான வைரவர்

குரோதச் செயல்களை அணுகவிடாமல் ஆன்மாக்களைப் பாதுகாக்கும் காவல் மூர்த்தி ஞான வைரவர்



சண்டேஸ்வரி

தேவியின் பூசையின் முழுமையான பலனையும் மக்களுக்கு வழங்கும் அருள்மிகு தாரிகா சண்டேஸ்வரி



கொடிமரம்

பதி, பசு, பாசம் எனும் முப்பொருளையும் தத்துவரூபமாக விளக்கும் முறையே கொடிமரம், கொடிச்சீலை, கொடிக்கயிறு



வசந்த மண்டபம்

திருவிழாக்களின்போது எழுந்தருளும் மூர்த்திகளின் சிறப்புப் பூசை நடைபெறும் வசந்த மண்டபம் நவராத்திரி விழாக் காலத்தில் கொலுமண்டபமாக காட்சி தரும்.



தங்கத் தேர்



அபிஷேகத்திற்கு உபயோகிக்கப்படும்
தங்கக் கவசத்தினாலும்
நவரத்தினக் கற்களினாலும்
அலங்கரிக்கப்பட்ட புனிதமான
வலம்புரிச் சங்கு



திருமண மண்டபம்



திருவள்ளுவர், வள்ளலார், அருணகிரி நாதர், சமய குரவர் நால்வர்,
காரைக்கால் அம்மையார், பாரதியார், அபிராமி பட்டர், வாரியார்

காஞ்சிப் பட்டும் தங்க ஆபரணங்களும்





இலண்டன் முத்துமாரி அம்மன் திருத்தலத்தில் அம்பாளை அலங்கரிப்பதற்காக ஒருமுறை சாத்தப்படும் சேலையை மறுபடி அம்பாளுக்குச் சாத்தும் வழக்கம் இல்லை. அபிஷேகங்களுக்குப் பின்னர் புதியதாகச் சேலைகள் சாத்தப்பட்டு வருகின்றன. இப்படித் தினமும் இரு காஞ்சிப் பட்டணிந்து அம்பாள் அலங்கார நாயகியாகக் காட்சி தருவதைக்காணலாம்.

காஞ்சிப் பட்டணிந்து அடியார்களுக்குக் காட்சி தருவதில் அம்பாளுக்கு அலாதி பிரியம் என ஆலய சிவாச்சாரியார்கள் கூறுகிறார்கள். அதனால் தினமும் காஞ்சிப்பட்டில் காட்சி தருகிறார் எனவும் தெரிவித்தனர்.

இதேபோல அம்பாளை அலங்கரிக்கும் ஆபரணங்கள் அத்தனையும் 22 கரட் தங்கத்திலானவை. இதற்குப் புறம்பான "இமிரேஷன்" ஆபரணங்கள் எதுவும் அலங்காரத்திற்கு உபயோகப்படுத்தப்படுவதில்லை. ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து அம்பாள் தங்க நகைகளால் அலங்கரிக்கப்பட்டே காட்சி தருவது தனிச் சிறப்பாகும். இதற்கமைய அம்பாள் எழுந்தருளியுள்ள மூலஸ்தானத்தை அலங்கரிக்கும் தோரணங்களும் 22 கரட் தங்கத்தினால் ஆக்கப்பட்டவையே!

கன்னியாகுமரியில் எழுந்தருளியுள்ள அம்பாளின் மூக்குத்தி மாணிக்கக் (சிவப்புக் கல்லு மூக்குத்தி) கல்லினாலானது. இலண்டன் முத்துமாரி அம்மன் 100 சென்றிலான - அதாவது ஒரு கரட் எடையிலுள்ள பெரிய வைரக் கல் மூக்குத்தி அணிந்து காட்சி தருகிறாள்.

The Ultimate PRAYER

A SOUL APPEALS TO LORD SIVA FOR SALVATION
Based on St. Maanikkavaasagar's Sivapuraanam,
circa 3rd century, A.D.



Professor
KOPAN MAHADEVA



May this, my Prayer be recalled for ever
By souls in search of the Feet of Siva
who dwells in my heart and never shies
Even for a mere twinkling of my eyes.

I pray for the Feet of my Guru and Guide
whose forms at Kokalzi's Temple reside,
Who drew me near with Guide-to-The-Home
As One, as Many, and in His Sovereign Form


Hallowed be the anklets of my moon-crowned King
Who does, to a full stop, our Chains-of-Birth bring.
Hallowed are Siva's flowery Feet, who does bless
All, hands-folded, who bow to Him and acquiesce.

I worship the Feet of our Ruler, Good, Great Father,
Siva the Effulgent-One, friendly and flawless Lover,
King who arrests rebirths, The Lord Big Harbour,
Mountain that sends to us endless grace and pleasure.

Since Lord Siva is present ever in my mind,
With His grace, I could sing to Him, I find,
To my heart's desire, this, My Salutary Hymn
Till my past sins melt, and I merge with Him:

"Oh Lord, Thy Grace does, this Earth, and Heaven, power
Fully, with Light which Thy third, Wisdom's Eye showers.
This sinner knows no simple way to praise, or pray to Thee:
Boundless, Ageless One, to Thy Anklet-Feet, pleast take me!

"Lord, in the vegetal and animal cycles of my life,
I have been born in turns, and borne much strife...
As grass, as tree, worm, snake, bird, and as beast,
Ghost, deity, weed, and stone trod on in the street."





"When my soul does thus become sorrowful and deplete,
Pleast stop the circus and take me Home, to Your Feet.
Do give me life and remain as Mantra OM in my mind,
O Truth, O Purity, riding on a male of the bovine kind.

"You're the detail, depth, and breadth of age-old wisdom.
You're both heat and cold, when either one is welcome.
When I think of You, all that is untrue quickly vanishes,
And soon You banish my ignorance with truth's flashes.



"Lord, You are indeed birth-less, deathless, and ageless.
You creat and care for, but quash all wicked universes.
To your flock, you are th fragrance of every fair bloom.
You will, I'm sure, guide me out of my births and gloom



"With my cycles of birth-and-death you'll play jugglery,
Then, like a mixture of milk, molten butter and jaggery,
From within my heart, you will take me to your Feet,
For you're honey itself, in the hearts of your devotees.

"Lord, though Thou art bright and visibly five-hued
And obviously exalted among celestials, my skewed
Vision has so far failed to see Thee. My sinfulness
Has kept me shrouded in confusion and darkness.



"Bound by the unique twin-ropes of Virtue and Sin,
Within my body of filth and worms beneath my skin,
Within my hut with nine dirt-doors, my beastly mind
Has thought dirtiest thoughts of the deadliest kind.



"I was betrayed by vile and blasphemous Senses five
Yet You, our Unblemished Lord, will never deprive
Thy love to this small, un-trustworthy creature, me.
You will come and append me to Your Anklet-Feet.

"To me, littler than a lowly cur, Your tiny love-slave,
Much more than a mother's compassion, you gave.
O, Flawless Light, fully Blossomed Flower bright!
O, Ruler of the Universe with wisdom and foresight!"



"Lord, you're equally kind to all, with no secular bonds.
You grant me grace and love, curb my deceitful trends.
You live in me, always, as an unceasing river of grace,
O, un-sour ambrosia, Boundless Lord, with no set pace

"You're invisible to those who don't know, nor think of You.
You live in my heart, and have melted and made it tick true,
You've no pains or pleasures ohter than through your lovers.
You're everything and nothing, brightness, and the darkness.

"You're uniquely great. You were never created. You ARE!
You are the origin, the end, and also in-between. You are!
You drew me to you like a magnet. Make me a part of yours-
(Like metallic fragments and filings pulled towards by force).

"To those with wisdome true, intuition, wider understanding,
You are a rarely perceived Light, delicately sensed Feeling.
Unlike mortals, You've no begining, no end, no fixed links.
O Saviour, Effulgent Light, Love's River's endless flowing!

"Father, who's greater than anything or anyone of any kind,
I see You as a unique Light. I feel You as Subtleties of mind.
In this ever changing world with new facts and information
You give me focused understanding, and sober clarification.

"O, Eternal Fountain of Nectar within my mellifluous mind,
I don't want to continue in bodies of this perishable kind.
O Father, do release me from continuing chains of birth
And take me to Thy Feet to serve Thee, for ever, in mirth.

"O Lord, seen to be relishing Thy regular midnight dances
In Indian South Paandian Kingdom's Temples and ranches,
Thou art the only one who can release me from my ordeal!
Take my senses-spoilt sould to Thine Feet! Fulfil My Ideal!!!"











Those who thus pray to indescribably compassionate Lord Siva
With full understanding of the sense and purpose of this Prayer
Are sure and certain to reach His Feet, in The Holy City-of-Siva
With blessings from billions, as souls grown ripe, ever humbler.

- OM -



Understanding Hinduism

Vanathy Ravindran, B.A.,
(J.P.), Colombo

Let not the wings of thy soul take thee so high that
Thou losest sight of they earthly duties. (Yajur 5.43)

Hinduism is a vast religion. It proclaims the importance of Temple worship. It emphasizes on rites and rituals. It contains in it many concepts which are made available for easy and personal paths of devotion to God. The worship of the many God heads and the corresponding rites and rituals, also include guidelines in following the chosen path with discipline and purity of mind and body. Worship at home is also deemed important to the welfare of the self and the home which includes the family and harmony therein. While the rituals followed in the Temples and at home are duly acknowledges for enforcing devotion, it is emphasized that it is the devotion and not just the rituals that lead to achieving the Grace of God.

The Human body is the temple of God.
One who kindles the light of awareness
within gets true light.
By concentrating the mind the inner vision
is illuminated.
The joys of life are not for those who
Keep thir mind unclean.
The mysteries of life are revealed to the
one who keeps his mind vigilant all the time.
The sacred flame of your inner shrine
constantly bright and glowing. (Rig. 8.44.15)

Though on one side there is a resurgence of the Religion all over the world there is on the other side many questions which come out of wanting to know "why?" and "how?". Interestingly these very questions in the ancient times and even now are sending many a person on the path to finding the TRUTH that is ETERNAL.

Find the eternal object of your quest
within your soul.
Enough have you wandered during the
long period of your quest!
Dark and weary must have been the
ages of your searching in ignorance
And gropping in helplessness;
At last when you turn your gaze
inward, suddenly you realize that the
bright light of faith and lasting truth
was shining around you.

With rapturous joy, you find the soul
of the universe, the eternal object of the search within
your own heart.
Your inner vision is illuminated by this
new realization. (Yajur 32.11)

In today's world there is much misery-abject poverty, many kinds of illnesses, war, famine, natural calamities, manmade calamities... so on and so forth. Then there is the call of religion with its prayers, rites and rituals. In this scenario, many a time one is faced with the dilemma of seeing the increasing number of people who need help on the one hand and in the other the rich rituals of prayers of temples and festivals of culture. What good are prayers if they cannot help the needy and serve the needy is an oft asked question. The answer is that prayers and service should be complimentary to each other and not an "either" or an "or".

"Service to Humanity is Service to God" has been the Concept of Service in Hinduism, paving the way to reach Divinity when one saw the Lord himself in the needy and hastened to relieve this need of the Lord resident in all beings. Service became the key word as far back as in the era of the saivite saint Thirunavukkarasu Nayanaar - the Epitome of service, who started service to devotees of Lord Shiva as far back as the 7th century. His influence encouraged many to follow suit to form Thannir Panthal (giving water to thirsty) to Annadhaanam (giving food to the hungry) and then even shelter to the needy and the homeless.

Saiva Siddhantham has its roots in the twelve Thirumurais sung by the four samayak kuravar- Thirugnanasambhanthar (Sambhanthar), Thirunavukkarasar (Appar), Suntharamoorthi Nayanaar (Suntharar), and Manickavasagar which deal with devotion and are very sacred, along with the vedas which form the roots of Hinduism and the Shiva Agamas. This philosophy speaks the truth of existence of God, souls and their bondage, Saiva Siddhantham is the philosophy of Saivism, the worship of Lord Shiva and the heavenly entourage that had evolved around Him.

The study of Hindu literature is deemed important in the development of the mind and in understanding the many concepts and Hindu Mythology also play an important role in

understanding Hinduism and the concept of cause and consequences.

They simplify the many concepts and make them educational and devotional bringing to light the effects of devotion, the paths of good and bad and the belief and faith that with Faith one can achieve the Grace of God to overcome all trials, challenges and misery one has to face during one's lifetime. These trials, challenges and misery one has to face during one's lifetime are due to the concept of Karma and that re-birth that form the base of the Hindu Faith.

The soul is immortal
Every mortal body is enlivened by the soul
In accordance with its previous actions (Karma) (Rig. 1.164.30)
He, the soul, who was brought to life in the body
Does not know of it.
He who sees it is (now) concealed from it.
It is hemmed in the womb of the mother
And is subject to many births
And finally it merges into eternity. (Rig. 1.164.32) The immortal soul associated with the mortal body
ceaselessly takes birth and rebirth,
according to its own actions.
They both go always and everywhere together.
We humans have comprehended the one
(Whilst in the physical body) but have not comprehended the other
(The soul free from the body). (Rig. 1.164.38)

This concept is explained in the Saiva Siddhantham. Thirumoolar's Thirumanthiram, an important Saiva literature. It speaks of God's Grace which brings relief thus -

பதி பசு பாசம் எனப்பகர் மூன்றிற்
பதியினைப் போற்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பசு பாசம்
பதியணு கிற்பசு பாசநில் லாவே - திருமந்திரம்

Among the three things of pathi, pasu, passam-like pathi, pasu and paasam are without origin. (However) Paasam which affect the pasus will not affect the pathi. When pathi approaches (the pasu) then the paasam of pasu will not stay (attached to pasu).

In Saiva Sidhdhantham God is referred to as pathi. All lives (souls) which take birth and die are referred to as pasu, the bondage is called paasam. The bondage or paasam can be classified into three - Aanavam (ego), kanmam (deed and effects), and maayai (illusion). In the relation between them paasam brings suffering to the affiliated beings the pasus. Due to the affiliation with paasam the soul or pasu suffers.

அப்பணி செஞ்சடை ஆதிபுராதனன்
முப்புரஞ் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே

Those who are ignorant say that the Lord red matted hair, source of all, burnt three cities. Three cities signify the three impurities. Who knows the burning of those impurities.

When pathi, who is the only one who can help pasu, to relieve the paasam that birds it making it suffer due to bondage approaches pasu with blessings, the bondage that binds the pasu is broken. This state can be achieved continuously and without effort through true devotion. True devotion removes all hurdles in the path to Divinity. When a desire for God is developed all the other desires slowly get excluded. And true devotion helps liberate the soul from all human bondage. God's love towards His creation is immense. His presence is everywhere guiding and guarding His creation. He is omnipotent, omnipresent and omniscient. In prayers it is this love and these qualities that are remembered and the rites and rituals are observed to invoke these powers to help to protect and guide the devotees in their times of need. In the spiritual path a constant remembrance of the Lord becomes easily attainable with the purity of the mind and the soul when the prayers and the rites and rituals are observed correctly and with true devotion. The point of worship is eventually is to receive the blessings of the Divine and the guidance to realise the divinity that is latent in every living being.

O man, I cover thy frail body and mind with My loving care,
as if with an armour of metal.
May this blissful divine love clothe thee
with eternal joy.
May the cosmic observer and compassionate
Grant thee
ample strength for thy living.
May all divine powers be kind to thee
in thy victorious onward journey of life. (Same. 1870)

Note Hinduism is now spreading all over the world. One of the main reasons being the migration of Hindus from India and Sri Lanka to all parts of the world. Temple worship is deemed an important part of the life of Hindus. The community prayer centre is advised very emphatically. ("Kovil illatha ooril kudi irukka vendaam"). It is very heartening to notice that the places of worship which were established in places of convenience with heartfelt devotion are now begining to take the more traditional concept with the construction of Temples and the conduct of worship being held according to the Agamas. It is difficult to adhere to the cultures and traditions so far away when the prevailing conditions require changes in lifestyles. However, religion is a binding force that will keep these traditions alive. Understanding and living the religion is important to live a full and meaningful life. ○○○

இயற்கையில் இறைவனைக் காண்க!

வ. குமாரவேலு

இயற்கையின் மீது அளவற்ற ஈடுபாடு கொண்டிருந்த பண்டைத் தமிழன் இயற்கை அழகு அனைத்திலும் அதன் உள்ளீடாய் இறைவனைக் கண்டான்.

இயற்கை எழில் சிந்தும் இடங்களில் எல்லாம் தெய்வத்தைக் கண்டு இன்புறும் உயர்நெறி தமிழர்கள் கண்ட செந்நெறியாகும். இயற்கையின் வழிநிலையே வழிபாட்டுக்குரிய களங்களாயின. நதிக்கரைகளிலும், சோலைகளிலும் தெய்வ வணக்கம் நிகழ்ந்து வந்து உள்ளன.

நாளடைவில் அம்மரங்களில் சில தல மரங்கள் என மாறி வழிபாட்டிற்கு உரியனவாகி விட்டன. நதிகள் யாவும் நீராடுவதற்குரிய புனித இடங்களாகி விட்டன. எப்பொருளை நோக்கினும் அப்பொருளில் இறைவனைக் கண்டனர். ''மல்லை ஞாலத்து வாழும் உயிர்க்கெல்லாம் எல்லையான பிரானார் இருப்பிடம்'' எனவும் ''உற்றாராய் உறவாகி உயிர்க்கெலாம் பெற்றாராய்ப் பிரானார் உறைவிடம்'' எனவும் நாவுக்கரசர் போற்றியுள்ளார்.

அது ஒரு வேனிற் காலம். மன்னன் சேரமான் பெருங்கடுங்கோ ஒரு மலர்ச் சோலையில் பலப்பல வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கியுள்ளதைக் கண்டு அவ்வண்ணப் பூக்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு இறை வடிவத்தினைக் காணுவதாகப் பாலைக் கலியில் படம்பிடித்துக் காட்டியுள்ளார்.

செக்கச் செவேர் எனப் பூத்துள்ள செருந்தி மலரில் செங்கதிரோனைக் காணுகின்றான். பொன்னிற வர்க்கம் கலந்து செந்நிறமாக மலர்ந்துள்ள இலவ மரத்தின் மலரில் பொன்னார் மேனியனான சிவபரஞ் சோதியைப் பார்க்கின்றான். வெண்கடம்பு மலரில் பலதேவனையும், காஞ்சி மலரில் காமனையும் நினைவு கொள்கின்றான். ஈசனின் இணையடி நிழலினை மாசில் வீணையிலும், மாலை மதியிலும், வீசு தென்றலிலும், வீங்கு இளவேனிலும், மூசு வண்டறை பொய்கையிலும் உணர்ந்து இன்புற்றார் திருநாவுக்கரசர்.

அருட்கவி வாதவூரர் இதனை, உண்ணும் வண்டை நோக்கி ஒரு பூவில் மட்டும் அமர்ந்து தேன் உண்ணாதே! ஏன் எனில் அம்மலரில் சிறிதளவேதான் கிடைக்கும். ஆனால், நினைக்கும் போதும், காணும் போதும், பேசும் போதும் அனைத்து எலும்புகளும் உள்ளே நெகிழ்ச்சி அடையுமாறு எப்போதும் தேனினைச் சொரிந்து கொண்டிருக்கும் நட்டம் பயின்றாடும் ஆனந்த



ஆலய குருமார்களின் ஆசிச் செய்தி

உலகிலே மனித வாழ்வை உயர்த்திக் கொள்வதற்கும் தெய்வீக அனுக்கிரகத்தை ஏற்படுத்தி ய்வதற்கும் ஆலய வழிபாடு அவசியமானது.

''மாலற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரனெனத் தொழுமே'' என்பது சிவஞான போதம்.

சைவ மக்கள் வாழ்கின்ற இடங்கள் எல்லாம் ஆலயம் இன்றியமையாதது என்பதற்கேற்ப இலண்டன் மாநகரில் ரூட்டிங் திவ்ய பதிச்சேத்திரத்தில் ஞானவடிவான சிவனையும் அருள் வடிவான சக்தியையும் போற்றி நிற்கும் சிவயோக அறக்கட்டளையின் அருள்மிகு முத்து மாரியம்மன் வந்தோருக்கு வாழ்வளிக்கும் அருள் அன்னையாக அருள் பாலித்து வருகிறான்.

ஆகம விதிப்படி பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு நடைபெற வேண்டும். இவ்விதிமுறைக்கமைய பன்னிரண்டு ஆண்டுகள் அருள் மழையுடன் அருள் பாலித்த அம்பாளுக்கு 21-3-2008 பங்குனி உத்தர புண்ணிய தினத்தில் அனைவருக்கும் சாந்தியைத் தரும் குடமுழுக்காகிய புனராவர்த்தன மகா குடமுழுக்குப் பெரும் சாந்தி விழா நடைபெற திருவருள் கூடியுள்ளது.

இப்புனித குடமுழுக்குப் பெருவிழா மூலம் அனைவருக்கும் அருள்த்தாய் அருள்மிகு முத்துமாரியம்மன் திருவருளும், குருவருளும் கிடைக்கப்பெற்று நாடும், நாமும் நலமுற்று அமைதியும், நிறைவும் மிகுந்த பெருவாழ்வும் கிடைக்க அன்னை திருத்தாள் போற்றி வாழ்த்தி ஆசீர்வதிப்போமாக.

ஆசியுடன்

மூலிக் குருக்கள்
தலைமைக் குருக்கள்
மற்றும் ஆலய குருமார்கள்

வெள்ளத்தில் மூழ்கித் திளைக்கலாம் என்று தேன் உண்ணும் வண்டின் நிகழ்ச்சியிலும் இறைவனைக் காணுகின்றார்.

தினைத்தனை உள்ளது ஓர் பூவினில் தேன் உண்ணாதே
நினைத்தொறும் காண்தொறும் பேசும்தொறும் எப்போதும்
அனைத்து எலும்பு உள்நெக ஆனந்தத் தேன் சொரியும்
குனிப்பு உடையானுக்கே சென்று ஊதாய் கோத்தும்பீ

கோடையிலே குளிர்தருவாக, தருநிழலாகக் கனிந்த கனியாக, தீஞ்சுவை நீராக, மணமலராக, மெல்லிய பூங்காற்றாக இறைவன் இயற்கையில் கலந்து உள்ளான் என வடலூர் இராமலிங்க அடிகளார் கூறியுள்ளார்.

சிவபரம் சோதியை மலை, மரம், நீர் (புனித நதி), சிலை ஆகிய வடிவங்களிலும் காலை, மாலை, நண்பகல், இரவு எனும் பொழுதுகளிலும் இறை வடிவினைக் கண்டு இன்புற்றதாக மேன்மைகொள் சைவப் பாடலாசிரியர்கள் பாடி மகிழ்ந்துள்ளனர்.

கிளைகளாய்க் கிளைத்த பல ஏகாப்பெலாம்
சதுர்வேதம் கிளைகள் ஈன்ற
களையெலாம் சிவலிங்கம் கனியெலாம்
சிவலிங்கம் கனிகள் ஈன்ற
களையெலாம் சிவலிங்கம் வித்தெலாம்
சிவலிங்கம் சொரூபமாக
விளையுமொரு குறும்பலவின் முளைத்தெழுந்த
சிவக்கொழுந்தை வேண்டுவோமே

- குற்றாலக் குறவஞ்சி

எங்கெங்குக் காணினும் எப்பொருள்களிலும் கலந்து நிற்கும் இயற்கைச் செல்வங்கள் அனைத்திலும் தான் ஒருவனுமே பல ஆகி நிற்கும் பரம்பொருளை நாமும் போற்றி வணங்குவோம். இயற்கையோடு இணைவோம். ஈசனின் இறையடி நிழலினை மாசில் வீணையிலும், மாலை மதியிலும், வீசு தென்றலிலும், வீங்கு இளவேனிலிலும், மூசு வண்டறைப் பொய்கையிலும், உணர்ந்து இன்புற்றார் திருநாவுக்கரசர். ○○○

அடி-முடிப் போட்டியில் உதித்த

திருவண்ணாமலைத் தீபம்


காக்கும் கடவுளான திருமாலுக்கும், படைப்புக் கடவுளான பிரம்மாவுக்கும் இடையே ''யார் பெரியவர்'' என்ற போட்டி வந்துவிட்டது. தீர்வுக்காக சிவபெருமானை நாடி வந்தனர். அக்னி மலையாக உயர்ந்து நின்ற இறைவன் ''மலையின் முடியையும், அடியையும் யார் கண்டுபிடிக்கிறாரோ அவரே பெரியவர்'' என்றார்.

பிரம்மா அன்னப் பட்சியாகி முடியைத் தேடியும், விஷ்ணு வராக அவதாரம் எடுத்து அடியைத் தேடியும் புறப்பட்டனர்.

எவ்வளவு தேடியும் இறைவனின் திருவடியைக் கண்டுபிடிக்க முடியாமல் தோல்வியை ஒப்புக் கொண்டார் திருமால். திருமுடி காணாத பிரம்மாவோ ஒரு தாழம்பூவைப் பொய்ச் சாட்சி சொல்லவைத்து தான் திருவடி கண்டதாகப் பொய் உரைக்க சினங் கொண்டார் சிவபெருமான். இதனால் பொய்ச்சாட்சி சொன்ன தாழம்பூவிற்குத் தமது பூஜையில் இடமில்லை என்று சபித்தார்.

ஏமாற்ற நினைத்த பிரம்மாவுக்குப் பூலோகத்தில் தனிக் கோயிலோ அல்லது பூசையோ இருக்காதென்று அறிவித்தார்.

கர்வம் அடங்கி உண்மை உணர்ந்த பிரம்மாவும், விஷ்ணுவும் ''தங்கள் அக்னி வடிவத்தை மாற்றி அப்படியே இங்கு ஒரு மலையாக நிற்க வேண்டும், லிங்கத் திருமேனியுடன் எழுந்தருளி அருள்புரிய வேண்டும்'' என வேண்டி நின்றனர். சிவபெருமான் ஜோதி மலையாக நின்ற நிகழ்ச்சியை ஞாபகப்படுத்தும் விதத்தில் கார்த்திகை மாதக் கிருத்திகை அன்று திருவண்ணாமலையில் மலை உச்சியில் சோதி தரிசனம் நடைபெற்று வருகிறது. சிவாலயங்களில் கருவறையின் பின்புறம் லிங்கோத்பவராக சிவ காட்சி தருவது இந்தச் சம்பவத்தின் அடிப்படையில்தான்.



முக்தி மகத்துவம்

திருவாரூரில் பிறந்தால் முக்தி, காசியில் இறந்தால் முக்தி.
சிதம்பரத்தைத் தரிசித்தால் முக்தி.
திருவண்ணாமலையை நினைத்தாலே முக்தி.
இதைவிடப் பெரிய மகத்துவம் என்ன இருக்க முடியும்.

தமிழும் கடவுட்கொள்கையும்

பேராசிரியர் சாலமன் பாப்பையா



தமிழ் மொழி எப்போது தோன்றியது? இதற்கு இப்போதைக்கு அறிவியல் சார்ந்த விடை தர இயலாது. கிரேக்கம், லத்தீனம், ஹீப்ரு, சீனம் போல மிகவும் தொன்மையான மொழி; அவ்வளவே கூற முடியும்.

அண்மைக் காலத்தில் வெளியிடப் பெற்ற தொல் காப்பியப் பதிப்பு ஒன்றில் அந்நூல் 8600 ஆண்டு களுக்கு முற்பட்டது என்று கூறப்பட்டுள்ளது. தமிழை வளர்க்கப் பாண்டியரால் நிறுவப்பெற்ற முச்சங்கங்கள் 9990 ஆண்டுகள் இருந்ததாக ''இறையனார் களவியல்'' என்ற நூல் கூறுகின்றது. கி.பி. 2-ஆம் நூற்றாண்டைக் கடைச்சங்கத்தின் இறுதிக் காலம் என்று கொண்டால், தலைச்சங்கம் கி.மு. 9790-இல் தோன்றியிருக்க வேண்டும். அப்போது இடைக் கற்காலம், புதிய கற்காலங்கூடத் தோன்றவில்லை என்று அறிவியலார் கூறுகின்றனர். எவரை ஏற்பது என்பதை உங்கள் முடிவிற்கு விட்டுவிடுகிறேன்.

ஆய்வில் இடர்ப்பாடு இன்றுவரை கிடைத்துள்ள, தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கால வரிசைப் படுத்த இயலவில்லை. காலந் தெரியாமல் செய்யப் படும் ஆய்வு, முழுமை பெறாது, நம் முறையான வளர்ச்சிக்கும் உதவாது.

கால வரிசைப்படுத்தும் முயற்சியே நடைபெற வில்லை என்று நான் கூற வரவில்லை. அம்முயற்சியில் உண்மையைத் தேடும் நாட்டத்தைவிட உணர்ச்சியில் ஓடும் ஓட்டமே முதன்மையாக நிற்கிறது. உணர்ச்சி மிகுந்த சமயப் பற்று முன்பு; உணர்ச்சி கொப்புளிக்கும் தமிழ்ப் பற்று தற்போது. ஆய்விற்குப் பெரும் தடையாக விளங்கும் இவ்விரு பற்றுகளையுந் தாண்டி இனி எவரேனும் உண்மையைத் தேடிப் போவார் என்றால் அவர் துயரச் சிலுவைக்கு அஞ்சாதவராகவே இருக்க வேண்டும். அப்படிப் பலர் பிறக்க இப்போது வாய்ப்பு உண்டா?

இறையியல்

''இறையியல்'' என்பது இறைவன் தொடர்பான செய்திகளைக் கூறுவது. இறைவனின் வடிவம், குணம், இருப்பிடம், அவனை வணங்கும் முறை, நம்பிக்கை, தத்துவம் என இன்ன பிறவெல்லாம் இறையியலுக்குள் அடங்கும். இந்த இறையியல் இறைவனே வெளிப்படுத்தும் வேதாந்தமாகவோ, மனித முயற்சியின் தேடல் காரணமாகப் பிறந்த சித்தாந்தமாகவோ இருக்கலாம்.

தமிழ் இறையியல் 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவனாகிய ஆண்டவனாகிய வெளிப் பாடு அன்று. அவன் அடி எடுத்துக் கொடுத்ததும் (பெரியபுராணம்). நூலே எழுதித் தந்ததும் (களவியல்) தமிழில் உண்டு; என்றாலும் இறையியலை அவனது வெளிப்பாடாகத் தமிழ் கூறுவதில்லை; அது மனிதப் படைப்பே. மனிதப் படைப்பு என்று ஏற்றுக் கொண்டால் உணர்வும் அறிவும் இணைந்து சென்ற தேடலில் வளர்ச்சி என்பது இருந்து கொண்டே இருக்கும். இந்த வளர்ச்சியையும் நாம் முறையாகக் கண்டு பிடிக்க நூல்களின் சமுதாய வளர்ச்சியின் கால வரிசை இன்றியமையாதது. அதற்குத்தான் இப்போதைக்கு வழியே இல்லையே, எனினும் நம்பிக்கை (!) அடிப்படையில் முயன்று பார்க்கலாம்.

மனிதனின் அறிவு என்பது அவன் பெற்றோர், அவன் வாழ்ந்த காலச் சூழல், அவன் கற்ற கல்வி, அவனது வசதி, பணி வாய்ப்பு, சமூக உறவுகள் ஆகியவற்றின் கொடை. இதைக் கல்லாதாரின் இறை யியலுக்கும், கற்றவரின் இறையியல் தேடலுக்கும் இடையே காணப்படும் பெருத்த வேறுபாட்டைக் கொண்டே எளிதில் புரிந்து கொள்ளலாம். சான்றாக, கி.பி. 200-இல் (?) எழுதப் பெற்றது என்று நம்பப்படும் சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியைப் படியுங்கள். வேட்டுவர்கள் இறைவழிபாட்டில், ''சாலினி'' என்ற பெண் ஆவேசமடைந்து சாமியாடி திருடு, வழிப்பறி, கொலை செய்யாது அடங்கி வாழும் வேட்டுவரைத் திட்டுகிறாள். ''பேரூர்களில் பசுக்கூட்டம் நிறைந்திருக்க, எயினர்களின் இல்லங்கள் பாழ்பட்டுக் கிடக்கின்றனவே'' என்று கூறுகிறாள். சங்க காலத்து வீரர்களின் வெட்சித் திணை கல்லாத வேட்டுவரின் இறையியலில் எப்படி மலினப் பட்டிருக்கிறது என்பதற்கு இது ஒன்றே போதும்.

காதலைப் பற்றிக் கூறுவது அகத்திணை. சங்க இலக்கியங்கள் இந்தக் காதலைப் பெரிதுபடப் பேசுகின்றன. ஆனால் என்னவோ தெரியவில்லை. பதினென் கீழ்க்கணக்கு நூல்களில் சில சங்ககால அகத் திணைப் பாடல்களை எளிமைப்படுத்த முயல் கின்றனவே தவிரப் புதிய வளர்ச்சிக்கு முயற்சி செய்ததாகத் தெரியவில்லை. ஆனால் கி.பி. 700-இல் திருநாவுக்கரசர் அகத்திணைக்கு நாயக நாயகி

பாவமாக ஒரு புதிய வடிவம் கொடுக்கிறார். ''முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்'' என்று தொடங்கும் தேவாரப் பாடலே கற்றவனின் இறையியல் சங்க கால அகத்திணைக்கு எத்தகைய புதிய, அழகிய, உயர்ந்த நிலையைச் சேர்த்திருக்கிறது என்றும் காண முடிகிறது. ஆகவே இறையியல் கருத்துகள் எவரிடம் தோன்றுகின்றனவோ அவை அவரது அறிவு சார்ந்தனவாகவே இருக்கும் என்று காண்கிறோம். அதனால் தமிழும் கடவுட் கோட்பாடும் என்று காண முயலும் நம் முயற்சியில் சிலவற்றை நாம் தள்ளவும் வேண்டி இருக்கும் என்பதை நினைவில் இருத்திக் கொள்ள வேண்டும்.

மனிதரிடையே மலர்ந்த மனிதர் மொழி தமிழ். ''பழு மரம் தேடிய பறவை''களாய்த் தமிழர்களும் அயலகம் சென்றனர். அயலகத்தாரும் தமிழகம் வந்து உள்ளனர். யவனர், ஆரியர், கோசர், மோரியர், வடுகர் எனப் பல மொழியினரும், வேதியர், சமணர், பௌத்தர் எனப் பல சமயத்தவரும் தமிழகத்திற்குள் வந்திருக்கும், வாழ்ந்திருக்கும் செய்திகளைச் சங்க இலக்கியங்களில் நிறையவே பார்க்கிறோம். களப்பிரர், பல்லவர், சாளுக்கியர் வரவையும் தமிழகத்தை அவர்கள் நெடுங்காலம் ஆண்ட வரலாற்றையும், அவர்கள் இப்போது தமிழர்களுக்குள் எந்த சாதியினர் (!) என்று கண்டு அறிய முடியாதபடி கலந்துவிட்டனர் என்பதையும் அறிவோம். தாய் மொழியால் வேறுபட்டிருந்தாலும் தமிழ்மொழி மீது கொண்ட மாளாத காதலால் ஆருயிர் கொடுத்தும் அரும்பணி ஆற்றிய அண்டை மாநிலத்திலிருந்து வந்து இங்கு வாழும் அயல் மொழி அன்பர்கள் அநேகர் உண்டு. இவர்கள் பொருளால் மட்டுமின்றிச் சிந்தனையாலும் தமிழகத்திற்குச் சேவை செய்திருக்கத்தானே வேண்டும். தமிழ் இறையியலிலும் இவர்தம் சிந்தனை கலந்திருக்கத்தான் வேண்டும். அதைக் கண்டு, பிரித்துக் காட்டும் அன்னப் பறவையாக (!) ஆய்வு செய்யப் பல்வேறு மொழி அறிவு வேண்டுமே? இப்போதுள்ள உணர்ச்சி வேகத்தில் அத்தகைய உண்மையான - நலந் தரக் கூடிய ஆய்விற்கு வழி இருக்கிறது என்று சொல்ல என்னால் இயலவில்லை. அதனால் எனது இந்தக் கட்டுரையும் ஒரு பெரிய வேலையைத் தொடங்க விரும்புவார் செய்யும் பிள்ளையார் சுழியாகத் தொடங்குகிறேனே அன்றி முழுமையான ஆய்வாகக் கொள்ளவில்லை.

இறையியல் பற்றிய நம்பிக்கை

தமிழில் கிடைத்த நூல்களில் காலத்தால் மிகப் பழமையானது தொல்காப்பியம் என்று நம்புகிறோம் (கி.மு. 200-க்கு முற்பட்டது) அந்த இலக்கண நூல் இறையியல் பற்றிக் கூறுகிற செய்திகள் தமிழ் மக்கள் கண்ட இறையியலாக இருக்கும் என்பது நம் நம்பிக்கை. ஆனால் ஆராய்ச்சி அறிஞர்களிடையே தொல்காப்பியத்தின் காலத்தையோ அதில் காணப்படும் சூத்திரங்களைப் பற்றியோ கருத்தொருமைப்பாடு இன்று வரை ஏற்படவில்லை. ஆய்வாளர்கள் பல்வேறு குழுக்களாகப் பிரிந்து செய்யும் சண்டையில் நாமும் சிக்கி உண்மையைக் கொல்வதை விட, இப்போதைக்குக் காணப்படும் தொல்காப்பியத் திலிருந்து கடவுட் கோட்பாடு பற்றிய செய்திகளைச் சொல்லி மேலே போவதே நல்லது. தொல்காப்பியத்தில் தெய்வம், (சொல்-4) பால் வரை தெய்வம் (சொல் 57) கடவுள் என்னும் சொற்கள் வருகின்றன. மாயோன், சேயோன், வேந்தன், வருணன் (பொருள் 5/63) எனக் கடவுட் பெயர்களும் சுட்டப்படுகின்றன. (சொல் 4, பொருள் 20, 50, 148) பால் வரை தெய்வம் (சொல் 57) வழிபடு தெய்வம் (பொருள் 415) கடவுள் (பொருள் 81, 85, 113, 114) கடவுள் ஆணை (பொருள் 90) என இறைவனைச் சுட்டும் சொற்கள் வருகின்றன. கொடிநிலை, கந்தழி, வள்ளி என வரும் மூன்று சொற்களும் சுட்டிக்கூறுவது எப்பொருளை என்பதில் அறிஞர்கள் இடையே இன்றுவரை தெளிவு பிறக்கவில்லை.

அமரர் (பொருள் 79) மேலோர் (பொருள் 31) இடையோர் தேஎம் (பொருள் 244) தேவர் (பொருள் 442) என்ற சொற்கள் கடவுளுடன் இருப்பதாகக் கருதப்படும் சிறு தெய்வங்களைக் குறிக்கின்றனவோ என்றும் எண்ணத் தோன்றுகிறது. அங்கு ''வானோர் அமிழ்தம்'' (பொருள் 114) இருப்பதாகவும் சொல்லப் படுகிறது.

'கூற்றம்' (பொருள் 77) என்ற பெயரில் சாவைத் தரும் தெய்வமும் வருகிறது. 'போய்' (பொருள் 71) பேசப்படுகிறது.

காதல் உருவாவதே கடவுளின் ஆணைப்படி தான். அந்தக் கடவுளே மனிதப் பெண்களின்மீது காதல் கொள்வதாகக் கவிதை படைக்கப்பட்டுள்ளது. (பொருள் 81)

தெய்வங்களுக்கு வடிவங்கள் (பொருள் 30) உண்டு. அவற்றுக்கு விழாக்கள் எடுத்துப் பூசைகள் செய்வது உண்டு. (பொருள் 30) வேள்விகள் (பொருள் 87) செய்யப்பட்டுள்ளன. மந்திரம் (சொல் 449, 467, 480) உண்டு. வேலன் (பொருள் 63) என்பவன் பூசாரி.

உரை ஆசிரியர்களை நம்பாமல் சூத்திரங்களை மட்டும் ஒரு பருந்துப் பார்வை பார்க்கும்போதே இத்தனை செய்திகள் கிடைக்கின்றன! இவற்றுள் எவற்றைத் தமிழ் என்று கொள்ளுவது, அயல் என்று தள்ளுவது?

சங்க இலக்கியங்களில் கடவுளை, இயற்கையில் காணும் போக்கைச் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காண்கிறோம். கடல் மீது தோன்றும் சூரியன் (நற் 283) மலை (ஐங். 259), பெருங்கடல் பரப்பு (நற் 155),

மன்றத்து மரம் (குறு. 87), சுனை நீர் (அகம் 91), கல் (அகம் 35), காடு (அகம் 345) என இங்கெல்லாம் கடவுளைக் காணும் காட்சியைப் பார்க்கிறோம். கடவுள் இருக்கும் இடங்களாக இயற்கை சுட்டப்பட்டிருப்பதைக் காண இவை சில துளி ஆதாரங்களே.

விண்ணுலகம்

கடவுளின் நிலையான இடம் ''உயர்நிலை உலகம்'' புத்தேள் நாடு'' (குறு) எனப்பட்டது. நாகம் என்ற ஒன்றும் ''வரையா நிரையம்'' (குறு 292) என்று பேசப்பட்டுள்ளது.

உயிர் - பலபிறவி

உயிர் என்பது பல தடவை திரும்பத் திரும்பப் பிறக்கும் இயல்பினதா? 'நான் இறக்க அஞ்சவில்லை. ஆனால் அடுத்த பிறப்பில் என் காதலன் வேறாகப் பிறந்து விட்டால்? அதற்கே அஞ்சுகிறேன்' (நற் 397), (புறம் 236) என்ற நற்றிணைப் பாடல் அப்படித்தான் சொல்கிறது.

வினை

இந்தப் பிறவியில் நாம் செய்யும் செயல்கள் அடுத்த பிறவிக்குக் காரணம் ஆகுமோ? ''இம்மைச் செய்தன மறுமைக்காம்'' (புறம்) என்ற புறநானூற்று வரி அதை நோக்கித்தான் போகிறது. ''நீர் வழியே செல்லும் தெப்பத்தைப் போல ஊழ் (முறை, பால்) வழியே செல்லும் உயிர்'' என்ற புறப் (192) பாடலும் இதையே வற்புறுத்துவதைக் காணலாம்.

'ஒருவன் புகழைச் சொல்லி அவன் முன் பராக், பராக் கூறுவதும், அவனே, தேரிலும் குதிரையிலும் விரைந்து செல்லும் செல்வம் உடையனாதலும் செல்வம் அன்று; அவன் முன்னர்ச் செய்த ''வினைப் பயனே'' (நற் 210) என்று நற்றிணை கூறுவதைப் படிக்கிறபோது இறையியல் பற்றிய பல்வேறு எண்ணங்கள் தமிழகத்துள் மலர்ந்திருக்கின்றன என்று அறிய முடிகிறது. இவற்றுள் எவை தமிழர்க்கே உரியவை. எவை பிறரிடமிருந்து வந்து கலந்தவை என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை. காரணம் ஒன்று: என் இலக்கியங்களைக் கால வரிசைப் படுத்தும் வசதி எனக்கு இன்றுவரை வாய்க்கவில்லை. இரண்டு; பிற இந்திய மொழி அறிவு இல்லை. மூன்று; அவை தெரிந்தாலும் இங்கிருந்து அங்கா, அங்கிருந்து இங்கா என்று துணிந்து சொல்லித் துயர்ப்படும் மனஉறுதி இப்போது இல்லை. அதனால் பல்கலைக் கழக ஆய்வாளர்கள் செய்ய வேண்டிய இந்த வேலையை அவர்களிடமே விட்டு விடுவது நல்லது. பொது மக்களுக்கு பயன்படுமோ என்னவோ நாளைய வரலாற்றிற்கும், தமிழின் மேன்மையைச் சிலர்க்குப் பட்டம் பெறவும் தமிழின் மேன்மையைச் சொல்லவும் உதவுமே. அதனால் அவர்களிடமே விட்டுவிடுவது தான் நல்லது.

எந்த ஆய்வும் இன்றைய பொது மக்களுக்கு, அவர்களின் வாழ்க்கைக்கு எந்த அளவு பயன்படும் என்று பார்த்துச் செய்வது நல்லது என்று நான் நம்புகிறேன். அதனால் தமிழ் இறையியலை இன்றைய மானுடத்திற்குப் பயன்படுமாறு செய்வது என்று தொடங்குகிறேன்.

கடவுள் உண்டு. தமிழ் இறையியல் இறை நம்பிக்கையில் உறுதி கொண்டது.

'உலகத்தார் உண்டென்பது இல்என்பான் வையத்து
அலகையா வைக்கப் படும்' (850)

என்ற திருக்குறள் இக்கருத்தை உறுதி செய்கிறது.

அவன் பெயர்

இறைவன் என்றால் அவன் பெயர் என்ன? ''ரோஜாவுக்கு எந்தப் பெயர் இருந்தால்தான் என்ன?'' பெயரைப் பற்றி அது கவலைப்படவே இல்லை. திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துப் பாடினார். அதில் ''வால் அறிவன் (2), ஆதிபகவன் (1), மலர்மிசை ஏகினான் (3), வேண்டுதல் வேண்டாமை இலான் (4), இறைவன் (5, 10), ஐந்தவித்தான் (6), தனக்குவமை இல்லாதான் (7), அறவாழி அந்தணன் (8), எண்குணத்தான் (9) என்று சொன்னாரே தவிர இதுதான் அவன் பெயர் என்று சுட்டிச் சொல்லவில்லை.

''உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்,
நிலை பெறுத்தலும், நீக்கலும், நீங்கிலா
அலகிலா விளையாட்டு உடையார் அவர்
தலைவர், அன்னவர்க்கே சரண் நாங்களே''

என்ற கம்பனின் இராமாயணக் கடவுள் வாழ்த்தையும் படியுங்கள். இந்தக் கடவுள் வாழ்த்தை எந்தச் சமயத்தவரும் பாடுகிறாற் போலக் கடவுட் பெயர் ஏதும் இல்லாதிருப்பதைக் காணுங்கள்.

பெயர் இல்லை

இறைவனின் இருப்பை ஏற்றுக்கொண்டு அவனது பெயர் இதுதான் என்று சண்டையிடாத தமிழ் இறையியலில் நம்பிக்கை கொண்டதனால்தான் சமணர் என்று கருதப்படும் இளங்கோ அடிகள்

''நாராயணா என்னா நா என்ன நாவே''

என்று துணிந்து தெளிவாகப் பாடுகிறார்.

''பேரிலா ஊரிலாப் பெரியோன்'' என்ற கருத்தில் உறுதி இருந்ததால்தான் மாணிக்கவாசக சுவாமிகள்

''ஒருநாமம் ஒருருவம் ஒன்றும் இல்லாற்கு, ஆயிரம்
திருநாமம் பாடிநாம் தெள்ளேணங் கொட்டாமோ?''

என்று பாடுகிறார்.

''பேர்அனந்தம் பேசி மறை அனந்தம் சொலும்
பெரிய மௌனத்தின் வைப்பு''

என்று தாயுமானவரும் இக்கருத்தை உறுதிப் படுத்துகிறார். ○○○

பிரித்தானிய சிவயோக அறக்கட்டளை ஸ்தாபகர்

சிவத்திரு **நாகேந்திரம் சீவரத்தினம்** அவர்களது

எழுபதாவது அகவை நிறைவுக்கு

சிவயோக அன்பர்கள் வழங்கிய

வாழ்த்துப்பா

எண்ணமெல்லாம் சிவயோகப் பணியாய் நின்று
இருகோயில் இலண்டனுக்குச் சிறப்பாய்த் தந்து
மண்மீட்புப் பணிக்குள்ளும் மனம்ப தித்து
மலைப்பாரம் பலபத்தும் தலைச் சுமந்து
திண்ணியநெஞ்(சு) சாற்றல்திறன் செயல்வி வேகம்
செறிந்தொன்றி இருக்கின்ற வைரத் தேகம்
கண்டதுவா எழுபதின்று அம்பாள் பாதம்
கைஒற்றித் துதிக்கின்றோம் வாழ்க நீடு.

ஈழத்தே திறைச்சேரிப் பெரும்பே ராளர்
இந்தியாவில் விடுதலைப்போர் மூளை யாளர்
நாளெல்லாம் விடுதலைக்குப் பலத்தைக் கூட்டும்
நாட்டமுடன் நைஜீரியா நாட்டி லேயும்
வாழும்இந்தச் சீமையிலும் ஈழ தாகம்
வளர்க்கின்ற பணியினிலே தொடர்ந்து மோகம்
ஏழையர்க்கும் அனாதையர்க்கும் கைகொ டுக்கும்
இதையம்உண்டு தான்எங்கும் கடனைப்பட்டும்.

காய்க்கின்ற மரம்தான்கல் எறியைக் காணும்
கண்டார்கள் சோதனைகள் நாயன் மாரும்
ஆத்தாள்நம் அபிராமி அருளை வீசும்
அற்புதங்கள் நிகழவைத்த நின்பேர் வாழும்.
தோற்றோடிப் பணிவார்கள் பகைமை யாளர்
தொடர்கபணி தொண்டர்படை பின்உள் ளார்கள்
ஆற்றல்சுகம் வளம்குடும்ப அணைப்பி னோடு
ஆயிரமாய்ப் பிறைகண்டு வாழ்க நீடு!

தொன்மைத் தமிழர்கள் வாழ்வும் தாழ்வும்



சமயபோதனாரத்தினம் சடட்டத்தரணி
யாழ். பாலசுந்தரம், மதுரை

வேளாண்மையைத் தமது தலையாய தொழிலாகக் கொண்டிருந்த வேளாண் மக்கள் புலவர்களைப் போற்றிக் கலைகளை வளர்த்தார்கள். இவர்கள் செய்த தலையாய தொண்டு ஏடுகளில் இருந்த பழந்தமிழ் இலக்கியங்களைப் படி எடுத்துப் பாதுகாத்தமையாகும். அதனால் அன்றோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர் இயற்றப்பெற்ற சங்க இலக்கியங்களும், சங்கம் மருவிய காலத்தெழுந்த ஐம்பெருங்காப்பியங்களும், இவைபோன்ற போற்றுதற்கரிய இன்னோரன்ன நூல்களும் பிற்கால மக்களுக்காகக் காப்பாற்றப்பட்டன.

முடியுடை மூவேந்தர்கள் ஆண்ட காலத்தில் வேளாளர்கள் கையோங்கி நாடு செழிப்பாகவும் சிறப்பாகவும் இருந்தது. தமிழ் மொழி அரசு மொழியாக, ஆட்சி மொழியாக, ஆண்டவனை வழிபடும் மொழியாக, மக்கள் பேசும் மொழியாக அரசோச்சியது. நாகரிகம் முதிர்ந்த வேளாளர் வாழ்வில் சனி புகுந்ததுபோலக் களப்பிரர் காலம், தொடர்ந்து தெலுங்கர் காலம், பின்னர் பல்லவர் காலம் என்றும் சின்னாள் இடைவெளிக்குப் பின்னர் மகாராட்டிரர், பின்னர் தெலுங்கர், பின்னர் முகமதியர் காலம் என இருந்தது. இவ்வித ஆட்சி மாற்றங்களினால் தமிழ் மாட்சி இழந்தது. தமிழர் வாழ்விழந்தனர். சமூகக் கட்டுக்கோப்புத் தளர்ந்தது. தமிழரல்லாதோர் ஆட்சி தமிழ் மொழியில் பற்றில்லாதோர் கைக்கு மாறியது. வேளாண் தொழில் புரிந்து தாமும் வாழ்ந்து, தமது நாட்டையும் வாழ்வித்த தமிழர் நிலை பரிதாபத்துக்கு உரியதாயிற்று.

வேளாளர் சிறந்திருந்த காலத்தில் சமயச் சடங்குகள், வாழ்வியல் சடங்குகள் தமிழர்களாலேயே நடைபெற்று வந்தன. திருக்கோயில் வழிபாட்டு முறைகள் ஆரிய வேதமல்லாத ஆகமங்களின்படி நடைபெற்றன. வாழ்வியல் சடங்குகளைச் சமய ஆசான்கள் என அழைக்கப்பட்ட தேசிகர்கள் நடத்தி வந்தனர்.

வடவாரியர் நம் நாட்டிற்கு வந்த பின் சமுதாய நடைமுறைகளை மெல்ல மெல்ல மாற்றினர். தமிழர்களுக்கே உரிய ஆகமங்கள் பின் தள்ளப்பட்டு ஆரிய வேதங்கள் புகுத்தப்பட்டன. திருமணங்களில் சொல்லப்பட வேண்டிய மந்திரங்கள் நீத்தார் வழிபாட்டில் ஓதப்பட்டன.

அரசும் அதிகாரமும் வேற்று மொழியினரிடம் இருந்ததால் பழைய குருகுல முறைகள் தளர்ந்தன.

இந்நிலவுலகில் தென்னாடு தொன்மையானது. தென்னாட்டு மக்கள் மூத்த குடியினர். அவர்களது மொழி செம்மொழி. பழங்காலத்தில் ஈடும், எடுப்பு மில்லாமல் பீடுற வாழ்ந்தனர். அவர்கள் சமயநெறி, செந்நெறி, அருள்நெறி, அன்புத் திருநெறி, அவர்களது சித்தாந்தம் அளவை இயலால் நிலை நிறுத்த வல்லது.

அவர்களது தலையாய தொழில் வேளாண்மை. அவர்கள் உலகுக் கீந்த தலைமணி நூலான திருக்குறளில் ''சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்'' ''உழுவார் உலகத்துக் காணி'' என்றெல்லாம் உழுதொழில் சிறப்பிக்கப் பெற்றுள்ளது. மற்றத் தொழில்கள் அனைத்தும் வேளாண்மையை மையமாகக் கொண்டவையே. அவை வேளாண்மைக்குத் துணைத்தொழில்கள் அல்லாது இணைத்தொழில்கள் ஆகா. உழவர் வேளாண் தொழில் செய்து பொருளீட்டி வழங்கிய திறை கொண்டே அரசு படையைப் பேணிப் பகை வரிடமிருந்து நாட்டைக் காத்து வந்தது போர்முனை வெற்றி, ஏர் முனை நலத்தில் உள்ளது. உழவின் மேன்மையால் அரசர் ''வில்லோர் உழவர்'' எனவும் புலவர் ''சொல்லோர் உழவர்'' எனவும் கூறுவதை விரும்பினர்.

அறவழியில் விளைவிக்கும் தவசம் தான்யங்களைக் கொண்டு முதலில் அரசிறை செலுத்தியபின் களத்திலேயே ஊருக்கு உழைக்கும் உழைப்பாளர் களுக்கும் உழவர் படியளப்பர். விரித்துச் சொல்ல வேண்டுமென்றால், இறைபணியாளர்கள், கல்தச்சர், கொல்தச்சர், மரத்தச்சர், கொத்தர், வேட்கோவர், துணிவெளுப்போர், நாவிதர், நீர்நிலை காப்போர், ஊர் காவலர் இவர்கள் அனைவருக்கும் உரியவிகிதத்தில் ஆண்டுக்கொடையாகப் பகிர்ந்தளித்த பின்னரே மிகுதியைத் தம் இல்லத்தில் களஞ்சியங்களில் சேமித்து வைப்பர். அப்படிச் சேமித்த காலத்தில் சேமிப்பது மீண்டும் அறவழியிலேயே செலவிடத்தான். ஊருக்கு ஊழியம் செய்பவர்களுக்கு விழாக்காலங்களில் வெகுமதியும் தனிப்பட்ட முறையில் அவர்கள் இல்லங்களில் நிகழும் திருமணம் முதலான இன்பியல் நிகழ்ச்சிகளுக்கும், சாக்காடு முதலான துன்பியல் நிகழ்ச்சிகளுக்கும் உதவி வருவர்.

மேலும் சமுதாயத்தில் குறைந்தவர்களுக்கும், நலிந்தவர்களுக்கும், வறியவர்களுக்கும் பல்லாற் றானும் உதவியவர் வேளாளர்களே. ''வேளாளன் என்பான் விருந்திருக்க உண்ணாதான்'' என்பது முதுமொழி. வேளாளர்கள் புலவர்களைப் போற்றிக் கலைகளை வளர்த்தார்கள். வேளாளர்கள் செய்த தலையாய தொண்டு ஏடுகளில் இருந்த பழந்தமிழ் இலக்கியங்களைப் படி எடுத்துப் பாதுகாத்ததே. அதனால் அன்றோ ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் இயற்றப்பெற்ற சங்க இலக்கியங்கள், சங்கம் மருவிய காலத்தெழுந்த ஐம்பெரும் காப்பியங்கள் யாவும், இவை போன்ற நூல்களும் பிற்கால மக்களுக்குக் காப்பாற்றப் பெற்றன.

ஆண்டவனை வழிபடும் மொழி:

முடியுடை மூவேந்தர்கள் ஆண்டகாலத்தில் வேளாளர்கள் கையோங்கி நாடு செழிப்பாகவும் சிறப் பாகவும் இருந்தது. தமிழ்மொழி அரசுமொழியாக, ஆட்சி மொழியாக, ஆண்டவனை வழிபடும் மொழி யாக, மக்கள் பேசும் மொழியாக அரசோச்சியது. நாகரிகம் முதிர்ந்த வேளாளர் வாழ்வில் சனி புகுந்தது போலக் களப்பிரர் காலம் தொடர்ந்து தெலுங்கர் காலம். பின்னர் பல்லவர் காலம் என்றும், சின்னாள் இடைவெளிக்குப் பின்னர் மகாராட்டிரர், மீண்டும் தெலுங்கர், பின்னர் முகமதியர் காலம். இவ்வித ஆட்சி மாற்றங்களால் தமிழ் மாட்சியிழந்தது. தமிழர் வாழ் விழந்தனர். சமூகக் கட்டுக்கோப்பு தளர்ந்தது. தமிழரல்லாதோர் ஆட்சி தமிழ்மொழியில் பற்றில்லா தோரிடம் மாறியது. வேளாண் தொழில் புரிந்து தாமும் வாழ்ந்து நாட்டையும் வாழ்வித்த தமிழர் நிலை பரிதாபத்துக்குரியதாயது. பழைமையைப் போற்றும் ஒரு சிலரைத் தவிர பெரும்பாலானோர் வடக்கிலிருந்து இறக்குமதி செய்யப்பெற்ற வேதப்பிரா மணர்களைக் கொண்டே வாழ்வியல் சடங்குகளை நடத்தியமையால் பழைய தேசிகர்கள் பொருளாதாரம் சீரழிந்து புதிய வழிகளில் பிழைப்பு நடத்தினர். சமுதாயக் கட்டுக் கோப்புக் கலைந்தது.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நாட்டில் ஒரு விழிப்புணர்ச்சி தோன்றியது. தமிழைப் போற்றும் பேரறிஞர்கள் தோன்றினார்கள். எடுத்துக்காட்டாக மனோன்மணியம் சுந்தரம்பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, பேராசிரியர் கா. சுப்பிரமணிய பிள்ளை, திரு.வி. கலியாண சுந்தரமுதலியார், சோம சுந்தரபாரதியார், பம்மல் சம்பந்த முதலியார், சி.வை. தாமோதரம்பிள்ளை, அரசன் சண்முகனார், திருவாங்கூர் சமஸ்தான எக்சைஸ் கமிஷனர் பொன்னம்பலபிள்ளை எம்.ஆர்.ஏ.எஸ்., தேவநேயப்பாவாணர், டி.வி. சதாசிவபண்டாரத்தார் முதலானோர். இவர்களில் பெரும்புலவர் அரசன் சண்முகனார் நீங்கலாக அனைவரும் ஆங்கிலமும் பிற தென்னாட்டு மொழியொன்றும் அறிந்தவர்கள். தமிழ் மொழியைப் போற்றி வளர்த்த புரவலரான சேதுபதி மன்னரால் தோற்றுவிக்கப்பெற்ற தமிழ்ச்சங்கத்தில் உபய வேதாந்திகளால் தமிழ்மொழி வடமொழிக்கு ஆட்பட்ட மொழியாகவே கருதப்பட்டது. கோயில்களில் வடமொழியில் வழிபாடு. பள்ளிகளில் ஆங்கிலத்தின் முதன்மை. (மதுரை சேதுபதி பள்ளியில் தமிழ்ப்பாட நேரத்தைக் குறைத்து ஆங்கிலப் பாடத்துக்கு நேரம் அதிகரித்த காரணத்தால் தமிழாசிரியர் பதவியைத் துறந்தவர் அரசன் சண்முகனார். அந்தக் காலியிடத்தில் தான் பாரதியார் நியமிக்கப் பெற்றார்.) இசைக் கச்சேரி களில் தெலுங்கு, வடமொழி, கன்னடமொழிப் பாடல் களுக்கு முதன்மை. வாழ்வியல் சடங்குகள் முழுதும் வடமொழியில் நாளேடுகளில் முதன்மை பெற்றவை, ஆங்கில நாளேடுகளிலும் தமிழ் நாளேடுகளிலும் ஆங்கிலம் கலந்து மணிப்பிரவாள நடை. தமிழர் இருவர் சந்திக்கும் போது ஆங்கிலத்தில் உரையாடல். எங்கும் தமிழரல்லாதார் ஆதிக்கம். இவ்விழி நிலைமாற மேற்கூறிய பேரறிஞர்கள் ஒல்லும் வகையால் எல்லாம் முயன்றனர். அதன் விளைவாகச் சிலர் வாழ்வியல் சடங்குகளை தேசிகர்களைக் கொண்டு நடத்த முன் வந்தனர். அதனைச் சிறிது சிந்திப்போம்.

பசுக்களாகிய மனிதர்கள் பாசம் நீங்கிப் பதியை அடைந்து கடைத்தேற தீட்சைபெறுதல் அவசியம். நால்வகைத் தீட்சைபெற்றவர்கள் பிறருக்குக் குருவாக இருக்கத் தகுதி உடையவர்கள். அவர்களைச் 'சிவம்' என்று அழைப்பது மரபு. தீட்சைபெற்ற பின்னர் வர்ண பேதம் இல்லை.

சிவபெருமான் ஆதியந்தமற்றவர். அவரை வழிபடும் முறையும் அநாதியானது, அம்முறை பற்றிய குறிப்புகள் விளக்கங்கள் தமிழர்க்கேயுரிய ஆகமங்களில் உள்ளன. ஆகமங்களை நுணுகி ஆய்ந்தவர்கள் விரிவாக எழுதியவை பத்ததிகளாகும்.

தமிழர்கள் நடத்திய சமயச் சடங்குகள்:

பசுக்களாகிய மனிதர்கள் பாசம் நீங்கிப் பதியையடைந்து கடைத்தேறுதற்குத் தீட்சை பெறுதல் அவசியம். நால்வகைத் தீட்சை பெற்றவர்கள் பிறருக்குக் குருவாக விருக்கத் தகுதியுடையவர்கள். அவர்களைச் சிவம் என்று அழைப்பது மரபு. தீட்சை

பெற்ற பின் வருண பேதம் இல்லை. ஆகமமார்க்கம் அனைவருக்கும் உரியது. நால்வகைத் தீட்சை பெற்றவர் தன் பொருட்டுச் செய்வது ஆன்மார்த்த பூஜை. அதனை நியதியாகக் கடைப் பிடித்தொழுகு பவர் பரார்த்த பூஜைக்கும் அதிகாரியாவார். இவர் ஆலய நிர்மாணம். பிம்பப் பிரதிஷ்டை ஆகியவற்றை மேற்பார்வையிடவும் பின்னர் திருக்குட நன்னீராட்டுச் செய்யவும் யோக்யர் ஆவர். இவரை ஆச்சாரியார் எனல் பொருந்தும்.

ஆச்சாரியார் மந்திரம், கிரியை, பாவனை ஆகிய வற்றால் முதலில் குண்டத்திலும், பின்னர் கும்பத்திலும் முடிவில் பிம்பத்திலும் இறைத் தன்மையை யேற்றுகின்றதே திருக்குட நன்னீராட்டு ஆகும். திருக்குட நன்னீராட்டு ஐம்புலன்களுக்கும் நலன் அளிக்கும் யாகசாலை, மூக்கு கண்களுக்கும், ஓமப் புகை நாசிக்கும், மந்திரங்கள் செவிக்கும், தீர்த்தம் உடலில்படுவது மெய்க்கும், பிரசாதம் வாய்க்கும் உகந்தவையாகும்.

திருக்குட நன்னீராட்டு விழா

ஆச்சாரியார் மந்திரம், கிரியை, பாவனை ஆகியவற்றால் முதலில் குண்டத்திலும், பின்னர்க் கும்பத்திலும், பின்னர்ப் பிம்பத்திலும் இறைத் தன்மையை ஏற்றுகின்றதே திருக்குட நன்னீராட்டு விழாவாகும். திருக்குட நன்னீராட்டு ஐம்புலன்களுக்கும் நலன் அளிக்கும். யாக சாலை, குட முழுக்குக் கண்களுக்கும், ஓமப் புகை நாசிக்கும், மந்திரங்கள் செவிக்கும், தீர்த்தம் உடலில் படுவது மெய்க்கும், பிரசாதம் வாய்க்கும் உகந்தவை.

வேளாளர் வாழ்வு சிறந்திருந்த காலத்தில் சமயச் சடங்குள், வாழ்வியல் சடங்குகள் தமிழர்களாலேயே நடைபெற்று வந்தன. திருக்கோயில் வழிபாட்டு முறைகள் ஆரிய வேதமல்லாத ஆகமங்களின் வழி நடைபெற்றன. வாழ்வியல் சடங்குகள் சமய ஆசான்கள் (தேசிகர்கள்) நடத்தி வந்தனர். இவ்வாசான்கள் ஒவ்வொரு குலத்துக்கும் குருவாகவிருந்து தத்தமது சீடர்களைத்தக்க வழியில் நெறிப்படுத்தி வந்தனர்.

குலகுருவாக விளங்கிய தேசிகரின் மூத்த புதல்வர் தந்தையைப் போல் ஆகமங்களை ஆய்ந்து பத்ததிகளின்படி இருந்த இடத்தில் இருந்து கொண்டு தம்மை நாடிவரும் பக்குவிகளுக்கு மந்திரோபதேசம், தீக்கை செய்து வந்தனர். இவர்கள் பண்டாரம் என்று அழைக்கப் பெற்றனர். தென் பாண்டி நாட்டில் இவர்கள் குருக்கள் எனவும் பண்டாரத்தையா எனவும் அழைக்கப் பெற்றனர். இல்லறத்தில் இருந்துகொண்டே சமயப் பணிகள் செய்துவந்தார்கள். இவர்கள் மூலவிக்கிரகங்கள் போல் இருந்த இடத்திலிருந்து தொண்டு செய்தனர். இருக்கைகளில் பூஜை மடங்கள் இருந்தன. சமூகத்தில் இவர்கள் மிகுந்த மதிப்புடனும் மரியாதையுடனும் நடத்தப் பெற்றனர்.

இத்தேசிகரது இரண்டாவது புதல்வர் அவர்களது சீடர் குலத்தினருக்கு வாழ்வியல் சடங்குகளை (திருமணம், அந்தியேஷ்டி முதலானவை) நடத்தி வைப்பர். இவர்கள் உற்சவ விக்கிரகங்கள் போல உலா வந்து தொண்டு செய்வர். மூன்றாவது புதல்வர் திண்ணைப் பள்ளிக்கூடம் வைத்துக் குருகுல முறையில் அனைத்து மக்களுக்கும் கல்விபுகட்டுவர். நான்காவது புதல்வர் தேவார, திருமுறை இசை வாணர்களாகத் திருக்கோயில்களில் பணி புரிவர். இன்னொரு புதல்வர் இருப்பின் அவர் திருக் கோயிலில் மாலை கட்டிக் கொடுத்துப் புட்பப் பணிவிடை, கோயில் மணியம், மெய்க்காவல் முதலான பணிகள் ஆற்றுவர். தேசிகராகிய பண்டாரத்தின் சீடர்கள் தமது குருநாதர்களை ஆலிவர், கோல்டு ஸ்மித்தின் கிராமப் போதகரைப் போல் தோழர், தூயவர், வழிகாட்டி (Friend, Philospher and Guide) யாகக் கருதுவர். மெய்கண்டார் பிறக்குமுன் அவர்தம் தந்தையாகிய அச்சுதக்களப்பாளர் தனக்குப் பிள்ளை இல்லை என்ற குறையைத் தம் குலகுருவான அருள் நந்தி சிவாச்சாரியாரிடம் கூறி அவர் ஆலோசனை வழி ஒழுகி இறையருளால் ஒரு புதல்வரைப் பெற்றார் என்பது வரலாறு. இவ்வண்ணம் தேசிகர்கள் சமுதாயத்துக்கு நற்பணிபுரிந்து வந்தனர். என்ன காரணத்தால் இந்த முறை வழுவியது என்பதைப் பார்ப்போம்.


வடவாரியர் வருகையும் ஆரிய வேதங்களும்

வடவாரியர் நம் நாட்டிற்கு வந்த பின் சமுதாய நடைமுறைகளை மெல்ல மெல்ல மாற்றினர். தமிழர்களுக்கேயுரிய ஆகமங்கள் பின் தள்ளப்பட்டு ஆரிய வேதங்கள் நுழைவிக்கப் பெற்றன. தொடக்க காலத்தில், சிவபெருமானை ஆரியர்கள் பரம்பொருள் எனப் போற்றவில்லை. ஆரிய வேதங்களில் பொருள் அறியா வண்ணம், புரியா வண்ணம் சடங்குகளுக்கு முதன்மையளிக்கப் பெற்றன. திருமணங்களில் சொல்லப் பெற வேண்டிய மந்திரங்கள் (அந்தியேஷ்டியில்) நீத்தார் வழிபாட்டில் ஓதப் பெற்றன. (பார்க்க: மறைமலையடிகள் வரலாறு) சிவபெருமானைத் திருடன், கள்வன், கொள்ளைக்காரன் என்றெல்லாம் தாழ்த்திப் பேசிய ஸ்ரீ ருத்ரத்துக்கு முதன்மையும்

முக்யத்துவமும் அளிக்கப் பெற்றது. பல்லவர்கள் காலத்தில் வடமொழியும் வேதவழக்கும் இல்லாத சிறப்பினைப் பெற்றது. அதன்பின் வந்த மராட்டியரும் தெலுங்கரும் புதிய முறைகளைத் தமிழ்நாட்டில் புகுத்தினர். அவர்கள் ஆளுகையின்போது வடக்கி லிருந்து வந்த 'வேதவித்துக்கள்' ஒவ்வொரு கிராமத் திலும் குடியமர்த்தப் பெற்று மான்யங்கள் கொடுத்து சுபா சுபங்கள் அவர்கள் மூலம் நடைபெற வேண்டுமென்ற கட்டுத்திட்டம் ஏற்படுத்தப்பெற்றது. அரசும் அதிகாரமும் வேற்று மொழியினரிடம் இருந்ததால் பழைய குருகுல முறைகள் தளர்ந்தன. பண்டாரம் என்ற சொல் இழிவானதாகக் கருதப் பட்டது. கல்விக் கருவூலங்களான பண்டாரங்கள் பழிக்கப்பெற்றனர். (இந்நிலை பேரறிஞர் திருப்புறம் பயம் சதாசிவ பண்டாரத்தாரால் ஓரளவு மாற்றப் பெற்றது.)

திருக்குட நன்னீராட்டு விழா மற்றும் வாழ்வியல் சடங்குகளில் செய்யப்பெறும் கிரியைகள் கடத்தை நிறுவுதல், தீ வேட்டல், முத்திரை காட்டல் ஆகியவை செயல்கள் ஆகும். இவற்றிற்கும் மொழிக்கும் சம்பந்தம் இல்லை. அதே போல் 'பாவனை' மனத்தில் நினைத்தல், இதனை ஆச்சாரியார் தமிழ் மொழியில் தான் எண்ணுவார். ஆங்கிலத்தில் புலமை பெற்று ஆங்கிலேயரும் வியக்கும் வண்ணம் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்றும் பேரறிவாளரும் மனத்தில் எண்ணுவது அவர் தம் தாய் மொழியிலே என்பது வெள்ளிடைமலை. தாய்மொழி எண்ணத்தையே ஆங்கிலமாக மொழி மாற்றம் செய்து நாவால் பேசுவர். இவ்விழாக்களில் கூறப்பெறும் மந்திரங்கள் ஒலிக் குறிப்புகளேயாம். பெயர்ச் சொற்களை உள்ளபடியே ஒலிப்பதால் இழுக்கேதும் இல்லை. அவற்றிற்கு முன்னும் பின்னும் உள்ளவைகளைப் பொருளை உணர்ந்து தமிழாக்கியொலிக்கலாம். நமஹ என்பதைப் 'போற்றி' என்றும், 'ஸ்வாஹா' என்பதை 'உவகையாகுக' என்றும் 'ததாஸ்து' என்பதை 'அங்ஙனமேயாகுக' என்றும் இவ்வகையாக சப்தகோடி மஹா மந்திரங்களை அவற்றின் பொருட்கேற்ப தமிழில் ஒலிமாற்றம் செய்து ஒலிக்கலாம் (எடுத்துக்காட்டு: ஓம் ஈசான மூர்த்தியே நமஹ என்பதை ஓம் ஈசான மூர்த்தியே போற்றி)

மந்திரங்களில் சிறந்தவை திருமுறை மந்திரங்களே. 'கண்ட பெரு மந்திரமே மூவர் பாடல் கை காணா மந்திரம் கண்ணுதலோன் கூறல்' என்ற அடைவு ஏறிய ஆன்றோர் வாக்கிற்கிணங்க தமிழ் மந்திரங்களால் ஆன்மவியல், ஆன்மீகவியல் சடங்குகளை நிகழ்த்துதல் தமிழர்க்குப் பெருமை. திருக்கோயில்களில் தீந்தமிழில் வழிபாடு, பள்ளி, கல்லூரிகளில் தமிழ் வழிக்கல்வி இசைக் கச்சேரிகளில் தமிழிசைக்கு முதன்மை, நாளேடுகளில் நல்ல தமிழ், கல்வியாளர்கள், தமிழைப் போற்றுதல் விரைவில் இந்நிலை மலர இறைவனை இறைஞ்சுவோம். ○○○



தஞ்சை
பெரிய கோயில்

மெஞ்ஞான வீடடைய அஞ்ஞான இருளகற்றும் தேசிகன்



கவிதையரசர்
சி. வீரபாண்டியத் தென்னவன்
மதுரை

ஞானத்தின் வடிவாகி ஞாலத்தில் விடிவாகி
ஊனத்தைக் களைகின்ற ஓம் கார ஒலியாகி
தானந்தத் தத்துவத்தின் தலையாய வித்தாகி
ஆனந்தச் சுடராகும், அம்பிகை பாகனை,
அம்மை அப்பனை, இம்மையின் நன்மையை
ஈசனை, பரமனை, தென்னாடுடைய சிவனை,
''கற்றூணைப் பூட்டிக் கடலிலே தள்ளினும்
நற்றுணை யாகும் நமச்சிவாயனை''.
''உலகெலாம் உணர்ந்தோதற் கரியவனை,
நிலவுலாவிய நீர்மலி வேணியனை,
அலகில் சோதியனை, அம்பலத்தாடுவானை
ஏதுந் தெரியாதெனை மறைத்த வல்லிருளை
நாதனாய் நின்று நீக்கவல்ல ஞானக்கூத்தனை
எட்டுத் திசையும் பதினாறு கோணமும்
எங்கும் ஒன்றாய் முட்டித்ததும்பி
முளைத்தோங்கும் பரஞ்சோதியை,

நன்பாட்டுப் புலவனாய்ச் சங்கமேறிய சோம சுந்தரனை, இக்கலிங்கம் போனாலென்ன ஏகலிங்கமாம் மதுரைச் சொக்கலிங்கம் உண்டேதுணை என்றுசொல்லவைத்த சொக்கநாதனை, அருவுருவாகிய அமலனை, அகர முதல எழுத்தான ஆதிசிவனை, அடியார்க்கு அடியவனை, வாலறிவனை, இருள்சேர் இருவினையும் சேரா இறைவனை, வேண்டுதல் வேண்டாமை இல்லா வீரனை, பந்தமெல்லாம் தீரப் பரஞ்சோதியாய் நிற்கும் குருபரனை தோடுடைய செவியனை, மெஞ்ஞான வீடடைய அஞ்ஞான இருளகற்றும் தேசிகனை, உலக நன்மைக்காக நஞ்சுண்ட நீலகண்டனை, கண்ணொன்று காட்டிக் களிம்பறுக்கும் முக்கண்ணனை, தாமார்க்கும் குடியல்லாத் தலைவனை, விடையேறிவரும் உமையொரு பாகனை, தடைநீங்கவரும் லிங்கேஸ்வரனை, சிவயோகச் சிவசங்கரனை, தவயோக அருணாசலனை, இராசயோக சுந்தரேஸ்வரனை, ஏகத்துவ ஏகாம்பரேஸ்வரனை, கோடிகோடித் திருநாமங் கொண்ட கைலாசனை, சித்தர்களும், யோகிகளும், சிந்தனையில் ஞானிகளும், பக்தர்களும், பாமரரும், பாணர்களும், பாவலரும், நாட்டோரும், கேட்டோரும், லிங்கரூபமாக, நடன மாடும் நடராசனாக, வில்வப் பிரியனாக, வேத நாயகனாக, எத்தனை எத்தனையோ வடிவங்களில் கண்டார்கள், காண்கிறார்கள், காண்பார்கள்.

இந்தக் கட்டுரையில் சிவனை அன்பின் வடிவமாகக் கண்டவர்கள் விண்டுரைத்த வெளிச்சத்தை இனிக் காண்போம். அன்பு என்றால் என்ன?

பாசம், நேசம், காதல், பக்குவங்களை அன்பு என்கிறார்கள். ஆருயிரோடு ஐக்கியமானது என்கிறார்கள். இன்பப் பெருக்கு என்கிறார்கள், இதயத் துடிப்பு என்கிறார்கள்.

''அன்பின் வழியது உயிர்நிலை'' எனத்



தெய்வப் புலவர் திருவள்ளுவரும்,

''அன்பே இன்பமானது'' எனப் புத்தரும்,

''உள்ளக அன்பே உயிரோட்டம்' எனச் சமணகுரு மகாவீரரும்,

''அன்பிருக்கும் இதயம் இறைவன் வீடு'' என விவிலிய நூலும்,

''அன்புள்ளம் இறைவனை நோக்கி வழி நடத்தவல்லது'' எனத் திருக்குரானும்,

அன்பின் உயர்வைச் சொல்கின்றன.

அன்பு மனிதனைப் புனிதனாக்கி மனித நேய மனம் தருகிறது. பிறவிக்குருட்டைப் போக்கும் அறிவுக் கதவைச் சரியாய்த் திறக்கிறது. அமரருள் உய்க்கும் அடக்கத்தைத் தருகிறது. ஆற்றலைப் பெருக்கும் பணிவுக்கும் ஒழுக்கத்திற்கும் பாலமாகிறது. நேர் வழியில் நிறுத்துகிறது. நிதானத்தைத் தருகிறது. துணிவைத் தருகிறது. துணையாகிறது. வையத்துள் வாழ்வாங்கு வாழ வைக்கிறது. வாழ்விக்கும் ''அன்பே சிவம்'' என்பதுதான் இக்கட்டுரையின் கருத்து.

திருமூலர் தம் திருமந்திரத்தில்-

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே''

எனத் தீர்க்க தரிசியாகத் தெளிவுபடுத்துகிறார்.

''அம்பலங்கள் சந்நிதியில் ஆடுகின்ற வம்பனே
அன்பனுக்குள் அன்பனாய் நிற்குமாதி வீரனே
அன்பருக்குள் அன்பராய் நின்ற ஆதி நாதனே
உம்பருக்கு உண்மையாய் நின்ற உண்மை உண்மையே''

எனச் சிவவாக்கியரும்!

''இல்லிலும் அன்பர் இடத்திலும் ஈசன் இருக்குமிடம்
கல்லிலும் செம்பிலுமோ இருப்பான் எங்கள் கண்ணுதலே''

எனப் பட்டினத்தாரும்

''அன்பை உருக்கி அறிவை அதன் மேல்புகட்டித்
துன்பவலைப் பாசத் தொடக்கறுப்பது எக்காலம்''

''அன்னம் புனலை வகுத்து அமிர்தத்தை உண்பது போல்
என்னை வகுத்தன் புன்னை இனிக் காண்பது எக்காலம்''

எனப் பத்திரகிரியாரும்

''ஆயிரத்து எட்டிதழ் வீட்டில் அமர்ந்த சித்தன்
அண்டம் எல்லாம் நிறைந்திடும் அன்புருச் சித்தன்''

எனப் பாம்பாட்டிச் சித்தரும்,

''ஐயன் திருப்பாதம் அன்பு'' இடைக்காட்டுச் சித்தரும்

''அன்பைப் பெருக்கி எனதாருயிரைக் காக்கவந்த
இன்பப் பெருக்கே இறையே பராபரமே''

என தாயுமானவரும்,

''அருந்தானை அன்புசெய்து தேத்தார் பாற்
பொருந்தானை''

என ஞானசம்பந்தரும்

''தன்போல் என்பால் அன்பன் தன்பால்''

எனப் பரஞ்சோதியாரும் சொன்னவரிகள்

அன்பே சிவம் என்ற உண்மைக்கு உரைகல். சிவன் அன்பின் வடிவமாக இருந்ததால்தான் ''பால் நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து'' என்று மாணிக்கவாசகர் குறிப்பிடுகிறார்.

''வில்லால் அடிக்கச் செருப்பால் வதைக்க வெகுண்டு ஒருவன் கல்லால் எறியப் பிரம்பால் அடிக்க''.. அனைத்தும் ஏற்ற சிவன் விறகைச் சுமந்த சிவன், மண்ணைச் சுமந்த சிவன்'', ஈசன் சிலுவையில் மாண்டான்'', என்ற பாரதியின் வாக்கினையும் ஏற்கெனவே வரலாறாய் மாற்றியுள்ளது விளங்கும்!!

''இறவாத ஆனந்தம்
எனும் திருமஞ்சன மாட்டி
அறவாணர்க்கு அன்பென்னும்
அமுதமைத்து அர்ச்சனை செய்வார்''

எனத் தொண்டர்களைக் குறிப்பிடும் சேக்கிழார் இறைவனை அடியார்க்கடியான்'' ''தொண்டருக்குத் தொண்டன்'' எனச் சொல்வது அன்பே சிவமென்பதை உறுதிப்படுத்தும்.

இறைவன் அன்பின் வடிவமாக இருந்ததால் தான் முன்னம் அவன் நாமம் கேட்டு, மூர்த்தி அவனிருக்கும் வண்ணம் கேட்டு, பின்னே அவன் ஆரூர் கேட்டுப் பெயர்த்தும் அவர்க்கே பிச்சியாகித் தன் நாமம் கேட்டுத் தன்னை மறந்த அடியார்த் தலைப்பட்டார்கள் தலைவன் தாளே. உலகத்திற்கே உண்மையான ஞானத்தை அள்ளிவழங்கும் தகுதியான திராவிட பூமி ஆன்மீக வித்துகள் ஆற்றலோடு இருக்கும் கற்பக தருவான கன்னித்தமிழ் நாடு, ஈன்றெடுத்த திருவருட்செல்வர்கள், சான்றோர், வாக்கு மூலங்களாக இருக்கும் வைரவரிகள், என்றும் சொல்லும் அன்பே சிவம் என்று. ○❍○

நல்லை நகர் நிகரில் நாவலர்



சித்தாந்த வித்யாநிதி
பேராசிரியர் சு. சண்முகவேல்
தூத்துக்குடி.

போர்ச்சுகீசியர், டச்சுக்காரர் மற்றும் ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் சுமார் 200 ஆண்டுகள் அடிமைப்பட்டுக் கிடந்தது இலங்கை. அத்தாக்கத்தினால், யாழ்ப்பாணமும் அதனைச் சார்ந்த பகுதியிலும், தமிழும், சைவமும் நலிவுற்று இருந்தன. யாழ்ப்பாணம் சிறிய பகுதியாக இருந்தபோதிலும், கொழும்பு, கண்டி ஆகிய இடங்களைப் பார்க்கிலும் இதனையே சிறப்பாகக் கருதிப் பாதிரிமார்கள் இங்கே வந்து சேர்ந்தார்கள். வேம்படி, சுண்டிக்குழி, நல்லூர், கோப்பாய், புத்தூர், வட்டுக்கோட்டை, மானிப்பாய், உடுவில், தெல்லிப்பழை ஆகிய முக்கிய ஸ்தானங்களில், புரட்டஸ்டண்ட் பாதிரிமார்கள் தீவிரமாகச் செயல்பட்டுக் கொண்டு இருந்தார்கள். இக்கால கட்டத்தில் தான் நல்லூர் நகரில் அவதாரம் செய்தார் ஆறுமுகநாவலர். கார்காத்த வேளாளர் மரபில் 18-12-1922 ஆம் நாள் தோன்றினார். இவரது முப்பாட்டன் காவல் முதலியார் என்னும் கௌரவப் பட்டம் பெற்றவர். பாட்டன் பெயர் ஸ்ரீ பரமானந்தன். தந்தை பெயர் ஸ்ரீ சுந்தப்பிள்ளை. இவர்களின் மூதாதையர்கள் தமிழ் மொழி, சைவ சமயம், மருத்துவம் போன்ற துறைகளில் இயற்கையாகவே மரபுவழி நிபுணத்துவம் பெற்று இருந்தனர்.



(குறிப்பு - ''முதலியார்'' என்பது அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட ஒரு கௌரவப் பட்டம்.) தன் பெற்றோருக்கு 5ஆவது மகனாகத் தோன்றினார். நாவலருக்கு 9 வயது இருக்கும்போது தந்தை சிவன் திருவடி அடைந்துவிட்டார். அதுவரை நாவலரிடம் அடங்கியிருந்த கல்வி அறிவையும் புத்திக் கூர்மையையும் யாரும் அறிந்து கொள்ள வாய்ப்புக் கிட்டவில்லை.

நாவலர் சிறுவராக இருந்தபோது தமிழ் அறிவை இவருக்குப் புகட்டிய ஆசிரியர் இருவர்.

1. சரவணமுத்துப்புலவர், 2. சேனாதிராய முதலியார்

நாவலருக்குச் சைவ சமய நுழைவுக் கிரியையாகிய தீட்சை செய்வித்தவர் விளைவேலி ஸ்ரீமத் வேதக்குட்டிக் குருக்கள். நாவலருக்கு 13 வயது ஆனபோது யாழ்ப்பாணம் மெதடிஸ்த ஆங்கில பாடசாலையில் சேர்க்கப்பட்டார். அங்கே ஆங்கிலக் கல்வி அறிவை நன்றாக வளர்த்துக் கொண்டார். அப்பாடசாலையில் அப்போது தலைமை ஆசிரியராக இருந்தவர் ரெவரெண்ட் பீட்டர் பேர்சிவல் பாதிரியார். நாவலரின் நுண்ணறிவையும், உழைப்பையும் கண்டு பிரமித்துப்போன பேர்சிவல் பாதிரியார் நாவலருக்கு அந்தப் பள்ளியிலேயே தமிழ் ஆசிரியர் பதவியும் தந்து இவருக்குச் சிறப்புகளும் செய்தார். இவருடைய ஒழுக்கம், நுண்மாண் நுழைபுலம் அயராத உழைப்பு ஆகியவை பேர்சிவல் பாதிரியாரைப் பெரிதும் கவர்ந்தன. ஆகவே எப்படியாவது இவரைக் கிறித்துவராக மதம் மாறச்

நாவலர் தோன்றியிருக்கா விட்டால் யாழ்ப்பாணமும், அதனைச் சுற்றியிருக்கும் பகுதிகளும் கிறித்தவ நாடாகவே மாறி இருக்கும். நாவலரைப் போன்ற ஒருவர் இனிமேல் பிறப்பாரா என்ற ஏக்கம் நம் மனத்துக்குள் துடிப்பதை நாம் உணர முடிகிறது.

செய்துவிட வேண்டும் என்று முயற்சிகள் பல மேற்கொண்டார்.

ஆனால் தன் சமயத்தைத் துறக்க நாவலர் விரும்பவில்லை என்பதையும், இக்கொள்கையில் அவர் மிகவும் உறுதியாக இருக்கிறார் என்பதையும் பாதிரியார் நன்றாகப் புரிந்து கொண்டார். அதேசமயம் தன் பாடசாலையிலிருந்து அவரை நீக்கவும் பாதிரியார் விரும்பவில்லை. தமிழ் மொழியின் இலக்கணம், இலக்கியம் ஆகியவற்றைப் பாதிரியார் நாவலரிட மிருந்து முறையாகக் கற்றுக் கொண்டார். கிறித்தவ சமயத்திற்கு நாவலரை எப்படிப் பயன்படுத்தலாம் என்று எண்ணிப்பார்த்து பைபிள் மொழிபெயர்ப்பில் இவரை ஈடுபடுத்தலாம் என்று முடிவு செய்தார். தமிழில் அப்போது பைபிள் இல்லை. 1382 இல் John Wycliffe என்பவரால் இலத்தீன் மொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட ஆங்கில பைபிளைத்தான் பாதிரியார்கள் அப்போது பாவித்து வந்தனர். ஆகவே நாவலரைப் பயன்படுத்தி பைபிளைத் தமிழில் மொழி பெயர்த்து விட்டார் அப்பாதிரியார்.

அக்காலகட்டத்தில்தான் தமிழ் நாட்டிலும் பலர் பைபிளைத் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்தனர். எந்த மொழிபெயர்ப்பு சரியானது என்பதை முடிவு செய்ய கிறித்தவ இலக்கியச் சங்கம் மெட்ராஸில் பல அறிஞர்களைக் கொண்ட குழுவைக் கூட்டியது. பேர்சிவல் பாதிரியாரின் மொழி பெயர்ப்பே சிறந்தது என்று அக்குழு தீர்ப்புக் கூறியது. இந்தப் பணியை நாவலர் தன்னுடைய 19ஆவது வயதில் செய்து முடித்தார் என்பது வியப்புக்குரியது. மொழி பெயர்க்கும் காலத்தில் ஹீப்ரு, இலத்தீன், ஆங்கில மொழிகளில் பைபிளுக்கு ஏற்கெனவே செய்யப் பட்டிருந்த பல்வேறு விமர்சனங்களைத் தெளிவாகப் படித்துக் கிறித்தவ சமயத்தின் குற்றங்களையும், பொருந்தாத கொள்கைகளையும் தெளிவாகத் தெரிந்து வைத்திருந்தார் நாவலர் பெருமான்.

ஆனாலும், பேர்சிவல் பாதிரியாரின் நட்பை இழக்கவில்லை. மாணிக்கவாசக சுவாமிகள் அரி மர்த்தன பாண்டியனிடம் பணி செய்தது போல இருந்து கொண்டார். எந்தச் சோதனை வந்தாலும் சைவ சமயத்திற்கும் தன் குறிக்கோளுக்கும் இழுக்கு வராமல் பார்த்துக் கொண்டார்.

சைவ சமய எதிரிகளாக இருந்த Wesleyan Methodist Church அதன் 1855 ஆம் ஆண்டு அறிக்கையில் நாவலரைப் பாராட்டி எழுதியது.

தொலைநோக்குப் பார்வை கொண்ட நாவலர் சைவப்பணி, தமிழ்ப்பணிகளில் தனக்கு மாணவர் பரம்பரையையும் உருவாக்கினார். இவரிடம் கல்வி கற்ற எண்ணற்ற மாணவர்களில் பெரும்புகழ் எய்தியவர்கள்

மூத்த மாணவர்கள்:

சதாசிவப்பிள்ளை, நடராச ஐயர், ஆறுமுகம் பிள்ளை

இளைய மாணவர்கள்:

வித்துவ சிரோமணி, பொன்னம்பலம் பிள்ளை, (இவர் நாவலரின் மருமகனும் ஆவார்), மா. வைத்தியலிங்கப் பிள்ளை, காசிவாசி. செந்திநாத ஐயர், (இவர் 45 நூல்களின் ஆசிரியர். இவற்றில் சில தத்துவ உலகத்தில் புகழ் பெற்றவை. தமிழ்த் தாத்தா உ.வே. சாமிநாத ஐயர் என்று பெயர் பெற்றார் என்பது போல இவரைத் தத்துவத்தாத்தா என்று கூறலாம்.)

வித்துவ சிரோன்மணி பொன்னம்பலம் பிள்ளையின் மாணவர்கள்:

1. வடகோவை சபாபதி நாவலர் (திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவானாக இருந்தவர். பல நூல்களை எழுதிப் புகழ்பெற்று நாவலர் பட்டத்தைத் திருவாவடு துறை ஆதீன 17ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிகரிடம் பெற்றவர்.)

2. மட்டுவில் க. வேற்பிள்ளை, (வாதவூரடிகள் புராணம், அபிராமி அந்தாதி ஆகியவை போன்ற நூல்களுக்கு ஒப்பற்ற உரைகள் எழுதியவர்)

3. வே. கனகசபாபதி ஐயர் நாவலர் பெருமான் சைவ சமயிகளுக்கு 1847ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணைச் சிவன்கோயிலில் ஆற்றிய பிரசங்கங்கள் சைவத்திற்குப் புத்துயிர் அளித்தன. பிரசங்கங்கள் என்றால் நாவலர்தாம் என்ற முத்திரை பதித்தார். அப்போது ஒலி நாடாக்கள் இல்லை என்பது ஒரு குறை. தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளில் அவருக்கு இருந்த புலமை அளவிடற் கரியது. இலங்கை வண்ணார் பண்ணையிலும் தமிழ் நாட்டில் சிதம்பரத்திலும் அவர் நிறுவிய சைவப் பிரகாச வித்யாசாலைகள் பல நூல்களை வெளியிட்டன. பழைய தமிழ் நூல்கள் பல பாதுகாக்கப் பெற்றன.

நாவலரின் வாழ்க்கை வரலாற்றினை 5 வகை யாகப் பிரித்து ஆய்வுகளை நிகழ்த்தலாம்.

1. களப்பணி (Field Work)
2. எழுத்துப்பணி
3. சவால்களும், வழக்குகளும்
4. முக்கிய வாழ்க்கை நிகழ்வுகள்
5. குணாதிசயங்கள்.

விரிவு அஞ்சி எழுத்துப்பணி மட்டும் ஈண்டுக் குறிப்பிடுகிறேன்.

எழுத்துப் பணி

இப்பணிகளை ஆறு தலைப்புகளில் பிரிக்கலாம்.

1. தானே எழுதிய நூல்கள், 2. அவரால் உரை எழுதப்பட்ட நூல்கள், 3. பரிசோதித்துப் பதிப்பிக்கப் பட்ட நூல்கள். 4. அவர் எழுதிய கண்டன நூல்கள், 5. மொழிபெயர்ப்பு நூல்கள் 6. அவரின் கடிதங்களும் அறிவிப்புகளும்

இத்தலைப்புகளின் கீழ் நாவலர் செய்த நூல்களின் பட்டியலைக் காண்போம்.

தானே எழுதிய நூல்கள்

சைவ வினாவிடை - 2 தொகுதிகள், சைவ பாலபாடம் - 4 தொகுதிகள், சிவாலய தரிசன விதி, சைவ சமய சாரம், பெரிய புராண வசனம், திருத் தொண்டர் புராண சூசனம், இலக்கணச் சுருக்கம், குரு சிஷ்யக் கிரமம், நித்திய கருமவிதி, திருவிளையாடற் புராண வசனம், போசன விதி, திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் புராண வசனம், திருநாவுக்கரசு நாயனார் புராண வசனம், சுந்தரமூர்த்தி நாயனார், புராண வசனம், மாணிக்கவாசக சுவாமிகள் புராண வசனம், யாழ்ப்பாண சமயநிலை, கந்தபுராண வசனம், அராலி சித்தி விநாயகர் விருத்தம், நல்லை கைலாச பிள்ளையார் மங்கள் விருத்தம்

அவரால் எழுதப்பட்ட உரை நூல்கள்

ஔவையின் ஆத்திகுடி உரை, ஔவையின் கொன்றை வேந்தன் உரை, திருமுருகாற்றுப்படை உரை, திருச்செந்தில் நிரோட்டயமக அந்தாதி உரை, சிதம்பரம் மறைஞானசம்பந்த நாயனார் அருளிய சைவ சமய நெறி, புத்துரை, ஆகமங்களில் சொல்லப் பட்ட கிரியைகள் பற்றிய செய்திகள் அடங்கியது.

உமாபதி சிவம் அருளிய கோயிற் புராண உரை, (ஜி.யு. போப்பு பாதிரியார் இதிலிருந்து மேற்கோள் காட்டியுள்ளார்.), சிவ தருமோத்தார உரை, மருதூர் அந்தாதி உரை, நன்னூல் என்ற இலக்கண நூலுக்குத் திருத்தியும், விளக்கியும், கூட்டியும் செய்த காண்டிகை உரை, (தமிழ் இலக்கணம் கற்போருக்குப் பெரிதும் துணை செய்யும் ஒப்பற்ற நூல்)

அவர் பரிசோதித்துப் பதிப்பித்த நூல்கள்

திருக்குறள் பரிமேலழகர் உரை, திருச்சிற்றம் பலக் கோவையார் பேராசிரியர் உரை, தருக்க சங்கிரக உரை, சேது புராணம் சூலம், கொலை மறுத்தல் என்னும் நூலுக்குத் திருப்போரூர் சிதம்பர சுவாமிகள் செய்த உரை.

தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-சேனாவரையர் உரை (திருந்திய பதிப்பு, திருவாவடுதுறை ஆதீன சுவாமிநாத தேசிகரின் இலக்கணக் கொத்து, திருவாவடுதுறை ஆதீன சிவஞான சுவாமிகளின் தொல்காப்பியச் சூத்திர விருத்தி, மண்டல புருடன் செய்த சூடாமணி நிகண்டு - மூலம் - வில்லிபுத்தூர் ஆழ்வார் செய்த பாரதம் மூலம், சுன்னாகம் முத்துக் குமாரசாமிக் கவிராயர் செய்த ஞானக் கும்மி (கிறித்து மத கண்டன நூல்). சுன்னாகம் முத்துக் குமாரசாமிக் கவிராயர் செய்த ஏசுமத பரிகாரம் (கிறித்து மத கண்டன நூல்). நன்னூலுக்குச் சங்கர நமச்சிவாயப் புலவர் செய்த விருத்தி உரை (சிவஞான முனிவர் செப்பஞ் செய்தது), பெரிய புராண மூலம், கந்த புராண மூலம், திருவிளையாடற் புராண மூலம், அகத்தியர் தேவாரத் திரட்டு மூலம்

அவர் எழுதிய கண்டன நூல்கள்

சைவ தூஷண பரிகாரம் (சைவ சமயக் கிரியைகளை இழித்துப் பேசிய கிறித்தவப் பாதிரியார்களுக்குக் கண்டனம்), வச்சிர தண்டம் (கிறித்தவப் பாதிரிகளுக்குக் கண்டனம்), சுப்ரபோதம் (முருகன் அவதாரம் பற்றி இழித்துப் பேசிய பாதிரிகளுக்குக் கண்டனம்)

1. மிலேச்சமத சாரம், 2. மிலேச்சமத விகற்பம், 3. மிலேச்சமத கண்டனம், நீர்வேலி சிவசங்கர பண்டிதர் மூலம் செய்துவித்தன.

விவிலியகுற்சிதம் (மாணவர் காசிவாசி செந்தி நாத ஐயர் மூலம் செய்வித்தது). மித்தியவாத நிரசனம் -(ஆதிசங்கரரின் ஏகான்மவாதக் கொள்கைக்குக் கண்டனம்), போலியருட்பா மறுப்பு (இராமலிங்க சுவாமிகளின் பாடல்களுக்குச் செய்த கண்டனம்)

மொழிபெயர்ப்பு நூல்கள்

சிவ சிரார்த்த விதி, தருப்பண விதி, கிறித்தவர் களின் பரிசுத்த வேதாகமம் (தன் 19 வயதில் செய்தது.)

நாவலரின் கடிதங்களும் அறிவிப்புகளும்

சைவ சமயிகளுக்கு விஞ்ஞாபனம் Rev. Joseph Walton போன்ற பாதிரியார்களுக்கு எழுதிய கடிதங்கள்.

அவ்வப்போது உதயதாரகை, இலங்காபிமானி, இலங்கைநேசன் போன்ற பத்திரிகைகள் மூலம் எழுதிய கட்டுரைகள்

குறிப்பு - ''ஆறுமுகநாவலர் பிரபந்தத் திரட்டு'' என்ற பெயரில் இவை தனிநூலாக வெளிவந்துள்ளது.

நாவலர் நூல்கள் அனைத்தையும் ஒருவன் கற்றால் அவன் பெரிய அறிஞனாகிவிடுவான் என்பது திண்ணம்.

நாவலரின் குணாதிசயங்கள்

சைவ சமய வளர்ச்சி ஒன்றினையே குறிக் கோளாகக் கொண்டு இவர் திருமணம் செய்து சாரியாகவே வாழ்ந்தார். உண்மைத் துறவு நெறிக்கு ஓர் எடுத்துக் காட்டாக வாழ்ந்தார். 56 வருடங்கள் 11 மாதங்கள் இவருடைய ஆயுள்காலம். எந்தச் சூழ்நிலையிலும் யாரும் இவரை விலை கொடுத்து வாங்கிவிட முடியாது. தக்க ஆதாரம் இன்றி மூல பாடத்தைத் திருத்த மாட்டார். பாடபேதங்கள் இல்லாமல், நூல்களை வெளியிடுவது இவரின் தனிச்சிறப்பு. இவர் நூல்களில் அச்சுப்பிழை என்பது அறவே இராது. சைவ

சமயத்திற்கும் தமிழுக்கும் இழிவு வரும்போது எதிர்த்துப் போராடத் தயக்கம் காட்டமாட்டார். சிவ தீட்சை இல்லாப் பிராமணர் கொடுக்கும் விபூதி வாங்கித் தரிக்கமாட்டார்.

புகழ்மாலை

மிகப்பெரிய தமிழ் அறிஞர்கள் இவரைப் பாராட்டியுள்ளனர். இவரைத் தமிழ் உரைநடையின் தந்தை எனக் கூறலாம். தமிழ்நாட்டின் மிகப்பெரும் அறிஞராகிய வி.கோ. சூரிய நாராயண சாஸ்திரி என்ற பரிதி மால் கலைஞர் ''வசனநடை கைவந்த வல்லாளர்'' என்று இவரைப் பாராட்டினார்.

திருக்கயிலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்தில் 16ஆவது குருமகா சந்நிதானமாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக பரமாசாரிய சுவாமிகள் இவருக்கு நாவலர் என்ற சிறப்புப் பட்டத்தைச் சூட்டினார். அன்று முதல் இவர் இயற் பெயராகிய ஆறுமுகம் என்ற பெயரைவிட நாவலர் என்ற சிறப்புப் பெயராலேயே இவர் அழைக்கப் பட்டார்.

திருவாசகம், திருக்குறள், திருவருட்பயன் போன்ற நூல்களுக்கு ஆங்கில விரிவுரை செய்த ஜி.யு. போப்பு பாதிரியார் நாவலரை இவ்வாறு புகழ்ந்திருக்கிறார்.

Arumuga Navalar of Jaffna is the very accomplished editor and commentator of Koil Puranam who was a zealous reviver in modern times of the Saiva system

யாழ்ப்பாணம் நீதிபதி சி.வை. தாமோதரம் பிள்ளை நாவலர்மீது பாடிய பாடல்

''நல்லைநகர் ஆறுமுக நாவலர்பி றந்திலரேல்
சொல்லுதமிழ் எங்கே சுருதிஎங்கே - எல்லவரும்
ஏத்துபுரா ணாகமங்கள் எங்கேப்ர சங்கமெங்கே
யாத்தலறி வெங்கே அறை''.

திருவாவடுதுறை ஆதீன மகாவித்துவானாக விளங்கியவரும், நூற்றுக்கும் மேற்பட்ட தமிழ்ச் செய்யும் நூல்களையும், புராணங்களையும் இயற்றிய வரும் ஆன திரிசிரபுரம் மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் நாவலர் மீது 15 தமிழ்ப் பாடல்கள் பாடிப் பாராட்டினார். 'சைவம் எனும் பயிர் வளர்க்கும் எழிலி போல்வான்' என 14 ஆவது பாடல் பாராட்டுகிறது.

நாவலர் தோன்றியிருக்காவிட்டால் யாழ்ப்பாண மும், அதனைச் சுற்றி இருக்கும் பகுதிகளும் கிறித்தவ நாடாகவே மாறி இருக்கும். நாவலரைப் போன்ற ஒருவர் இனிமேல் பிறப்பாரா என்ற ஏக்கம் நம் மனத்துக்குள் துடிப்பதை நாம் உணர முடிகிறது.

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்''

- திருச்சிற்றம்பலம் -



தந்தை 70க்குப் பிள்ளைத் தமிழ்

தொலைவில் இருந்து
என்னைத்
தொலைக்
காட்சியில்
கண்டு

நெஞ்சில்
நெருங்க
அழைத்து

நெகிழ
நெகிழ அன்பில்
நொறுங்க
அணைத்து
அரவணைத்து

அன்பு
மகனாய்
உறவணைத்து

உயிர்
நெகிழக்
கவனித்து

கண்
மல்க
அனுப்பிவைத்த

கடமை
மனிதர் எங்கள்
சீவரத்தினம்!

கண்ணாய்த் தமிழீழம்
கருத்தில்
கொண்டவர்!

கற்கண்டுச்
செஞ்சோலை
கவின் மழலைப்
புன்னகைகள்
நெஞ்சில்
நிறுத்திக்
கொண்டவர்!

அவரது
எழுபது அகவை
இனிய
உழைப்பு

இன்னும்
இளமையாய்த்
தொடர!

எங்கள்
ஈழ
விடியலின்
மீது
வெளிச்சமாய்ப்
படர

வாழ்த்தி
மகிழும்

அன்பின் பிள்ளை
08.01.08
சென்னை



காலந்தோறும் சிற்பக் கலையும் பண்பாடும்



முனைவர் ஜெ.ஆர். இலட்சுமி
இணைப் பேராசிரியர், மாநிலக் கல்லூரி
சென்னை.


தமிழ்ச் சமுதாயம் உயரிய பண்பாட்டினைக் கொண்டிலங்கியது. பழக்க வழக்கம், வாழ்க்கை முறை, நோக்கம், எண்ணம் ஆகிய அனைத்தும் உயரிய குறிக்கோள்களைக் கொண்டிருக்கிறது. இதுபோலக் கலை என்பது மனிதனின் காட்சிக்கும், கருத்திற்கும் உவகை அளிப்பது. பொலிவும், அழகும் பெற்றதாக உள்ளத்தைத் தன்பால் ஈர்க்கும் அமைப்பில் உருவாக்கம் பெற்றதாகும்.

கலை ஒரு நாட்டின் கலாச்சாரத்தை விளக்கும் சான்றாக அமையும். கலைகளில் சிற்பத்திற்குப் பெயர் பெற்ற நாடு நம் நாடு. மிக உயர்ந்த சிற்ப நூலின் நுட்பத்தைக் கிராமங்களில் கூட இன்று எங்கும் காணலாம். நம் நாட்டுச் சிற்பக் கலையின் சரித்திரம் கிறிஸ்து பிறப்பதற்கு 3000 வருடங்களுக்கு முன்பே சிந்து வெளிப் பிரதேசத்தில் ஆரம்பித்திருக்கிறது. அதனைத் தொடர்ந்து நவீன காலமாகிய இப்பொழுதும் ஊர்தோறும், தெருக்கள் தோறும் சிற்பக் கலை வளர்ந்து மனித உணர்வுகளின் வெளிப்பாடாகத் திகழ்கின்றன. தமிழகத்தில் சிற்பக் கலையைத் தொடங்கியவர்கள் பல்லவப் பேரரசர்கள் என வரலாறு குறிப்பிடுகின்றது.

பல்லவர் கால ஸ்ரீதேவி, பூதேவி சிற்பங்கள்

பல்லவர்களின் சிற்பங்கள் மெலிந்த நீண்ட உடலமைப்பையும், பரந்த மார்பையும், ஒடுக்கமான இடையையும் கொண்டவை. இச்சிற்பங்களின் மகுடங்கள் கூம்பு வடிவமாகவும் நீண்டும் இருக்கும். யக்னோ பவிதம் எனப்படும் பூணூல் வலது கையில் மேல் செல்வதாக அமைந்திருக்கும். இச்சிற்பங்களில் அணிகலன்கள் மிகக் குறைவு. மகுடங்கள் மற்றும் தலையலங்காரங்கள் ஆபரண அலங்காரமின்றி எளிமை

ஒவ்வொரு காலத்திலும் செதுக்கப்பட்ட சிற்பங்கள் அக்காலத்தில் வாழ்ந்த மக்களை நினைவுபடுத்துகின்றன. அக்காலச் சூழலின் தன்மைகளை வெளிப்படுத்துகின்றன. காலந் தோறும் மனிதர்களின் உருவ அமைப்புகளை அறிந்து கொள்ள முடிகின்றது. அச்சிற்பங்களில் அமைந்து உள்ள குறியீடுகள் மனித வாழ்வின் தத்துவத்தை வெளிப்படுத்துவனவாக உள்ளன.



யாய் அமைக்கப்பட்டன. உருவங்கள் மென்மையான தாக அமைக்கப்பட்டன. பெண்கள் சிறுவயதினராகவே காட்சி பெற்றனர். அவர்தம் மார்பகம் சிறிதாகவும், இடைபருத்துக் காணப்படாமலும், அவர்களது இடுப்பு அல்லது அடிவயிற்றுப் பகுதி முன்பக்கம் சற்றுப் பருத்துக் காணப்படும். சிற்பங்களில் பார்வைகளில் கருணை ரசம் தோன்றும். இவை அமராவதி சிற்பங் களில் உள்ளது போல் இருப்பினும், அமராவதி சிற்பங்களைக் காட்டிலும் முறைப்படுத்தப்பட்டன வாகும். (Edith Tomory, A History of fine Arts in India and the West 1989)

பல்லவர் சிற்பங்களில் இயற்கையான எளிமை யிருப்பதைக் காணலாம். அவர்களது ஆடை, இடுப்பின் இருமருங்கிலும் பரந்து விரிந்து காணப்படும். சிற்பங்களில் உள்ள காதணிகள், குறிப்பாகக் குண்டலங்கள் தடித்தவையாகவும் காணப்படும். (ஏ. ஏகாம்பரநாதன், தமிழகச் சிற்ப ஓவியக் கலைகள் 1984) பொதுவாகப் பிற்காலத்துப் பெண் சிற்பங் களிலும், இறைவியர் சிற்பங்களிலும் அவர்களின் சிறப்பிடம் பெருத்து மார்ப்புக் கச்சை அமைக்கப் பட்டிருக்கும். மற்றவற்றில் மார்புக் கச்சை இருக்காது. எடுத்துக்காட்டாக விஷ்ணுவின் இரு தேவியருள் ஸ்ரீதேவிக்கு மார்புக் கச்சை அமைக்கப்படும். ஆனால் பூதேவிக்குக் கச்சை அணிவிக்கப்பட மாட்டாது. இது அவர்களை வேறுபடுத்திக் குறிப்பிடவும், தேவியை உயர்வாகச் சிறப்பிக்கவும் அமைக்கப்படுவதெனக் கொள்ளலாம். இறைவியர் களாகவோ அல்லது சாதாரண பெண்டிராகவோ இருப்பினும், பல்லவர் காலச் சிற்பங்களில் பெண்கள் தங்களுக்கு அருகில் நிற்கும் ஆண்களது தோள்மீது சாய்ந்தும், பணிவாகவும் உள்ளது போல் அமைக்கப் பட்டிருப்பதைக் காணலாம்.

இவர்களது காலத்தின் தொடக்கத்தில் துவார பாலகர் களுக்கு இரு கைகள் மட்டுமே உண்டு. அவர்கள் ஆடு மேய்க்கும் இடையன், ஆட்டு மந்தையில் ஆடுகளைக் காத்துக் கொள்ளக் கண்ணுங் கருத்துமாய்ச் சற்றுத் தன் கையிலிருக்கும் கம்பின் மீது சாய்ந்து கொண்டிருப்பது போல் இத்துவார பாலகர் அமைக்கப்பட்டனர். ஆனால் பல்லவரின் பிற்காலத் திலேயே நான்கு கைகளையுடைய துவார பாலகர்கள் இடம் பெறலாயினர். இவற்றில் சிலர் கொம்பு களுடனும், வேறு சிலர் சங்கு சக்கரத்துடனும் அமைக்கப்பட்டனர். தொடர்ந்து வந்த காலங்களில் துவார பாலகரின் மேற்கையில் கோயிலின் உள்ளிருக்கும் இறைவனின் ஆயுதங்களையே வைத்து சிற்பம் அமைக்கும் பழக்கம் இருந்துவந்துள்ளது.



பல்லவர்களது சிற்பங்களில் எண்ணிக்கையில் அதிகமானது படைப்புச் சிற்பங்களாகும். தனிச் சிற்பங்கள் மிகக் குறைவுதான். அவர்களது கட்டு மானக் கோயில்களில் சோமாஸ்கந்தர் படைப்புச் சிற்பமும், பதினாறு பட்டைகளையுடைய, நன்கு மெருகூட்டப்பட்ட சிவலிங்கமும் அமைவது ஒரு பொதுவான கூறாயினும், இதனை முதன்முதலில் கருங் கல்லில் வடித்தவர் முதலாம் பரமேஸ்வர வர்மன். ஆனால், இது புகழ்பெற்றது பல்லவன் இராஜசிம்ம மன்னன் காலத்திலேயே ஆகும். பல்லவர்களின் சிற்பங்களில் உயிரோட்டத்தைக் காணலாம். இயக்க நிலையைக் காணலாம். முதன்முதலில் தமிழகத்தில் அரசர், அரசியரின் முழு உருவச் சிற்பங்கள் செதுக்கப்பட்டதும் இவர்கள் காலத்தில்தான்.

அவற்றில் மாமல்ல புரத்துச் சிற்பங்கள், காஞ்சிச் சிற்பங்கள், திருச்சி குடைவரைக் கோயிலில் அமைந்து உள்ள கங்காதர சிற்பம் காண்பதற்கு மிக அழகாகவும், சிறப்பான தாகவும் நேர்த்தியாகவும் அமைந்துள்ளன. அக்கால கட்டத்தில் பெண்கள் பணிவாக வாழ்ந்து உள்ளனர். அதே வேளையில் ஆண்களுக்கு நிகராக மதிக்கப்பட்டுள்ளனர். ஆனால் பெண்களின் குல முறையினால் உயர்வு தாழ்வு காட்டப்பட்டுள்ளது

சோழர் காலம்

சோழ மன்னர்களின்



சிற்பக் கலையை, முற் காலச் சோழர் சிற்பங்கள், பிற்காலச் சோழர் சிற்பங்கள் என வகைப் படுத்தலாம். பல்லவர்களின் சிற்பங் களின் வளர்ச்சியுள்ள நிலையே முற் காலச் சோழர் சிற்பங்கள் என்று கருதப் படுகின்றது. சோழ மன்னர்களின் சிற்பங்களில் உயிரோட்டத்தைக் காணலாம். உயரமான மகுடம், மெல்லிய நெடிய உடலமைப்பு, பட்டையான பூணூல் போன்றவை பின்பற்றப்பட்டன. ஆனால் சிறிது காலத்தில் இவ்வமைப்புகள் மறைந்தன. அப்போது பல புரிகளையுடைய பூணூல், தெளிவாகக் காட்டப்பட்டுள்ள சிம்ம முக அரைக் கச்சை, கண்டமாலை போன்றவற்றைக் காணலாம். இருப்பினும் இம்மாற்றங்கள் அனைத்துச் சிற்பங்களிலும் காணப்படவில்லை. பிற்காலச் சோழர்களது சிற்பங்களில் அணிகலன்களும், அலங்காரங்களும் சற்றுக் கூடின. உருவங்களின் முகங்கள் வட்டமான அமைப்பினதாயும், சற்றுத் தடித்தும், குறுகியதுமான உடலமைப்புக் கொண்டு விளங்கின. உருவமைதிகளின் தலைக்குப் பின் வைக்கப்படும் சிரசக்கரத்தில் தாமரை இதழ்கள் வட்டமான பகுதியினுள் அடங்கிக் காணப்படும்.

அரக்கரை அழிக்கத் தோன்றிய முற்காலச் சோழர்களில் முதல்வரான விஜயாலய சோழன் தஞ்சையில் நிகம்ப சூதனி தேவியைப் பிரதிஷ்டை செய்ததாகச் சொல்லப்படுகின்றது. இன்று வடபத்ரகாளி என வழங்கப்படும் இதனைப் போன்ற மற்றொன்றைத் தமிழகம் கண்டதில்லை என்று கருதப்படுகின்றது. (இரா. நாகசாமி, ஓவியப் பாவை) கம்பீரமான முகத் தோற் றத்துடனும், தலையில் தீச்சுடர் போன்ற கேச அமைப்பினைக் கொண்டும் கைகளில் ஆயுதங்கள் ஏந்தியும், கபால பூணூல் அணிந்தும், அரக்கர் குலத்தை அழிக்கத் தோன்றிய அன்னை ஆறடி உயரத் தேற்றப் பொலிவுடன் அமர்ந்துள்ளாள். அவளது காலடியில் அசுரன் சிக்கித் தவிக்கின்றான். ஒரு வேளை எதிரிகளை ஒழித்துச் சோழப் பேரரசை மீண்டும் உயிர்ப்பிக்க உதவியதற்காக அவ்வெற்றித் தெய்வத்தை இம்மன்னர் படைத்திட்டாரோ? எனத் தோன்றுகிறது. இது முற்காலச் சோழரின் முதற் சிற்பமாகத் திகழ்கின்றது.



சோழர் கால அரசவைப் பெண்டிர் உருவங்களும், கோயில் நற்பணிகளுக்குத் தொண்டு செய்தவர்களின் உருவங்களும் சிற்பமாகச் செதுக்கப்பட்டுள்ளன. அவை மென்மையான உடலும், நீண்டகரங்களும், ஒல்லியான இடைப்பகுதியும், கனத்த தனங்களும், உயர்வான அழகினைக் காட்டுவனவாக உள்ளன.

பிற்காலச் சோழர்களது கோயில்களில் குறிப் பிடத் தக்கனவாகத் தஞ்சை பெரிய கோயிலும், கங்கை கொண்ட சோழபுரம் கோயிலும், தாராசுரம் ஐராவ தேஸ்வரர் கோயிலும் குறிப்பிடத்தக்கவை.

பாண்டியர் காலம்:

முற்காலப் பாண்டியர்களின் சிற்பங்களில் நல்ல கம்பீரமான தோற்றம், அகன்ற மார்பு, பருத்த தோள், சிறுத்த இடை, மலர்ந்த முகம், உயர்ந்த மகுடம் போன்ற இயல்புகளைக் காண முடிகின்றது. அது போன்று பிற்காலப் பாண்டியர்களின் சிற்பக் கலையைத் தென் மாவட்டங்கள் தோறும் கண்களிக்கலாம்.

விஜயநகர - நாயக்கர் காலம்

விஜயநகர - நாயக்கர் காலச் சிற்பங்கள் பெரும் பாலும் புராணக் கதைகளையும், தொன்மைக் கதை களையும் விளக்குவனவாகவும், யாளிகளையும், குதிரைகளையும் கொண்டனவாகவும், மன்னர்கள்

கொடையளித்தோர் ஆகியோருடைய உருவங்களைக் காட்டு வனவாகவும் அமைந்தன. அவர்களது சிற்பங்களில் அன்றைய சமுதாயப் பழக்கவழக்கங்களையும் பண் பாட்டையும் காணமுடியும். வேட்டையாடுதல், குறவன் குறத்தி, நாட்டுப்புறக் கலைகளான கோலாட்டம், பாம்பாட்டி, நடனங்கள் போன்றவை சிற்பங்களில் வடிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். சில சிற்பத் தொகுதிகளில் இயற்கையாக அமைந்திருக்கும் சில பறவைகளையும், மிருகங்களையும் காணலாம்.

நாயக்கர் மண்டபங்களில் உள்ள சிற்பங்களில் ரதி-மன்மதன் சிற்பங்கள் அடுத்தடுத்த தூண்களிலோ அல்லது எதிரெதிர்த் தூண்களிலோ வைக்கப்பட்டுள்ளன. இது ஒரு பொது மரபாகவே அமைந்திருக்கின்றது. அச்சிற்பங்களின் உடலமைப்பில் கடுமையும், உணர்ச்சிகளைக் காட்டாத தன்மையும், கூர்மையான மூக்கும், அதிகமான ஆபரணங்களும் காண முடிகின்றது. அவர்களது கால்களில் முட்டியை ஒரு மூடிய தேங்காய் மூடி போன்றும் முட்டிக்குக் கீழுள்ள முழங்கால்களில் எலும்பு கூர்மையாகத் தெரியும்படியாக அமைக்கப்பட்டுள்ளன.



இவர்களது காலக் கோயில்களில் கைகளில் விளக்கேற்றிய பெண்களைக் காண முடிகின்றது. இவை தவிர தமிழகத்தில் விஜயநகர நாயக்கர் மன்னர்களால் திருப்பணி செய்யப்பட்ட பெரும் பான்மையான கோயில்களில் பாலினச் சிற்பங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சிற்பங்கள் உணர்த்தும் வாழ்வியல்:

ஒவ்வொரு காலத்திலும் செதுக்கப்பட்ட சிற்பங்கள் அக்காலத்தில் வாழ்ந்த மக்களை நினைவுபடுத்துகின்றன. அக்காலச் சூழலின் தன்மைகளை வெளிப்படுத்துகின்றன. காலந்தோறும் மனிதர்களின் உருவ அமைப்புகளை அறிந்துகொள்ள முடிகின்றது. அச்சிற்பங்களில் அமைந்துள்ள குறியீடுகள் மனித வாழ்வின் தத்துவத்தை வெளிப்படுத்துவனவாக உள்ளன. செதுக்கப்படும் சிற்பம் ஒவ்வொன்றிலும் ஒரு கலைஞனின் உள்ளுணர்வு வெளிப்படுகின்றது. சிற்பங்களின் கட்டமைப்பையும் அதற்குரிய உத்திகளையும் காணும் பொழுது அதன் உணர்வு நிலையை முதலில் கவனத்தில் கொள்ள வேண்டும். கண்ணுக்குப் புலனாகாத மனித உணர்வுகளை உள்ளத்திலே நிறுத்திச் சிற்பக் கலையைப் புரிந்து கொள்ள வேண்டும்.

கலையைப் பொறுத்தவரையில் எண்வகை உணர்வு நிலைகளைக் கருத்தில் உள்வாங்கிக் கொள்ள வேண்டும். இதனைப் பாவங்கள் அல்லது ரசங்கள் என அழைப்பர். சிற்ப சாஸ்திரத்தைப் பொறுத்த வரையில் இவை உளவியலானதொரு அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. பொதுவாக ஒரு மனித இனத்தின் பண்பாட்டினை அவ்வினத்தின் கலையமைப்பினைக் கொண்டு வரையறுக்க இயலும். அது போல் வரலாற்றைப் படைப்பதற்கும், கலையும், பண்பாடும் பெரிதும் உதவுகின்றன. இந்தியக் கலையானது பெரும்பாலும் அந்தந்தப் பகுதிகளின் சமுதாயப் பண்பாட்டின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளதைக் காண முடிகின்றது. ஆகவே, இறைவன் வழிபாட்டில் ஏதோ கடமையைச் செய்கிறோம் என்ற நிலை மாற வேண்டும். அச்சிற்பங்களின் உருவ அமைப்பையும் குறியீடுகளையும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

oOo

சைவ நன்னெறியில் மறுமலர்ச்சி



முனைவர் **மா. மீனாட்சிசுந்தரம்**
இணைப் பேராசிரியர், வேளாண்மைக் கல்லூரி,
தூத்துக்குடி.

உறவும் பொருளும் ஒண்போகமும் கல்வியும் கல்வியுற்ற துறவும் துறவுப் பயனும் காழியர்கோன் திருநாமங்களே'' என்று அருளாளர்களால் பாராட்டப் பெறுபவர் திருஞானசம்பந்தர். அளவிடற்கரிய காலங்கடந்த பெருமையுடைய சைவ நன்னெறியை மறுமலர்ச்சி இயக்கமாக மாற்றி, அதற்கு இயக்க வடிவம் கொடுத்து, செயற் படுத்திக் காட்டியும் தொண்டாற்றிய பெருந்தொண்டர். அவர் தலைமை பூண்டு நடத்திய சைவ மறுமலர்ச்சி இயக்கத்தில் வெளிப்பட அமைத்துக் காட்டியுள்ள கொள்கைகளை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

சைவ நெறி

சிவபிரானை முழுமுதற் பொருளாகக் கொண்டு திகழும் சமயநெறிக்குச் சைவசமயம் என்று பெயர். ''சைவம் சிவத்தோடு சம்பந்தமென்றான்'' என்பது ஆன்றோர் வாக்கு. சைவ சமயம் என்பதைச் சைவ நெறி அல்லது வாழ்க்கை நெறி என்று ஆன்றோர் கூறுவர். சைவ சமயத்தைப் பின்பற்றும் அருளாளர்கள் சைவர்கள் ஆவர். 'சைவ' என்னும் சொல் லானது 'சிவம்' எனும் சொல்லினின்று தோன்றியது. சிவம் என் றால் மங்கலமானது (auspicious) என்பது பொருள். சைவ சித்தாந்தம் என்பது முடிந்த முடிபினைக் குறிக்கும் (conclusion of conclusions or end of ends). சித்தாந்தம் என்பது சைவ சமயத் தத்துவக் கொள்கையாகும்.



முப்பொருள் நெறி

சைவ சித்தாந்தம் முப் பொருளை அடிப்படையாகக் கொண்டது. முப்பொருள், 'பதி, பசு, பாசம்' என்பன. பதியினைப் போற் பசு, பாசம், அனாதி, பதி பேரறிவுப் பொருள். பிறர் அறிவிக்க வேண்டாது. எல்லாவற்றையும் தானே அறியும். உயிர்கட்கு அறிவிக்கவும் வல்லது. 'பசுக்கள்' எனப்படும் உயிர்கள் அறிவித்தால் அறியும் தன்மையுடையன. தாவரம் முதல் தேவர் ஈறாக உள்ள எல்லா உயிர்களும் ஒருவன் அறிவித்தாலன்றித் தாமே அறியும் தன்மையுடையன அல்ல. உலகம் - அஃதாவது பஞ்சபூதம், அவற்றிற்குமேல் உள்ள தத்துவங்கள் அனைத்தும் சடம்-அறிவே இல்லாதது. அறிவித்தாலும் அறியமாட்டாதது. அதனால் அவைகளை இறைவன் உயிர்கட்குக் கருவியாகத் தந்துள்ளான். 'தத்துவம்' என்றால் 'கருவி' என்பதுதான் பொருள். உயிர்கள் இக்கருவிகளைக் கொண்டு அறிவைப் பெருக்கி, முடிவில் இறைவனை அடைந்து இன்புறும்.

கடவுளைக் காணலும், காட்டலும்:

தம்பியார் உளராக வேண்டும் என வைத்த தயை - திலகவதியார் மேற்கொண்ட தவமாகும். தயவு எவ்வாறு திருநாவுக்கரசரை உருவாக்கியதோ, அவ்வாறே, புனிதவதியார் எனப் பெறும் காரைக் காலம்மையாரை முன்னிட்டுக் கொண்டு திருஞான சம்பந்தரின் தொண்டு மனம் விரியத் தொடங்கியது.

''கீதம் முன்பாடும் அம்மை'' என்று குறிப்பிடப் பெறும் தெய்வச் சேக்கிழார் வாக்கினுக்கு ஒப்ப, திருப்பதிகம் இசையுடன் பாடி இறைவனை ஏத்தும் மர பினை முதன் முதலில், தொடங் கியவர் காரைக்காலம்மையாரே. அம்மையார் பாடிய திருவாலங் காட்டுத் திருப்பதிகமே தேவாரத் திருப்பதிகங்களுக் கெல்லாம் மூலமாய், முதலாய் அருளைப்பெற்ற திருப்பதி

கங்கள். அம்மையார் பாடிய பதிகங்களுக்குத் ''திரு வாலங்காட்டு மூத்த திருப்பதிகம்'' என்ற பெயர் உண்டு.

திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் இரண்டனுள் முதற்பதிகத்தின் இறுதியில்,

''.....காரைக்காற் பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே''

என்னும் இரண்டாம் பதிகத்தின் இறுதியில்,

''..... காரைக்காற் பேய் தன்
பாடல் பத்தும் பாடி ஆடப் பாவம் நாசமே''

என்றும், திருப்பதிகப் பயன் கூறிமுடித்த தன்மை போலவே திருஞானசம்பந்தரும் திருப்பதிகப் பயன் கூறித் திருக்கடைக் காப்புச் செய்யும் மரபு முறையைப் பின்பற்றுகிறார்.

அடுத்துக் காரைக்காலம்மையார் காலத்தே அமைந்த சில இடர்ப்பாடுகள் அவர்தம் பாக்களின் மூலம் வெளிப்படக் காணலாம். அவற்றுள் சில முக்கியமானவை.

1. இறைவனுக்குத் தன்னை ஆளாக ஆக்கிக் கொண்டது உண்மை. ஆளானோம் அல்லல் அறிய முறையிட்டால் கேளாதது என் கொலோ எனக் கேட்டு, பின்னரும் சொல்கிறார்.

''இடர் களையாரேனும் எமக்கு இரங்காரேனும் படரும் நெறி பணியாரேனும்''

என்று மூவகைக் குறைகளையும் எடுத்துக்காட்டித் தமக்கு அவரை அடையக் கூடிய வழியையும் தெளிவு படக் கூறி அருளவில்லை என்று குறிப்பிட்டுவிட்டு, ஆயினும் என் நெஞ்சு அவர்க்கு அன்பு அறாது என்று குறிப்பிட்டார்.

2. இறைவன் திருவுருவம் பலவாறு பேசப்படு கின்றது. பல வரலாறுகள் அவனைப் பற்றிப் பேசுகின்றன. இவற்றில் எது ஒவ்வும், எது ஒவ்வாது என யான் அறிவேன். ஆனால் அனை வரும் அவன் உருவம், வரலாறுகள் ஆகியவை பற்றி ஒவ்வாமையுண்டு என்று இழித்துப் பேசுகின்றனர்.

நீ அவன் அடிமையல்லவா? விளக்கம் கூறு எனக் கேட்டுப் பழித்துரைக்கின்றனர். பிற சமயத்தவர் கூறும் பழிப்புரைகளை என்னால் கேட்டுக் கொண்டு வாழ இயலவில்லை என்று வருந்துகிறார்.

3. யான் அடிமை என்பது உண்மைதான். ஆளாகக் கொண்ட ஆண்டவனின் உருவத்தை எனக்குக் காட்டினால் என்ன குறை? அன்றும் திருவுருவம் காணாதே ஆட்பட்டேன்; இன்றும் திருவுருவங் காண்கிலேன்; உன்னை ஆளாகக் கொண்ட ஆண்டவனின் உருவம்தான் ஏது? என்று வினாவுவாருக்கு என்ன பதில் சொல்வேன் என்று வருந்துகின்றார்.

காரைக்காலம்மையாரின் காலச் சூழலை உன்னும் போது சைவ சமயத்துக் கடவுளின் உருவம், கடவுள் பற்றிய பல வரலாறுகள் பழித்துரைக்கப் பெறும் இழி நிலை, சைவ சமயத்து அடியவர்களுக்கு அவ்வினாக் களுக்கெல்லாம் விளக்கம் கூற இயலாதநிலை, புறச் சமயத்தவர்கள் நூலறிவு ஒன்று மட்டுமே கொண்டு, நுழைபுலமும் நுட்ப அறிவும் கொண்டு சிந்திக்காமல் பேசுகின்றவர்களாகவே காணப்பெறுகின்றனர். இந் நிலையில் சைவ சமயம் ஏச்சுக்கும் பேச்சுக்கும் இழிவுக்கும் இலக்காயினமை கண்டு வருந்தி உரைக் கின்ற அமைப்பை நாம் காண முடிகின்றது.

இறைவன் தானே வலிய வந்தருளுதல்:

''இடர் களையாரேனும் எமக்கிரங்காரேனும் படரும் நெறிபணியாரேனும்'' என்று அம்மையார் வருந்திய வருத்தத்துக்கு மாறாக, திருஞான சம்பந்தப் பெருமான் திருக்கைகள் தாளமிடுங்கால் வருந்துமே யென்று உலகவர் காணப் பொற்றாளம் வழங்கியதும், அவர்தம் சீரடிகள் வருந்துமேயென்று முத்துச் சிவிகையைத் தாமே வலிய வந்து அளித்ததும் ஆகிய செயற்பாடுகளை ஞானசம்பந்தர், சிவபரம் பொருள் மூலம் செய்யுமாறு அமைத்ததன் நோக்கம் உயிர்கள் பொருந்தாமே இரக்கங் கொண்டு அனைத்தையும் அளிப்பவன் சிவன் என்ற கருத்தைப் புறச்சமயத்தவரும் உணருமாறு செய்தல் என்பதே.

பெண்ணினல்லாளொடு கூடிய பெருந்தகையாய் அவனே வந்து ஆளாகக் கொண்டான்;

காரைக்காலம்மையாரிடம் பலரும் எடுத்து வீசிய வினாவானது இறைவன் திருவுருவம் பற்றியது. அதனை விளக்கும் போக்கில் ''பெண்ணின் நல்லா ளோடும் பெருந்தகை இருந்தது'' எனக் கூறி அப்பரம் பொருள் உயிர்களாகிய நம்மை ஆளாகக் கொள்ள வரும் அருட்செயலில் பல்வேறு வடிவங்களை மேற்கொள்கிறது என்றும், இறைவன் உயிர்களை நோக்கி வரும் நெறியே சைவ சமய நெறி என்றும் உயிர்கள் இறைவனை நோக்கிச் சென்று அடைய வேண்டும் என்பதை வலியுறுத்துவது சைவ சமய நெறி அன்று என்றும் எடுத்துக்காட்டி சைவசமயத்தில் ஒருவகை மறுமலர்ச்சியைத் தோற்றுவித்த பெருந் தகையராகத் தம்மை அமைத்துக் கொண்டு விளக்கம் கூறுவதை முதற்பதிகத்திலேயே காணமுடிகிறது○○○

சிவயோகத்தின் தற்போதைய அறங்காவலர் சபை உறுப்பினர்கள்



திரு. **நாகேந்திரம் சீவரத்தினம்**
ஆலய நிர்வாகி, தலைவர்



திரு. **நிமலன் சீவரத்தினம்**
செயலாளர்



கலாநிதி **ஜெயகாந்தன் சரவணமுத்து**
பொருளாளர்



உப செயலாளர்
திரு. **கணபதிச்சாமி ஐயர்**
சிவசண்முகக் குருக்கள்



திரு. **நா. கருணாநிதி**
ஆரம்ப கால அறங்காவலரும்
தற்போதைய நிர்வாகியும்



உப தலைவர்
திரு. **தியாகராய**
கனகசபேசக் குருக்கள்



திருமூலர் திருமந்திரம்

முனைவர் அரங்க. இராமலிங்கம்
தமிழ்ப் பேராசிரியர்
சென்னைப் பல்கலைக் கழகம்

வடலூர் வள்ளற்பிரானாகிய இராமலிங்க அடிகளார் தம் இரு கண்மணிகளாக ஏற்றுப்போற்றிய நூல்கள் இரண்டு. ஒன்று தோத்திர நூலாக ஏற்றிப் போற்றிய திருவாசகம். பிறிதொன்று சாத்திரநூலாகப் பயிற்சியில் அனுபவித்த திருமந்திரம். தமிழ் இலக்கியங்களில் தனித்த நிலையில் வைத்துப் போற்றிப் பாதுகாக்கப்படவேண்டிய மந்திர நூல் திருமந்திரம். தமிழிலக்கிய வரலாற்றில் பல செய்திகளைத் திருமூலர் மட்டுமே பதிவு செய்திருக்கிறார். திருமூலர் வரலாறு பற்றியும் அவர் திருமந்திரம் பற்றியும் என இரு நிலைகளில் இக்கட்டுரையைக் காண்போம்.

வரலாறு

சிவபெருமான் வீற்றிருக்கும் கயிலை மலையின் காவலராக விளங்கும் நந்தியம்பெருமானின் திருவருள் உபதேசத்தைப் பெற்ற சிவயோகி ஒருவர் இருந்தார். இவர் அணிமா முதலான எட்டுவகைச் சித்திகளும் கைவரப் பெற்றவர். தமிழ்வல்ல அகத்திய முனிவரிடம் நட்புமிக உடையவராயிருந்ததனால் சிலநாள் தங்கி இருப்பதற்காகப் பொதிகைமலை சேர்தற்பொருட்டுத் தமிழ்நாட்டிற்கு வருகிறார். கயிலை மலையில் இருந்து புறப்பட்ட இவர் 1. கேதாரம், 2. பசுபதி (நேபாளம்), 3. காசி (வாரணாசி), 4. திருப்பருப்பதம் (ஸ்ரீசைலம்), 5. திருக்காளத்தி, 6. திருவாலங்காடு, 7. காஞ்சிபுரம், 8. திருவதிகை வீரட்டானம் (கடலூர் மாவட்டம் பண்ருட்டிக்கருகில் உள்ளது), 9. பெரும்பற்றப் புலியூர் என்றும் தில்லை என்றும் வழங்கப்படும் சிதம்பரம், 10. திருவாவடுதுறை ஆகிய தலங்களில் தங்கி வழிபாடு செய்தார்.

திருவாவடுதுறைக்கு அருகிலுள்ள அந்தணர்கள் மிகுதியாக உள்ள சாத்தனூரில் பசுக்களை மேய்த்துக் கொண்டிருந்த மூலன் எனும் இடையன் வினைப்பயனால் இறந்துபட அவனுடலைச் சுற்றிப் பசுக்கள் கதறிக் கொண்டு நிற்கின்றன. இதனைக் கண்டு இரக்கப்பட்ட சிவயோகி மூலன் உடம்பில் தம் உயிர்ப்பைப் பாய்ச்சினார். உயிர்த்தெழுந்த மூலன் திருமூலராக நிலைபெறுகிறார். சிவயோகியார் தாம் வந்த பணிக்குச் சென்றிட ஞான முற்றுணர்வு எய்திடப் பெற்ற மூலன் திருமூலராகிறார். திருமூலர் மூலனின் மனைவிக்கும் சுற்றத்தாருக்கும் உண்மையை உணர்த்திவிட்டுத் திருவாவடுதுறை செல்கிறார்.

முற்றுணர்வு கூடிய இந்த மெய்ஞ்ஞானம் தமக்குக் கிடைத்ததை ஆராய்ந்தார் திருமூலர். சிவபிரானின் அருளாலே தோன்றிய சிவாகமங்களின் பொருளை மண் உலகில் தம் திருவாக்கினால் தமிழில் எழுதுவதற்காகத் திருவருளே இச்செயலைச் செய்தது என உணர்கிறார்.

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே.

எனத் திருமூலரே கூறியிருக்கிறார்.

திருவாவடுதுறைக் கோயிலின் மேற்குப் பக்கத்தில் அமைந்திருந்த உயர்ந்த அரசமரத்தின் கீழ் சிவராசயோகத்தில் அமர்ந்து தம்முடைய உள்ளக் கமலத்தில் உறைந்தொளிரும் பொருளோடு உணர்ந்து ஒன்றினார். தாமரைப் பூவைப் போல மலர்ந்து அறிவு மணம் வீசும் இதய கமலத்தில் உறைந்திருக்கும் மெய்ப்பொருளோடு இணைந்து உலகம் உய்வதற்காகச் சரியை-கிரியை-யோகம்-ஞானம் ஆகிய நான்கு நெறிகளையும் விரித்து ஆண்டுக்கு ஒன்றாய்ப் பாடி முடித்தார். 'ஒன்று அவன் தானே' என முதல் பாட்டை எடுத்துப் பாடினார். இந்த வகையில் மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்திருந்து மூவாயிரம் பாடல்களை மண்மீது பாடி அருளினார். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு நெறிகளையும் விரிவாகப் பேசிய திருமூல நாயனாரின் திருவடிகளை வணங்கி, திருமூல நாயனார் புராணத்தை நிறைவு செய்கிறார் சேக்கிழார். இதுவரை பெரியபுராணத்தில் தெய்வச் சேக்கிழாரால் சொல்லப்பட்ட திருமூலர் வரலாறு கூறப்பட்டது. இனி, திருமூலர் வரலாற்றில் பொதிந்துள்ள உண்மைகளைக் காண்போம்.

தில்லை (சிதம்பரம்)

தில்லை, சிற்றம்பலம், பொன்னம்பலம் எனப்படும் சிதம்பரத்தில் மட்டும் சிவயோகியார் உருகி, உருகி நிற்கிறார். பேரின்பப் பெரும்பொருள் அந்த இடத்தில்தான் ஆனந்தத் தாண்டவம் ஆடுகிறது. உலகமும் உலக உயிர்களும் உய்யும்படியாகத் தன்னுடைய ஞானமாகிய தூக்கிய திருவடியை உடைய சிவபெருமான் முன், சிவயோகியார் மிக்க அன்போடும்

மிக்கெழும் மகிழ்ச்சியோடும் நின்று உருகி வழிபட்டார். மெய்யுணர்வு மிக்குச் சிவபோக நிலையில் திளைத்துச் சிவானந்த அருட்கூத்தை முழுதும் கண்டு பதி ஞானத்தில் ஒன்றினார். உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து ஆராக் காதலுடன் தில்லையில் வழிபட்டார். இதனை,

எவ் உலகும் உய்ய எடுத்து அருளிய சேவடியாரைச்
செவ்வியஅன்பு உறவணங்கிச் சிந்தை களிவரத்
திளைத்து
வவ்விய மெய் உணர்வின்கண் வரும் ஆனந்தக்
கூத்தை
அவ் இயல்பில் கும்பிட்டு அங்கு ஆராமை
அமர்ந்திருந்தார். (பா. 7)

எனத் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுவதிலிருந்து மேற்சுட்டிய உண்மையை உணரலாம். நந்தியம்பெருமானுக்கு உபதேசம் செய்தருளிய பெரிய மெய்ஞ்ஞானக் கூத்தர் திருச்சிற்றம்பலத்தில் ஞானக்கூத்து ஆடிக்கொண்டே இருப்பதால், சிவயோகியார் தன்னை மறந்து தன் நாமம் கெட்டு நின்றார் என்பதே உண்மை.

பிறவித் தொடர்பை நச்சுத் தொடர்பு (விஷத் தொடர்பு) எனக் கூறுகிறார் தெய்வச் சேக்கிழார். திருமூலர் இந்தப் பிறவி வேரை அறுப்பதற்காகச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கையும் ஆண்டுக்கு ஒன்றாக இறையருளால் வழங்கினார். இதனை,

ஊன் உடம்பில் பிறவிவிடம் தீர்ந்து உலகத்தோர்
உய்ய
ஞானம் முதல் நான்கும் அலர் நல் திரு மந்திர
மாலை
பான்மை முறை ஓராண்டுக்கு ஒன்று ஆகப்
பரம்பொருள் ஆம்
ஏன எயிறு அணிந்தாரை ஒன்று 'அவன் தான்' என
எடுத்து. (பா.26)

என்னும் பாடல் **வழி அறியலாம். இப்**பாடலில் நான்கு உண்மைகள் **பொதிந்துள்ளன.**

அ. பிறவிப் பிணியாகிய பிறவித் தொடரை நச்சுத் தொடர், விஷத் தொடர் எனக் குறிப்பிடுகிறார். இதனால்தான் இந்த விஷத் தொடர்புள்ள மூலனை அந்த விஷத் தொடர்பை அறுத்துப் பிறவா யாக்கைப் பெரியோனாகக் கயிலையில் இருந்து வந்த சிவயோகி மாற்றினார். இரசவாதம் எனும் கூடுவிட்டுக் கூடு பாய்தல் நிகழ்ந்த பின்னர் மூலன் திருமூலர் ஆகிறார்.

ஆ. உலகில் தோன்றிய எல்லாச் சமயங்களும் தம்முடைய ஞானம் முழுமையையும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு பிரிவுகளுக்குள் அடக்கிவிடும். இஸ்லாம் இதனை ஷரீகத், தரீக்கத், ஹரீக்கத், மஃரீபத் எனக் கூறும். திருமூலர் பிரான் அருளிய திருமந்திர மாலையில் உள்ள மூவாயிரம் பாடல்களும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறிகளுக்குள் அடங்கிவிடும்.

இ. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற இந்த நான்கையும் ஆண்டுக்கு ஒன்றாகப் பாடினார் என்று தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுவதால், நான்காண்டுகளில் திருமந்திர மாலை முழுமையும் பாடி முடித்து விட்டார் எனலாம். எனவே, முதலாமாண்டு சரியை, இரண்டாமாண்டு கிரியை, மூன்றாமாண்டு யோகம், நான்காமாண்டு ஞானம் என்று நான்கு ஆண்டுகளில் திருமந்திர மாலை என்ற நூலின் மூவாயிரம் பாடல்களையும் திருமூலர் பாடி முடித்துவிட்டார் என்றே தெய்வச் சேக்கிழாரின் திருப்பாடல் உணர்த்துகிறது. ஓராண்டிற்கு ஒரு பாடல் என மூவாயிரம் ஆண்டுகள் வாழ்ந்து மூவாயிரம் பாடல்களைப் பாடினார் எனக் கூறுதல் பொருந்தாமை என்பதை அறிவுடையோர் அறிவர்.

ஈ. 'ஒன்று அவன் தானே' என்ற பாடல் திருமந்திரத்தின் முதல் பாடல் என்றும் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடுகிறார்.

நலஞ்சிறந்த ஞானயோ சுக்கிரியா
சரியையெலாம்
மலர்ந்தமொழித் திருமூல தேவர்மலர்க்
கழல்வணங்கி
அலர்ந்தபுகழ்த் திருவாரூர் அமணர்கலக்
கங்கண்ட
தலங்குலவு விறல்தண்டி அடிகள்திறஞ்
சாற்றுவாம். (பா. 28)

உயிர்களுக்கு நன்மையளிக்கக் கூடிய ஞானம், யோகம், கிரியை, சரியை என்ற நான்கையும் திருமூலர்பிரான் வழங்கினார் என மீண்டும் ஒருமுறை நிறைவாகத் தெய்வச் சேக்கிழார் சொல்லுகிறார்.

மூவாயிரம் ஆண்டுகள் திருமூலர்பிரான் இம்மண்மேல் வாழ்ந்திருந்தார் என்கிறார் தெய்வச் சேக்கிழார். இதன் பொருள் திருமூலரின் பாடல்களில் உணர்த்தப் பெற்றுள்ள திருமந்திரப் பொருள் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மேலும் இம்மண்ணுலகில் நிலைத்து வாழும் என்பதே. இப்படிப் பொருள் கொள்வதே அறிவுடைமை. பொருள் உணர்ந்தவர்களுக்குப் பொருளின் பொருள் தெரியும்.

நிறைவாக...

கயிலையிலிருந்து வந்த சிவயோகியாரின் பெயரை ஓரிடத்திலேனும் தெய்வச் சேக்கிழார் குறிப்பிடவில்லை. பசுக்களை மேய்த்த மூலனின் உடம்பில் சிவ யோகியார் தம் உயிராற்றலைச் செலுத்திய பிறகு மூலனே திருமூலராக மாறுகிறார். மூலனாக இருந்து திருமூலராக

ஆனவர்தாம் திருமந்திர மாலையை அருளியவர். கயிலையில் இருந்து வந்த சிவயோகி அல்லர். திருமந்திரத்தை அருளியவர் திருவாவடுதுறைக்கு அருகிலுள்ள சாத்தனூரில் பிறந்தவர். சிவயோகியார் அருளால் ஞானம் பெற்றவர்.

1. தெய்வச் சேக்கிழார் சொல்லாத ஒரு செய்தி திருமூலர் பிரான் எங்கே அடக்கமாகி (ஜீவ சமாதி) இருக்கிறார் என்பது. சைவ மரபில் வரும் சான்றோர்கள் திருமூலர் திருவாவடுதுறைக் கோயிலுக்குள்ளே அடக்கமாகி இருக்கிறார் எனக் கருதி அங்குள்ள அவரது திருக்கோயிலில் வழிபாடு செய்து வருகின்றனர்.

2. சித்தர் மரபில் வருகிறவர்களும் மெய்ப் பொருளைக் கண்ணாரக் கண்டவர்களும் திருமூலர் பிரான் தில்லை என்று வழங்குகிற சிதம்பரத்தில் அடக்கமாகி இருக்கிறார் என உணர்ந்துரைக்கிறார்கள். இன்றும் நிறைமதி நாளில் (பௌர்ணமி) சித்தர் நெறியில் வாழ்கின்றவர்களும் மெய்ஞ்ஞானத் தேட்டம் உள்ளவர்களும் சிதம்பரத்தில் உள்ள ஆதி மூல நாதர் சந்நிதியில் தியானம் செய்வதைக் காணலாம்.

அவரவர் விதிவழி அடைய நின்றனரே என்ற நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கேற்ப அவரவர்க்குரிய இடத்திற்குச் சென்று திருமூல நாயனாரின் திருவருளைப் பெற்று உய்தி பெறுக! உணர்வு பெறுக!! உயிர்ப்பு எய்துக!!!

திருமந்திரம் 3047 + 61 = 3108 பாடல்கள்

திருமூலர் பிரான் அருளிச்செய்தவை மூவாயிரம் பாடல்கள் எனத் திருமந்திரப் பாடல் குறிப்பிடுகிறது. ஆனால் அச்சிட்டு வெளிவந்துள்ள நூல்களில் 3047 பாடல்கள் உள்ளன. கிடைத்துள்ள 61 மிகைப்பாடல்களையும் சேர்த்து 3108 பாடல்கள் சில பதிப்புகளில் உள்ளன. சில பாடல்கள் இரண்டுமுறை வருவதால் பதிப்பிற்குப் பதிப்புப் பாடல்களில் எண்ணிக்கை வேறுபடுகின்றது. திருமந்திரம் 1000 என்ற மருத்துவ நூலும் வெளிவந்துள்ளது. திருமூலர் 300 மந்திரப் பாடல்களை அருளியதாகவும் அறியமுடிகிறது. அவை எவை என்பது பற்றி அறியமுடியவில்லை. ஆனால் அனைத்தும் ஒரே பொருளைக் குறிப்பன என்பது திண்ணம்.

மூலன் உரைசெய்த மூவா யிரந்தமிழ்
மூலன் உரைசெய்த முந்நூறு மந்திரம்
மூலன் உரைசெய்த முப்பது உபதேசம்
மூலன் உரைசெய்த மூன்றும் ஒன்றாமே.

(திரும. 3046)

என்னும் திருமந்திரப் பாடல் திருமூலர்பிரான் அருளியதா அல்லது வேறொருவர் அருளியதா என்பதை அறிய முடியவில்லை. இறுதியாகத் திருமூலர் தம்குருபிரானுக்கு வணக்கம் கூறி வாழ்த்துரைக்கின்றார்.

வாழ்கவே வாழ்கஎன் நந்தி திருவடி
வாழ்கவே வாழ்க மலமறுத் தான்பதம்.
வாழ்கவே வாழ்கமெய்ஞ் ஞானத் தவன்தாள்
வாழ்கவே வாழ்க மலமிலான் பாதமே,. (திரு. 3047)

எனத் தம்முடைய குருவின் திருவடி, பதம், தாள், பாதம் ஆகியவற்றைக் குறிப்பிட்டு வாழ்த்தி வணங்குகின்றார். திருவடி, தாள், பாதம், நற்றாள், மலரடி, அடி எனக்குறிக்கப் பெறுபவை அனைத்தும் அறிவு வடிவாகவும், சோதியாகவும் நம் ஊனுடம்பிற்குள்ளே - இதய கமலத்துள் ஒளிரும் மெய்ப்பொருளைக் குறிக்கப் பயன்படுத்தப் பெற்ற சொற்கள். ஒரு பொருளைக் குறிக்க வந்த பல சொற்கள். சிவமே குருவடிவாக வந்து ஞானத்தை அருளுவதால் இவ்வாழ்த்து சிவத்திற்கும் கூறப்பட்டதாகக் கொள்ளுதல் பொருந்தும். ஒன்பது தந்திரங்களில், இருநூற்று முப்பத்திரண்டு (232) அதிகாரங்களில் 3047 (அ) 3108 பாடல்களைக் கொண்டு இந்நூல் திகழ்கிறது. சைவத் திருமுறையில் பத்தாம் திருமுறையாக இந்நூல் சேர்க்கப் பெற்றுள்ளது.

திருமந்திரம் ஓர் அனுபவ நூல். முயற்சியோடு கூடிய பயிற்சியால் பெறும் அனுபவ அறிவால் உணரக்கூடிய நூலாகத் திருமந்திரம் திகழ்கிறது. திருமந்திரத்தில் உள்ள மூவாயிரத்து நாற்பத்தேழு பாடல்களும் திருமூலரின் அனுபவ வெளிப்பாடாகும். இந்நூலை ஒவ்வொருவரும் அவரவர் அனுபவத்திற்கேற்ப அறிந்து கொண்டு வருகின்றனர். இந்நூலைப் பக்தி நூல் என்றும், சாத்திர நூல் என்றும், வேதாந்த நூல் என்றும், தாந்திரிக நூல் என்றும், ஞான நூல் என்றும் அவரவர் உணர்திறனுக்கேற்ப உரைத்து வருகின்றனர். இதனைத் தனித்தமிழ் ஆகமம் என்றும் கூறுவர். அறிஞர்கள் பலர் திருமந்திரத்தை வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூலாக உணர்ந்து உரைத்து இருக்கின்றார்கள். ஞான நூலாகவும் யோக நூலாகவும் போற்றப்பெறும் திருமந்திரத்தினை வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூலாக உணர்ந்து போற்றினால் பயன் பெறலாம்.

மந்திரம் என்பதற்கு நினைப்பவரைக் காப்பது என்பது பொருள். திருமந்திரப் பொருளை ஒருவர் நினைவில் ஒட்ட வைத்துக் கொண்டால் அவரை வாழ்நாள் முழுமையும் காக்கவல்லது திருமந்திரம். திருமந்திரத்தில் உபதேசம் எனும் தலைப்பில் தரப்பெற்றுள்ள முப்பது பாடல்களின் விளக்கமாகவே ஏனைய மூவாயிரம் பாடல்களும் அமைந்துள்ளன. முதல் தந்திரத்தில் உள்ள உபதேசப் பகுதியிலுள்ள 30 பாடல்களை ஒருவர் ஊன்றிப் படித்து உணர்ந்து தெளிந்தால் அவரே மந்திரமாகி (ஒளியாகி) விடுவார். ○○○

கிழக்கில் உதித்த அறிவொளி தவத்திரு விபுலானந்த அடிகள்



எம். கௌரிமலர்
விபுலானந்த அழகியல் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், மட்டக்களப்பு,
இலங்கை

இலங்கையின் கிழக்குக் கரையில் அமைந்த காரை தீவு என்னும் ஊரில் சாமித்தம்பி, கண்ணம்மை தம்பதியினருக்கு, 1992ஆம் ஆண்டு வைகாசி மாதம் 3ஆம் திகதி அன்று அவதரித்த குழந்தையே தவத்திரு விபுலானந்த அடிகள். இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் தம்பிப்பிள்ளை. குழந்தை நோயுற்றபோது தாய், தந்தையார், கதிர்காமம் சென்று முருகனை வேண்டினர். நோய் நீங்க, கதிர்காமக் கந்தன் மேல் கொண்ட பக்தியால் முருகனுக்குக் காணிக்கை செலுத்தி, குழந்தையின் பெயரையும் மயில்வாகனன் என்றும் மாற்றிக் கொண்டனர். நோய் நீங்கிய மயில்வாகனனார் சிறப்புடன் வளர்ந்து வந்தார்.

கிழக்கிலங்கை, தமிழ் கூறும் நல் உலகிற்கு வழங்கிய ஒப்பில்லா நிதியம் சுவாமி விபுலானந்தர். ''மக்கள் சேவையே மகேசன் சேவை'' என்னும் பரந்த நோக்குடன் தனக்கென வாழாது பிறர்க்கென வாழ்ந்த பெருந்தகை சுவாமிகள். பிறந்த நாட்டிற்கும், பிறந்த மண்ணான மட்டுநகருக்கும் மங்காப்புகழ் சேர்த்தவர். இல்வாழ்வைத் துறந்து, தமிழ்மொழிப் பற்றினைக் கொண்டும், சமய சமூகத் தொண்டினையும் செய்து அத்துறைகளில் வரலாற்றுப் பெருமை கொண்ட சாதனைகள் படைத்தவர். இதனால் முத்தமிழ் வித்தகர், முத்தமிழ் முனிவர், ஈழம் கண்டபெரும் துறவி, இராமகிருஷ்ண இயக்கச் செம்மல் என்றெல்லாம் அழைக்கப்பட்டார்.

விபுலானந்த அடிகள் தாம் பிறந்த மட்டு நகரைப் பற்றிக் கூறுகையில்

''ஆசிரியர் போற்றும் அணிசால் இலங்கையிலே
சீரார் குணதிசையைச் சேர்ந்து வளர் புகழும்
ஏரால் இயன்ற செந்நெல் இன்சுவைத்
தீங்கன்னலொடு
தெங்கின் இளநீரும் தீம்பலவினள்ளமிர்தும்
எங்கும் குறையா இயலுடைய நன்னாடு
மட்டக்களப்பெனும் மாநாடந்.....''

என்று போற்றிக் கூறுகின்றார்.

தமிழ்ப் பண்பாட்டு வளமான வாழ்க்கை:

மட்டக்களப்புமாநாட்டின் ஆட்சி நிர்வாகப்



பட்டினமாகவும், கிழக்கிலங்கையின் தலைநகராகவும் விளங்குவது மட்டக்களப்பு ஆகும். இப்பட்டினம் ''புளியந்தீவு'' என அழைக்கப்படுகிறது. மட்டுநகரில் முப்பது மைல் நீளமான வாவி உள்ளது. இது கடலோடு கலக்கும் வடபாகம், அமிர்தகழி எனும் மாமாங்கப் பதிக்கு அண்மையது. அழகிய தென் பகுதிக்கு அண்மையில் மேற்குப் பாகம் மண்டூர் முருகன் பதி அமைந்துள்ளது. வாவியின் மேற்குக் கரையோரம் முழுவதும் மருதத்தன் பனையாகும். கிழக்குக்கரை ஊர்களில் தெங்கு, மா, பலா, வாழை, முந்திரிகை முதலிய மரங்கள் செறிந்து கண்ணிற்கும், மனத்திற்கும் உவகை தருகின்றன. மேலும் மட்டுநகர் வயலும் வயல் சார்ந்த இடமான மருதநிலப் பண்பு கொண்ட மிக்க இயற்கை அழகும், வளமும் செறிந்த நிலமைகளைக் கொண்டு அமைந்துள்ளது. மட்டுநகர் மக்களின் பேச்சில்

செந்தமிழ் சொல் வளமும், வாழ்வினில் தமிழ்ப்பண்பாட்டு வளமும் பின்னிப் பிணைந்துள்ளது. நாட்டுப் பாடல், நாட்டுக் கூத்து, அம்மானை, வசந்தன், அம்மன்குழுத்தி என்னும் தீந் தமிழ்க் கலைகள் நிறைந்துள்ளன.

சுவாமிகள் ஆரம்பக் கல்வியைத் தம் கிராமத்தில் கற்றார். பின் கல்முனை ஆங்கிலப் பாடசாலையிலும், உயர் கல்வியை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி யிலும் கற்றார். 1908 இல் கேம்ரிஜ் சீனியர் பரீட்சையில் முதலாவதாகச் சித்தியடைந்தார். இவ்வேளை கல்லூரியின் ஆசிரியரானார். பின் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியை முடித்தார். விஞ்ஞானத்தில் விருப்புக் கொண்ட இவர், கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரியில் பயின்று விஞ்ஞான டிப்ளோமா பட்டம் பெற்றார். இவ்வேளை மதுரை தமிழ்ச்சங்கப் பண்டித பரீட்சையில் சித்தி பெற்று, பண்டிதர் மயில்வாகன னானார், 1917 கொழும்பு தொழில்நுட்பக் கல்லூரி வேதநூல் ஆசிரியரானார். பின் சம்பந்தரிசியார் கல்லூரி விஞ்ஞான போதனாசிரியராய்க் கடமையாற்றினார். இவ்வேளையில் இலண்டன் பிளஸ்சி பரீட்சையில் சித்தியடைந்தார்.

1920 இல் யாழ் சைவப் பெரியார்கள் வேண்ட, மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபரானார். இவ் வேளை யோகசுவாமிகளுடன் தொடர்பு ஏற்பட்டது. இளமையிலேயே வாழ்க்கையின் ஆதார ஸ்ருதி ஆன்மிகம்தான் எனத் தெரிந்து கொண்டார். அதிபர் பதவியைத் துறந்து, உலக



இன்பத்தை வெறுத்து, 1922 இல் சென்னை மயிலாப்பூர் இராமகிருஷ்ண மடத்தில் சேர்ந்தார். 1923 பிரம்மானந்த மகராஜிடம் பிரம்மச் சரிய தீட்சை பெற்று ''பிரபோத சைதனியர்'' ஆனார். பின் துறவறப் பயிற்சிபெற்று, 1924 சித்திரை பௌர்ணமி நாளில் சுவாமி சிவானந்தரிடம் சன்னியாச தீட்சை பெற்று, ''சுவாமி விபுலானந்தர்'' என்னும் துறவுப் பெயர் பெற்றார்

இலங்கை அன்னியராட்சியின்போது, அம்மத குருமாரால் பாடசாலைகள், தேவாலயங்கள் நிறுவப் பட்டு, கிறித்தவ கல்வி முறை மூலம், பல வகைகளிலும் சைவ மதத்தினர் மும்முரமாக, மதமாற்றம் செய்யப்பட்டனர். இதனால் இலங்கை மக்களின் பழைமையான சைவ மதம், கலை, கலாச்சாரப் பண்புகள் தாழ்வடைந்தன. கிருத்தவ மதம், கலை, கலாச்சாரம் மேலோங்கின. இச் சூழ்நிலையில் தாழ்ந்திருந்த தமிழ் மக்களை உயர்வுறச் செய்யவும், மதிப்பிழந்த தமிழ்மொழி, தமிழரின் கலை, கலாச்சாரத்தை உலகத்தவர் போற்றிடச் செய்யவும், தாழ் நிலையில் இருந்த மக்களை, எழுச்சியுறச் செய்யவுமென விபுலானந்த அடிகள் சேவையாற்றத் தொடங்கினார். இக்காலத்தில் தம் பாரம்பரிய அருமை அறியாமல், அறிவு குன்றி இலட்சியமற்று, வாழ்ந்த மக்களை அடிகளார் தனது சிறந்த உரைகளின் மூலமும், சமயச் சொற்பொழிவுகள் மூலமும் விழிப்படையச் செய்து, நல் உணர்ச்சி மிக்க, வீரியமுள்ள சமுதாயமாக மாற்றி யமைத்தார். **இதனால் அடிகள் புது யுகத்தின் வீடி வெள்ளி, பழைமையின் பிரதிநிதி. புதுமையின் நிறைமதி எனவும் அழைக்கப்பட்டார்.**

மறுமலர்ச்சிக்கு வித்திட்ட அடிகளார்:

விபுலானந்த அடிகளின் சீடரான சுவாமி நடராஜானந்தர் கூறுகையில்- தமிழ் நாட்டில் ஒரு பாரதியைப் போல், வட இந்தியாவில் விவேகானந் தரைப் போல் நம் ஈழநாட்டில், அதிலும் சிறப்பாய் கிழக்கிலங்கையில், ஒரு சமுதாயப் புரட்சியை ஏற்படுத்தியவர் சுவாமி விபுலானந்தர் என்றார். சமயத்தை அடிப்படையாகக் கொண்ட உயர் கல்வியின் மூலம் தேசிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர். இலங்கையில் ஒரு வீறுகொண்ட சமுதாயத்தை உருவாக்க, தம் அறிவு, ஆற்றல், அருட்சக்தி அனைத் தையும் அர்ப்பணம் செய்தவர் என்றார். சுவாமிகள் இராமகிருஷ்ண மிஷனின் இருபெரும் கொள்கை களின்படி தம் கடமைகளைச் செய்தார்.

1. துறவுவழி நின்று ஆன்மிக சாதனை புரிதல், துறவிகளை உருவாக்கல், இராமகிருஷ்ணர் காட்டிய வழியில் உலகெங்கும் செய்தியைப் பரப்பல்.

2. சாதி, மத, இன பேதமின்றி, ஆண், பெண்

குழந்தைகள் அனைவருக்கும் சமூகத் தொண்டாற்றல், பக்திஞானம், ஆன்ம ஒழுக்கத்தை வலிமையுறச் செய்தல், ஆண், பெண் இரு பாலாருக்கும் தனி மடம் அமைத்தல்.

விபுலானந்தரை அவர் குரு சிவானந்தர் இப் பணிகளை ஆற்றும்படி பணித்தார். சுவாமிகள் அதை ஏற்று, இலங்கை மிஷன் பொறுப்பிலிருந்த கல்வி நிறுவனங்களைப் பொறுப்பேற்றார். திருகோணமலை, மட்டக்களப்பில் புதிய பாடசாலைகளை ஆரம்பித்தார். ஏழைகளின் வாழ்வை உய்விக்க இராமகிருஷ்ண மிஷன் ஆண்கள் விடுதியை மட்டக்களப்பிலும், பெண்களுக்காக சாரதா விடுதியைக் காரை தீவிலும் அமைத்தார். விடுதிகளில் ஏழை மாணவர் நல்வழி, நல்லொழுக்க முறையே வழிநடத்தப்பட்டுக் கல்வி கற்றனர்.

சமயங்கள் யாவும் ஒருவனான இறைவனையே நாடுகின்றன. அவன் பாதம் அடைவதே இறுதி உயர் இலக்கு என்றும், இவற்றை ஒருவரின் அகத்தில் பிரகாசிக்க வைப்பதே கல்வியின் நோக்கமாய்க் கொள்ளவேண்டும் எனும் வேதாந்தத் தத்துவத்தோடு எம்மை இணைத்துக் கொண்டவர் சுவாமிகள். சமய நம்பிக்கை, பக்தி, சமயசேவை, சமயநெறியே மனித வாழ்க்கையை அறநெறியில் இட்டுச்செல்ல ஒரே வழியாகும். இச் சமயநெறியில் மக்கள் நிலைபெறும் போதுதான் மக்கள் வாழ்வு வளம்பெறும் எனக் கூறிய அடிகள், சமயநிலை, நாகரிகநிலையினை மதிப்பிடும் ஓர் அளவுகோல் எனக் கூறினார். அடிகள் தம் கல்விச் சிந்தனையிலும் சமய நெறியினை அதிகம் வலியுறுத்தியுள்ளார்.

குன்சுத்தம்பிப் புலவரை ஆசானாகக் கொண்டவர்:

விபுலானந்தர் 12 வயதில் தம் ஆசான் குன்சுத்தம்பிப் புலவர் மேல் வைத்த அன்பால் ''அம்புவியில் செந்தமிழோடாங்கிலமும் எனக்குணர்த்தி அறிவுதீட்டி...'' எனும் பாடல் புனைந்து ''குழந்தைப் புலவர்'' எனப் பாராட்டப்பட்டார். 14 வயதில் மாணிக்கப் பிள்ளை யார் இரட்டை மணிமாலை, சுப்பிரமணிய இரட்டை மணிமாலை எனும் இரு பிரபந்தங்கள் இயற்றினார். கோதண்ட நியாயபுரிக்குமரவேள்மணிமாலை, கணேச தோத்திர பஞ்சகம் எனும் மேலும் இரு பிரபந்தங்கள் இயற்றினார். இவை சிறு வயது முதலே அடிகளாருக்குள்ள சமயப் பற்றினைக் காட்டுகின்றன.

எங்கு சென்றாலும் தமிழ் இலக்கிய ஆய்வினை வெளிப்படுத்துவதுடன், இந்து சமயம் தொடர்பான கவிதை, கட்டுரை ஆக்கங்கள் எழுதுதலையும் எழுத்துத் தருமமாகக் கொண்டவர். வேதாந்த கேசரி, இராம கிருஷ்ண விஜயம் என்பவற்றின் ஆசிரியராகப் பணி யாற்றினார். இந்து சாதனம், யங் இந்து, தமிழ்ப் பொழில், செந்தமிழ் இதழ், விவேகானந்தன் இவற்றிலும் சுவாமிகள் கட்டுரைகள் எழுதினார். 1939 இல் இந்திய இராமகிருஷ்ண மிஷன் பிரபுத்தபாரதா இதழின் ஆசிரியராகி இலங்கைக்குப் புகழ் சேர்த்தார். தமிழ்நாட்டின் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்ப் பேராசிரியரானார். இவ்வேளை புரட்சிக்கவி பாரதி மேல்கொண்ட பற்றால் பாரதிக் கழகம் நிறுவி, பாரதியின் பாடல்களை இசையுடன் பாடவைத்து மகாகவி, புரட்சிக்கவி, பாவேந்தன், என்றெல்லாம் பாரதியை இந்தியர் புகழும் நிலையை உருவாக்கியவர் அடிகளே.

அண்ணாமலை பல்கலைக்கழக இசைத்துறைத் தலைவராய் இருந்தவேளை 14 ஆண்டுகள் அடிகளின் தொடர்ச்சியான, தமிழரின் அழிந்த பழந்தமிழ் இசை பற்றிய ஆராய்ச்சியினால் வெளிவந்தது ''யாழ்நூல்''. அடிகளின் கற்றலினால் பெற்ற அறிவில் விளைந்த விளைவு யாழ்நூல் என இசை அறிஞர்களால் போற்றப்பட்டது. மதங்கசூளாமணி, கத்தரிவெகுளி, பூஞ்சோலைக் காவலன் என்பன சுவாமிகளின் ஏனைய நூல்கள் ஆகும். இலங்கைப் பல்கலைக் கழகத்தில் 1943 இல் முதல் தமிழ்ப் பேராசிரியரானார். 1944 இல் எம்.ஏ., தமிழ் முதுமானிப் படிப்பை ஆரம்பித்து, அதற்கான பாடத்திட்டமும் அமைத்தார். இக்காலம் கல்விப் பகுதி, பாட நூல், சபை, பரீட்சைச் சபை, கல்வி ஆராய்ச்சிக் குழு எல்லாவற்றிலும் உறுப்பினராய் இருந்தார்.

அடிகளாரின் மணிமொழி ஒன்று:

''கடவுள் என் முன் தோன்றினால் எனக்கு முத்தி தரும்படி கேட்க மாட்டேன். முத்தி என்னளவில் நின்று விடும். அதிலும் பார்க்க எல்லோரும் இன்புற்றிருக்கும்படி சேவை செய்வதனால், அதில் உள்ள இன்பமோ ஒப்பற்றது. அதனால் சேவை செய்யவரம் தா'' எனக் கேட்பேன் என்பதாகும்.

அடிகள் ஈசனுக்கு உகந்த இன் மலர்களான உள்ளக் கமலம், கூப்பிய கைக் காந்தள், நாட்டவிழி நெய்தல் என்னும் மூன்று அக மலர்களால் இறைவனை அன்புடன் அகத்தால் வழிபட வேண்டும் என உணர்த்தினார்.

1892 இல் பிறந்த அடிகள் 1947 இல் சிவபத மடைந்தார். 55 ஆண்டுகளே இவ்வுலகில் வாழ்ந்தார். ஆயினும் அவர் தமிழுக்கும் சமயத்திற்கும் ஆற்றிய தொண்டு அளப்பரியது. இன, மத, மொழி, பேதம் இன்றி, மனித வாழ்வின் மேன்மைக்கு வழி காட்டிய தவத்திரு விபுலானந்த அடிகளின் நாமம் என்றென்றும் அழியாதிருப்பதோடு, அவரால் உணர்த்தப்பட்ட சமய, சமூக நல் வாழ்வின் உயர்வு என்றும் உயர்ந்து கொண்டே இருக்கும்.



அறிவியல் நோக்கில் இலக்கிய வளர்ச்சி

பேராசிரியர் முனைவர் கி. இராசா
பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
திருச்சி.

புதுக் கவிதையைப் பின்தள்ளிய ஹைகூ

எல்லாக் காலத்திலும் எல்லா இலக்கிய வகைகளும் செல்வாக்குப் பெறுவதில்லை. ஒரே காலப் பகுதியில் பல இலக்கிய வகைகள் நிலவினாலும் அவற்றுள் ஒரு சில இலக்கிய வகைகள் மட்டுமே செல்வாக்குப் பெறுகின்றன. ஏனெனில் காலச் சூழலுக்கேற்ற கருத்தைச் சொல்லி மக்களின் வரவேற்பைப் பெற்ற இலக்கிய வகைகள் நூலாக்கம் பெறுகின்றன. அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் இயல்பானதும் சுவையானதுமான செய்திகள் கூடப் புதுக் கவிதையில் பாடப்பட்டன.

புதுக் கவிதையின் இடத்தை இன்று ஹைக்கூ கவிதைகள் பிடித்துக் கொண்டன. புதுக்கவிதையின் வடிவமும் பாடுபொருளும், பாடுபவனுக்கும், படிப்பவனுக்கும் சலிப்பூட்டியதால் அவர்கள் புதுக் கவிதைக்கு மாற்றாக ஜென் வழிவந்த ஹைக்கூ கவிதைகளை வரவேற்று ஏற்றுக்கொண்டனர். சுருங்கிய வடிவில் எந்தக் கருத்தையும் ''நயம்படச்'' சொல்லும் கவிதை வடிவமாக ஹைகூ கவிதைகள் ஆகிவிட்டன. புதுக் கவிதையில் அடைந்த சலிப்பும் ஹைக்கூ கவிதைக்கு இருந்த வரவேற்பும் புதுக்கவிதைகளைப் பின்னுக்குத் தள்ளின.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சார்ல்ஸ் டார்வின் (1809-1882) என்ற ஆங்கிலேய உயிரியல் வல்லுநர், கூர்தலறக் கொள்கையை (Theory of Evolution) வெளியிட்டார். இது உயிரின வளர்ச்சிக் கோட்பாட்டில் ஒரு திருப்புமுனையாகக் கருதப்பட்டது. உயிர்கள் வாழ்வதற்காகப் போராடுகின்றன (Struggle for Existence) என்பதும், அப்போராட்டத்தில் தக்கனவே வெற்றி பெற்றுத் தம் வாழ்க்கையை நிலைநிறுத்துகின்றன (Survival of the Fittest) என்பதும் டார்வின் வெளியிட்ட கூர்தலறக் கோட்பாட்டின் தலையாய கூறுகள் ஆகும். இதனைத் தொடர்ந்து உயிரின வளர்ச்சியை நிலைநாட்டிய கூர்தலறக் கோட்பாடு, இலக்கிய வளர்ச்சி நெறியை நிறுவுவதற்கும் பயன்கொள்ளப்பட்டது.

ஜான் அடிங்ரன் சிமண்ட்ஸ்:

இங்கிலாந்து நாட்டவரான ஜான் அடிங்ரன் சிமண்ட்ஸ் (John Addington Symonds: 1834) என்பார் எலிசபெத்திய காலத்து நாடக வளர்ச்சியை அறிவதற்குக் கூர்தலறக் கோட்பாட்டைப் பயன் கொண்டார். தம் ஆய்வில், உயிரினத்திற்குரிய வளர்ச்சி நிலைகள் அனைத்தும் இலக்கியத்திற்கும் பொருந்தி வருவதைக் கண்டார். இதனால் 'இலக்கியமும் ஓர் உயிரியே' என்ற உண்மையை அவர் நிறுவினார். உயிரினங்களின் வளர்ச்சி போன்றே எலிசபெத்திய நாடகங்கள் தோற்றம், வளர்ச்சி, மலர்ச்சி, தளர்ச்சி (Germination, Expansion, Efflorescence and Decay) ஆகிய வளர் நிலைகளைக் கொண்டிருப்பதைத் தம் ஆய்வு முடிவாகச் சொன்னார். ஒப்பிலக்கிய ஆய்வு வளர்ச்சியில் சிமண்ட் ஸின் ஆய்வு ஓர் மைல்கல்லாகக் கருதப்படுகிறது.

அறிவியலார் கூறும் நால்வகை வளர்நிலைகளின் அடிப்படையில் இலக்கிய வளர்ச்சியை இவர் நிறுவினார். உயிரினத்தின் அடிப்படையாகத் திகழுகின்ற ஓர் அணு (Single Cell), உயிரிகளின் வளர்ச்சியை முகிழ்நிலை (Lag Phase), பல்குநிலை (Log Phase), சமன்நிலை (Stationary Phase), தளர்நிலை (Decline Phase) எனும் நான்கு கட்டங்களாக உயிரியலார் நிறுவியுள்ளனர். உயிரிகளின் இவ்வளர்நிலைகளை இலக்கிய வகைகளின் வளர்நிலைகளோடு ஒப்பிட்டுக் காணலாம்.

இலக்கிய வளர்ச்சியின் தொடக்கநிலை

ஓர் இலக்கிய வகை தோன்றுவதற்கு வாய்ப்பான சூழல் வேண்டற் பாலதாகும். மறப்பண்புகள் மேலோங்கிய காலத்தில் வினைநவில் கவிதைகள் (Poetry of Action) தலைமை பெறக் காணலாம். அறப் பண்புகள் தலைமை பெற்ற காலத்தில் அறநெறிப் பாடல்கள் செல்வாக்கும் பெறக் காணலாம். தத்துவ நெறிகள் செல்வாக்குப் பெற்ற காலத்தில் தத்துவப் பாடல்கள் ஆட்சி பெறக் காணலாம். விடுதலையுணர்வு மேலோங்கிய காலத்தில் விடுதலைப் பாடல்கள் செல்வாக்குப் பெறக் காணலாம். (மேலும்

செய்திகளுக்குக் காண்க. கலாநிதி ஆ. வேலுப்பிள்ளையின் 'தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்') இவ்வாறு சமூகத் தேவைகளுக்கும் காலச் சூழலுக்கும் ஏற்பப் புதுப்புது இலக்கிய வகைகள் தோற்றம் பெறுவதை இலக்கிய வரலாறு நமக்குக் காட்டுகிறது.

புதிதாகத் தோன்றும் இலக்கியவகை மக்களின் செல்வாக்கை உடனே பெற்றுவிடுவதில்லை. சான்றாகப் புதுக்கவிதைகள் அறிமுகமான சூழலைச் சொல்லலாம். சமூக விழிப்புணர்ச்சியை ஊட்டுவதற்கு, மேலைநாடுகளில் புகழ் பெற்றிருந்த வசன கவிதைகளைப் பாரதியார் தமிழுக்கு அறிமுகம் செய்து வைத்தார். பின்னர்ப் படிப்படியாக இது பலராலும் எழுதப் பெற்றும், பயிலப் பெற்றும் எழுபதுகளில் மக்களிடையே பரபரப்பாகப் பேசப்பட்டது. புதுக்கவிதை போன்றதொரு இலக்கிய வகையின் இத்தகு தொடக்கச் சூழலை உயிரின வளர்ச்சியின் முகிழ்நிலைக்கு (Lap Phase) ஒப்பிட்டுக் காணவியலும். தோன்றும் உயிர் தொடக்கநிலையிலேயே முழுமூச்சுடன் இயங்குவதில்லை. தான் தோன்றிய சூழலுக்குத் தக்க தன்னை மாற்றிக் கொள்ளும் வரை உயிர் மந்தமான வளர்ச்சியைப் பெறுகிறது. இது முகிழ்நிலை (Lag Phase) எனப்படும். இவ்வாறு இலக்கியத்தின் தொடக்கநிலைச் சூழல் (Getmination) உயிரினத்தின் முகிழ்நிலைச் சூழலுடன் ஒத்துக் காணப்படுகிறது.

மலர்ச்சி நிலை

எல்லாக் காலத்திலும் எல்லா இலக்கிய வகைகளும் செல்வாக்குப் பெறுவதில்லை. ஒரே காலப் பகுதியில் பல இலக்கிய வகைகள் நிலவினாலும், அவற்றுள் ஒரு சில இலக்கிய வகைகள் மட்டுமே செல்வாக்குப் பெறுகின்றன. ஏனெனில் காலச் சூழலுக்கேற்ற கருத்தைச் சொல்லி, மக்களின் வரவேற்பைப் பெற்று இலக்கிய வகையில் நூலாக்கம் பெருகுகின்றது. புதுக்கவிதையின் கருத்து வீச்சினை இதற்குச் சான்று காட்டலாம். எளிய கவிதை வடிவத்தில் மக்களின் அன்றாடப் பிரச்சினைகளை ஆழமாக எடுத்துச் சொல்ல முடியும் என்பதை வானம்பாடி இயக்கம் மெய்ப்பித்தது. இதனால் மாணவர்களிடையேயும் பொதுமக்களிடையேயும் புதுக்கவிஞர்கள் பூத்தனர்.

> புதுக் கவிதையின் இடத்தை
> இன்று ஹைக்கூ கவிதைகள்
> பிடித்துக் கொண்டன.
> புதுக்கவிதையின் வடிவமும்
> பாடுபொருளும், பாடுபவனுக்கும்,
> படிப்பவனுக்கும்
> சலிப்பூட்டியதால்
> அவர்கள் புதுக் கவிதைக்கு
> மாற்றாக ஜென் வழிவந்த
> ஹைக்கூ கவிதைகளை
> வரவேற்று ஏற்றுக்கொண்டனர்.



இலக்கிய வகையின் இத்தகு மலர்ச்சி நிலைச் (Expansion) சூழலோடு உயிரியின் பல்குநிலைச் (Log Phase) சூழல் ஒத்திருப்பதைக் காணலாம். உயிரினங்கள் வாய்ப்பான சூழலில் பல்கிப் பெருகுகின்றன என்று உயிரியல் அறிஞர்கள் கருதுகின்றனர். சூழலுக்கு ஏற்பத் தன்னை மாற்றிக் கொண்ட அல்லது சூழலை ஏற்றுக் கொண்ட உயிரினம் வீறுடன் பெருகி வளர்கிறது. இவ்வாறு இரண்டு நான்காகவும், நான்கு பதினாறாகவும், பதினாறு இருநூற்று ஐம்பத்தாறாகவும் (22 44 1616) மடக்கை நிலையில் (Logarithmic) பெருகுகின்றன. இவ்வாறு சூழலை அடியொற்றிப் பெருகும் பண்பினை இலக்கிய வளர்ச்சியிலும், உயிரின வளர்ச்சியிலும் நாம் காணலாம்.

தொடர்ச்சி நிலை ஒரே வகையான இலக்கியத்தை மக்கள் வெகு நாள்களுக்கு விரும்புவதில்லை. மக்களிடம் ஆட்சி பெற்றுவிட்ட ஓர் இலக்கியவகையில் மாற்றத்தை அல்லது புதுமையை மக்கள் விரும்புவர். புதுக்கவிதை செல்வாக்குப் பெற்ற நிலையில் ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாகக் கவிஞர்கள் தம் கருத்துகளை அதில் சொல்லி வருகின்றனர். தொடக்கக் காலத்தில் சமுதாயக் கேடுகளைக் களையவும், அரசியல் ஊழல்களைக் குத்திக் காட்டவும், மனக் கோலங்களை வெளிப்படுத்திக் காட்டவும், புதுக்கவிதை பயன்பட்டது. காலப்போக்கில் காதல்-காதல் தோல்வி எனும் பாடுபொருள்கள் புதுக் கவிதையை ஆக்கிரமித்தன. இதனால் 'புதுக்கவிதை

என்றால் காதல்; காதல் என்றால் புதுக்கவிதை' எனக் கருதும் சூழலும் உருவானது. இதற்கும் மேலாக அன்றாட வாழ்க்கையில் நடைபெறும் இயல்பான செய்திகள்கூடப் புதுக்கவிதையில் பாடப்பட்டன. இதனால் எழுதப் படிக்கத் தெரிந்த எல்லோருக்குமே புதுக்கவிதை எழுதக்கூடிய நிலை ஏற்படலாயிற்று. இதன் காரணமாக, தேனாக இனித்த புதுக்கவிதை திகட்டத் தொடங்கியது. மலர்ச்சி நிலையில் புதுக் கவிதைக்கு இருந்த ஆதரவு குறையத் தொடங்கியது. புதுக்கவிதைகள் ஆக்கம் ஒரே சீராகத் தொடர்ந்தது.

உயிரின வளர்ச்சியை நோக்கும் போது, மலர்ச்சி நிலையில் மடக்கைகளாகப் பல்கிப் பெருகும் உயிரிகள் குறிப்பிட்ட சூழலில் அளவோடு கிடைக்கும் ஈரப்பதம், காற்று, உணவு இவற்றைக் கொண்டே உயிர்வாழ வேண்டியுள்ளது. இருநூறு உயிரிகள் வாழ வேண்டிய இடப்பரப்பில், பெருக்கத்தின் விளைவாக ஆயிரக்கணக்கான உயிரிகள் வாழவேண்டிய சூழல் உருவாகின்றது. பெருகும் உயிரிகளுக்குத் தகுந்தவாறு உணவுப்பொருள்கள் கிடைப்பதில்லை. அதேசமயம் அவ்வுயிரிகள் வெளியேற்றும் கழிவுப்பொருள்கள் பெருகுகின்றன. இந்நிலையில் உயிரிகளின் தோற்றமும் அழிவும் சமன்நிலையில் இருக்கும். இதனை இலக்கிய வகையின் தொடர்ச்சிநிலைச் சூழலோடு (Stationary Phase) ஒப்பிடலாம்.

தளர்ச்சி நிலை


இன்று புதுக்கவிதையின் வளர்ச்சியில் தளர்ச்சி காணப்பெறுவது உண்மையே. புதுக்கவிதையின் இடத்தை இன்று ஹைகூ கவிதைகள் பிடித்துக் கொண்டன. புதுக்கவிதையின் வடிவமும் பாடுபொருள்களும் பாடு பவனுக்கும் படிப்பவனுக்கும் சலிப்பூட்டியதால் அவர்கள் புதுக்கவிதைக்கு மாற்றாக ஜென் வழிவந்த ஹைகூ கவிதைகளை வரவேற்று ஏற்றுக்கொண்டனர். சுருங்கிய வடிவில் எந்தக் கருத்தையும் 'நயம்படச்' சொல்லும் கவிதை வடிவமாக ஹைகூ கவிதைகள் ஆகிவிட்டன. புதுக்கவிதையில் அடைந்த சலிப்பும், ஹைகூ கவிதைக்கு இருந்த வரவேற்பும் புதுக்கவிதைகளைப் பின்னுக்குத் தள்ளின.

உயிரின வளர்ச்சியைப் பார்ப்போமாயின் அங்கும் இறுதியில் இதே தளர்நிலைச் சூழலைக் காண்கிறோம். தோற்றமும் அழிவும் சமநிலையில் உள்ள நிலைக்குப் பின்னர், உயிரிகளின் வளர்ச்சி முற்றிலும் தடைப்படும் நிலை உருவாகின்றது. அங்கு உயிரிகள் மேலும் தோன்ற முடியாத ''வறள் சூழல்'' நிலவுகிறது. உயிரியலார் இந்நிலையைத் 'தளர்நிலை' (Decline Phase) என்பர்.

இதுகாறும் விளக்கப்பட்ட இலக்கிய வகை வளர் நிலைகளைப் பின்வருமாறு தொகுத்துக் கூறலாம்.

1. ஓர் இலக்கிய வகை மக்களுக்கு அறிமுகமாகும் தொடக்கநிலை (Germination)
2. அவ்விலக்கியவகை மக்களின் வரவேற்பைப் பெறுகின்ற மலர்ச்சி நிலை (Expansion)
3. வரவேற்பைப் பெற்றதால் தொடர்ந்து வாழ்வு பெறுகின்ற வளர்ச்சி நிலை (Efflorescence)
4. தொடர்ந்து பெருகுகின்ற ஒரே வகை இலக் கியத்தில் மக்களின் நாட்டம் குறைந்து படைப் பாக்கம் குறைகின்ற தளர்ச்சி நிலை (Decay).

இதனைப் பின்வருமாறு காட்டலாம்:



இவ்வாறு இலக்கியமும் உயிரிகளும் தங்கள் வளர்ச்சிநிலையில் தொடக்கநிலை (முகிழ்நிலை), மலர்ச்சி நிலை (பல்கு நிலை), வளர்ச்சி நிலை (சமன்நிலை), தளர்ச்சிநிலை (தளர் நிலை) ஆகிய நால்வகை வளர்நிலைகளைக் கொண்டுள்ளன என்று அறியமுடிகிறது. இத்தகு வளர்நிலை மாதிரியில் பரணி, ஆற்றுப்படை, உலா போன்ற பழைய இலக்கிய வகைகளையும் நாவல், சிறுகதை போன்ற சிறிய இலக்கிய வகைகளையும் பொருத்திக் காட்டலாம். ○○○

பெரியபுராணத்தில் பண்பாடு



முனைவர் கி. சாந்தா பழனிச்சாமி, பி.எச்.டி.,
நிர்மலா மகளிர் கல்லூரி, தமிழ்த்துறைத் தலைவர்,
கோவை.

பெரியபுராணம் எனும் திருத்தொண்டர் புராணம் ஓர் இலக்கியப் பெருங்கடல், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடப்பட்ட இப்புராணக் கடலில் இலக்கியமும், ஆன்மீகமும் இயைந்து செல்கின்றன. இதில் வாழ்க்கையை வாழ்வாங்கு வாழ்வதற்குரிய பல அரிய கருத்துகள் காணக் கிடைக்கின்றன.

பெரியபுராணம் அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாற்றை மட்டும் எடுத்துக் கூறாது பண்பாட்டுப் பெட்டகமாகத் திகழ்கின்றது. இப்புராணத்தில் காணப்படும் சில பண்பாடுகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

பண்பாடு

பண்புடையார் இருப்பதால்தான் இவ்வுலகம் இன்னும் வாழ்ந்து வருகின்றது. இல்லையெனில் என்றோ அழிந்திருக்கும். பண்புள்ள மனம் இருந்தால்தான், பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற எண்ணம் பிறக்கும். அவ்வெண்ணம் செயலாக மாறும் தன்னலம் மறந்து பொதுநலம் பேணப் பண்பாடு தேவை. உள்ளம் செம்மையாக இருந்தால் தான் உயர்வானவை பிறக்கும்.

இதைத்தான் பாரதியார், ''உள்ளத்தில் உண்மை யொளி உண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்'' என்றார். ''இனத்தைப் பண்படுத்துவது பண்பாடு'' என்பார் அப்பாத்துரையார்.

''ஒருவன் தன் குணநலன்களை நிரப்புவதிலும், தன்னைச் சூழ்ந்த சமுதாயத்தின் நலன்களைப் பேணு வதிலும் பேரவாக் கொண்டிருக்கும் நிலை, பண்பாடாகும்'' என்பது மத்யூ ஆர்னல்ட்டு கொள்கையாகும்.

சுருங்கக் கூறினால், பிற உயிர்களின் உள்ளத்திற்கும், உடலுக்கும், நம் உள்ளத்தாலும் உடலாலும் துன்பம் கொடுக்காது இன்பமுறுவண்ணம் நடத்தல் பண்பாடாகும். கலித்தொகை இதனைப் பண்பெனப் படுவது பாடறிந்தொழுகுதல். (நெய்தற். கலி. 16) என்று கூறும். இதற்கு உரையாசிரியர் நச்சினார்க்கினியர் ''மக்கட் பண்பு என்று சொல்லப்படுவது உலக ஒழுக்கம் அறிந்தொழுகுதலை'' என விளக்கம் கூறுவார்.

கூடி வாழும் சமுதாயத்தில் ஒருவருக்கொருவர் உதவி, மற்றவர்கள் துன்பப்படாமல், வருந்தாமல் யார் நடந்து கொள்கின்றனரோ அவர்களே பண்புடையவர்.



''இன்னாசெய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்துவிடல்''

''இன்னா செய்தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு''

என்பன வள்ளுவர் கூறும் பண்பாடு.

''தனிமனிதனின் உள்ள மேம்பாடே பண்பாடாகும்'' என்றுரைத்த மகாத்மா காந்தியடிகளே இதற்குச் சான்றாக வாழ்ந்தார்.

பகைவனுக்கருளிய பண்பாடு பெரியபுராணத்தில் சேதி நன்னாட்டுத் திருக்கோவலூரில் வாழ்ந்து வந்த மெய்ப் பொருள் நாயனார் என்னும் குறுநில மன்னனைப் பகைமன்னனான முத்தநாதன் என்பவன் படைபலத்தால் வெல்ல முடியாது எனச் சூழ்ச்சியால் வெல்ல நினைத்தான்.

சிவனடியார் மீது மெய்ப்பொருள் நாயனார் மிகுந்த ஈடுபாடு உடையவர் ஆதலினால், அத்திரு நீற்று வேடத்தில் சென்று தன் கருத்தினை முடித்தார்.

''மெய்யெலாம் நீறு பூசி வேணிகள் முடித்துக்கட்டிக்
கையினிற் படைகரந்த புத்தகக் கவுளி ஏந்தி,
மைபொதி விளக்கே என்ன மனத்தினும் கறுப்புவைத்துப் பொய்த்தவ வேடங் கொண்டு புகுந்தனன் முத்தநாதன்

(மெய்ப்பொருள் நாயனார், புராணம்)

ஆகம நூலை விரித்து உரைக்கவந்துள்ளேன் என உள்ளே சென்று, தம்மை வணங்கிய நாயனாரை மறைத்து வைத்திருந்த வாளால் வெட்டினான். மெய்த் தவ வேடமே மெய் என நம்பி சேக்கிழார், தன்னைக் கொன்ற முத்தநாதனை மக்கள் துன்புறுத்தாது காத்துக் கொண்டுபோய் விட்டு வர வேண்டும் எனத் தத்தனுக்கு ஆணையிட்டார்.

''பகைவனுக் கருள்வாய் - நன்னெஞ்சே
பகைவனுக் கருள்வாய் நன்னெஞ்சே''

எனப் பாரதி இவர் போன்றோர் பண்புச் செயலைப் பாடினார் போலும்.

உயிரளிக்கும் பண்பாடு:

மனுநீதிச் சோழன் கன்றை இழந்த பசுவின் துயர் துடைக்கத் தன் மகன் வீதி விடங்கனைத் தேர்க்காலில் வைத்துக் கொன்றான்.

உயிருக்கு உயிரளிக்கும் உயர்ந்த உயர்வான பண்பாளன் மனுநீதிச் சோழன் பண்பாட்டை இதன் வழி அறிகின்றோம்.

சமமாகக் கருதும் பண்பாடு தாழ்ந்தகுலம் எனப் புறக்கணிக்காது அனைவரையும் சமமாகக் கருதும் பண்பாட்டைச் சேரமான் பெருமாள் நாயனாரிடம் காண்கிறோம். சிவனடியாரைக் கண்டபோது சிவனையே கண்டதாகத் தொழுவார். ஒரு முறை முடிசூட்டு விழா முடிந்து நகர்வலம் வந்தபோது மழையில் பொதி உவர்மண் கரைந்து மேனி வெளுத்திருந்த சலவைத் தொழிலாளியைக் கண்டு வணங்கினார். அவன், தான் தாழ்ந்தவன் என்பதைத் தெரிவிக்க, ''அடிவண்ணான்'' என்றான். சேரர் பெருமானோ அவனினும் தாம் தாழ்ந்தவரே என உறுதிப்படுத்துவதற்காக ''அடிச்சேரன் அடியேன்'' என்றார் (கழறிற்றறிவார் நாயனார் புராணம்).

மன்னிக்க வேண்டுதல்

எறிபத்த நாயனார், சிவகாமியாண்டாரின் மலர்க் கூடை பறித்தபட்டத்து யானையையும் அதனை நடத்தி வந்த ஐவரையும், தம்மழுவால் வெட்டி வீழ்த்தியமை அறிந்து, மன்னன் புகழ்ச்சோழன் ஓடிச்சென்று வணங்கி நாயனாரிடம் மன்னிப்புக் கேட்டார். பட்டத்து யானை செய்த தவற்றிற்குத் தன்னையே தண்டிக்க வேண்டி உடைவாளை நாயனாரிடம் கொடுத்தார், என்பார் சேக்கிழார். (பூசலார் நாயனார் புராணம்)

மனைவிக்கு மரியாதை

காரைக்காலம்மையார் புராணத்தில் காரைக்காலினின்றும் புனிதவதியாரை விட்டு நீங்கிய பரமதத்தன் புனிதவதியாரை மானுடப்பெண் அல்லள், தெய்வம் என்று கூறுகிறார். மனைவியையும் மரியாதையாக இவர்தாம் அல்லர் எனப் பன்மையில் கூறி மதிப்பளித்தார் என அறிகிறோம்.

அறம் செய்தல்

அப்பூதியடிகளார் நாயனார் அடியார் பெரு மக்களுக்கு உணவு தண்ணீர்ப்பந்தல் அமைத்து வழிப் போக்கர்களாகச் செல்லும் அடியார்தம் தாகத்தைப் போக்கினார்.

கணவராகத் தீர்மானிக்கப் பெற்ற கலிப்பகையார் போரில் இறந்தபின் உயிர்விடத் துணிந்த திலகவதியார் அவர் தம்பியார் வேண்டுகோளுக்கிணங்க உயிர் தாங்கினார். அனைத்துயிர்க்கும் அருள்தாங்கும் தவ வாழ்க்கை மேற்கொண்டு ஆசில் அறச்சாலைகள், தண்ணீர்ப் பந்தல், குளம், சோலை, முதலியவற்றை அமைத்துப் பிறர்நலம் பேணும் பண்பாட்டோடு வாழ்ந்தார் என்பதைத் திருநாவுக்கரசர் புராணத்தில் காணலாம்.

விருந்தோம்பல்

இளையான்குடிமாற நாயனாரும் அவர் மனைவி யாரும் தமக்கென ஏதும் இல்லாத நிலையிலும், இறைவன் அடியார் வேடம் பூண்டு நள்ளிரவில் வந்தபோது, கழனியில் விதைத்த விதை நெல்லைக் கொண்டு, குப்பைக் கீரைக் கறியோடு விருந்தோம்பிய பண்பினைப் பெரியபுராணம் காட்டும்.

சொற்காத்தல்

பொன்னி நாட்டுப் பழையாறையில் வாழ்ந்து கொண்டிருந்த அமர்நீதி நாயனாரிடம் பிரம்மசாரியின் வடிவம் தாங்கி வந்த இறைவன் தன்னிரு கோவணத்துள் ஒன்றனைத் தந்து, தான் வரும் வரையிலும் வைத்திருக்குமாறு பணித்தார். பின்னர் அதை மறைத்தார். மீண்டும் வந்து அதைக் கேட்ட போது அமர்நீதி நாயனாரால் அதைத் திருப்பிக் கொடுக்க முடியவில்லை.

இறுதியில் எடைக்கு எடை மாற்றுக் கோவணம் தர சம்மதித்தார். அத்துணைக் கோவணங்கள் வைத்த போதும் எடை சமன் ஆகவில்லை, நாயனார் தம்மிடம் இருந்த எல்லாப் பொருள்களையும் வைத்தார். அப்போதும் சமன் ஆகாதது கண்டு, தானும் தன் மனைவி புதல்வனோடு தட்டில் ஏறி அமர்ந்தார். இந்நிகழ்ச்சி இந்நாயனார் தம் சொல் காக்கும் பண்பாட்டு நேர்மை, பக்தியாற் பொலிந்த பண்பாட்டு வாழ்க்கை நிறைவைக் காட்டுகின்றது.

கண்ணளித்தல்

இறைவனின் கண்களில் குருதி வரக்கண்டு தன் கண்ணையே எடுத்து அப்பிய கண்ணப்பர் ஆகிய திண்ணனார் வாழ்க்கை இறைவன் துன்பம் கண்டு பொறுக்காது தன் உறுப்பையே இழக்கத்துணியும் பண்பாட்டைக் காட்டும்.

இவ்வாறு பலப்பல பண்பாடுகள் பொதிந்து வைக்கப்பட்ட பண்பாட்டுப் பெட்டகமாய்ப் பெரிய புராணம் திகழ்கின்றது. ○○○

சிதம்பரம்

மு. ஞானப்பிரகாசம், எம்.எஸ்ஸி.,

தமிழகத்தின் முக்கியமான சமயங்கள் இரண்டு. ஒன்று சைவம், மற்றையது வைஷ்ணவம். அவை மிகவும் தொன்மை வாய்ந்தன. சரித்திர காலங்கள் புராண இதிகாச காலங்களுக்கு மிகவும் முற்பட்டன. அவற்றுள் சைவம் சிவ வணக்கத்தையே முதன்மையாகக் கொள்வது. வைஷ்ணவம் திருமால் வணக்கத்தையே முதன்மையாகக் கொள்வது. இவை இரண்டுமே தமிழகத்தில் வேதாகம நெறியையும் பழைய தருமத்தையும் பாதுகாத்துவந்த பெரும் நெறிகள். சைவ வைஷ்ணவக் கோயில்களே உண்மையில் பழைய தருமத்தைப் பாதுகாத்து வந்த நிலையங்கள். இந்தக் கோயில்களுள், சைவர்களைப் பொறுத்தவரையில், மூலஸ்தானமாக விளங்கும் கோயில் சிதம்பரமாகும். சிதம்பரம் ஒரு காலத்தில் சைவ இராசதானி. அங்குதான் இறைவனின் இயக்க நடனம் நடைபெறுகின்றது. ''தென்னாடுடைய சிவனின் நாதாந்த நடனக் காட்சியை நாங்கள் அங்குக் காண்கின்றோம்'' எனச் சைவ நூல்கள் கூறும்.



சிதம்பரத்தில் காட்சி தரும் மூர்த்தி ஆகம சாஸ்திர ரீதியில் தடஸ்தமெனக் கூறப்படும் அருவ மூர்த்தி என்றோ, அருவுருவ மூர்த்தியென்றோ நாங்கள் கருதுவதில்லை. அவ்வாறு கருதுவதற்கு நமது மனம் ஒப்புவதுமில்லை. அதை ஞானானந்த அதித மூர்த்தியெனவே கருதுகிறோம்.

தமிழ் நாட்டில் தொன்றுதொட்டுச் சைவ தரிசனத்தை விளக்கிவந்த பரம்பரைகள் மூன்று. திருக் கைலாய பரம்பரையில் விளக்கிவந்த ஞான பரம்பரை ஒன்று. திருமூலர் மரபில் வந்த யோக சித்தர்கள் பரம்பரை வேறொன்று. சைவ சமயாசாரிகள் வழிவந்த சிவபக்த-தொண்டர்கள் பரம்பரை இன்னொன்று. இந்த மூன்று பரம்பரையிலும் வந்த சிவ ஞானச் செல்வர் அனைவரும் தாம் பெற்ற ஞானானந்த அனுபவத்தின் அற்புத வடிவமாகவே சிதம்பரத்திலே காட்சி தரும் ஆனந்த நடராஜ வள்ளலாரைக் கண்டு திளைத்து இன்புற்றுச் சென்றனர்.

ஞானானந்த அனுபவத்தை விளக்குவது அரிது. விளக்கினாலும் அதனைச் சொற்கள் மூலம் விளக்குவது அரிதினுமரிது.

''ந வித்ம: ந வியாநீம: யதா ஏதத் அனுசிஷ் யாத்'' எனக் கூறி அந்த அனுபவத்தை எம்மால் விளக்கவும் முடியாது, எனக் கருதியே கைவிரித்து நிற்கிறது. அப்பேர்ப்பட்ட அதீதமான ஓர் அனுபவத்தை உயர்ந்த சிற்ப வடிவத்தில் வடித்து உலகிற்கு வழங்கிய பெருமை தமிழ் நாட்டிற்கே உரியதாகும். மிகவும் பழைய காலத்தில் திருக்கூத்துத் தரிசனம் பெறுவதற்கென்று எத்தனையோ முனிவர்கள் வடதிசையிலிருந்து

தமிழ்நாடு சென்றிருக்கின்றனர். அதனால் வடநாட்டில் ஆதி காலத்தில் இருந்த தெய்வக் கொள்கைகளும், சமய ஞானக் கருத்துகளும் காலத்திற்குக் காலம் மாறு தலடைந்து வந்திருக்கின்றன. இப்பொழுது வடநாட்டில் நிலவும் சமயம், திருவருட் கொள்கை, பக்தி சாதனை முதலியன பொருந்திய பெருநெறியாகக் காட்சியளிக் கிறது என ஆராய்ச்சியாளர் பலர் கருதுகின்றனர். ''எல்லாம் அவன் செயல்'' என்றும், ''பஞ்ச கிருத்தியம்'' அவன் செயல் என்றும், ''இவை அனைத்தும் அவனி டத்தில் தோன்றி நிலை பெற்று ஒடுங்குகின்றன'' என்றும் அவன் ''பரமவியோமரூபி'' என்றும் அவன் ''பொன்மயமான கூடத்தில் வீற்றிருந்தருளுகின்றான்'' என்றும், இவ்வாறான கருத்துகளோடு வரும் மந்திர ஸ்லோகங்கள் எல்லாம் சிதம்பரத்திற்கு வந்து திருக்கூத்துத் தரிசனம் பெற்ற ஞான யோகரிஷிக் கூட்டங்களின் வாக்கிலுதித்த மந்திர விசேடங்கள் எனக் கருதுவது பிழையாகமாட்டாது.

பஞ்சேந்திரிய இன்பங்களை வென்று, மனோ வியற்பங்களை ஒழித்து, மெய்ச்சார்பை உணர்ந்து பரவசப்பட்டு நிற்கும் உள்ளம் எப்பொழுதும் ஒரு சக்தி பீடமாகும். அது ஞானகாசம் என்றும், சிதம்பரம் என்றும், பொதுவென்றும் சைவ பரிபாஷையிற் சொல்லப்படும். அந்த நிலையில்தான் ஆனந்த நடராஜ வள்ளலாரின் அற்புதத் திருக்கூத்துத் தரிசனம் வாய்க்கிறது. ஆனந்த வள்ளலாரின் ஊன்றிய பாதம் மலசக்திகளை எழுப்பித் தொழிற்படுத்தி வரும் அற்புதக் காட்சியையும், அவர்தம் திருக்கரங்கள் அந்த மலசக்திகள் எழுப்பத் தொழிற்படுத்தற்குரிய தனுகரண புவனங்களைப் படைத்துக் காத்து, உபகரித்து வருவதையும், ஆட எடுத்த அவரது குஞ்சித பாதம் அந்த மலசக்திகளுக்கு ஓய்வினைத் தந்து உள்ளத்தை ஈர்த்துப் பரவசப்படுத்திப் பேராவியற்கைப் பெரு வாழ்வில் நிறுத்தி அருள்வதையும் சைவ ஞானிகள் நிதர்சனமாகக் காண்கின்றனர். சைவ ஞானிகள் தமது அனுபவ நிஷ்டையில் காணும் இந்த நடனம், பரநடனம் எனப் பெயர் பெறும், ஓரறிவும், ஒரு செயலுமின்றி முழுதும் இருளிலே அழுந்திக் கிடக்கும் உள்ளத்தில் தோன்றும் நடனம், அதசூக்கும நடனம் எனப் பெயர்பெறும். பிரபஞ்ச வாழ்விலே அழுந்திச் சிற்றறிவும் சிறுதொழிலும் பொருந்தி நிற்கும் உள்ளத்தில் தோன்றும் நடனம், சூக்கும நடனம் எனப் பெயர் பெறும். நடனம் ஒன்றே, உள்ளங்கள் பலவாகலின் பல பெயர் பெற்று விளங்குகின்றது.

சிதம்பரத்திலே நடைபெறுகிற திருக்கூத்துத் தரிசனப் பேறு பெற்றவர்களே உண்மைச் சைவர்களாவர். அப்படிப்பட்ட உண்மைச் சைவர்கள் மிகவும் பழைய காலந்தொடக்கம் தமிழ் நாட்டிலே வாழையடி வாழையாய் வாழ்ந்து வந்திருக்கின்றனர். வியாகிர பாதர், பதஞ்சலி முனிவர், உபமன்ய முனிவர், திருமூலர், காரைக்காலம்மையார், சமயாசாரியர் நால்வர், திருமாளிகைத் தேவர், சேந்தனார், சேக்கிழார் சுவாமிகள், அருணகிரிநாதர், தாயுமான அடிகள், குமர குருபர சுவாமிகள், இராமலிங்க சுவாமிகள் ஆகிய இவர்கள் எல்லாம் திருக்கூத்துத் தரிசனப் பேறு பெற்றுச் சிதம்பர தலத்தின் மகிமையை எமக்கு உணர்த்திச் சென்ற சைவ ஞானிகளாவர்.

சென்ற 19 ஆம் நூற்றாண்டிலே சிதம்பர தல மகத்துவத்தைத் தமிழ் நாடெங்கணும் பரப்பிய பெருமை நந்தனார் கீர்த்தனைப் பாடல்கள் பாடிய கோபாலகிருஷ்ண பாரதியார் அவர்களைச் சார்ந்த தாகும். அவர்களைப் பக்தி நெறிக்கும் சிதம்பர தலத்திற்கும் செய்த தொண்டு அளவிடற்கரியது.

ஈழநாட்டிலே வாழும் சைவ மக்களாகிய எங்கள் சரித்திரம் சிதம்பர தலத்தோடு மிகவும் நெருங்கிய தொடர்புடையது.

முன்னொரு காலத்திலே எங்கள் நாட்டிலிருந்து ஓரரசனும், மந்திரியாரும் சிதம்பரஞ் சென்றார்கள் என்றும், அங்கு ஒரு பெரிய சமயவாதம் மணிவாசகப் பெருமானுடன் நடைபெற்ற தென்றும், சமய வாதத்தின் பின்னர் அந்த அரசனும் அவன் குடும்பத்தினரும், மந்திரிமாரும் சைவத்தைச் சார்ந்து சிவ தீட்சை பெற்று சிவவேடப் பொலி வினராய்த் திகழ்ந்தனரென்றும், அவர்களும் பெரும்பான்மை யோர் சிதம்பர தலத்தையே தமது வாசஸ்தலமாக மேற்கொண்டார்கள் என்றும் வருகின்ற பழைய வரலாறு எங்கள் ஈழநாட்டுச் சைவ சரித்திரத்தையும், சைவக் கொள்கைகளையும் உரு வாக்கியிருக்கிறது. சைவ சமயிகளாய் வாழ்ந்துவந்த

சிதம்பரம் என்றால்

சிதம்பரத்தின் பழைய வரலாறு
எங்கள் ஈழநாட்டுச் சைவ சரித்திரத்தையும்
சைவக் கொள்கைகளையும்
உருவாக்கி இருக்கிறது.

சைவ சமயிகளாய் வாழ்ந்து வந்த எங்கள்
முன்னோர்களுக்கும், எங்களுக்கும்
கோயில் என்றால் சிதம்பரமேயாகும்.

சமயாசாரியர் என்றால்
மாணிக்கவாசகசுவாமிகளே யாவர்.

வேதம் என்றால் திருவாசகமேயாகும்.

எங்கள் முன்னோர்கட்கும் எங்கட்கும் கோயில் என்றால் சிதம்பரமேயாகும். சமயாசாரியர் என்றால் மாணிக்கவாசக சுவாமிகளேயாவார். வேதம் என்றால் திருவாசகமேயாகும். இந்த ஈழநாட்டில் எங்கள் மத்தியில் நிலவிவரும் திருவாசகப் பயிற்சியும், மணிவாசகர் விழாக்களுமன்றோ, எங்களை ஓரள விலாயினும் இந்நாளைய விபரீத அரசியல் ஞானக் கருத்துகளில் இருந்தும் பாதுகாத்து வருகின்றன.

16ஆம் நூற்றாண்டிலே பரங்கியரின் கொடுங் கோலாட்சி இங்கு ஆரம்பித்த காலத்தில் இங்கிருந்து பெரியோர் பலர் சிதம்பரம் சென்றிருக்கின்றனர். அவர்களுள் முக்கியமானவர்கள் திருநெல்வேலியூர் ஞானப்பிரகாச முனிவர் அவர்களும், அளவெட்டியூர் வைத்தியநாத தம்பிரான் அவர்களும் ஆவர். அவர்கள் இருவருமே சிதம்பரத்திற்குச் சென்று ஞானப்பிரகாசத் திருக்குளத் திருப்பணியை ஆரம்பித்து, தமது ஆயுட் காலத்திலேயே அதனை நிறைவேற்றி வைத்த பெரி யோராவர். அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி நூற்றுக்கணக்கானோர் இங்கிருந்து சிதம்பரம் சென்று, கோயில் தொண்டு, பாடல் தொண்டு, ஞானத் தொண்டு முதலியன செய்துகொண்டும், மடங்கள் கட்டிப் பரிபாலனஞ் செய்துகொண்டும் சிதம்பர தலத்தோடு உள்ள தொடர்பையும் உரிமையையும் வளர்த்து வந்திருக்கின்றனர். ஆறுமுக நாவலர், சபா பதி நாவலர், அம்பலவாண நாவலர், மட்டுவில் வேற்பிள்ளை ஆசிரியர், செப்பறைச் சுவாமிகள், இலக்கணச் சுவாமிகள், தட்சிணாமூர்த்தி சுவாமிகள் முதலிய தவச் செல்வர்கள் வருடக்கணக்கில் சிதம்பரத்திலிருந்து ஆற்றிய தமிழ்ப்பணி, சமயப்பணி, ஞானப் பணி முதலியவற்றைத் தமிழ்நாட்டு அன்பர்கள் பலர் இன்றைக்கும் நினைந்து நினைந்து மனம் உருகி வருகின்றனர்.

20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்த ஈழ நாட்டிலே வாழ்ந்துவந்த சைவ மக்களின் மனோ பாவத்திற் பற்பல மாறுதல்கள் ஏற்பட்டன. தாயகத்தின் தொடர்பும், ஆத்மீக நெறிச் சார்பும் சிறிது சிறிதாக அவர்கள் உள்ளத்திலிருந்து நழுவத் தொடங்கின. தொன்றுதொட்டு அவர்கள் சிதம்பரத்திலே சாதித்த எத்தனையோ ஆத்மீக சாதனைகள் கைவிடப்பட்டு வந்தன. சிதம்பர தல சேவையிற்கூட அவர்கள் சென்ற இரண்டு, மூன்று தலைமுறைகளாக மிகுந்த அலட்சியப் புத்தியினராகவே மாறி வந்திருக்கின்றனர். அதன் காரணமாக, சிதம்பரத்திலே நம் முன்னோர் அரும்பாடுபட்டுக் கட்டிய மடங்கள் யாவும் (சிவபுரி மடம், செவ்வாய்க்கிழமை மடம் நீங்கலாக) மிகுந்த பழுதுற்று அழிந்து ஒழிந்து போவதைக் கண்டிருந்தும், கேட்டிருந்தும் வாளா இருக்கப் பழகிக் கொண்டனர்.



சிதம்பர தருமத்திற்கெனத் தம் முன்னோர் ஒதுக்கிப் பேணை வைத்த, எத்தனையோ நன்செய் நிலங்களும், புன்செய் நிலங்களும், காணி பூமிகளும் தாய்நாட்டி லும், தம் நாட்டிலும் சில சுயநலமிகளால் விழுங்கப்பட்டிருப்பதைக் கண்டிருந்தும், கேட்டிருந்தும், கண்மூடிக் கிடக்கப் பழகிக்கொண்டனர்.

இவற்றையெல்லாம் நன்கு சிந்தித்து ஈழநாட்டி லுள்ள சைவக் கனவான்கள் சிதம்பர தல சேவைக்கென ஒரு சபையை நிறுவுதல் வேண்டும். அதன் மூலம் இந்த நாட்டினர்க்குச் சிதம்பர தலத்தோடு தொன்றுதொட்டு வளர்ந்துவந்த ஆத்மிகத் தொடர்பை உருவாக்கித் தருதல் வேண்டும். அந்த ஆத்மிகத் தொடர்பினால் மட்டுமே, இந்த ஈழநாட்டுத் தமிழர்கள் மத்தியில் அறநெறி நிலவும். அரசியலில் அமைதியும் வாய்க்கும். சிதம்பர தலமே எங்கள் பாரம்பரியமான சக்தி பீடம் என்பதையும், சேர். கொன். இராமநாதன், ஆறுமுகநாவலர் ஆகிய ஈழநாட்டுப் பெரியார் இருவரையும் உருவாக்கித் தந்த மூல நிலையம் என்பதையும் நாங்கள் மறக்கவொண்ணாது.

"தொன்றில்லை மன்றினுள் ஆடி போற்றி
இன்றெனக்கு ஆரமுது ஆனாய் போற்றி"

-திருவாசகம்.

யாழ்ப்பாணத்து ஸ்ரீ கணேசையர் நினைவு மலர் - 1960 இல் வெளிவந்த கட்டுரை. ○○○

திரு. மு. ஞானப்பிரகாம், எம்.எஸ்சி., அவர்கள், இலண்டன் பல்கலைக் கழகப் பட்டதாரி, யாழ்ப்பாணம் பரமேசுவரக் கல்லூரி ஆசிரியர், சைவ சித்தாந்த நூல்களை முறைப்படி கற்றவர். தமிழ், ஆங்கிலம், சமஸ்கிருதம் ஆகிய மும்மொழிகளிலும் வல்லவர். சமயகுரவர் நால்வரிடத்தும் பெரும்பக்தி கொண்டவர். சமய ஆசாரசீலர், சமயப்பிரசாரகர், தலதரிசனத்திலும் ஆர்வம் பூண்டு கால்நடையாக யாத்திரை செய்யும் பெருவிருப்புக் கொண்டு அவ்வாறே செய்துவருபவர். திருக்கேதீசுவர ஆலயத் திருப்பணியில் பெரும்பங்கு கொண்டு உழைப்பவர். பிற்காலத்தில் இவர் பரமேஸ்வரக் கல்லூரியில் அதிபராகவும் இருந்தவர்.

சிதம்பரம் ஒரு மறு தரிசனம்

சிதம்பரத்திலுள்ள ஈழமக்கள் சொத்துகள் மீட்புப் பணி தொடங்க வேண்டும்

சிதம்பர நடராஜர் ஆலயத்திற்கும், ஈழ மக்களுக்கும் உள்ள பழைமையான தொடர்பு பற்றிய கட்டுரை ஒன்று 1960 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட சைவ தமிழ்ப் பெரியார் கணேசையர் அவர்களின் நினைவு மலரில் (1960) வெளிவந்திருக்கிறது. ஈழகேசரிப் பொன்னையா நினைவு வெளியீட்டு மன்றம் இம்மலரை வெளியிட்டுள்ளது. குரும்பசிட்டி, தெல்லிப்பழையைத் தலைமையகமாகக் கொண்ட இம்மன்றத்தின் செயலாளராகக் கலைப்புலவர் க. நவரத்தினம் அவர்கள் பணிபுரிந்துள்ளார்.

250 பக்கங்களைக் கொண்டதாக அமைந்திருக்கும் கணேசையர் நினைவு மலரில் அந்த நேரத்தில் ஈழ மக்களின் பாராட்டுப்பெற்ற பல அறிஞர்கள் தமது படைப்புகளை வெளியிட்டுள்ளனர். பண்டித வித்துவான் கா.கி. நடராஜன், வித்துவான், எப்.எக்ஸ். ஸி. நடராசா, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பண்டிதர் கா.பொ. இரத்தினம், வண. சேவியர் தனிநாயக அடிகளார், மு. ஞானப்பிரகாசர், நவாலியூர் சோமசுந்தரப் புலவர் உட்பட இன்னும் பலருடைய படைப்புகள் இம்மலரில் உள்ளன.

சிதம்பரம் சென்ற பெரியோர்களில் முக்கிய மானவர்கள் திருநெல்வேலி ஞானப்பிரகாச முனிவர் அவர்களும், அளவெட்டியூர் வைத்தியநாத தம்பிரானு மாவர். அவர்களிருவருமே சிதம்பரத்துக்குச் சென்று ஞானப்பிரகாசர் திருக்குளத் திருப்பணியை ஆரம் பித்துத் தமது ஆயுட் காலத்திலேயே அதனை நிறை வேற்றி வைத்த பெரியோராவர்.



அவர்கள் அடிச்சுவட்டைப் பின்பற்றி நூற்றுக் கணக்கானோர் சிதம்பரம் சென்று கோயில் தொண்டு, திருவீதித் தொண்டு, பாடல் தொண்டு, ஞானத் தொண்டு முதலியன செய்துகொண்டும், மடங்கள் கட்டிப் பரிபாலனம் செய்துகொண்டும் சிதம்பர தலத்தோடுள்ள தொடர்பையும், உரிமையையும் வளர்த்து வந்திருக்கின்றனர்.

சிதம்பரத்தில் நம் முன்னோர்கள் அரும்பாடு பட்டுக் கட்டிய மடங்கள் யாவும் (சிவபுரி மடம், செவ்வாய்க்கிழமை மடம் நீங்கலாக) மிகுந்த பழுதுற்று அழிந்து ஒழிந்து கொண்டிருப்பதைக் கண்டும் கேட்டிருந்தும் வாளா இருக்கப் பழகிக்கொண்டனர்.

சிதம்பர தருமத்திற்கென நம் முன்னோர் ஒதுக்கிப் பேணிவைத்த எத்தனையோ நன்செய் நிலங்களும், புன்செய் நிலங்களும், காணி பூமிகளும் தாய் நாட்டிலும், நம் நாட்டிலும் சில சுயநலமிகளால் விழுங்கிக் கொண்டிருப்பதைக் கண்டிருந்தும், கேட்டி ருந்தும் கண்மூடிக் கிடக்கப் பழகிக் கொண்டனர். இனியாவது சிதம்பரத்துடனான ஆத்மீகத் தொடர்பை உருவாக்கித் தரல்வேண்டும்.

இவ்வாறு அந்தக் கட்டுரையில் 47 வருடங் களுக்கு முன்னர் வேண்டுகோள் விடுத்திருக்கிறார் கட்டுரையாளரான மு. ஞானப்பிரகாசம் அவர்கள்.

இன்று எம்மத்தியிலுள்ள சமய நிறுவனங்களும், ஆலயங்களும், சமயத்தோடு சம்பந்தப்பட்ட இதர நிறுவனங்களும் இக்கட்டுரையில் தெரிவிக்கப்பட் டிருக்கும் விஷயங்கள் பற்றி மறு பரிசீலனை செய்து நமது பழைமையான தொடர்பை மறுபடியும் ஆரம் பிக்கும் முயற்சிகளை மேற்கொள்ள முன்வர வேண்டு மென அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் கேட்டுக்கொள்கிறது. ○○○

மு. ஞானப்பிரகாசர் அவர்கள் "சிதம்பரம்" என்னும் தலைப்பில் எழுதிய கட்டுரை ஈழ மக்களுக்கும், சிதம்பரத்துக்கும் உள்ள பழம் பெருமைவாய்ந்த தொடர்புகளை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது. இன்றைய பரிசீலனைக்குரிய அரிய கருத்துகள் இதில் தெரிவிக்கப்பட்டிருப்பதால் இங்கே பிரசுரம் செய்கிறோம். சைவ அன்பர்களின் கவனத்துக்கெனக் கட்டுரையின் சில பகுதிகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

ஆசிரியர்



இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகளை உலக அரங்கில் பரப்பிய ஈழத்து இந்துசமயப் பெரியார்கள்

திரு. ப. கணேசலிங்கம்,
முதுநிலை விரிவுரையாளர், இந்து நாகரிகத் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

இந்துப் பண்பாட்டின் அடிப்படை அம்சங்களை விளங்கிக் கொள்வதற்குப் பயன்படும் மூல நூல்களை ஆராய்வதிலும், படிப்பதிலும், சிந்தனை களைப் பரப்புவதிலும் மேல்நாட்டவர்கள் கொண்ட ஈடுபாடு அண்மைக்காலப் போக்கில் நாம் காணும் சிறப்பம்சங்களில் ஒன்றாகும். இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டோரில் அமெரிக்க, ஆங்கிலேய, ஜேர்மானிய, பிரஞ்சு ஆகிய நாட்டைச் சேர்ந்த அறிஞர்களின் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கது.

ஈழநாட்டைச் சேர்ந்த அறிஞர்களும் குறிப்பாக யாழ்ப்பாணப் பிரதேசத்தைச் சார்ந்த அறிஞர்கள் சைவ (இந்துப்) பண்பாட்டுச் சிந்தனைகளை உலக அரங்கில் பரப்பி, ஈழநாட்டுக்கே புகழ் சேர்த்துள்ளார்கள். இவ்வறிஞர் பெருமக்கள் பண்பாட்டு மரபுகளைத் தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளில் மட்டு மல்லாது, மேல்நாட்டவர்கள் அறிந்து கொள்ளும் விதத்தில் ஆங்கிலமொழி மூலம் அச்சிந்தனையைப் பரப்ப, மொழிபெயர்த்தும், விளக்கக் கட்டுரைகள் எழுதியும் பண்பாட்டுச் சிந்தனைகளை நன்கு பரப்ப வழிசெய்துள்ளார்கள். இந்தியச் சிந்தனை மரபுகளை வெளி உலகுக்குப் பரப்பிய பெருமை வெளிநாட்டவர்கள், இந்திய நாட்டவர்கள், ஈழநாட்டவர்கள் ஆகிய முத்தரப்பினருக்கும் உண்டு.

கிழக்கிலும் மேற்கிலும்

இந்தியாவிலும் ஈழத்திலும் புகழீட்டிய சான்றோர்களில் சிலர் கிழக்கிலும், மேற்கிலும் மேற்கொண்ட பண்பாட்டுப் பணிகள் பற்றி ஆராய்வது அவசியமாகின்றது. இந்தியாவில் சுவாமி விவேகானந்தர், டாக்டர் இராதாகிருஷ்ணன், ஸ்ரீஅரவிந்தர், வங்கக் கவிஞர் இரவீந்திரநாத தாகூர், அன்னி பெசன்ட் அம்மையார், சகோதரி நிவேதிதா போன்றோர் குறிப்பிடத்தக்கவர்கள். இலங்கையைப் பொறுத்தமட்டில் சேர் கு. முத்துக்குமாரசுவாமி (1834-1879), சேர். பொன். இராமநாதன் (1851-1930), சேர். பொன்னம்பலம் அருணாசலம் (1853-1924), மல்லாகம் வி. கனகசபைப் பிள்ளை (1185-1906) குகதாசன் ச. சபாரத்தினம் முதலியார் (1863-1922), கலாயோகி டாக்டர் ஆனந்தகுமாரசுவாமி (1877-1953), மட்டக் களப்பு சுவாமி விபுலானந்த அடிகள் (1892-1947), திருமதி. இரத்தினா நவரத்தினம் (1911-1993), கலைப்புலவர் க. நவரத்தினம் (-- -1962) ஆகியோரின் பணிகள் குறிப்பிடற்பாலன. கிழக்குலகில் மாத்திரமின்றி மேற்குலக மக்களும் நன்கு பாராட்டும் வகையில் இப்பெரியார்கள் இந்துப் பண்பாடு

ஈழநாட்டைச் சார்ந்த இந்துச் சமய அறிஞர்கள் இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகளைத் தென்னகத்தில் மட்டும் பரப்பி பணிசெய்ததோடு மட்டுமல்லாது உலக அரங்கிலும் இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகளை பரப்பி அதன் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் காலந் தோறும் உறுதுணையாக இருந்து வந்துள்ளனர். ஒளியிழந்து இருந்த இந்தியக் கலைப் பொக்கிஷத்தின் தத்துவத்தை ஆய்வுசெய்து அகிலம் அறியச்செய்த பெருமைக்குரியவர் ஈழத்தவராகிய கலாயோகி ஆனந்த குமாரசுவாமி அவர்கள். இந்திய இலங்கை மக்கள் மட்டுமல்லாது சர்வதேச மக்களும் நமது பாரம்பரியமான கலைகளை உணர்ந்து நயக்கும்படி அச்சிந்தனை களை ஆங்கில மொழி மூலம் மற்றவர்களை அறிய வைத்தவர் இவர்.

சைவத்துக்கும் தமிழுக்கும் ஓர் ஆறுமுக நாவலரையும், தமிழிசைக்கு ஒரு விபுலானந்தரையும், கலை களுக்கு ஓர் ஆனந்தக் குமார சுவாமியையும் தந்த பெருமைக்குரியது ஈழமண்.



விழுமியங்களை உலகளாவிய நிலையில் மேன்மையுறச் செய்தனர்.

சைவ சித்தாந்தம் பற்றிய ஆங்கிலக் கட்டுரை

கி.பி. 1857இல் சேர் கு. முத்துக்குமாரசுவாமி அவர்கள் றோயல் ஏசியற்றிக்கழக இலங்கைக் கிளைச் சஞ்சிகையில் "Synopsis of Saiva Siddhanta" (சைவசித்தாந்தச் சுருக்கம்) என்ற தலைப்பில் அமைந்த கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். ஆங்கிலத்தில் சைவ சித்தாந்தம் பற்றி முதன்முதலாக வெளியாகிய ஆராய்ச்சி விளக்கக் கட்டுரை இதுவேயெனக் கூறப் படுகின்றது. "The Culture of the Soul among the Western Nations' (மேலை நாட்டார் உள்ளத்தின் பண்புநிலை) என்ற சேர். பொன். இராமநாதனது நூல் சைவ சித்தாந்த அடிப்படையில் எழுதப்பட்டதென ஜேர்மன் நாட்டைச் சார்ந்த சமயப்பிரசாரராகிய எச்.டபிள்யூ. சோமறஸ் (H.W. Schomerus) என்னும் பெரியார், தான் இந்தியாவில் வாழ்ந்த காலத்தில், சைவ சித்தாந்தம் (Saiva Siddhanta) என்னும் தலைப்பில் ஜேர்மன் மொழியில் 1912 ஆம் ஆண்டில் எழுதிய நூலில் கூறியுள்ளார். மேலும் அழைப்பிற்கு இணங்க அங்கு சென்ற சேர். பொன். இராமநாதன் ஆற்றிய சொற்பொழிவுகள் யாவும், சைவ சித்தாந்த அடிப்படையில் அமைந்தவை என்பது முக்கியமாக இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

விவேகானந்தரின் வேதாந்தம்

இந்துசமயத் தத்துவக் கருத்துகளை உலகளாவிய ரீதியிலே முன்னெடுத்த மூத்த சமய அறிஞர்களிலும் சேர். பொன். இராமநாதன் குறிப்பிடத்தக்கவர். சம காலத்திலே சுவாமி விவேகானந்தர் உலகளாவிய ரீதியிலே இந்துசமயம் தலைநிமிர்ந்து நிற்கும் வகையில் சிக்காகோவில் நடைபெற்ற சர்வதேச சமய மகா நாட்டிலும் பின்னர் செய்த சொற்பொழிவுகளிலும், பிறவற்றாலும் சிறப்புப் பெற்றார். அவர் பெரும்பாலும் வேதாந்தத்தையே முன்வைத்தார். ஆனால் இராமநாதன் தமது அமெரிக்க மேற்கு ஐரோப்பிய பிரயாணங்களின்போது, சைவ சமய சிந்தனைகளையும் முன்வைத்தார். விவேகானந்தரைப் போலவே இவரையும் பல மேல்நாட்டுச் சிஷ்யர்கள் நாடிவந்து ஞானோபதேசம் பெற்றனர். அப்படியானவர்களில் அமெரிக்கரான மைரன் பெலப்ஸ், அவுஸ்திரேலியரான எல்.ஆர். ஹரிசன் அம்மையார் போன்றோரைக் குறிப்பிடலாம்.

1800 ஆண்டுகளுக்கு முந்திய தமிழ்

ஆங்கில மொழி மூலம் சைவ சமய, தமிழர்களின் தொன்மையான சிறப்புகளை உலகறியச் செய்தவர்களுள் யாழ்ப்பாணத்து சைவத் தமிழறிஞர்களுள் மல்லாகம் வி. கனகசபைப்பிள்ளை (1855-1906) குறிப்பிடத்தக்கவர். பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே வி. கனகசபைப்பிள்ளையின் சிந்தையில், தமிழ்மொழியின் பழைமையான இலக்கியச் சிறப்பையும், தமிழர்களின் தொன்மையான உண்மை வரலாற்றையும், ஊரறிய, உலகறியச் செய்ய வேண்டுமென்ற மன எழுச்சியால், மெட்ராஸ் ரெவ்யூ (Madras Review) என்ற ஆங்கிலப் பத்திரிகையில் 1895 முதல் 1901 ஆம் ஆண்டுவரை, ''1800 ஆண்டுகளுக்கு முன்னர் தமிழர்'' (The Tamils Eighteen Hundred Years Ago) என்ற ஓர் அரிய தொடர்கட்டுரையை எழுதினார். வரலாற்றுணர்வுக்கும், கல்வெட்டாய்வுக்கும், இலக்கிய, சமய சமுதாய வாழ்வின் ஞானச் செறிவுக்கும், பண்பாட்டறிவுக்கும் உற்ற துணையாய், தூண்டுகோலாய் அமைந்த கட்டுரையைக் கற்றறிந்த சான்றோர் போற்றி, கனகசபைப்பிள்ளையின் நுண்மாண் நுழை புலத்தை வியந்தனர். இது போன்றோர் ஆய்வு இது வரை வெளிவந்ததில்லை என்றும், இதேபோலொரு கருத்துரையால் தமிழின், தமிழரின் பெருமையை உலகறிந்தது என்றும் தமிழறிஞர் உலகம் உவந்து பாராட்டியது.

ஆங்கிலத்தில் சஞ்சிகை

இந்துசமயப் பெரியார்களுள் குகதாசர் ச. சபாரத்தின முதலியார் குறிப்பிடத்தக்கவர். இவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை நிறைந்தவராக விளங்கினார். இந்துசமய வளர்ச்சிக்கு இவர் அரிய பல தொண்டுகள் செய்துள்ளார். சித்தாந்த சைவ அறிவைப் பரப்பி வளர்க்கும் பொருட்டு, ''சித்தாந்த தீபிகை'' என்ற ஆங்கிலச் சஞ்சிகை ஒன்றைத் தென்னாட்டில் திறம்பட நடத்தி வந்தவர். சைவத்திரு. ஜே.எம். நல்லசாமிப்பிள்ளை அவர்களாவர். அச்சஞ்சிகையில் சைவப்பெரியாராகிய கொக்குவில் குகதாசர் ச. சபாரத்தின முதலியார் சைவம் பற்றிப் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்கள். இவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் புலமை நிறைந்து விளங்கினார். சைவசமய வளர்ச்சிக்கு இவர் அரிய பல தொண்டுகள் ஆற்றினார். இவர் ஆங்கிலத்திலே Essentials of Hinduism (இந்து சமயத்தின் பிரதான அம்சங்கள்) Philosophical Saivaism. Life of Thirugnanasambanthar என்ற நூலும், பண்டைத் தமிழர் சமயம் வைதீக சைவமே என்ற கொள்கையைத் தக்க பல ஆதாரங்களுடன் விளக்கிக் காட்டி, Religion of the Ancient Tamils (பண்டைத் தமிழர் சமயம்) என்ற நூலும் சைவ உலகம் முன்வரிசையில் வைத்தெண்ணப்பட வேண்டிய நூல்களாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில், சார்லி

பிரட்லா (Charley Bradlaugh) போன்ற ஆங்கில எழுத்தாளர் பலர். பொருள் முதல்வாதக் கொள்கையை (Materialism) முன்னிறுத்தி கடவுள் மறுப்புக் கொள்கையைப் (நாத்திகத்தை) பரப்பினார்கள். இதனை எதிர்த்துப் பல கட்டுரைகளை இளமையிலே சபாரத்தின முதலியார் எழுதினார். இக்கட்டுரைகள் பின்னர் ஈசுரநிச்சயம் (1889) என்ற பெயரில் நூலாக வெளிவந்தது. சபாரத்தின முதலியாரின் நூல்கள் பலவுக்கும் முக்கிய காரணமாக அமைந்தது அன்றுள்ள பிறமதத்தவரின் (கத்தோலிக்கரின்) சைவநிந்தனையாகும். அவர்களின் அவதூறுகளையும் பொய் புனைந்த கட்டுரைகளையும் எதிர்த்துத் தர்க்கரீதியாகப் பல கருத்துகளை சபாரத்தின முதலியார் முன்வைத்து, இந்துசமய உண்மையினை நிலைநாட்டினார். இவற்றில் விஞ்ஞான ரீதியாக எழுதப்பட்ட கட்டுரைகளும் உண்டு. முதல் குறிப்பிட்ட நூலில் உள்ள Conflict with Science என்ற கட்டுரை இவரின் விஞ்ஞான நோக்குக்கும் அறிவுக்கும் நல்ல ஒரு எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.



கலைத் தத்துவத்தில்

ஆனந்த குமாரசாமி

அருள்மயமான இந்தியக் கலைகளின் தத்துவத்தை விளக்குவார்கள். ஒளியிழந்து இருந்த காலை அதனை ஆராய்ந்து அகிலம் அறியச்செய்த பெருந்தகை, கலாயோகி டாக்டர் ஆனந்தக் குமாரசுவாமி அவர்களாவர். அன்னாரது ஆராய்ச்சித் திறத்தினால்தான் உலகம் இன்று இந்தியக் கலையை, சமயத்தை, பண்பாட்டைப் போற்றுகிறது. எனினும், இச்சீரிய பணியைச் செய்த அறிஞருக்கு உரிய மதிப்பைக் கொடுக்க இந்தியக் கலை விற்பன்னர்கள் தவறிவிட்டனர். தமிழுக்கு ஓர் ஆறுமுகநாவலரையும், தமிழிசைக்கு ஒரு விபுலானந்தரையும், கலைகளுக்கு ஓர் ஆனந்தக் குமாரசுவாமியையும் அளித்தது ஈழத் தமிழகமாகும்.

கலாயோகி ஆனந்தக் குமாரசுவாமி அவர்கள் இந்துக்கலைக் (சைவக்) கோட்பாடுகளை இந்திய, இலங்கை மக்களுக்கு மட்டுமல்லாது சர்வதேச மக்களும் உவந்து நயக்கும்படி அச்சிந்தனைகளை ஆங்கில மொழி மூலம் எழுதி வெளியிட்டார். கலாயோகி அவர்கள் கலைகள் மூலம் சமயத்தையும் ஆன்மீகத்தையும் வளர்க்க முயன்றதே பிரதான பணியாக இருந்தது. இந்துப் பண்பாட்டுப் பரிமாணத்தை வெளி உலகுக்கு அறிமுகம் செய்த நூல்களுள் அவரது சிவானந்த நடனம் என்ற நூல் (The Dance of Siva) குறிப்பிடத்தக்கது.

புலோலிச் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களால் எழுதப்பட்டு இலண்டனில் அச்சிடப் பட்டு வெளியாகி, Saiva School of Hinduism (இந்து சமயத்தில் சைவக் கொள்கை, என்ற நூலும், Glories of Saivaism (சைவத்தின் மாட்சி) ஆகிய இரு நூல்களையும் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை வெளியிட்டது. 1948 ஆம் ஆண்டில் சைவப்பெரியார் சு. சிவபாத சுந்தரம் அவர்களைத் தருமபுர ஆதீனத்தினர் தமிழ் நாட்டுக்கு அழைப்பித்து, சைவத்திரு. ஜே.எம். நல்ல சாமிப்பிள்ளை அவர்களது சிவஞான சித்தியார் மொழிபெயர்ப்பைத் திருப்பிப் பார்வையிடுவித்துத் திருத்தியும், புதுப்பித்தும் வெளியீடு செய்தனர். An out line of Sivagnanabotham with a Rejoinder to a Christian Critic - 1951 என்ற இவரது வெளியீடு, சமய தத்துவம் பயிலும் யாவரும் கட்டாயமாகக் கற்க வேண்டிய நூலாகும்.

தர்க்க ரீதியாகவும் தெளிவாகவும் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஒரு நூல் "The Saiva School of Hinduism" இதனை இங்கிலாந்திலுள்ள "George Allen and Unwin Ltd" என்னும் உலகப் புகழ்பெற்ற பிரசுர நிறுவனம் 1934 இல் பதிப்பித்தது.

கிறிஸ்தவ பிரச்சாரத்திற்கு மறுப்பு அறிக்கை

கொக்குவில் ச. சபாரத்தின முதலியார் போன்று சிவபாதசுந்தரமும் அன்றிருந்த கத்தோலிக்க கிறித்தவ மதத்தினரின் சைவத்திற்கெதிரான கருத்துகளையும் பிரசாரங்களையும் மறுப்பதற்காக எழுதியவை பலவயலெற் பரஞ்சோதி என்ற பெண்மணி தனது முனைவர் பட்டத்திற்கான ஆய்வுப்பொருளாக ''சைவ சித்தாந்தம் (Saiva Siddhanta) என்ற தலைப்பில் எழுதினார். இது நூலாக வெளிவந்தது. பிறமதத்தினரால் முதன்முதல் சைவ சித்தாந்தத்தில் செய்யப்பட்ட முனைவர் பட்டத்துக்கான ஆய்வு இதுவாகும். இதில் பல தவறான சித்தாந்தத்துக்கு முரணான கருத்துகள் இருந்தன. இதற்கு ஒரு மறுப்பெழுதி உண்மையை விளக்கத் தகுந்த அறிஞர் சிவபாதசுந்தரம் என்று தமிழகத்திலுள்ள தருமபுர ஆதீனம் கருதியது. இந்த ஆதீனத்தின் வேண்டுகோளின்படி அவர் எழுதிய நூல் "An outline of Sivagnanabotham with 3 rejoinder to a Christian Critic" இதுவும் அவரின் பிறநூல்களும் கட்டுரைகளும் பல நூல்களை ஆய்ந்து சிந்தனைத் தெளிவுடன் எழுதப்பட்டவை.

சுவாமி விபுலானந்தர் இந்திய நாட்டுத் தமிழகத்தில் வாழ்ந்த காலப் பகுதியிலே ஸ்ரீ இராம கிருஷ்ண விஜயம் எனும் தமிழ் இதழுக்கும், வேதாந்த

கேசரி எனும் ஆங்கிலத் திங்கள் வெளியீட்டிற்கும் ஆசிரியர் ஆனார். சுவாமிகளின் பேரறிவுத் திறத்தையும், பெருங்கருணை இயல்பினையும் ஸ்ரீ இராம கிருஷ்ண மிஷன் முழுமையாகப் பயன்படுத்திக் கொண்டது.

தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றுடன் இலத்தீன், யவனம், வங்கம், சிங்களம், அரபி முதலாய பன்மொழிப் புலமை பெற்றிருந்த சுவாமி விபுலானந்தர், ஆங்கிலவாணி, விவேகானந்த ஞானதீபம், கர்ம யோகம், ஞானயோகம் முதலிய பலமொழி பெயர்ப்பு நூல்களை ஸ்ரீ இராமகிருஷ்ண மடாலயத்தின் வாயிலாக வெளியிட்டுள்ளார். பிரபுத்தபாரத எனும் இதழிற்கு ஆசிரியராக சுவாமிகள் இருந்தார்.

ஆங்கிலத்தில் மெய்கண்ட சாத்திரங்கள்

மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பதுடன், சுவாமி விவேகானந்தர் வேதாந்தக் கொள்கைகளை மேலைநாட்டில் பரப்பியது போன்று, சைவசித்தாந்தக் கொள்கைகளையும் அங்கு பரப்பும் பணிகளில் ஈடுபட்டுழைக்கும்படி தருமை ஆதீனத்தில் அருளாட்சி புரிந்து வந்த இருபத்தைந்தாவது குரு முதல்வர் கலைக்குருமணி அவர்கள். விபுலானந்த அடிகளை 1944 ஆம் ஆண்டில் கேட்டிருந்தார்கள். விபுலானந்த அடிகளும் அப்பணியில் ஈடுபட இசைவுபட்டு அதற்கேற்ப அம்முயற்சிகளில் ஈடுபட இருந்தனர் எனவும் அதற் கிடையில் அவர் மரணித்துவிட்டார் என அறிய முடிகின்றது. விபுலானந்த அடிகள் மேற்கொள்ளவிருந்த முயற்சி கைகூடியிருப்பின், சைவசித்தாந்த அடிப்படையிலமைந்த விபுலானந்த சபைகள் பல உலகநாடுகளில் தோன்றியிருக்கக் கண்டு சைவ உலகம் உவந்து நயந்திருக்கும் என்பதில் எவ்விதமான ஐயமுமில்லை.

திருமதி. இரத்தினா நவரத்தினம் அவர்கள் ஈழத்து-யாழ்ப்பாணத்தில் பிறந்தார். இந்தியா-சென்னை, அண்ணாமலை, இலண்டன் பல்கலைக் கழகங்களில் கல்வி பயின்றார். ஈழத்தில் கல்வித் துறையில், கல்விப் பணிப்பாளராகப் (Director of Education) பணியாற்றினார். உலகளாவிய கருத்தரங்குகள் பலவற்றில் பங்குபற்றி இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகளை உலக அரங்கில் பரப்பிய ஈழத்துப் பெண்புலவர் என்ற சிறப்பினைப் பெற்றவர். அம்மையார் தாளாண்மை மூலமும் மொழிப்புலமை மூலமும் இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகளைப் பரப்பிய சிறந்த சிந்தனையாளராக விளங்கினார்.

அம்மையார் எழுதிய நூல்களாக "Thiruvachakam - the Hindu Testament of Love", "The vision of Siva in Periyapuranam", "Siddhanta Saivam in Essence and Manifestation", "Kartikeya the Hindu Testament of Love", என்பன விளங்குகின்றன. ஆங்கிலத்தில் திருவாசகத்தை முதன்முதல் 1900 ஆம் ஆண்டில் மொழிபெயர்த்தவர் டாக்டர் ஜி.யு.போப். இந்நூலின் மறுபதிப்பு சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் வெளியிடப்பட்டது. 1934 ஆம் ஆண்டில் வேதமுத்து என்பவரினால் திருவம்மானையும், திருச்சாழலும் மொழிபெயர்க்கப்பட்டன. இதனை வெளியிட்டவர்கள் சென்னை கிறிஸ்தவ சங்கத்தார் 1958 ஆம் ஆண்டில் கே.எம். பாலசுப்பிரமணியத்தின் மொழிபெயர்ப்பு வெளியாகியது. இவ்வரிசையில் 1963 ஆம் ஆண்டு திருமதி. இரத்தினா நவரத்தினம் என்பவரால் திருவாசக விளக்கம் என்னும் நூல் வெளியிடப்பட்டது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

வளர்ச்சியும் உயர்ச்சியும்

திருமதி இரத்தினா நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய 256 பக்கங்களைக் கொண்ட திருவாசக விளக்கம் என்னும் நூல் பம்பாய் பாரதிய வித்தியா மணியில் வெளியிடப்பட்டது. சில பாடல்களில் மொழிபெயர்ப்பும் பிற பாடல்களின் விளக்கமும் சேர்ந்து திருவாசகம் எவ்வாறு சிறந்த ஒரு பக்தி நூல் ஆகின்றது என்பதனை நயம்படச் சிறப்பாக எடுத்துக்காட்டும் நூல் இதுவாகும். இவ்வம்மையாரும் "A New Approach to Tiruvachgam" 1971 இல் அண்ணாமலை பல்கலைக்கழக இரண்டாம் பதிப்பாக வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

சிந்தனைகளின் வளர்ச்சி

இந்துப் பண்பாட்டுச் சிந்தனைகளை உலக அரங்கில் பரப்பியவர்கள் வரிசையில் யாழ்ப்பாணம் வண்ணார்ப்பண்ணையிலே தோன்றிய கலைப்புலவர் க. நவரத்தினம் முக்கியமான இடத்தினை வகிக்கின்றார். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் ஏறக்குறைய முப்பத்தெட்டு ஆண்டுகள் வரை ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தவர். 'கலாநிலையம்' என்னும் இலக்கிய வளர்ச்சித் தாபனத்தினை யாழ்ப்பாணத்தில் நிறுவி ''ஞாயிறு'' என்னும் உயரிய செந்தமிழ்த் திங்கள் வெளியீட்டினைச் சிறந்த முறையில் வெளியிட்டு வந்தவர். கலைப் புலவரின் நூல்களை முக்கியமாக சமயம், கலை, வாணிபத்துறை என முத்திறத்திற் காணலாம். சமயநூல்களாக Bhagavad Gita-A study, Advaitavedanta, Saiva Siddhanta, Hindu Temple Reform, Hinduism in Ceylon from the earliest times ஆகியன விளங்குகின்றன. ஆங்கில மொழி மூலம் வெளியிடப்பெற்ற இந்துக்கலை நூல்களாக Arts and Crafts of Jaffna, Development of Art in Ceylon, Religion and Art, A first Book of Indian Music, Veena Tutor ஆகியனவற்றைக் குறிப்பிடலாம். ○○○

சிதம்பரம்
நடராஜர் ஆலயம்



வெம்பிளி நடராஜர் திருக்கோயில்

இலண்டன் மாநகரில் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த வெம்பிளி என்னும் இடத்தின் மத்தியில் நடராஜர் ஆலயம் புதிதாக அமைக்கப்பட்டு சைவாகம விதிக்கமைய பூசை வழிபாடுகள் ஒழுங்காக நடைபெற்று வருகின்றன.

London Borough of Brent Council என்னும் உள்ளூர் ஆட்சிச் சபையின் நிருவாக எல்லைக்குள் இந்த நடராஜர் ஆலயம் அமைந்துள்ளது.

பலவாறான முக்கியத்துவங்களைக் கொண்ட இடத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. அவற்றைக் கவனிப்போம்.

1. வெம்பிளி சென்ட்ரல் (Wembley Central) என்னும் புகையிரத நிலையத்திலிருந்து மூன்று நிமிட நேரத்தில் நடந்து சென்று ஆலயத்தை அடைந்துவிடலாம்.

2. வெம்பிளி மத்திய புகையிரத நிலையத்திற்கூடாகச் சுரங்கப் பாதைப் புகையிரதங்களும் (Under Ground Trains). நிலத்தின் மேலால் செல்லும் தேசிய புகையிரதங்களும் (National Trains) இந்த இடத்தில் தங்கிச் செல்கின்றன. இந்தப் பிரயாண வசதியால் ஆலயம் அமைந்துள்ள இடம் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

3. இலண்டன் நகருக்குள் செல்லும் அனேகமான பேருந்துகளும் இவ்விடத்தின் ஊடாகவே போக்குவரத்தில் உள்ளன.

4. உலகில் மிகப் பெரியதும், நவீன வசதிகளைக் கொண்டதுமான வெம்பிளி உதைபந்தாட்ட ஸ்ரேடியம் (Wembley Stadium) ஆலயத்தின் அரைமைல் தூரத்தில்தான் உள்ளது. உதைபந்தாட்டப் போட்டிகளைப் பார்ப்பதற்குச் செல்லும் சுமார் ஒரு இலட்சம் உதைபந்தாட்ட ரசிகர்களில் குறைந்தது பாதிப்பேராவது நடராஜர் ஆலயத்தின முன்பாக நடந்து செல்கிறார்கள்.

இப்படி இன்னும் பல வசதிகள் உள்ள இடத்தில் எழுந்தருளியுள்ள நடராஜப் பெருமானுக்குத் தினமும் ஆறுகாலப் பூசை நடைபெற்று வருகிறது. இப்போது ஐந்து குருமார்கள் பூசைகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

புதிதாக வாங்கிய காணியில் ஆலயம் அமைக்கப்பட்டு நடராஜர் எழுந்தருளியுள்ளார். இந்த முக்கியமான இடத்தில் ஆலயம் அமைப்பதற்கான உள்ளூராட்சிச் சபையின் ஒப்புதல் கிடைக்குமென எவரும் எதிர் பார்த்திருக்காத போதிலும் எம்பெருமான் தற்போதைய இடத்தில்தான் எழுந்தருள வேண்டுமென உளம்பாலித்து ஆலயம் அமைக்கும் முயற்சியை மேற்கொண்டிருந்த திருமிகு சீவரத்தினம் ஐயா அவர்களுக்கு அருளாசி வழங்கியது ஒரு அற்புதமான செயலாகும்.

இப்பகுதியில் வாழும் மக்களில் அறுபது சதவிகிதத்தினர் இந்துக்கள். அவர்களின் வழிபாட்டிற்காக நடராஜப் பெருமான் எழுந்தருளி இருப்பது அருட் கருணையே ஆகும். ○○○



பராசக்தி ஆனந்தமடைந்த
ஒன்பது நாள்கள்





தட்சிணாயனம் என்று சொல்லப்படுகின்ற ஆடி முதல் மார்கழி வரையிலான ஆறுமாதமும் தேவர்களுக்கு இரவு நேரம். இந்த நேரத்தில் ஆதி பராசக்தி இறைவனைப் பூஜித்து வழிபடுகிறாள். எனவே, நவராத்திரி பூஜையின் பத்து நாள்களும் தேவலோகம் மற்றும் பூலோகத்தில் நடத்தப்படும் பூஜைகள் மிகுந்த சிறப்பு வாய்ந்தனவாகக் கருதப்படுகின்றன.

இமவானின் மகளாகப் பிறந்து பின்னர் சிவபெருமானை மணந்தாள் பார்வதி. என்னதான் உயர்ந்த பீடத்தில் இருந்தாலும் பாசம் சிலரைக் கட்டிப் போட்டுவிடும். மணமாகிக் கைலாயத்துக்குச் சென்ற பார்வதியைப் பார்க்கவேண்டுமென்று தாய்ப் பாசத்தோடு உருகினாள் இமவாணனின் மனைவி. பராசக்திக்கும் ஆசைதான். ஆனால், வெளிக்காட்டிக் கொள்ளவில்லை.

இதை அறிந்த சிவபெருமான், ''வருடத்தில் ஒன்பது நாள்கள் மட்டும் உன் தாயைப் பார்த்து விட்டுவர அனுமதியளிக்கிறேன். சென்று வா'' என அனுப்பி வைத்தார்.

பிறந்த வீட்டிற்கு வருவதென்றால் பிள்ளை களுக்குக் கொண்டாட்டம்தானே. மகிழ்ச்சியோடு பூவுலகிற்குப் பராசக்தி வருகை தந்து ஆனந்தம் அடைந்த ஒன்பது நாள்கள்தாம் நவராத்திரி விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஒன்பது நாள்களையும் மகாகாளி என்கிற துர்க்காவாக முதல் மூன்று நாள்களும், மகா லட்சுமியாக அதைத் தொடர்ந்த மூன்று நாள்களும், சரஸ்வதியாகக் கடைசி மூன்று நாள்களும் எனப் பிரித்து ஆதிபராசக்தி அருள்பாலித்தாள்.

பத்தாவது நாளன்று எடுத்த காரியம் வெற்றி பெறவும், கல்விச் செல்வம் பெறவும் குழந்தை களைப் பள்ளிக் கூடங்களில் சேர்த்து அட்சராப் பியாசம் (ஏடு தொடங்குவது அல்லது வித்தியா ரம்பம்) தொடங்கும் நாளாகவும் விஜயதசமித் திருநாளில் அருள்புரிந்து கயிலாயத்திற்குத் திரும்புகிறாள் பராசக்தி. ○○○

தேர் அமைப்புக் கலை


ஆலய தங்கத் தேர்

எமது ஆலயங்கள் பக்தி மார்க்கத்தை மட்டும் வளர்ப்பதுடன் நின்று விடவில்லை. கலை, கலாச்சாரப் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாப்பதிலும் தம்மை அர்ப்பணித்து வந்துள்ளன.

இலக்கியம், இசை, நடனம், சிற்பம், ஓவியம் முதலிய பலவும் ஆலயங்களிலிருந்து பிறந்தவையே.

கோயில்கள் ஆதி காலத்திலிருந்து வளர்த்துவந்த கலையில் ஒன்றாகத் திகழ்வதுதான் தேர் அமைப்புக் கலையாகும். ஊருக்கு ஊர், கிராமத்திற்குக் கிராமம் ஆலயங்களுக்குச் செல்ல முடியாத வயோதிபர்களும், நோயாளிகளும், விலக்கு உடையவர்களும் இருக்கிறார்கள். இப்படியானவர்களுக்குக் காட்சி கொடுக்க இறைவன் எழுந்தருள்வதுதான் தேர்த்திருவிழா வாகும்.

யானை, குதிரை, மயில் போன்ற வாகனங்களில் உற்சவர்கள் வீதி உலா வந்து மக்களுக்கு அருட்காட்சி தந்தனர். அதைத் தொடர்ந்து தேர் என்னும் வாகனமும் உருவாகியது. தேர் ஆலயம் போல் உருவமுடையது. ஆதலால் அத்தேரில் உற்சவர் தனது பரிவாரங்களுடன் எழுந்தருளிக் காட்சி தருவதாகக் கருதப்படுகிறது.

ரிக் வேத காலத்திலேயே தேரின் சில உறுப்புகள் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. ''மான சாரம்'' என்னும் ஒரு நூலில் தேர்பற்றிய இலக்கணம் இருப்பதாக அறியப்படுகிறது. சோழர் காலமான 10ஆம், 11ஆம் நூற்றாண்டில் தேர்த்திருவிழா நடந்ததற்கான கல்வெட்டு ஆதாரங்கள் உள்ளன.

ஒரு காலத்தில் கல்லினால் உருவாக்கம் பெற்ற தேர்கள் உபயோகத்திலிருந்தன. இன்று அது நின்று விட்டது. ஆனால் அழகிய கலை அம்சம் பொருந்திய தேர்கள் இன்று மரத்தினால் செய்யப்பட்டுவருகின்றன. ஆலயங்களில் உபயோகத்திலும் உள்ளன.

தேர் செய்வதற்கு இலுப்பை மரத்தை உபயோகிக்கிறார்கள். தேர் செய்வதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட கோயிலில் எழுந்தருளியுள்ள தெய்வத்தின் வரலாறு, முகத் தோற்றம், உயரம், கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளின் அகலம் போன்றவை கருத்தில் கொள்ளப்படுகின்றன. இதன் அடிப்படையில் தேரின் அகலமும், உயரமும் கணிக்கப்பட்டு கட்டும் வேலையை ஆரம்பிக்கிறார்கள். இலண்டன் மாநகர ரூட்டிங் பகுதியில் உள்ள பிரதான வீதிகளைத் தேரோடும் வீதிகளாக்கிக் கோலாகலமாக நீள்தூரப் பவனிவரும் இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்பாளின் திருத்தேர், பஜனை, கரகாட்டம், காவடி ஆட்டம், கும்மி, நடனம் தெய்வங்களைப் பிரதிபலிக்கும் சிறுவர்களின் அலங்காரக் காட்சி போன்றவைகளுடன் இத்தேர் உலா வருடா வருடம் நடைபெறுகிறது. முதலில் ''பூதப்பார்'' என்னும்

இலண்டன் மாநகர ரூட்டிங் பகுதியில் உள்ள பிரதான வீதிகளைத் தேரோடும் திருவீதிகளாக்கும் அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்பாளின் தேர் உலாக் காட்சி.





அடிப்பாகம் அமைக்கப்படுகிறது. அதைத் தொடர்ந்து ''அங்கணம்'' என்று சொல்லப்படும் மேல் தளங்கள் அல்லது அடுக்குகள் அமைக்கப்படும். இவ்வாறு மூன்று அடுக்குகள் இருக்கும். ஒவ்வொரு தளத்திலும் இன்ன இன்ன சிற்பங்கள்தாம் இருக்க வேண்டுமென்ற ஐதீகமும் உண்டு. முதல் தளம் நான்கு கோணங்கள் உடையது. அதன் முகப்புப் பகுதியில் தேர் செய்யப்படும் ஊரிலுள்ள உள்ளூர்த் தெய்வங்கள் செதுக்கப் படவேண்டும். அதற்கு நேர் எதிர் பின்பாகத்தில் முதலில் விடப்பட்ட தெய்வங்கள் செதுக்கப்பட வேண்டும். இரண்டாம் பாகத்தில் ஹிரண்ய சம்கார மும், நான்காம் பாகத்தில்பத்மாசுர சம்காரமும் இருக்க வேண்டும்.

இவை அமைக்கப்படாத பட்சத்தில் சுற்றிவர பத்து அவதாரங்களும் அமைக்கப்படலாம். இது பெரும்பாலும் பெருமாள் கோயில் தேர்களில் காணப்படும்.

தேரின் கம்பீரமான தோற்றம்


இரண்டாவது அங்கணம் எட்டுக் கோணங்களை உடையது. இதில் இராமாயணம் அல்லது மகாபாரதக் காட்சிகள் இடம்பெறலாம்.

மூன்றாவது அங்கணமும் எட்டுக் கோணங்கள் கொண்டவை. இதில் தசாவதாரத்தைச் செதுக்கலாம் என்பவர்களும் உண்டு. இதைத்தவிர ரங்கநாதர் பள்ளி கொள்ளல், பாற்கடல் கடைதல், சிவதாண்டவம் போன்றவை இடம்பெறலாம். இவற்றைத் தவிர, யாளி, கலவிச் சிற்பம், துவாரபாலகர்கள் உட்பட ஆலயத்துடன் சம்பந்தமான சிற்பங்களை அமைக்கலாம்.

அங்கணங்களுக்கு மேல் உற்சவ மூர்த்தியை அமர வைக்கும் பீடம் அமையும். இதைச் சிம்மாசனம் எனவும் அழைப்பர்.

ஒவ்வொரு அங்கணமும் ஏழரை அல்லது எட்டரை அங்குல உயரம் தான் இருக்கும். இதையே தேரின் அளவையாக ஏழரை அங்குலத் தேர் அல்லது எட்டரை அங்குலத் தேர் என அழைக்கிறார்கள். இப்படி இருக்கையில் தேருக்கு எப்படிக் கம்பீரமான தோற்றம் ஏற்றம் பெறுகிறதென்ற கேள்வி எழுகிறது.

பிரமாண்டமான சக்கரங்கள், அதன் மேல் கணிசமான அளவிற்குப் பூதப்பார், அதற்கு மேல் அங்கணங்கள், அவற்றுக்கிடையில் பளுவைத் தாங்கிக் கொள்ளக் கூடியதாக வைக்கப்படும் மூன்று மரப் பலகைகள், இப்படித்தான் தேரின் உயரம் வளர்கிறது. சக்கரத்தோடு அமைந்த அடிப்பாகத்திலிருந்து தொடங்கி மேலே உற்சவர் உட்காரும் சிம்மாசனம் வரை உள்ள மரவேலைப்பாடுதான் தேர். அதற்கு மேலேயுள்ள கோபுரம் போன்ற அமைப்பு அலங்காரக் கால் எனப்படும். அலங்காரக் கால்களுக்குப் பனைமரம் உபயோகிக்கப்படுகிறது. இந்தியாவில் சில



ஊர்களில் இப்போது இரும்புக் கம்பிகளைப் பயன்படுத்துகிறார்கள். தேரின் சக்கரங்கள்கூட உருக்கினால் வார்ப்பு செய்யப்படுவதாகவும் அறியவருகிறது.

தேரைப் பற்றிய பல நம்பிக்கைகள் உலா வருகின்றன. குழந்தைப் பாக்கியம் இல்லாதவர்கள் கணவன் மனைவியாகச் சென்று வடம்பிடித்தால் அப்பாக்கியம் கிட்டுமென்ற நம்பிக்கை உள்ளது. தேரின் ஒவ்வொரு அங்கணச் சட்ட ஓரங்களிலும் மணி கட்டுவதுண்டு. பக்தர்கள் தங்கள் பெயர்களை மணிகளில் பதித்துக் காணிக்கையாகக் கொடுத்துத் தேரில் கட்டுவிக்கிறார்கள்.

தேர் செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து ஒவ்வொரு கட்டத்திலும் அதற்குரிய பூசைகள் உண்டு. பூதப்பார் அமைக்கும்போது அதன் ஒரு பகுதி ஆலய வீதிகளில் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்படுவது வழக்கமாகும்.

தேர் கட்டும் வேலைகள் சில காலங்களுக்கு முன்னர் மந்த கதியில் இருந்த போதிலும் இன்று சுறுசுறுப்படைந்திருப்பதைக் காணலாம்.

போர் அனர்த்தம் காரணமாகப் புலம் பெயர்ந்து உலக நாடுகளுக்குச் சென்று வாழும் ஈழத் தமிழ் மக்கள் தாம் வசிக்கும் நாடுகளில் ஆலயங்களை அமைப்பதோடு நின்று விடாது தேர் அமைத்து தேர்த் திருவிழாக்களை நடத்தி வருகிறார்கள். சமய வாசனை அற்ற நாடுகளில் உள்ள வீதிகள் எல்லாம் தேரோடும் திருவீதிகளாக்கிக் கொண்டிருக்கின்றன.

இலண்டனிலுள்ள சுமார் பத்து ஆலயங்களில் தேர் உலா ஆரம்பமாகி உள்ளது. சில ஆலயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட தேர்கள் வீதி வலம் வருகின்றன.

தேர் அமைப்புப் பாரம்பரியத்திற்கு இது ஒரு புனிதமான வளர்ச்சிக் காலமாகும். ooo



Thought For Healthy Life

Dr. S. Gnanachelvan,
M.B.B.S., L.R.C.P. (UK),
M.R.C.S. (UK), M.R.C.O.G. (UK)



Health is the pre requisite for success in all aspects of life and for realising the four ideals that should guide a human's moral living, spiritual prosperity, fulfilling beneficial desires and liberation from grief. The human body is a unique creation and our main duty is to look after it.

It has been aptly said that ""health is wealth" and the basis of good health is the proper functioning of the digestive system.

"Eat in moderation and live long"

This is the advice handed down through the ages by the seers of the past. This advice is seldom needed. Many sages live in caves and get their food from air, fire and water and live on it. They enjoy very long life and this is the best example of the significance of food that we obtain from the external elements. Nowadays people fill themselves with such large quantities of food that they are unable to rise from the table. We are ruining our digestive system by consuming heavy rich foods which in turn leads to illness such as Obesity, Diabetes and Coronary Heart Disease. These illnesses are incresing in numbers everyday and large amounts of time and money are spent to control these illnesses in our modern world.

Food influences our mind and body. Expression of our soul is dependent on the body, and the body depends on food. So for proper spiritual development, a proper diet is a must for everyone. We have to eat in a prayerful mode, in profound gratitude. The "Gita" says that the fire which cooked the food is God, the meal is God, the eater is God, the purpose of eating is to carry on the work entrusted by God or pleasing to God and the fruit of the work is progress towards God. According to Hinduism, food is divided into three types, namely, Satvic, Rajasic and Tamasic.

Satvic or pious food is considered to be ideal for the health of the person. It is best because it purifies the mind and increases the internal strength and brightness. Satvic food develops positive feeling and also reduces luxurious nature. It develops internal and moral strength cures all the diseases and controls ageing.

Tamasic is the worst food of all. The food that is left over and contaminated is usually called Tamasic food. These foods are supposed to produce jealousy and greed among individuals.

Foods that consist of meat of animals are called Rajasic Food. Rajasic food also includes spices. These foods are supposed to produce activity and strong emotional qualities among individuals. Avoid food containing excess fat, as it is harmful for the body for example ghee - cheese and full cream milk.

Consumption of these food items should be controlled to avoid cholesterol which can lead to illnesses.


The affluent are proud when they host very costly banquets. Those who know that physical health is the greatest treasure take care to eat only Satvic foods. Satvic foods as they are easily digestible. These consist of fruits, nuts and vegetables.


Fruits, whole nuts, whole grain are purgative and cure constipation. Gram skin contains phosphorous which is beneficial. Wheat has 2 major qualities. It is easily digestible and is low hypoglycaemic index and good for diabetic patients. Fruits contain a lof of water and vitamins and easily digestible. Fruit diet is the best food. Sometimes fruit diet should be followed for improving health and maintaining weight. Current recommendation is to consume 5 portions of fruit a day (i.e. one portion is a slice of melon). Fruit and vegetable juice is very beneficial to health. Fruit juice taken during fasting cleaness the stomach. We have to consume a liberal amount of water daily and avoid excess consumption of tea, coffeee and cold drinks as they reduce our appetite and the sugar present in those beverages are harmful to the body.

Nuts are rich in protein and different nuts in combination give all the nitrition value to vegetarians.

Vegetables are good for health and those that grow above the ground are better than those which grow below the ground as they mainly consist of carbohydrates. Vegetables are good source of vitamins and minerals. Consumption of raw green vegetable is very good (salads). Also a vegetarian diet should include milk (semi or skimmed to reduce cholesterol) and unsaturated oil such as olive oil and sesame seed oil.











The body does not require over cooked food. Raw food fulfils all the body requirements. Raw foods prevent ageing, improve health and develop a disease fighting capacity. Fruits and raw vegetables are very beneficial for reducing weight, curing heart and stomach related diseases.

Irregular life style creates lots of problems. Nowadays we do not follow fixed timings for sleeping, waking up, eating and other activities of daily routine. This life style reduces our internal strength. We have to follow a fixed time for taking a bath for morning chores and eating foods. Time is precious and if we follow a fixed time routine, we can live longer and be healthy.

Also in this context I would suggest consumption of alcohol and smoking can cause damage to good health and it is better to avoid these in our life style.

Exercise is an essential part for our healthy life. Regular exercise raises our metabolism so that we burn calories even when we are resting. Exercise increases our blood flow, strengthening our blood vessels and our bones. This

will reduce heart problems, mental stress and prevent thinning of bones (osteoporosis). Exercising regularly 20 to 30 minutes each day, brisk walking, swimming, gently stretching exercises, yoga and meditation will improve our health. Laughing whole heartedly is complete nutrition for our body, mind and heart. It prevents heart problems and many other diseases, including stress, which is the biggest problem these days and is the result of our modern life style. Laughter has 3 advantages in our normal life.

1. It is the natural method to keep body health.
2. It is a good method to relieve stress.
3. It plays a good role in building, developing and maintaining relationships among ourselves.


Laughter lighters our mind, relieves the stress and is like nectar for health but what is important is to laugh with others instead of laughing at others.

All the religions of the world say that the body is the medium to reach God and a temple where he lives. We are enjoying this body on a rental basis and we pay rent in the form of worship of God and by singing His praise.

The second duty of a tenant is that he or she should not misuse the house (body) and keep it clean both from inside and outside and return it back to the owner when the time comes. If the tenant fulfils all the conditions of tenancy then the Owner rewards him after completing the scheduled period and declares him or her as His heir apparent.

We have to follow the rules of nature to remain healthy forever and we cannot achieve this if we act against nature. Nature works in its own way and those who go against it are punished severly, which is in the form of disease.

The body can be disease free only when we follow the divine rules. True happiness lies in a healthy body. We have to win over the sensory organs in order to obtain good health. The unjust sensory organs can be controlled automatically. The persons who controls his sensory organs can control the whole world and becomes a part of god. ○○○



அருள்மிகு
உச்சிப் பிள்ளையார் ஆலயம்
திருச்சி

CONCEPT OF MAYA in SAIVISM



Siddhantha Vidya Nithi Prof. S. Shanmugavel,
Tuticorin.

Maya is a word in Sanskrit. It is a noun and feminine gender as per the grammer of that language. Sanskrit etymology posits "Maya" signifies the principle from which the world evolves and into which it returns. It is a coinage of two words ma + ya meaning respectively involution and evolution.

This word when adopted in Tamil will take a variant from "mayai" as per Tamil grammer. The present analysis is from the perspective of philosophy and meta-physics. Meta-physics is a science of immaterial being.

Meta-physics in so far as it treats of immaterial things is called:

(a) Cosmology when it treats of the ultimate principles of the universe.

(b) Psychology, when it treats of the psyche or the soul of the living beings.

(c) Rational theology called also Theodicy when it treats of the existence and attributes of God.

Our analysis falls within the purview of item (a).

Maya is a word used in various Upanishads; but its connotation is occuring mainly in Svetaswaram, Brahdaranyaga, Taittiriya Upanishads. The Vedantic School including Adi-Sankara interprets it as illusiton, delustion and hallucination etc. On the contrary, Saiva Saints like Meikandar interpret to mean it a reality and actual existence. In other words, we can say it is actually what matter means of physicists.

Saivaism holds that the perceptible universe is the product :

of MAYA

by GOD

for SOULS

Please see the usage of the three prepositions which indicate the different relationship between the nouns. The universe-perceptible and non perceptible consists of Maya like that of matter and dark matter of physicists.

Unlike the Vedantin who is unable to describe Maya as neither real nor un-real, the Siddhantin considers it real and objective. The soul, even though possesses cognitive, conative and volitional potencies which are inherent, it needs the requisite instruments for exercising the three potencies like an eye requiring a microscope to see micro-organisms. Therefore, it becomes incumbent upon God to activate Maya being in itself inert to produce the instruments. These inherent potencies are termed as Gnana Sakthi, Kriya Sakthi and Itcha Sakthi of the soul. The quantum that is activated by God becomes the prapancha meaning the phenomenal world. The non-activated quantum of Maya remains as it is.

The handi work of Maya thus includes

Tanu	(physical body)
Karana	(mental organs)
Bhuvana	(perceptible things)
Bhoga	(objects of enjoyment)

The activated quantum of maya at once becomes the prapancha (Sanskrit) viz., The macrocosm and the microcosm.

Verses No. 143 of Sivagnana Siddhiyar an authoritative treatise in Tamil gives a clear-cut definition of Maya. The verses specifies the ten characteristics of Maya thus:

It is eternal because it is un-create
It is Arupa (non-perceptible)
It is one as it is indestructible
It is like a seed to a plant

It is sans intelligence (jada)

It is all-pervasive (vyapaka)

It is a locus for God to exhibit His parigraha Sakthi (potency used at will)

It endows the Tanu, Karana, Bhuvana and Bhoga to the souls

It is considered to be one of the spiritual dirts to the souls;

It also illumines the souls; but in addition it causes perversity in the souls karma being the basis.

The commentary of St. Sivagnana Munivar against this verse is unique and superb.

In the Upanishad "svetasvaraha' Chapter IV-10, it is stipulated "Know Maya is the material cause and the owner of May is to be construed as Maheswaraha".

From the above discussions, we have to arrive at the following conclusions:

Conclusions of Saivism

1. The world is real and different from God. This school is called empirical theism.
2. The world has not emerged from God himself. It so, God is susceptible to evolution like a physical matter which is termed as parinama in epistemology. God never becomes the material cause of the world. He is only an efficient cause; the Maya being the material cause.
3. In the pre-cosmic existence of the soul (called Kevala state) Maya is not given by God as any kind of body to the soul. In its pre-cosmic state, the soul lies eternally wrapped up in Anava mala a connate with the soul.
4. Saivism hold that there is no conflict between the statement of Taittiriya Upanishad and Agamantic view on the five kinds of bodies (kosas) being given to the souls from the matrix Maya. This view is confirmed by St. Sivagnana Munivar who is considered to be an authoritative commentator of Saiva Siddhanta - Vide Verse No. 213 of Sivagnana Siddhiyar.
5. The relation between God and Maya is that of the owner and the owned.
6. Saivism is not inconsistent with the evolutionary conception popularized by modern science. It exactly corresponds with "Law of conservation of matter in physics and Ex-Nihilo-Nihil-Fit in Logic".



Rev. W. Goudie proclaimed "There is no school of thought and no system of faith that comes to us with anything like the claims of the Saiva Siddhanta".

The pioneer exponent of Saiva Siddhanta St. MEIKANDAR is thus eulogized by an un-identified author in Tamil.

"The Veda is the sacred Cow from whose
fine four-fold teat
Has been milched the Agamas - the milk
so pure and sweet
The words of four-fold Saiva saints do
constitute its ghee
Meikandaar's Bodham is its sweetest
relish, you see"


....Prostrations to the Lotus Feet of LORD SHIVA....

தமிழ்த் திருஞானசம்பந்தனான
ஞானசம்பந்தன்

பா. குஞ்சிதபாதம்

நமது சைவ சமயக் குரவர் நால்வரில் முதல்வராகப் போற்றப்படும் ஞானசம்பந்தர் தாம் அருளிய தேவாரப் பதிகங்களில் தம்மைப் பற்றிக் குறிப்பிடும் போதெல்லாம் ''தமிழ் ஞானசம்பந்தன்'' ''நற்றமிழ் விரகன்'' என்றெல்லாம் தமிழ் என்ற சொல்லோடு தம்மை இணைத்துப் பேசும் நிலையை நாம் காண் கிறோம். தம்முடைய பெயரைச் சொல்லும் போதெல்லாம் தவறாமல் தமிழோடு சேர்த்துச் சொல்கிறார் என்றால் அதற்குத் தக்க காரணம் என்ன? என்று நாம் சிந்திக்க வேண்டும்.

அவர் வாழ்ந்த ஏழாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தமிழும், சைவமும் பல்லவர்கள், களப்பிரர்கள் போன்றோரால் புறக்கணிக்கப்பட்டிருந்த நிலையில் இந்தப்புறக் கணிப்பை எதிர்த்துப் போர்க்கொடி தாங்கிப் பல நற்பணிகளைச் செய்து சைவம், தமிழ் என்ற இரண்டின் மாண்பும் மனை விளக்காய்த் திகழ அவர் செய்த மாபெரும் புரட்சி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. சீர்காழியார் என்ற அவர் அன்று எதிர்ப்புத் தெரிவிக்காமல் விட்டிருப்பின் சமயம், தமிழ், தமிழ்ப் பண்பாடு, தமிழர் நாகரிகம், மரபு என்பன எல்லாம் அழிந்தே போயிருக்கும். அதனால்தான் சம்பந்தர் சைவ சமயத்தின் தலைவராக இன்றும் போற்றப்படுகிறார்.



வரலாற்று அடிப்படையில் பார்த்தாலும், சமுதாய அடிப்படையில் பார்த்தாலும் சம்பந்தர் செய்த இந்தப் புரட்சி மகத்தானது ஆகும். இருபத்து ஒன்றாம் நூற்றாண் டில் வாழும் நாம் பலவாறான புரட்சிக் கருத்துகளைப் பற்றிப் பேசி வருகிறோம். அவற்றை எல்லாம் சம்பந்தர் ஏழாம் நூற்றாண்டிலேயே மக்களுக்கு எடுத்துக் கூறித் தமது வாழ்க்கையிலும் செயற்படுத்தி வந்துள்ளார் என்பது இன்றும் புலனாகின்றது. இந்தப் பெருமைக்கு உரியவர் இவர்தாம்.

இந்த அரிய உண்மையைச் சேக்கிழார் ''தமிழ் வழக்கே அயல் வழக்கில் துறை வெல்க'', ''வண்தமிழ் செய்தவம் வெல்க'', ''மிகு சைவத்துறை விளங்க'' ஞான சம்பந்தர் தோன்றினார் என்று போற்றுகிறார். எந்த வகையில் ஞானசம்பந்தருக்கு நன்றி பாராட்டுவது என்று சேக்கிழார் சிந்திக்கிறார். தம்மால் முடிந்த ஒரு தொண்டைச் செய்கிறார். ''பிள்ளை பாதி, புராணம் பாதி'' என்று தோன்ற ஞானசம்பந்தர் தமிழுக்கும், சைவத்திற்கும் செய்த பேருபகாரத்தைக் கருதித் தாம் யாத்த பெரிய புராணத்தில் நான்கில் ஒரு பகுதியை ஞானசம்பந்தரின் புகழுக்கே அர்ப்பணித்திருக்கிறார். இத்தனைக்கும் சுந்தரரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டது பெரியபுராணம்.

சம்பந்தர் காலத்தில் தமிழ்ச் சமுதாயம் எப்படி இருந்தது என்று பார்த்தால் சாதி வேறுபாடுகள் ஓரளவிற்கு இருந்தாலும் இன்றைக்கு இருக்கும் அளவிற்குப் பெரிதாக இருந்ததில்லை எனவே கூறலாம். அன்று நிலவிய சிறிதளவு சாதி வேறுபாடுகளையும் சமய குரவரில் மூவரும் எதிர்த்துப் போராடி வந்திருக்கிறார்கள். மிகப்பெரிய புரட்சியாளராகிய ஞானசம்பந்தர் சமயத் துறையில் புரட்சி செய்ததைப் போலச் சமுதாயத் துறையிலும் மாபெரும் புரட்சியைச் செய்துள்ளார்.

அவர் தம்முடனேயே வைத்திருந்த திருநீல கண்ட யாழ்ப்பாணர் (அவர் தம் மனைவியுடன்) அக் காலத்திய "தீண்டத் தகாதது", என்று ஒதுக்கப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணரை அந்தணர் வீட்டிற்குள் யாகசாலையில் தங்குவதற்கு ஏற்பாடு செய்கிறார் சம்பந்தர். இதைவிடச் சிறந்த சமுதாயப் புரட்சி இருந்திருக்க முடியாது அல்லவா? ஞானசம்பந்தரை விழிக்குமுகமாகச் சேக்கிழார் "ஐயர்! நீர் அவதரித்ததில் இப்பதி அளவில் மாதவம் முன்பு செய்தவாறு என" என்று "ஐயர்" என்ற சொல்லைப் பயன்படுத்தி இருப்பதன் நோக்கமே "சம்பந்தர் ஒரு புரட்சியாளர்" என்ற கருத்தை வலுப்படுத்தவே என்று தோன்றுகிறது. இது மட்டுமன்று. மயிலைப் பூம்பாவை வரலாற்றில் சிவநேசச் செட்டியார் தம் பெண்ணைச் சம்பந்தருக்கு மணம் செய்துவைக்க வேண்டுமென்ற கருத்தில் இருந்திருக்கிறார். காரணம், சம்பந்தர் இந்தத் திருமணத்திற்கு இசைவு வழங்குவார் என்ற உறுதி செட்டியாருக்கு இருந்ததே ஆகும்.

ஓர் அந்தணர் செட்டியார் வகுப்பில் பெண் எடுப்பது என்பது இந்தக் காலத்தில் கூட நம் சமுதாயத்தில் பரவலாக ஒத்துக் கொள்ளப்படாத ஒரு கருத்து என்ற கண்ணோட்டத்தில் பூம்பாவை வரலாற்றை நோக்கில் சம்பந்தர் ஒரு புரட்சியாளராக அவர் காலத்திலேயே கருதப்பட்டார் என்பது புலனாகும்.

இன்று பலராலும் பேசப்படும் ஒரு கருத்து சமயத் தொண்டென்பது சமுதாயத் தொண்டே என்பதாகும். ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணவேண்டுமெனப் பேசுகிறோம். இந்தக் கருத்து ஏதோ வெளிநாட்டவர் தமிழர்களுக்குப் போதித்ததன் விளைவாக எழுந்த கருத்தாக நம்மில் பலர் எண்ணவும் செய்கிறோம். சம்பந்தரது வாழ்வில் அவர் செய்த ஒரு தொண்டைச் சமயத் தொண்டாகக் கருதிச் செயல் பட்டார் என்பது புலனாகும்.

திருவீழிமிழலையில் பஞ்சம் தாண்டவமாடுகிறது. நாவுக்கரசர், ஞானசம்பந்தர் ஆகிய இருவரும் இரண்டு இடங்களில் மடங்கள் அமைத்துப் பஞ்சம் தீர்க்கின்ற வகையில் அப்பகுதி மக்களுக்குப் பசிப்பிணி அகற்றித் தொண்டு செய்துள்ளார்கள். மக்கள் துயர் துடைப்பதுதான் சம்பந்தருக்குத் தலையாய பணியாய் அமைந்தது என்பதைப் பெரிய புராணத்தில் சேக்கிழார் விரிவாகப் பேசுகிறார். பசித்தவர்கள் யாராக இருந்தாலும் எந்தவித வேறுபாடுமில்லாமல் வந்து உணவு உண்ணலாம் என்று தண்டோரா மூலம் மக்களுக்குச் சம்பந்தர் அறிவித்ததாகச் சேக்கிழார் சுவைபடப் பேசுகிறார்.

ஆகவே, நாம் இக்காலத்தில் பேசும் முற் போக்குக் கொள்கைகளைச் சம்பந்தர் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே பேசியதோடு நில்லாமல் தம் வாழ்க்கை யிலும் செயற்படுத்தினார் என்றால் அவரை ஒரு மாபெரும் புரட்சியாளர் என்று கூறுவது மிகவும் பொருத்தமுடைத்து அல்லவா? ○❍○



பஞ்சகவ்யம்

புத்தாண்டு தினத்தில் நாம் நீராடும் முன்னர் நம்மைப் புனிதமாக்க உபயோகிக்கும் புனித நீரான "பஞ்சகவ்வியம்" பசுவிடமிருந்து கிடைக்கும் பொருள்களிலிருந்து தயாரிக்கப்படுவதாகும். பால், தயிர், நெய், கோசலம், சாணம் ஆகியவைகளின் கூட்டுக் கலவையே இது. இவற்றை எல்லாம் முறைப் படி சேர்த்துக் கலவையாக்க வேண்டும். அவை பசுவின் பால் - 5 பங்கு, பசுந்தயிர் - 3 பங்கு, பசு நெய் - 2 பங்கு, கோசலம் - 1 பங்கு, பசுவின் சாணம் - கைப் பெருவிரலில் பாதி அளவு. இப்படிச் செய்யப்படுவதே புனிதமான பஞ்சகவ்யம் ஆகும்.

காப்பியர் கூறும் கடவுள் வணக்கம்



செந்தமிழ்ச் செல்வர்
முனைவர் சாம்பசிவனார்

காப்பியர் என்பது தொல்காப்பியத்தைக் குறிக்கும். அவர் தமது "தொல் காப்பியம்" என்னும் நூலில் கூறும் "கடவுள் வணக்கம்" குறித்துச் சிறிது விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ்ச் சங்கம் மூன்று. முதல் இரு சங்கமும் கடல்கோளால் அழிந்தன. மூன்றாம் சங்கம் கால வெள்ளத்தால் அழிவுற்றது.

தொல்காப்பியம், இரண்டாம் சங்கக் காலத்தே தோன்றியது என்பது அறிஞர் பலரும் ஒப்புக்கொண்ட கருத்து. அதாவது, ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கு முந்தியது.

ஓர் இலக்கண நூல் தோன்ற வேண்டுமானால் அதற்குமுன் இலக்கிய நூல்கள் பல்கிப் பெருகியிருத்தல் வேண்டும். மற்றும் இதற்கான சான்றும் தொல்காப்பியத்தில் உண்டு. அவ்விலக்கியங்கள் கடல் கோளாலும், மக்களின் அறியாமையாலும் அழிந்து போயின. எனினும், தமிழர் செய்தவப் பயனாய்த் தொல்காப்பிய மாவது கிடைத்ததே என மகிழலாம். இதனை இயற்றியவர், "ஒல்காப் பெரும் புகழ் தொல்காப்பியனார்" ஆவார். இந்நூல் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் எனும் முப்பெரும் பிரிவுகளுடையது. 1610 நூற்பாக்கள் கொண்டது. (இவ்வெண்ணிக்கையில் சிறிது மாற்றமும் உண்டு).

தமிழர்கள் கடவுள் நம்பிக்கை கொண்டவர்கள். சிந்து சமவெளி நாகரிகக் காலத்திலேயே சிவ வழிபாடு இருந்தது என்பது அறிஞர் பலரும் ஒப்புக்கொண்ட உண்மை. அதனால்தான் வள்ளுவரும் "கடவுள் வாழ்த்து" என்பதை முதல் அதிகாரமாக வைத்தார்.

தொல்காப்பியர் தம் நூலில் ஆங்காங்கே "கடவுள் வணக்கத்தைச்" சுட்டிச் செல்கின்றார். இங்கு அவற்றில் ஒரு சில மட்டுமே எடுத்துக்காட்டப்படுகின்றன.

இந்நூற்பாவில் வழிபடு தெய்வத்தைத் தொல்காப்பியர் கூறுவது எண்ணத்தக்கது. பண்டைத் தமிழர் நிலத்தை நான்கு வகையாகப் பகுத்தனர். அவை - முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்பன. பொருளை மூவகையாகப் பகுத்தார் தொல்காப்பியர். அவை - முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள். இவற்றுள் முதற்பொருள் என்பது நிலம், பொழுது என இருவகைப்படும். (இதனை இக்கால அறிவியலார் விண்வெளி என்பர்) முதற்பொருளினால் தோன்றுபவை கருப்பொருள். உரிப்பொருள் என்பது ஒழுக்கம். கருப்பொருளில் முதலாவதாக இடம் பெறுவது-தெய்வம். மேலே கூறிய முல்லை முதலான நால்வகை நிலத்திற்கும் தனித்தனித் தெய்வத்தைக் குறிப்பிடுகின்றனர்.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே

- அகத்திணை


காடும் காடு சார்ந்த பகுதியும் "முல்லை" எனப்படும். இந்நிலத்திற்குரிய தெய்வம் "மாயோன்" எனப்படும் திருமால். முல்லை நிலத்தில் வாழும் கோவலர் பசுக்களின் பயனைப் பெறுதற்பொருட்டுக் குரவைக் கூத்து முதலாயின மேற்கொண்டு மாயோனை வழிபடுவர்.

மலையும், மலை சார்ந்த பகுதியும் "குறிஞ்சி" எனப்படும். இந்நிலத்திற்கு உரிய தெய்வம் "சேயோன்" எனப்படும் முருகன். (சேயோன் என்பது சிவனைக் குறிக்கும் என்றும் கூறுவர்). இந்நிலத்தில் வாழும் குறவர் முதலானோர் வேலனை அழைத்து வெறியாட்டயர்வர்.

வயலும் வயல் சார்ந்த பகுதியும் "மருதம்" எனப்படும். அந்நிலத்திற்கு உரிய தெய்வம் "வேந்தன்" எனப்படும். "இந்திரன்" ஊடலும், கூடலும் ஆகிய காமச்சிறப்பு நிகழ்தற்கு இந்திரனை வழிபடுவர் அந்நிலத்து உழவர் பெருமக்கள்.

கடலும் கடல் சார்ந்த பகுதியும் "நெய்தல்" எனப்படும். அந்நிலத்திற்குரிய தெய்வம் "வருணன்". நெய்தல் நிலத்து மக்கள் மழைவளம் பெறுதற் பொருட்டு தறிவுக்கோடு நட்டுப் பரவுக் கடன் கொடுப்பர்.

தொல்காப்பியத்தை ஊன்றி நோக்கினால் கடவுள் வணக்கம் குறித்த செய்திகளை நிறையக் காணலாம்.



இனிக் காலப்போக்கில் முல்லையும், குறிஞ்சியும் திரிந்து ''பாலை'' ஆகும். தொல்காப்பியர் கருப்பொருளாகிய தெய்வத்தினை முதற் பொருளோடு கூட்டிக் கூறியது தெய்வ வழிபாட்டு மரபாகும் எனப் பண்டைத் தமிழரின் தெய்வ வழிபாட்டைக் குறிப்பிடுவார் யாழ்ப்பாணம் சி. கணேசையர்.

அக்காலத்தே கொற்றவை வழிபாடும் இருந்துள்ளது. போர் பற்றி விரிவாகக் கூறுவது ''புறத்திணையியல்'', போர் தொடங்குவதற்கு முதற்கண் பகை நாட்டுப் பசுக்களைக் கவர்ந்து வருவர். பசுக்களுக்கு மறந்தும் தீங்கு செய்தலாகாது என்பது பண்டைத் தமிழர் கொள்கை. எனவே பகை நாட்டுப் பசுக்களைக் கவர்ந்து பாதுகாப்பாகக் கொண்டுவருவர். மற்றொன்று பசுக்களும் பெரும் செல்வமாகும். போர் ஆரம்ப அடிப்படை ''வெட்சித்திணை''. வெட்சி வீரர்கள் பகை நாட்டுப் பசுக்களைக் கவரச் செல்லுமுன் கொற்றவையை வணங்கிய பின்னரே செல்வர்.

''கொற்றவை நிலையும் அத்திணைப் புறனே'' என்பது நூற்பா.

''வேலன்'' என்பவர் தெய்வம் ஏறப்பெற்று (இக் காலத்தில் சாமி ஆடுதல் என்பர்) வெறியாட்டயர்வான். செவ்வேள் ஆகிய முருகன் தாங்கிய வேலைக் கையில் ஏந்துவான் ஆதலின் ''வேலன்'' எனப்பட்டான்.

முதன் முதல் ஒத்த தலைவனும், தலைவியும் கண்டு காமுறுவராயின் அதற்கும் நல்லூழ் தேவை என்கிறார் தொல்காப்பியர். அதற்கு அடிப்படை கடவுளின் கருணை.

..... பாலது ஆணையின்
ஒத்த கிழவனும் கிழவியும் காண்க

- களவியல்

பிறர்க்குத் தெரியாமல் களவொழுக்கத்தில் ஈடுபட்ட தலைவியைத் தலைவன் திருமணம் குறித்துத் தெய்வத்தைப் பரவுவான். அவனது வேண்டுதலும் நிறைவேறும்.

இச்செயலை இனிது முடித்த தெய்வத்திற்குப் பரவுக் கடன் கொடுத்தல் வேண்டும் எனத் தலைவனுக்கு எடுத்துரைப்பாள் தோழி.

தொல்காப்பியர் செய்யுளியலிலிலும் தெய்வ வழிபாட்டைக் குறிப்பிடுகின்றார்.

''வழிபடு தெய்வம் நிற்புறங் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின் என்னும் புறநிலை வாழ்த்தே
கலிநிலை வகையும் வஞ்சியும் பெறாஅ''

வாழ்த்து வகையில் ''புறநிலை வாழ்த்து'' என்பது ஒன்றுண்டு. ''வழிபடு தெய்வம், உன்னைப் புறத்தே காப்ப, குற்றந் தீர்ந்த செல்வத்தொடு வழி வழியாகச் சிறந்து பொலிமின்'' என்று வாழ்த்தும் முறை இது. இத்தகைய வாழ்த்து வெண்பா, ஆசிரியப்பா, மருட்பா ஆகியவற்றில்தான் பாட வேண்டும். ○❍○

தமிழ் கற்போம்... தரணியை வெல்ல..!



கலைமாமணி பேராசிரியர்.
முனைவர் **கு. ஞானசம்பந்தன்**, பி.எச்.டி.,
தியாகராசர் கல்லூரி, மதுரை.

'கண்ணுதற் பெருங்கடவுள் கழகமோடமர்ந்து
பண்ணுறத் தெளிந்து ஆய்ந்த தமிழ்'
- திருவிளையாடல் புராணம்

உலகில் தோன்றிய பழைய மொழிகளுள் செம்மொழி உயர்வினைப் பெற்றிருக்கக் கூடிய தமிழ் மொழிக்கு ஒரு தனிச் சிறப்புண்டு. இம்மொழி பக்தி உணர்வினை உணர்த்தும் பெருமையுடையது. கடவுளர்களையும் இம்மொழி பூமிக்கு இறங்கி வரவழைத்ததாகப் புராணங்களில் படிக்கின்றோம். 'திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்' மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவனாக இருந்ததும் குறிஞ்சிக் கடவுளாம் முருகப் பெருமான் தமிழ்ப் பாடல்களை விரும்பி ஒளவையோடும், அருணகிரியோடும் விளையாடியதும் மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழில் வருகைப் பருவத்தில் வந்து தோன்றி குமரகுருபரனை உலகறியச் செய்ததும்; தன் பக்தன் கணிகண்ணனுக்கு அவனின் தமிழிசைக்காக உலகளந்த பெருமாள் படுத்திருந்த பாய் சுருட்டி உடன் சென்றதும்; வேழ முகக் கடவுள் தந்தம் ஒடித்துப் பாரதம் தந்ததும், தமிழ் மொழிக்கும் இறை உணர்வுக்குமான ஒரு தொடர்பான வரலாறாகக் கொள்ளலாம். இத்தகைய பழம்பெருமை வாய்ந்த செம்மொழியை, அடுத்து வரும் தலை முறைக்குத் தயாராக இருக்கும் இளைய மாணாக்கர்கள் ஆர்வத்துடன் கற்கிறார்களா? இம்மொழியைக் கற்பதால், மறுமைக்குப் பயன் கிடைப்பது இருக்கட்டும் இம்மை வாழ்க்கைக்கு, இவ்வுலக வாழ்க்கைக்குக் குறிப்பாக வேலை வாய்ப்புக்கு வழியுண்டா? எனக் கேட்கிறார்கள். சற்றே சிந்திப்போம்.

கற்றது தமிழ்... பெற்றது...?

தற்காலப் பெற்றோர்களிடத்தும் மாணவர்களிடத் தும் வினா ஒன்று எழுந்த வண்ணமிருக்கிறது. மருத்துவம் கற்றால் மருத்துவராகலாம், சட்டம் பயின்றால் வழக்கறிஞராகலாம். பொறியியல் படித்தால் பொறியாளராகலாம், கணனி படித்தால், கணிப்பொறியாளராகலாம் என்றால், தமிழை மட்டும் படித்தால் என்னவாகலாம்?

இதையே அறிவார்ந்தவர்களான அரசியல்வாதி களும் தமிழை மட்டும் படித்துவிட்டு, தமிழ்நாட்டு எல்லையை, இந்திய எல்லையைத் தாண்டி வேலைக்குச் செல்ல முடியுமா? என்று வீராவேசமாய்க் கேட்கிறார்கள். தவிரவும், தமிழ் (தாய்மொழி) வழிக் கல்வி கற்றால் எந்தப் பயனும் இல்லை என்று ஏளனமாய்ச் சிரிக்கிறார்கள். இந்தக் கேள்விகளுக்கு விடை சொல்வதானால், தமிழ் மொழியாகிய இலக்கியம் படித்தவர்களே கற்பனை மிகுந்த கலைஞர்களாக, படைப்பாளர்களாக, மனிதப் பண்பு மிக்கவர்களாக இருக்கிறார்கள் என்பதில் அய்யமில்லை. ''அரம் போலும் கூர்மையரேனும் மரம்போல்வர் மக்கட்பண் பில்லா தவர்'' எனத் திருவள்ளுவர் மக்கட்பண்பின் மாண்பினைக் கூறுகிறார்.

தாய்மொழி வழிக் கல்வி கற்கின்றவன் தனிப் பெரும் தலைவனாக உயர்நிலைக்கு வரமுடியும் என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டு. அணு விஞ்ஞானத்தில் சாதனை படைத்த நம் இந்தியாவின் முன்னாள் குடியரசு தலைவர் மேதகு அப்துல்கலாம் ஆவார். இவர் தமிழகத்தில் இராமேஸ்வரத்தில் எளிய மீனவர் குடும்பத்தில் பிறந்து தமிழ் வழிக் கல்வி கற்றவர். இந்தியாவின் தேச பிதா மகாத்மா காந்தியடிகளும் தாய்மொழி வழிக்கல்வியே மனிதனை மனிதனாக்கும் என உணர்த்தியுள்ளார்.

தமிழுக்கும் உண்டோ எதிர்காலம்?

தமிழகத்தில் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாகத் தமிழ் கற்றால், அம்மாணவன் ஆசிரியனாகப் போகலாம். அது தவிர வழியில்லை என்றார்கள். ''சேர்ந்தே இருப்பது வறுமையும், புலமையும்'' என்றெல்லாம் வேடிக்கை செய்தார்கள். ஆனால் இன்றைக்குத் தமிழின் வளர்ச்சி நிலை என்ன?

இயல், இசை, நாடகம் என முத்தமிழாக இருந்த தமிழ், அறிவியல், நுண்கலை என ஐந்தமிழாக மாறியது. பின்னர்க் கால வளர்ச்சிக்கு ஏற்பக் கணினி யின் (Computer) வருகைக்குப் பிறகு கணினித் தமிழும் சேர்ந்து தமிழ்க் கடவுளாம் முருகப் பெருமானின் ஆறுமுகம் போல ஆறு தமிழாக அருந்தமிழ் வளர்ச்சி பெற்றுள்ளதை அறிகிறோம்.

தற்காலத் தமிழ்ப் பாடத்திட்டங்களிலே அடிப்படை இலக்கண இலக்கியங்களோடு,

1. இதழியல், 2. மக்கள் தகவலியல் (வானொலி,

தொலைக்காட்சி திரைப்படம்), 3. சுற்றுலாவியல், 4. கோயிற்கலை, 5. நாட்டுப்புறவியல், 6. ஆட்சித் தமிழ், 7. மேடைத் தமிழ், 8. கணினித் தமிழ் எனப் பலவகையான விரிந்த பரப்புகள் தமிழ் கற்கும் மாணவர்களுக்குக் கற்றுத் தரப்படுகின்றன.

இதனால் மேற்கூறிய விருப்பப் பாடங்களில் ஏதேனும் ஒன்றைப் பயில்கிற மாணாக்கர்கள் -

நல்ல இதழாளராக (பத்திரிகை ஆசிரியர், நிருபர், பிழை திருத்துநர்)

வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களாக (வசனம், பாடல், கவிதை, சிறுகதை, நாடகம்)

இரண்டாயிரமாண்டுப் பழைமையுடைய கோயில்கள் நிறைந்த சுற்றுலாத் தலங்கள் அமைந்த தமிழகத்தில் நல்ல வழிகாட்டுபவராக (Guide).

பண்பாடுமிக்க பழம் கலைகளான கரகம், கும்மி, காவடி, ஒயில் வில்லுப்பாட்டு, வழக்காற்றுக் காதைகள் முதலியவற்றை உலகுக்கு அறிவிக்கும் கலைஞராக,

அரசு அலுவலர்கள், தனியார் அலுவலகங்கள் இவற்றில் கலைச்சொல் கற்றறிந்த மேலாளராக, கோயில் நிருவாக அதிகாரியாக,

''சொலல்வல்லன் சோர்விலன்'' என்பதற்கேற்ப மேடைப் பேச்சால் ஆட்சியாளராக மாறமுடியும் என்ற தன்னம்பிக்கையோடு பேச்சாற்றல் மூலம் தனி வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் புகழ்மிக்க பேச்சாளராக,

தமிழ்க் கணினி கற்றுப் புதிய மென்பொருள் வல்லுநராக, உலகெங்கும் இருக்கின்ற தமிழர்களுக்குப் பயன்படும் வகையில் பணியாற்றும் தமிழ்க் கணினி அறிஞனாக,


என இத்தகைய திறமையாளர்களாகத் திகழ்வதற்கு விரிந்து செல்லும் தமிழுலகம் ஒளிமயமாகக் காத்திருக்கிறது. எனவே, பழந்தமிழால் பயனென்ன? எனப் பழங்கதைகள் பேசாமல், புதிய பாதைக்குத் திரும்புவோம்! இளம் தலைமுறையினரை தமிழ் கற்றால் பயனுண்டு எனக் கற்கத் தூண்டுவோம்.

நிறைவாக, தமிழ் மொழியைக் கற்கும்போது விருப்பத்தோடும், ஈடுபாட்டோடும், கற்றுணர்ந்த சான்றோர்களின் வழிகாட்டுதலோடும், நம் மொழியைக் கற்போம்.

பாடத்திட்டப் பாடங்களை மட்டும் கற்றுப் பெயருக்குப் பின்னால் பட்டங்களைப் போட்டுக் கொள்வதால் பயனில்லை. 'கண்டது கற்கப் பண்டிதனாகும்' ஆர்வம் இருந்தால், தேடுதல் உள்ளம் கொண்ட திறனாய்வுத்திறன் இருந்தால் காலம் அவர்களைத் தேர்ந்த அறிஞராக்கும்.

இது உண்மை! வெறும் புகழ்ச்சி இல்லை!! ○○○

மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் எழுந்தருளியுள்ள முக்குருணி விநாயகர்



ஐந்து கரத்தனை! ஆனை முகத்தனை!

ஓங்காரம் எனும் பிரணவத்தின் வடிவாகவே திகழும் பிள்ளையாரின் மடித்து வைத்துள்ள இடது பாதம் பூமியையும், சரிந்த தொந்தி நீரையும், அவரது மார்புப் பகுதி நெருப்பையும், இரண்டு புருவங்களின் அரை வட்ட வடிவம் காற்றையும், அவற்றின் நடுவே வளைந்துள்ள கோடு ஆகாயத்தையும் குறிப்பதாக அமைந்து உள்ளது.

அதேபோல அவரது கைகளானவை பாசத்தை ஏந்தி இருப்பதால் படைத்தல் (பிரம்மா) தொழிலைக் காட்டுகிறது. தந்தம் ஏந்திய கை (விஷ்ணு) காத்தலைக் குறிக்கிறது. அங்குசம் ஏந்திய கை (ருத்திரன்) அழித்தலைக் குறிக்கிறது. தும்பிக்கையானது (பரமேஸ்வரன்) மறைத்தலைக் குறிக்கிறது. மோதகம் ஏந்திய கை (பராசக்தி) அருளைக் காட்டுகிறது.

இப்படி ஐந்தொழில்களுக்கும் பிள்ளையார் உரியவர் என்பதை அவரது திருவுருவம் நமக்கு உணர்த்துகிறது.

சிவபெருமானின் மூத்த மகன் கணபதி. நாம் தொடங்கும் காரியத்தில் துன்பங்கள் வந்து சேரக்கூடாது என்பதற்காகக் கணபதி ஹோமம் நடத்துகிறோம்.




ஐ.தி. சம்பந்தன்



சைவர்களுக்கு ஒரு நந்திக்கொடி

ஒரு நாட்டின் வரலாற்றுக்கும், மக்களின் பெருமைக்கும், பாரம்பரியத்திற்கும் தேசியக் கொடி முக்கியமான ஒன்றாக இருந்து வருவதை நாம் காணலாம். பல நாடுகளில் சமயசார்பான பிரதிபலிப்பு டனும் தேசியக் கொடிகளை உருவாக்கியுள்ளனர். உதாரணத்திற்கு பிரித்தானியாவை எடுத்துக்கொண்டால் சமயப் பற்று நாட்டின் தேசியக் கொடியுடன் பின்னிப் பிணைந்து உள்ளதை அவதானிக்கலாம்.

நாடுகளுக்கு நாடுகள் தேசியக் கொடிகள் மூலம் தமது தனித்துவத்தைப் பெருமைப்படுத்திக் கொள் கின்றன. சில நாடுகள் இனத்தையும், மற்றும் சில நாடுகள் வளத்தையும், இன்னும் சில நாடுகள் சமயத்தையும் பிரதிபலிக்கும் கொடிகளைத் தாங்கி அரசோச்சி வருகின்றன.



இவை எல்லாம் நாடுகளைப் பற்றியது. இனி, சமயங்களை நோக்குவோமானால் எல்லாச் சமயங் களும் தமக்கான இலச்சினை உள்ள கொடிகளைத் தமது ஆலய உற்சவங்களிலும், விழாக்களிலும், உபசரணைகளிலும் காலாதிகாலமாக உபயோகித்து வந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. இந்து-சைவ சமயமும் ஆரம்ப காலத்திலிருந்து சமயத்துக்கான கொடியுடைப் பெருமையுடன் இருந்து வந்திருப் பதற்குச் சான்றுகள் உள்ளன. முடியுடை மூவேந்தர்கள் காலத்திலும், தமிழ்ச்சங்க காலத்திலும் நமது சமயக் கொடிகளுக்குத் தனிப்பெருமை இருந்திருக்கின்றன.

அன்னியர் படை எடுப்பு, ஆதிக்கம், ஆட்சி ஆகியவற்றின் ஊடுருவல்களினால் எமது சமயத்தோடு இருந்துவந்த கொடிப் பாரம்பரியம் மறைந்து விட்டதை நாம் அறிவோம். சமயத்துக்கான கொடி ஒன்று எம் ஆலயங்களில் இருந்துவந்ததென்பதை ஓர் உதாரணத்தின் மூலம் சொல்லலாம். எமது ஆலயங் களில் கொடியேற்றத் திருவிழாக்கள் நடைபெறுவது உண்டல்லவா? அந்த விழாக்களின்போது ஏற்றப் படும் கொடியில் நந்தி தேவர் முக்கிய அம்சமாக அக் கொடியில் இருப்பார். சிவனுக்கு உரியவரான நந்தி சிவனின் பிரதிநிதியாக அதில் இடம் பிடித்துள்ளார்.

இந்து சமயத்தினர் தமது முத்திரையாக இந்த நந்திக் கொடியைச் சமய விழாக்கள் எல்லாவற்றிலும் உபயோகித்து எமது சமயத்துக்கு ஒரு கொடி உள்ளது என்பதை உலகறியச் செய்யவேண்டும். கடந்த காலத்தில் இப்படிச் சமயக் கொடி இருக்கவில்லையே! இப்போது எதற்கு என்ற கேள்விக் குவியல்களுக்கு இடமளிக்காமல் இனி வருங்காலத்திலாவது நந்திக் கொடிக்கு முக்கியத்துவம் அளிப்பது எமது சமயத்திற்கு நாம் செய்யும் பெரும் தொண்டாகும். நந்திக் கொடி இந்துக்கள் வாழும் எல்லா ஊர்களிலும் உள்ள ஆலயங்களிலும் பாவனைக்கு வர வேண்டுமென்ற பெருவிருப்போடு பணிபுரிந்து வருபவர் திரு. சின்னத்துரை தனபாலா அவர்கள். தமது சொந்தப் பணத்தைப் பெருமளவு செலவு செய்து நந்தியம் பெருமானின் திரு உருவம் பொறிக்கப்பட்ட கொடி களை நமது சமயத்துக்கு உரித்தான வண்ணங்களில் பதித்து இலவசமாக வழங்கிவருகிறார். உலக நாடு களில் நடக்கும் சைவ மாநாடுகளுக்குச் சென்று இவற்றை வினியோகித்தும் வருகிறார். வீட்டுக்கு வீடு நந்திக் கொடிகள் இருக்க வேண்டுமென்ற பெரு நோக்குடன் நந்திக் கொடியை வழங்கி வருகிறார். சின்னத்துரை தனபாலா, 62ஏ பண்டாரநாயக்கா மாவத்தை, கொழும்பு 12 என்னும் முகவரியில் இவருடன் தொடர்பு கொள்ளலாம்.

நந்தியம் பெருமானின் மகிமையைத் திருமூலர் அவர்கள் ''நந்தி மகன் தன்னை, ஞானக் கொழுந்தனை'' எனப் பாடியுள்ளார்.

மணிவாசகப் பெருமான் திருப்பள்ளி எழுச்சி முதலாவது பாடலில் ''ஏற்றுயர் கொடியுடையாய் எனை உடையாய் பள்ளி எழுந்தருளாயே'' என்று பாடியருளி உள்ளார். ''ஏற்றுயர் கொடி'' என்பதன் மூலம் சைவ சமயத்திற்கு ஒரு கொடி இருந்திருப் பதையும், அது நந்திக்கொடி தானென்றும் அறிய முடிகிறது.

பாரம்பரிய சமயச் சிறப்பு வாய்ந்த நந்திக் கொடியைச் சர்வதேச ரீதியாகச் சைவர்கள் ஏற்றுக் கொள்ள வைக்கவேண்டுமென்ற ஆதங்கத்துடன் நந்திக் கொடி வினியோகத்தைத் தாம் மேற்கொண்டு வருவதாகத் திரு. தனபாலா கூறுகிறார்.

நந்திக் கொடியைச் சைவர்களின் கொடியாக ஏற்றுக் கொள்ள வேண்டுமெனக் கோரும் தீர்மானங்கள் சில நாடுகளில் நடைபெற்ற சைவ மாநாடுகளிலும், ஆலயங்களிலும் நிறைவேற்றப் பட்டும் வருகின்றன. இதில், 1999 ஆம் ஆண்டில் இலங்கையில் மிகப் பெரிய இந்து சமய நிறுவனமாக விளங்கும் அகில இலங்கை இந்துமாமன்றம் நந்திக் கொடி சம்பந்தமாக நிறைவேற்றியிருக்கும் தீர்மானம் முக்கியமானதாகும். அத்தீர்மானம் வருமாறு:-

''அனைத்துலக சைவ மக்களும் ஆலய விழாக்கள், கலாச்சார விழாக்கள், சைவ நிறுவனங்களின் விழாக்கள் அனைத்திலும் நந்திக் கொடியை ஏற்றிப் போற்றுவோம். இதனைச் சைவ மக்கள் ஒவ்வொருவரும் மனத்தில்கொண்டு முன்னின்று செயலாற்ற வேண்டும். இது ஒவ்வொரு சைவ மகனதும் தலையாய கடமையாகும்.''

உலகில் வாழும் சிவ சின்னமாக நந்திக் கொடி மலரட்டும்.

நந்திதேவர் துதி

நந்திஎம் பெருமான் தன்னை
நாள் தோறும் வழிபட்டால்
புத்தியில் ஞானம் சேரும்
புகழ் கல்வி தேடிவரும்
இவ்வுலக இன்பம் யாவும்
இவரடி தொழ உண்டு
அவ்வுலக அருளும் கூட
அவர்துதி பாட உண்டு.

○○○



வாரியாரைக் கேட்போமா?

கற்க விரும்புபவர்கள் கற்கத் தகுந்த நூல்களையே வாங்கிப் படிக்க வேண்டும். கடையில் விற்பனைக்கு இருக்கும் நூல்களை எல்லாம் வாங்கிப் படிக்கக்கூடாது. வேண்டாத நூல்களை எல்லாம் ஏன் கடையில் விற்கிறார்கள் எனக் கேட்கவும் கூடாது.

பலசரக்குக் கடையில் சேமியா, சர்க்கரை, முந்திரிப்பருப்பு, பருத்திக் கொட்டை, கடலைப் பிண்ணாக்கு, மண்எண்ணெய் ஆகிய எல்லாவற்றையும்தான் விற்பனை செய்கிறார்கள்.

பாயசம் செய்ய விரும்புகிறவன் அதற்குத் தேவையான பொருள்களைத் தான் வாங்கவேண்டும். அப்படி இல்லாமல் மண் எண்ணெய், பிண்ணாக்கு எல்லாம் சமமாக வாங்கி வந்து பாயசம் செய்தால் எப்படி இருக்கும்? அதை யாராவது உண்ண முடியுமா?

பெரிய பிழை

மனிதர்கள் எத்தனையோ பிழைகளைச் செய்கின்றனர். கொலை, புலை, களவு, சூது என்று பலவகைப் பிழைகள். இவற்றில் எல்லாம் தலையாய பிழை கற்க வேண்டிய அறிவு நூல்களைக் கற்காமையாகும்.

எனவேதான் பட்டினத்து அடிகளார் சிறப்புடைப் பொருளை முந்துறக் கிளத்தல் என்றபடி, ''கல்லாப் பிழையும்'' என்று கற்காத பிழையை முதலாவதாகத் தமது பாடலில் பாடுகிறார்.

அருளைப் பெற

ஓர் ஊருக்குப் போவதென்றால் வழி தெரிந்துகொண்டு போகவேண்டும். அதைப் போலவே இறைவனுடைய அருளைப் பெறவேண்டுமானால் அதற்கு வழி என்ன என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டும். இறைவனைப் பெறும் வழி - பிற உயிர்களிடத்தும் அன்பு செலுத்துவதே என்பதை உணர்வதே அறிவுடைமையாகும்.

தமிழ் இசை

இசையின் பெருமையை அமரர் திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகள் பல இடங்களில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ''சிசு வேத்தி, பசுவேத்தி, கான ரசம் பணி'' என்று சங்கீத ரத்னாகரம் கூறுகிறது. இசையைக் குழந்தைகளும் அறியும். பசுக்களும் உணரும். பாம்புகளும் அறியும் என்பது இதன் பொருள்.

திருமந்திரம்



முதுமுனைவர் **ம.சா. அறிவுடைநம்பி**
புதுவைப் பல்கலைக்கழகம்,
புதுச்சேரி.

பன்னிரு திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக அமைந்திருப்பது திருமூலர் அருளிய திருமந்திரமாகும். திருமுறைகளை அருளிய அருளாளர்களுள் காலத்தால் முற்பட்டவர் திருமூலர். இதுவரை ஆய்வு செய்த அறிஞர் பலரும் இவர் காலம் குறித்துப் பல்வேறு வகையான கருத்துகளைக் கூறியுள்ளனர். எனவே இவர் காலம் குறித்த ஆய்வு மேலாய்வுக்குரியதாகவே உள்ளது. இருந்தாலும் வரலாற்று ஆசிரியரால் தமிழகத்தின் இருண்ட காலம் என்று கூறப்பட்ட கி.பி. 4, 5, 6 ஆகிய நூற்றாண்டு களில் சைவ சமய வரலாற்றை அறிவதற்குத் 'திரு மந்திரம்' பெருந்துணை புரிந்து வருகிறது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

சைவ சித்தாந்தத்திற்கு அடிப்படையாக உள்ள மெய்கண்ட நூல்கள் பதினான்கில் திருவுந்தியார், திருக் களிற்றுப்படியார் ஆகிய இரு நூல்களும் காலத்தால் முற்பட்டன. இந்த இரு நூல்களுக்கும் முற்பட்டதாகத் திருமந்திரம் விளங்குகிறது. இந்நூலை இயற்றிய திருமூலர் நந்தியின் அருள் பெற்றவர்; பிராமணச் சிவ யோகி; அணிமா முதலிய சித்திகளில் வல்லவர். இவர் கயிலாயத்திலிருந்து புறப்பட்டுப் பல்வேறு சிவன் கோயில்களுக்குச் சென்று இறைவனை வழிபட்டுத் திருவாவடுதுறை அடைந்தார்.

ஆங்கிருந்த பசுக்களின் துன்பத்தைப் போக்கு வதற்காக இறந்து கிடந்த 'மூலன்' என்ற இடையன் உடம்பில் புகுந்தார். அவ்வூர் அறிஞர்கள் அவரைப் 'பெரிய யோகி' என்றனர். திருமூலர் தமது சொந்த உடம்பை விட்ட இடத்தில் தேடினார். அஃது அகப்பட வில்லை. அப்போது அவர், 'ஆகமப் பொருளைத் தமிழ்ப்படுத்த வேண்டும் என்பதற்காகக் கடவுள் தம் உடலை மறைத்துவிட்டார்' என்பதை உணர்ந்தார். பிறகு திருவாவடுதுறை மேற்குப் பக்கத்தில் அரசமரத்தடியில் யோகத்தில் இருந்து மூவாயிரம் பாடல்களைக் கொண்ட திருமந்திரத்தைச் செய்தார் என்று பெரிய புராணம் கூறுகிறது.

ஒன்பது பகுதிகளாக அமைந்துள்ள இத்திரு மந்திரத்தில் திருமூலர் காலத்துச் சைவ சமயம் இருந்த நிலையை அறிந்துகொள்ள முடிகிறது. ஒவ்வொரு பகுதியும் 'தந்திரம்' என்று பெயர் பெறும். முதல் தந்திரத்தில் யாக்கை நிலையாமை, செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, கொல்லாமை, புலால் உண்ணாமை போன்ற அறிவுரைகள் இடம்பெறுகின்றன. இரண்டாம் தந்திரத்தில் அகத்தியர் தென்னாட்டுக்கு வந்தது, சிவபிரானின் எட்டு வீரச் செயல்கள், இலிங்கத்தின் தோற்றம், சிவனுடைய ஐந்தொழில்கள், சிவநிந்தை தீது, அடியார் நிந்தை தீது, பொறையுடைமை, பெரியாரைத் துணைக்கோடல் முதலானவை காணப்படுகின்றன. மூன்றாம் தந்திரம் முழுவதும் யோகத்தைப் பற்றிய செய்திகள் காணப் படுகின்றன.

நான்காம் தந்திரத்தில் திருஅம்பலச் சக்கரம், திரிபுர சக்கரம் முதலான மந்திர சாத்திரம் தொடர்பான செய்திகள் கூறப்படுகின்றன. ஐந்தாம் தந்திரத்தில் சுத்த சைவம், அசுத்த சைவம், சரியை, கிரியை, யோகம், ஞானம், கடவுளை நண்பராகக் கருதுதல் (சகமார்க்கம்), கடவுளைத் தந்தையாகக் கருதுதல் (சத்புத்ர மார்க்கம்), கடவுளை எசமானாகக் கருதுதல் (தாசமார்க்கம்), இறையுலகில் வாழ்தல் (சாலோகம்), இறைக்கு அண்மையில் இருத்தல் (சாமீபம்), இறையுடன் சம நிலை பெறுதல் (சாரூப்யம்), இறையுடன் இரண்டறக் கலத்தல் (சாயுச்சியம்) போன்றவை இடம்பெறு கின்றன. புறச்சமயங்கள் கண்டிக்கப்படுகின்றன; உட் சமயங்கள் ஏற்கப்படுகின்றன. ஆறாம் தந்திரத்தில் சிவ குரு தரிசனம், திருவடிப்பேறு, துறவு, தவம், திருநீற்றின் பெருமை போன்றவை கூறப்படுகின்றன.

சரியை, கிரியை, யோகம், ஞானம்:

ஏழாம் தந்திரத்தில் ஆறு ஆதாரங்கள், ஆறு இலிங்கங்கள், வழிபாடு, அடியார் பெருமை, பலவகை முத்திரைகள், ஐம்புலன்களை அடக்கும் முறை போன்றவை கூறப்படுகின்றன. எட்டாம் தந்திரத்தில் அவத்தைக ண்ள், சித்தாந்தத்தின் விளக்கம், பதி பசு பாச விளக்கம், முத்திகள், முக்காரணங்கள் போன்றவை விளக்கப்படுகின்றன. ஒன்பதாம் தந்திரத்தில் குரு, குரு தரிசனம், சிவானந்த நடனம் போன்றவை விளக்கப்படுகின்றன.

அறுவகைச் சித்தாந்த சைவ முறைகள், நால் வகைச் சைவத்தின் பிரிவுகள், சிவ கதைகளும் அவற்றுக்குத் திருமூலர் கூறும் தத்துவப் பொருள் களும் விரிவான நிலையில் கூறப்படுகின்றன.

சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கையும் பின்பற்ற வேண்டும். கோயில்களைக் கட்டி வழிபடவேண்டும். நாள் தவறாமல் பூசைகள் செய்ய வேண்டும். அத்துடன் மூவகைத் தீக்கைகள் பற்றியும் குறிப்பிடுகின்றார். சமய தீக்கையால் ஒருவன் சைவ ஆசாரத் திற்கு உரியவனாகிறான். விசேட தீக்கையால் அவன் சிவபூசை முதலியவற்றுக்கும் யோக நெறிக்கும் சிவாகமம் ஓதுதற்கும் உரியவன் ஆகிறான். நிருவாண தீக்கையால் சிவாகமங்களின் உண்மைப் பொருளை ஆராய்தற்கும் அதிகாரியாவான். அந்த ஆராய்ச்சியால் சிவஞானம் விளங்கிச் சிறப்பியல்பு உணர்ந்து சிவம் பிரகாசித்து வீடுபேறு அடைவான்.

''பதிபசு பாசம் எனப்பகர் மூன்றில்
பதியினைப் போல்பசு பாசம் அனாதி
பதியினைச் சென்றணு காப்பக பாசம்
பதியணு கில்பசு பாசம் நிலாவே''

(திருமந்திரம் 115)

என்ற பாடலில் சைவ சித்தாந்தம் குறிப்பிடும் முப் பொருள்களைப் பற்றித் திருமூலர் கூறுகின்றார்.

அதேபோல 'அரன்துடி தோற்றம்' எனத் தொடங்கும் பாடலில் இறைவன் உயிர்களிடம் கொண்ட கருணையால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்தொழில்களைச் செய்வதைத் திருமூலர் குறிப்பிடுகின்றார். இந்தக் கருத்தை அப்படியே ஏற்றுக்கொண்டு 'உண்மை விளக்கம்' எனும் சாத்திர நூலில் 'தோற்றம் துடிய தனில்' எனத் தொடங்கும் பாடலில் மனவாசகங் கடந்தார் கூறுகின்றார்.

சமய நூல்களாக வேதம், சிவாகமம் ஆகிய இரண்டும் கருதப்படுகின்றன. உலகத்தவர்க்குக் கூறப் படுகின்ற வேதம் பொது நூலாகும். சந்நிதி பாதர்க்குக் கூறப்படுகின்ற சிவாகமம் சிறப்பு நூலாகும். சிவாகமம், வேதத்தில் கூறாது ஒழிந்த பொருளையும், உபநிடதத்து உண்மைப் பொருளையும் இனிது விளக்கும். இதனையே திருமூலரும்,

''வேதமோ டாகம மெய்யா மிறைவனூல்
ஓதும் பொதுவுஞ் சிறப்பு மென்றுன்னுக
நாத னுரையிவை நாடி லிரண்டந்தம்
பேதம தென்னிற் பெரியோர்க் கபேதமே''

(திருமந்திரம் 2397)

என்று கூறினார்.

திருநீறு பூசுவோர் இறைவனடி சேர்வர்:

ஆன்மா 'தான்' வேறு, 'அவன்' வேறு என்னும் எண்ணத்தில் இருக்கும் வரை 'த்வைதம்' அல்லது 'இருமை' இருக்கும். தனிப்பட்ட ஆன்மா அவனிற் கலந்து விடுமாயின், இருமை ஒழிந்து ஒருமை ஏற்படும். இதுவே 'சிவாத்வைதம்' எனப்படும் என்று திருமூலர் கூறுகின்றார் (திருமந்திரம் 1607).

திருநீற்றைப் பூசுபவரிடம் தீவினைகள் அண்டா; சிவகதி சாரும். திருநீறு பூசுவோர் இறைவன் திருவடி களைச் சேர்வர் என்று திருமூலர் கூறுகிறார். திருமந்திரத்தில் சிவன் தொடர்பான தொன்மைக் கதைகளாகக் கூறப்படும் முப்புரம் எரித்தது, நஞ்சுண்டது, அடிமுடி தேடியது போன்ற சிலவற்றுக்கு விளக்கங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறு திருமூலர் அருளிய திருமந்திரத்தில் சைவ சமயம் தொடர்பாகவும், சைவ சித்தாந்தம் தொடர்பாகவும் பல்வேறு செய்திகள் புதைந்து கிடக்கின்றன.

தேவாரத்தை அருளிய திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் போன்றவர்களுக்கு இத்திருமந்திரமே ஆதார நூலாக இருந்தது. இவ்வருளாளர்கள் கையாண்ட சன்மார்க்க சைவம் பரவுவதற்குத் திருமந்திரம் முக்கியமான நூலாகத் திகழ்ந்தது. அது மட்டும் இல்லாமல் பின்வந்த சைவ சித்தாந்த சாத்திரங்களுக்குத் தூண்டுகோலாகவும் இத்திருமந்திரம் இருந்தது. ஏனெனில் திருமூலருக்கு முன் தமிழில் சைவ சித்தாந்த நூல் இல்லை. இவ்வகையில் திருமூலர் அருளிய திருமந்திரமே 'சைவ சித்தாந்த முதல் நூல்' என்பது தெளிவு. ○❍○



ஆலயத்தில் உள்ள வெள்ளிக் கவசத்தினாலான
வலம்புரிச் சங்கு

சைவ சித்தாந்தச் செந்நெறிகள்



முனைவர் **கே. பாக்கியம்**, பி.எச்டி.,
ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர்
கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர்.

சித்தாந்தம் என்னும் சொல்லுக்கு முடிந்த முடிபு என்பது பொருள். உலகு, உயிர், கடவுள் என்னும் முப்பொருள்களைப் பற்றிய முடிபுகள் எனலாம். இம் முப்பொருள் பற்றிப் பல சமய நூல்களும், தத்துவ சாஸ்திரங்களும் வெளியிட்டுள்ளன. ஒவ்வொரு வகை முடிபும் ஒவ்வொரு வகைச் சித்தாந்தம் எனலாம். சைவ சித்தாந்தமானது நியாயமான முறையில் ஆராய்ந்து முப்பொருள் பற்றித் தானும் ஒரு முடிபுக்கு வந்துள்ளது. இதைச் சைவர்கள் சிறப்பு வகையில் சித்தாந்தம் என்றே குறிப்பிடுவது மரபாகும். அநுபூதி பெற்றவர்களுக்கு முழு உண்மையும் அநுபவத்தில் விளங்கும். ''ஒன்றே குலம் ஒருவனே தேவன் நன்றே நினைமின்'' என்னும் மெய்ப் பொருளே உயிர்ப் பொருளாய் நின்று நிலவக் காணலாம். சமயப் பிணக்கம் சிறிதும் இன்றிச் சமய இணக்கம் பெரிதும் உளதாய்த் திகழ்ந்து, தொன்மைத் தமிழர்கள் பல்லாயிரம் ஆண்டுகள் முயன்று கைக் கொண்டொழுகிவரும் தமிழக நெறியே 'சைவ சித்தாந்தச் செந்நெறி' என நன்னெறியாளர்கள் வழங்கி வருகின்றனர். இந்நெறி உலகத்தின்கண் காணப்படும் எல்லா உயிர் வகைகளுக்கும் துன்பத்தை விலக்கி, இன்பத்தைப் பெறும் முயற்சி ஒன்றிலே மட்டும் கருத்தூன்றி நிற்கக் காணலாம்.

**நான் யார்?
எவ்வாறு வந்தேன்?
போகும் இடம் எது?
மரணத்துக்குப்பின்
வாழ்வு உண்டா?
செய்ய வேண்டியவை
யாவை? என்பது
போன்ற வினாக்களுக்கு
விடை தேடி
அலைபவையே
பசுவாகிய
உயிர்கள்.**

சைவமும், சித்தாந்தமும்

சைவம் என்பது சிவம் என்ற சொல்லில் இருந்து தோன்றியது. சிவம் என்றால் நன்மை, மங்கலம், செம்மை எனப் பொருள்படும். சைவம் சிவத்துடன் தொடர்பு கொண்டு மக்கள் மேல்நிலை அடைய, ஆண்டவன் திருஉள்ளத்தில் தோன்றிய சமயமே சைவ சமயம் ஆகும். அச்சமயத்தில் ஒப்புக் கொள்ளும் முடியே சைவர்களுக்குச் 'சித்தாந்தம்' ஆகும்.

அறிய வேண்டியவை மூன்று

மக்கள் அறிய வேண்டியவை மூன்று. அவை கடவுள், உயிர்கள், உலகம் என்பன. நாம் இவ்வுலகை அனுபவத்தால் காண்கின்றோம். உலகப் பொருள்களை உயிருள்ளவை, உயிரற்றவை எனப் பகுக்கின்றோம். உயிர்ப் பொருள்கள் அறிவால் இயங்கக் காண்கின்றோம்.

உலகத்தில் மேலான பொருள் கடவுள். கடவுளைப் 'பதி' என்றும், உலக உயிரினத்தைப் 'பசு' என்றும், உலகத்தைப் 'பாசம்' என்றும் சித்தாந்த சாத்திரங்கள் கூறுகின்றன. நாம் காணும் இவ்வுலகில் ஓரறிவுப் பிராணி முதல் ஆறறிவு படைத்த மக்கள் வரை எண்ணற்ற உயிரினங்கள் வாழ்கின்றன. பல்வகைக் கோள்கள் உள்ளதாக வானநூல் உணர்த்துகின்றது. இவை பெரியதொரு சக்திக்கு உட்பட்டே இயங்குகின்றன என விஞ்ஞானம் உறுதியிட்டு உரைக்கின்றது. இச்சட்ட திட்டங்கள் எல்லாம் பேரறிவும், பேராற்றலும், பெருங்கருணையும் படைத்த ஒரு தனிப் பெரும் முதல்வனால் அமைக்கப்பட்டது என்பது முன்னோர் முடிபு.

''அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாய்'' எனத் தொடங்கும் ''பர சிவ வணக்கம்'' என்னும் தாயுமானார் அரும் பெரும் பாடலில் ''அண்ட கோடிகள் எல்லாம் தாங்கும்படிக்கு இச்சை வைத்து'' என்னும் பகுதி இங்குக் குறிப்பிடத்தக்கது.

கடவுள் (பதி)

எல்லாம் வல்ல இப்பரம்பொருள் உலகைப் படைத்து, உயிர்களை உயர்த்தவே ஆகும். உயிர்களுள் பிரியாமல் நின்று அவற்றை இயக்கி வருபவன் இறைவனே. அவனன்றி ஓரணுவும் அசையாது என்னும் அமுத மொழி இதை அறிவுறுத்தக் காணலாம். கடவுள் என்ற பெயர் கட + உள் எனப் பிரித்தால் பரம்பொருள் எல்லாவற்றையும் கடந்து உள்ளது எனவும், கடவு உள் எனப் பிரித்தால் எல்லாவற்றிள் ளிருந்தும் கடவுவது, செலுத்துவது என்னும் உண்மையும் புலனாகும். தானாக இயங்க மாட்டாத ஜடப்பிரபஞ்சத்தை ஒரு முறைப்படி ஒரு சக்தி இயக்குவதையும், அதனால் உயிர்கள் படிப்படியாகத் தடைகளில் இருந்து விடுபட்டுப் பேரானந்தப் பெருநிலை அடைவதையும் உணர்கின்றோம். எல்லாம் இப்பரம்பொருள் ஒன்றே தான். இதைத்தான் ''ஒருவனே தேவனும்'' என்கிறார் திருமூலர். இப்பரம்பொருள் உருவம், அருவம், குணம், குறி இவை கடந்தவன். சலனமற்று, எங்கும் வியாபித்திருப்பது. ஆனந்தப் பெருவெள்ளமாய்

உயிரினங்கள் சென்று சேரும் முடிவுப் பொருளையும் உள்ளவன் இறைவன். இவ் இறைவனை ''இன்ன தன்மையன் என்றறிய வொண்ணா எம் பெருமான்'' எனச் சுந்தரர் தேவாரம் உணர்த்துகின்றது. ''மூவரும் முப்பத்து மூவரும் மற்றைத் தேவரும் காணாச் சிவபெருமான்'' எனத் திருவாசகம் முழங்குகின்றது. எனவே பதிப்பொருளின் இயல்பும் இலக்கணமும் இதுவே எனலாம்.

உயிர்கள் (பசு)

ஆன்மாக்களாகிய நாம் பாசத்தால் கட்டுண்டிருக் கிறபடியால் பசுக்கள் என்றும் பெயருண்டு. ஆன்மாவின் சொரூபம் அறிவு. ஆன்மாக்கள் இருளாகிய மலத்தில் அழுந்திக் கிடப்பவை. புண்ணிய பாவம் புரிந்து பிறப்பு, இறப்பு அனுபவங்களைப் பெறுபவை. நான் யார்? எவ்வாறு வந்தேன்? போகும் இடம் எது? மரணத்திற்குப் பின் வாழ்வுண்டா? செய்ய வேண்டியவை யாவை? என்பது போன்ற வினாக்களுக்கு விடை தேடி அலைபவையே பசுவாகிய உயிர்கள். ஆன்மாக்கட் கெல்லாம் இரண்டு சிறப்புகள் உண்டு. 1. பற்றுக்கோடின்றி நில்லாமை, பாசத்தையாவது அல்லது பதியையாவது பற்றியே ஆன்மா நிற்கும். 3. சார்ந்ததன் வண்ணமாதல். எதைச் சார்ந்து நிற்கின்றதோ அதனோடு கலந்து அதன் தன்மையைத்தான் பெற்று இயங்குதல். யாதொரு பற்றும் இன்றி ஆண்டவன் அருளால் பந்தம் அறுக்கும் பான்மையுடையது. இதன் பக்குவம் கண்டு அறிவிக்கும் பான்மையுடையது சிவன். இதைச் சித்தாந்த சாத்திரங்கள் விரிவாய் உரைக்கின்றன.

பாசம்

இது ஆணவம், மாயை, கன்மம் என்னும் மூன்று பிரிவுகளையுடைய மும்மலமாகும். இது செம்பின் களிம்பு போல் ஒன்றாயிருந்து கொண்டே பல சக்திகளுடன் இணைந்து தன் வேலையைச் செய்யும். ஆன்மா அறியாதபடி அதன் அறிவை மயக்கும். செருக்கு, பேராசை, மோகம் போன்ற தீய குணங்களால் ஆன்மாவை அலைக்கழிக்கும். இதை இறைவன் தன் சக்தியின் மூலம் ஒடுக்கி அடக்கி உயிர்கட்கு அருள்புரிவான். ஆண்டவன் தன்னையும் காட்டாது, பிற பொருள்களையும் காணவிடாது. இருளிலும் பேரிருள் ஆன்மாவேயாகும்.

மாயை

இது பாசத்தின் ஒரு பகுதியாகிய சடப் பொருள். மிக நுட்பமான உருவ, அருவ நிலையை உடையது. ஆணவம் மறைவிக்கும் தன்மையுடையது. மாயை மறைக்கும் தன்மையுடையது. மாயையில் இருந்துதான் 36 தத்துவங்கள் இறைவன் சக்தியால் தோற்றுவிக்கப்படுகின்றன. மாயையை சுத்தமாயை, அசுத்தமாயை, பிரகிருதமாயை என மூன்றாக சாஸ் திரங்கள் பகுத்துரைக்கின்றன. மக்களாகிய நமக்கெல் லாம் பிரகிருதமாயை என்னும் பகுதியிலிருந்து தனு கரணம், புவனம், போகம் என்பன கிடைக்கின்றன. மாயையின் துணைக்கொண்டே அதனையும், ஆணவ மலத்தையும் தாண்ட வேண்டும் என்பது இறைவன் வகுத்த உபாயம்.

கன்மம் என்பது பாசத்தின் ஒரு பகுதி. பிறப்பின் இயல்பை இது திடப்படுத்தும். இன்ப, துன்பங்களை விதிப்படி ஊட்டிவைக்கும். நாம் மனத்தாலும், வாக்காலும், காயத்தாலும் செய்யும் செயல்கள் யாவும் அவற்றின் தன்மைக்கு ஏற்றபடி இப்பிறப்பிலும், வரும் பிறப்பிலும் இன்ப, துன்பத்தைத் தரும். ''அடாது செய்பவர் படாதுபடுவர்''? ''புண்ணியம் மேல் நோக்குவிக்கும், பாவம் கீழ்த்தள்ளும்'', ''ஊழ் வினை உறுத்து வந்து ஊட்டும்'' என்பன இதை உறுதி செய்யும். புண்ணியம் பசு புண்ணியம், பதி புண்ணியம் என இரு வகைப்படும். பசு புண்ணியம் உயிர்கட்கு இதம் செய்வதாகும். பதி புண்ணியம் இறைவன்பால் நன்றியுடனும், பண்புடனும் செய்யும் பூசைகளும், வந்தனை வழிபாடுகளும், நோன்பு போன்ற பிற தொண்டுகளுமாம். ஒவ்வொரு கன்மமும் தன் பலனைத் தந்தே தீரும். கன்மத்தின் பலனை மற்றொரு கன்ம பலத்தால் கழித்துவிட முடியாது. ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம் என வரும் சிவஞான சித்தியார் பாடலில் 16 வகை அறங்கள் குறிக்கப்பட்டுள்ளன. திருமூலரும் இயமம், நியமம் என இரு வகையாய் விரித்துரைக்கின்றார்.

''வாய்த்தது நந்தமக்கு, யாதோர் பிறவி மதித்திடுமின், ஒரு நாமம் ஒருருவம் ஒன்றுமில்லாத இறைவன் பல்வேறு திருமேனி தாங்கி வருகிறான். அவன் திருமேனி திருவைந்தெழுத்தின் மந்திரத்தின் வடிவாயுள்ளது'' எனவும், நடராஜர் திருவுருவத்தில் பஞ்சாக்கரங்கள் அமைந்துள்ள பான்மையையும் சித்தாந்திரங்கள் இனிதே விளக்குகின்றன. பஞ்சாக்கர முறையில் அமைத்துத் தரப்பட்டுள்ள இந்த யாக்கையின் உதவி கொண்டு பஞ்சாக்கரப் பொருளாயுள்ள பரமன் திருஞானம் பெறல் வேண்டும். ''ஒழுக்க நிலை பெற்று ஓங்க உண்டென்றிரு'', ''ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு'' என்ற பட்டினத்தார் உபதேசத்தை உணர்தல் வேண்டும். ''நல்லவர் நாமம் நமச்சிவாயமே'' என்பது சம்பந்தர் வாக்கு.

சைவ சமயம் புனிதப் பெருமையுடையது. பிற சமயத்தை அன்புடன் நோக்கித் தன் அங்கமாகப் பாவிக்கும் பான்மையது. ''சைவம் முதலாம் அளவில் சமயமும் வகுத்து மேல் சமயங்கடந்த மேலான சமரசம் வகுத்த நீ'' என்று தாயுமானவர் இறைவனைக் குறிப்பிட்டுள்ளார்.

''ஓதும் சமயங்கள் பொருள் உணரும் நூல்கள்'' என்று தொடங்கும் சித்தியார் திருப்பாடலும், ''ஆகார புவனம் சிதம்பர ரகசியம்'' என்னும் தாயுமா னாரின் பாடற் பகுதியும் சைவத்தின் பரந்த நோக்கையும் சித்தாந்த சிறப்பையும் விளக்குவன. ○○○

ஞான ஒளிபரப்பிய மாமுனிவர்
சிவயோக சுவாமிகள்



இலங்கை ஒரு சிவபூமி என்பது திருமூலர் வாக்கு. சிவனுக்குரிய ஈஸ்வரங்கள் மலிந்த நாடு. சித்தர்கள் உலாவிய சிறப்புடைய நாடு. கைலாச பரம்பரையின் சித்தர்கள் நடமாடிய யாழ்ப்பாணத்திலே மாவிட்டபுரம் என்னும் கிராமத்திலே 1872 ஆம் ஆண்டு மே மாதம் 29ஆம் திகதி சிவயோக சுவாமிகள் பிறந்தார். இளம் வயதிலேயே தாயை இழந்த யோகநாதன் யாழ்ப்பாணத்துக்கு அண்மையில் உள்ள கொழும்புத் துறை என்னும் கிராமத்தில் வாழ்ந்த அவரது தந்தையின் சகோதரியால் வளர்க்கப்பட்டார். கல்லூரியில் யோகநாதன் பயின்ற காலத்திலேயே விவேகியாய்த் தாம் பயின்றவற்றை ஏனைய மாணாக்கர்களுக்கு விளக்கிக் கூறும் குட்டிப் பிரசங்கியாராகவும் இருந்தார். தனது கல்லூரிப் படிப்பை நிறைவு செய்து கொண்டு அவர் கிளிநொச்சி இரணைமடு நீர்ப் பாசனத் திட்டத்தில் பண்டகசாலைப் பொறுப்பாளராகக் கடமையாற்றினார். அப்போது தன் ஓய்வு நேரம் முழுவதையும் சமயப் பயிற்சியில் செலவிட்டார். தியானம், திருமுறை பாராயணம் போன்ற ஆன்மீக சாதனைகளை மேற்கொண்டார். ஆன்மீக சாதனை அவரை ஈர்க்கவே இறுதியில் தனது முப்பதாவது வயதில் வேலையில் இருந்தும் விலகி தனது வாழ்வை முழுமையாக ஆன்மீக சாதனையில் ஈடுபடுத்திக் கொண்டார்.

நல்லூரை நனைத்த ஞானவெள்ளம்

அக்காலத்தில் நல்லூர்த் தேரடியிலே வாழ்ந்த செல்லப்பா சுவாமிகளின் பெருமையைக் கூறக்கேட்ட யோகநாதன், ஒருநாள் சுவாமிகளைத் தரிசிப்பதற்காக நல்லூருக்குச் சென்றார். தனது சற்குருவை முதன் முதலில் சந்தித்தது குறித்து அவர் பின்னர் பல நற் சிந்தனைப் பாடல்களில் அழகாகக் கூறியுள்ளார். தேரடியில் யோகநாதனின் செவிகளில் ஒலித்தவை ''ஆரடா நீ? தேரடாவுள்! தீரடாபற்று''. மலைத்து நின்ற சீடனைப் பெருங் கருணையோடு நோக்கிய சற்குருநாதன் உன்னைத்தான் பார்த்திருந்தேன். உனக்கே பட்டம் சூட்டப் போகிறேன். வா வா என்று அருகில் அழைத்து அன்போடு ஞான உபதேசம் அருளினார். அன்று முதல் ஐந்து ஆண்டுகள் செல்லப்பா சுவாமிகளுடன் வாழ்ந்த கடும் தவம் ஆற்றிய யோகநாதன் தனது சற்குருவிடமிருந்து தீட்சை பெற்று யோக சுவாமிகள் ஆனார். பின் தனது குருவின் ஆணைப்படி யோக சுவாமிகள் கால்நடையாக கதிர்காம யாத்திரை மேற்கொண்டார். ஓராண்டுக் காலம் இலங்கை முழுவதையும் பாதயாத்திரையாக அவர் சுற்றி வந்தார். பாத யாத்திரையை முடித்துக் கொண்டு குருவிடம் திரும்பி வந்த யோகசுவாமிகளைப் பார்த்துச் செல்லப்பா சுவாமிகள் கூறினார். ''யோகா! இரண்டு யானைகளை ஒரு முளையிற் கட்ட முடியாது. நீ கொழும்புத் துறைச் சந்தியில் இலுப்பை மர வேரைப் பார்'' என்றார்.

ஆசான் அருளால் ஆசானாயினர்

தனது குருவின் ஆணைப்படி யோக சுவாமிகள் கொழும்புத் துறைச் சந்தியில் இருந்த இலுப்பை மரத்தடியில் பல நாள்களாகத் தியான நிலையில் அமர்ந்திருந்தார். பல முறை வேண்டிக் கேட்டுக் கொண்ட பிறகு இலுப்பை மரத்துக்கு அண்மையில் அடியவர்களால் அவருக்கு என அமைக்கப்பட்ட ஒரு சிறு குடிசையில் யோகசுவாமிகள் தங்கினார். இது 1914 ஆம் ஆண்டளவில் நிகழ்ந்தது. யோக சுவாமிகள் தனது வாழ்வின் அடுத்த ஐம்பது ஆண்டுகளையும் கிடுகுகளால் வேயப்பட்ட அந்தச் சிறு குடிசையிலேயே கழித்தார். தொடக்கத்தில், அணுகுவதற்கு முடியாதவராயிருந்தார். மிக விரைவில் அந்தக் கொழும்புத் துறைக் கொட்டில் இலங்கை முழுவதற்கும் அருள் வழங்கும் ஆன்மீகத் திருவுருவத்தின் ஆச்சிரமமாக மாறியது. வாழ்வின் பல துறைகளைச் சார்ந்த மக்களும் இக்குடிசைக்கு வந்தனர். இளையோர் முதியோர் கமக்காரர் மந்திரிகள், நீதிபதிகள், மருத்துவர்கள், அரசியல்வாதிகள், ஆம் அனைவரும் உண்மையை நாடியே அக்குடிசைக்கு வந்தனர். இத்தருணத்தில் ஒருநாள் தனது குருநாதர் செல்லப்பா சுவாமிகள் நோய்வாய்ப்பட்டிருப்பதாக அறிந்து அவருக்குப் பணிவிடை செய்வதற்காக யோகசுவாமிகள் விரைந்து சென்றார். அவர் வருகையை உணர்ந்த செல்லப்பா சுவாமிகள் அவர் உள்ளே செல்வதன் முன் அவருக்குக் கேட்கும்படியாக உரத்த குரலில் ''வெளியே நின்று பார்'' என்றார். யோகசுவாமிகளும் குருநாதர் சொற்கேட்டு உள்ளே போகாமல் வெளியே நின்று அகக் கண்ணால் அவரைக் கண்டு வணங்கினார். ○○○



சிந்தைத் தெளிவுக்குச் சிவனைச் சிந்தனை செய் மனமே

சிவநெறிக் கவிஞர்
இராகவன் முத்து, எம்.ஏ.,
காரைக்குடி



சிவபெருமான் ஒருவரே முழுமுதற் கடவுள் என்று போற்றும் சமயம் சைவம் ஆகும். ''சைவம், சிவனோடு சம்பந்தம் ஆவது''. கணபதியும் முருகனும் சிவபிரானின் திருமைந்தர்கள். அம்பிகையாகிய உமையவள், சிவனாரின் திருமேனியில் இடப் பாதியில் இடங்கொண்ட அவரின் இல்லக்கிழத்தி. திருமாலும் அம்பிகையும் அண்ணன் தங்கை உறவுடையவர்கள். சிவபிரானின் கண்கள் மூன்றில் வலக் கண் சூரியன். எனவே, அறுசமயக் கூறுகளும் சைவத்துக்குள்ளேயே இடம் பெற்றுவிடும் என்பது தீவிர சைவர்களின் கோட்பாடு.

சிவபிரான் பவழம் போல் சிவந்த திருமேனி உடையவர். அவர், வெள்ளிப் பனிமலை ஆகிய கயிலையில் எழுந்தருளி இருக்கிறார். அவர்தம் மனையாட்டி ஆகிய உமையம்மை, மரகதப் பசுங்கொடியை ஒத்தவர்.

''சிவன் எனும் நாமம் தனக்கே உடைய
செம்மேனி எம்மான்''

என்பது அப்பர் தேவாரம்.

''சுத்தமார் பளிங்கின் பெருமலை உடனே
சுடர் மரகதம் அடுத்தால் போல
அத்தனார் உமையோடும் இன்புறுகின்ற
ஆலவாய்''

என்பது ஞானசம்பந்தர் தேவாரம்.

சிவபிரான் தலையில் அணிந்திருக்கும் மாலை (கண்ணி) கொன்றைப்பூ மாலை. அவரின் திருமார்பிலும் கொன்றை மாலைதான் அணி செய்கிறது. (மார்பில் இடம் பெறுவது ''தார்'').

''கண்ணி கார்நறும் கொன்றை; அவர்தம்
வண்ண மார்பின் தாரும் கொன்றை''

என்பது சங்கப் பாடல் அடியாகும்.

சிவபிரான் அமர்ந்துவரும் ஊர்தி, வெள்ளை எருதாகும். அந்த இடபமாக நந்திதேவர் சிறப்புறுகின்றார்.

''கடகரியும் பரிமாவும் தேரும் உகந்தேறாதே
இடபம் உகந்து ஏறியவன்''

என்பது திருவாசகம் (திருச்சாழல்).

திருமால், தருமதேவதை (அறக்கடவுள்) இந்திரன் முதலியோர் விடை (இடபம்) வடிவம் கொண்டு சிவபிரானைத் தாங்கியுள்ளனர்.

சைவ சமய ஆசிரியர் (குரவர்) நால்வரில் ஒருவரான சுந்தரமூர்த்தி சுவாமிகளே, சிவபிரான் தன் தோழர் என்று கொண்டார். சங்கநிதி, பதுமநிதி என்ற இரண்டு பெருநிதிகட்கும் உரிமை உடைய குபேரனை (இருநிதிக் கிழவனை)யும் தோழனாக ஏற்றார்.

''தனதன் நல் தோழா சங்கரா சூலபாணாய
தாணுவே சிவனே''

என்பது திருவிசைப்பா (தனதன் = குபேரன்)

குபேரன், அளகைப் பதியின் தலைவன். சுந்தரர், பரவையாரின் கணவர். இச்செய்திகள் இடம் பெறும்

வண்ணம், ஒரு பாடல் மிகச் சுவையுடையதாக, ''நால்வர் நான்மணி மாலையில்'' காணப் பெறுகிறது.

''அறிந்து செல்வம் உடையாளும் அளகைப் பதியான் தோழமைகொண்டு உறழ்ந்த கல்வி உடையானும் ஒருவன் வேண்டும் எனவிருந்து துறந்த முனிவர் தொழும்பரவை துணைவா! நினைத் தோழமை கொண்டான் சிறந்த அறிவு வடிவாய்த் திகழும் நுதற்கண் பெருமானே''

என்பது அந்தச் சிறப்புப் பாடல்.

சிவபிரானை முக்கண் செல்வன் என்று ஏத்துவர். நெற்றியில் இருக்கும் அனல்விழி சிறப்புக்குரியது. (அதில் இருந்தே முருகவேள் திருஅவதாரம் நிகழ்ந்தது). சைவர்கள் யாவரும் ஓத வேண்டிய புராணங்கள் மூன்று. அவற்றை இறைவனின் மூன்று விழிகட்கும் உவமையாகக் கூறுவர்.

பெரிய புராணம் என்று புகழப்பெறும் திருத் தொண்டர் புராணம், திருவிளையாடற் புராணம், கந்த புராணம் என்ற மூன்றுமே அவை.

சிவபிரானை வழிபடும்பொழுது, அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை, நைவேத்யம் இவற்றுடன் கூடப் பாடல்களை நெஞ்சுருகி ஓதி வழிபடுவதே சிறப்பு.

''அளப்பில கீதம் சொன்னார்க்கு
அடிகள்தாம் அருளு மாறே''

என்பது அப்பர் தேவாரம். பாடல்களை அவற்றுக்கு உரிய பண்ணுடன் சேரப் பாடுதலே சிறப்பு; இருப்பினும் பண் விரவாமலும் பாடல்களை ஓதினாலே கூட இறைவன் மகிழ்வான் என்பது அப்பர் காட்டும் குறிப்பு.

''சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்பவர்கள் சொல்வர்'' என்பது திருவாசகம் (சிவபுராணம்)

சிவபிரானைக் குறித்த விரதங்களில் தலைமை யானவை 1. சோமவார (திங்கட்கிழமை) விரதம் 2. சிவராத்திரி விரதம், 3. பிரதோஷ விரதம்.

சிவராத்திரி விரதம் ஆண்டுக்கு ஒரு முறை மாசித் திங்களில் வருவது.

பிரதோஷம் என்பது திங்களுக்கு இரு முறை வளர்பிறையானால் அமாவாசை கழிந்த பின்வரும் 13 ஆம் நாள் திரயோதசியும் தேய்பிறையானால் பவுர்ணமிக்குப் பின்வரும் 13 ஆம் நாள் திரயோதசியும் இரு நாள்களிலும் மாலைப் பொழுது (சந்தியா காலம்) களில் வருவது.

சிவபிரானைப் போற்றி வணங்கும் பாடல்கள் தேவாரம் முதலாகிய பன்னிரு திருமுறைகள். அவற்றுள் இருந்து குறைந்த அளவு, ஐந்து பாடல்களாவது ஓத வேண்டும்.

சம்பந்தர், அப்பர், சுந்தரர் பாடிய தேவாரத்தில் ஒரு பாடல், மணிவாசகர் பாடிய திருவாசகம்-ஒரு பாடல், பலர் பாடிய திருவிசைப்பாவில் இருந்து- ஒரு பாடல், சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு- ஒரு பாடல், சேக்கிழார் அருளிய பெரியபுராணத்திலிருந்து -ஒரு பாடல், இவ்வண்ணம் 5 பாடல்களை ஓதும் மரபுக்குப் ''பஞ்ச புராணம் ஓதுதல்'' என்று பெயர்.

இவற்றை ஓதத் தொடங்கும் முன்பும் ஓதி முடித்த பின்பும் ''திருச்சிற்றம்பலம்'' என்று சொல்லுதல் வேண்டும்.

தில்லை (சிதம்பரம்)	கனகசபை (பொன் அம்பலம்)
மதுரை (திருஆலவாய்)	வெள்ளியம்பலம்
திருநெல்வேலி	தாமிரசபை
திருஆலங்காடு	இரத்தினசபை
திருக்குற்றாலம்	சித்திரசபை

சிவபிரான் தன்னுடைய கூத்தபிரான் என்ற வடிவில் பல்வேறு நடனங்கள் மேற்கொள்கிறார். இவை மொத்தம் 108 என்று நூல்கள் கூறும். அவற்றுள் திரிபுர தாண்டவம், கௌரி தாண்டவம் முதலான 12 நடனங்கள் மிகச் சிறப்புக்குரியன என்று கூத்துநூல், பரத சேனாதிபதியம், சங்கீத ரத்னாகரம் முதலிய நூற்கலை இலக்கணங்களில் குறிப்புக்கள் உள்ளன. பின்வரும் 5 நடனங்களை மிகமிகப் போற்றுவர்.

ஆனந்தத் தாண்டவம்	தில்லை, பேரூர்
அசபா நடனம்	திருஆரூர்
சுந்தர நடனம்	திருஆலவாய் (மதுரை)
ஊர்த்துவ நடனம்	அவினாசி
பிரம்ம தாண்டவம்	திருமுருகன்பூண்டி

தில்லைத் தலம் ஆகாய வடிவமான சிவத்தலம். ஆகாயம் எப்படிக் கட்டுக்குள் அடங்காததோ அதே போல் தில்லைச் சிற்றம்பலமும் எவ்வகை ஆகமக் கட்டுப்பாட்டுக்கும் அப்பாற்பட்டது.

காஞ்சியின் தலைமைத் தெய்வம் காமாட்சி அன்னை. எனவே, அங்குள்ள எல்லாக் கோயிலும் காமாட்சிக்கு முதுகு காட்டாமல் முகம் காட்டும் வண்ணம் உள்ளன. ○❍○



புலம்பெயர் இளையோர் வாழ்விற் சைவம்

பாவலர் கந்தையா இராஜமனோகரன்
பொறியியலாளர், எழுத்தாளர்,
வானொலி/தொலைக்காட்சி நிகழ்ச்சித் தயாரிப்பாளர்

சைவம் என்றாற் சிவநெறி என்பது பொருள். நெறி என்றால் வழி அல்லது ஒழுக்கம். எனவே சைவம் என்றாற் சிவனை அடையும் வழி என்றாகும்.

வாழ்வு என்பது வாழ்வாங்கு வாழ்தலே. எவ்வாறு வாழினும் சரியே என்பது வாழ்வல்ல. அது உயிரோடு இருத்தல் ஆகும். ஒழுக்கத்தை உயிர்நாடியாகக் கொண்ட வாழ்வே வாழ்வு. அதுவே வாழ்வாங்கு வாழுதல்.

இளையோர் எனும்போது இக்காலத்திலே ஏறத்தாழ முப்பத்தைந்து அகவை வரையுள்ளவரைக் கொள்ளலாம். இன்று அதிகமானோர் அதன் பின்னரே திருமணஞ் செய்கின்றனர். புலம்பெயர் தமிழரின் அடுத்த சந்ததியினர் இப்போது இருபதுகளிலே திருமணஞ் செய்வதையும் கருத்தில் கொள்ள வேண்டும். பருவத்தே பயிர் செய்வது மகிழ்வே. எனினும் ஆன்ம ஈடு பாடாகக்கருதாத மேற்குலகத் திருமண முறைகளின் தாக்கம் எவ்வகை விளைவுகளைச் செய்யுமோ என்ற ஏக்கமும் அதிமான பெற்றோருக்கு இருக்கத்தான் செய்கின்றது. இங்கு இளையோர் என்ற சொல் இரு பாலாரையுங் குறிக்கும்.

புலம்பெயர்ந்த பெரியவர்கள் பலருடைய வாழ்விலேயே சைவநெறி கேள்விக்கு உரியதாக உள்ளது. இந்நிலையிலே இளையோர் வாழ்விலே அது எத்தகைய நிலையிலே உள்ளதென்பதை ஆய்வது சிரமமானது. எனினும், அதுவே இக்கட்டுரையின் கருப்பொருள்.

கட்டுரைக் கருப்பொருள்

புலம்பெயர்ந்த சைவ இளையோரின் வாழ்விலே சைவ சமய நெறி எந்த அளவிலே பேணப்படுகின்றது என்பதுவே ஆய்வுக்குரிய கேள்வி.

எவருந் தனிப்பட்ட முறையிலே வாழ்வியலைக் கற்பது தத்தமது வீடுகளில்தான். அதனைச் சமுதாயப் பிணைப்போடு நெறிப்படுத்துவன பாடசாலைகள், கல்லூரிகள், கோயில்கள் போன்ற இன்னோரன்ன இடங்களிலான கூட்டு முயற்சிகள். ஈழத்திலே பாட சாலைகள் சமய நெறிகளைப் புகட்டுவனவாக அமைந்தன. அதன்பின்னர் சமுதாயமும் அதனைப் பெருமளவு நெறிப்படுத்தியது. புலம்பெயர் நாடுகள் பலவற்றிலே பொதுவான சமய பாடமே கற்பிக்கப் படுவதில்லை. சமுதாயம் என்ற சொல்லே கருத்தற்ற சொல்லாகிவிட்ட நிலைமை.

பிரித்தானியப் பாடசாலைகளிலே சமயமும் ஒரு பாடம். உலகிலே உள்ள பெரும்பான்மையான பழைமை வாய்ந்த சமயங்களைப் பற்றி ஓரளவு கற்பிக்கப்படுகின்றது. இது வரவேற்கத் தக்கது எனினும் சைவத்தைப் பொறுத்த மட்டிலே பல எதிர் விளைவுகளையும் தந்து நிற்கின்றது. இந்து சமயம் என்ற மாயப் போர்வைக்குள் சைவ சித்தாந்தத்தைக் காட்டுவது இயலாதது என்பது மேற்கு உலகத்தவர்க்குப் புரியாத ஒன்று. இதனாலே எம் பிள்ளைகள் தமது சைவம் பற்றிய சரியான அறிவு இல்லாதவர்கள் ஆகின்றனர். இந்து என்ற இடையிட்டு வந்த முலாமிட்ட போர்வைக்குள் முடங்கிவிடுகின்றனர்.

அதிகமான பெற்றோருக்கும் சைவசித்தாந்த அறிவு இல்லை. கண்ட பாவனையிலே கொண்டை முடிபவரே அதிகம் பேர். மேற்கிலே வளரும் பிள்ளைகள் பாடசாலையிலே கற்கத் தொடங்கியதும் கண்ட பாவனையிலே கொண்டை முடிய மறுப்பர். இதனாலே உள்ளேயுஞ் சிக்கல். வெளியேயுஞ் சிரமம்.

இவ்வாறான அகப் புறச் சூழலிலே சைவ வாழ்வு எவ்வாறு பேணப்படுகின்றது என்பதைக் கவனிப்போம்.

கட்டுரையை எழுத எனக்குள்ள தகுதிகள்:

இவர் யார் இதை எழுத என மனத்திற்குள்ளே குடைவது பலருக்கும் அழுத்தத்தைத் தந்து நிற்கும். நானே எனக்குள்ளதென எண்ணுந் தகுதியைத் தருகின்றேன்.

செய்வினைப் பயனையொட்டிய இறைவனுடைய அருட்கட்டளைக்கு இணங்கப் பிரித்தானியாவிலும் ஏனைய ஐரோப்பிய ஸ்கண்டிநேவிய நாடுகளிலும் வாழும் இளையோருக்குச் சைவ சித்தாந்தத்தைப் புகட்டி வருகின்றேன். எல்லாமாக இருபத்து மூன்று இடங்களிலே இவ்வகுப்புகளை ஆரம்பித்தேன். ஈலிங்கிலுள்ள எனது வழமையான வகுப்பு

1998ஆம் ஆண்டின் மாசி மாதத்திலே தொடங்கப் பட்டது. ஏறத்தாழ எண்பது பிள்ளைகளோடும் ஐந்தாறு ஆசிரியர்களின் துணையோடும் நன்றாகவே நகர்கின்றது. இவற்றின் மூலமாகப் பல நூற்றுக்கணக்கான இளைஞரும் யுவதியரும் எனது மாணவர்கள். எல்லோரோடும் நட்பு முறையிலேயே பழகி வருகின்றேன். இதனாலே அவர்கள் உள்ளத்தை ஓரளவிற்காவது என்னாலே புரிந்து கொள்ள முடியும். அவர்களின் வாழ்வியலையும் அறிந்தவனாக உள்ளேன்.

சொந்தப் பிள்ளைகள் மூவர். புலம் பெயர்ந்த பின்னரே பிறந்தவர்கள். மூத்தவர் ஆண். ஏனையோர் பெண்கள். இப்போது முறையே 23, 21, 18 அகவை யினர். எனவே கட்டுரைக் கருப்பொருளினுள்ளே இலகுவாக அடக்கப்படக் கூடியவர்கள்.

என் துணைவி காரணந் தெரியாத எதனையும் ஏற்கமாட்டாதவள். காரணத்தை எவர் கூறினுந் தானாக வும் அதனைத் தேடிச் சரி பார்த்த பின்னரே செயற் படுத்தும் பகுத்தறிவுவாதி. எனவே ஊரிலே "இவ்வாறு தான் செய்வர்" போன்ற ஒரு காரணத்தை மட்டும் வைத்து எதனையும் செய்யவோ செய்விக்கவோ முடியாத அவலம் உள்ளவன்.

மேலே கூறப்பட்டவற்றை வைத்துப் பார்த்தால், நான் எவ்வளவு தூரம் தேடலிலே ஈடுபட வேண்டும் என்பது எவர்க்கும் புரியும்.

கல்வியிலே இன்னும் மாணாக்கன், உண்மையிலே படிப்பவன். படிப்பிப்பது சுலபம். அதுவே என்மீது சில பேருக்குள்ள கவர்ச்சி போலும்!

இவற்றைவிட, கடவுளையும் ஆன்மாக்களையும் பற்றிச் சிந்தனை செய்வது எனக்கு நன்கு விருப்பமான ஒன்று.

வாழ்வியல் கற்பிக்கப்படும் ஒன்றா?

சைவ சமய நெறியிலே வாழுதல் என்பதனை எவருக்கும் கற்பிக்க முடியுமா? எதனையும் கற்பிக்கலாம். எவரும் கற்கலாம். கற்றவற்றிலே பாண் டித்தியமும் பெறலாம். ஆனால் கற்றபடி ஒழுகல் என்பது சிரமமானது. அதனாலேயே வள்ளுவர்,

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக." என்றார்.

மேற்கு நாடுகளிலே சைவ நெறிகளைக் கற்பிக்கும் பொறுப்பு சைவ நிறுவனங்களுடையது. சைவ நிறுவனங்களிலே முதன்மையானவை கோயில்களே. கோயில்களையும் பள்ளி என்பது அதனாலேயே. பள்ளி என்றாற் பயிலுமிடம். சைவத்தின் ஆரம்பப் பயிற்சிக்குரிய இடம் கோயில். கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம் என்றதும் அதனாலேயே.

கோயில்கள் சைவத்தின் ஆரம்ப இடைநிலைப் பாடசாலைகள். ஒருவர் முதுமைவரை தொடர்ந்து படிப்பாரேயானால் அவரிலோ அல்லது பாடசாலை யிலோ அல்லது இருவரிலுமோ பிழைகள் இருக் கின்றன என்பதே பொருள். முப்பத்தைந்து வயதின் பின்னர் கோயிலுக்குச் சேவை செய்யவும் தன்னிலும் இளையோரை வழி நடத்தவுமே ஒழுங்கான சைவர் செல்வர்.

இளையோரின் நிலைப்பாடு

இன்று இளைஞரும் யுவதியரும் கோயிலுக்குச் செல்வதில்லை என்றும் மதங்களை மதிப்பதில்லை என்றும் பலரும் குறை கூறுவதுண்டு. ஏதோ இந்த நூற்றாண்டிலேயே இந்நிலைமை என்பது சிலருடைய எண்ணம். மேற்கிலேதான் இந்நிலை மோசமாகின்றது என்பது சிலருடைய மயக்கம். ஆனால் நன்கு எண்ணிப் பார்த்தால் இது எக்காலத்திலும் உள்ள நிலைமையே. அளவுகள் வேறுபடுகின்றன. அவ்வளவே.

இக்கட்டுரையிலே நான் வாழும் பிரித்தானியா, நான் சென்று கல்வி புகட்டும் ஐரோப்பிய ஸ்கண்டி நேவிய நாடுகள் போன்றவற்றிலே நிலவும் தன்மைகளை அடிப்படையாக வைத்து ஆய்ந்துள்ளேன்.

இன்று உலகம் மிகவும் சுருங்கிவிட்டது. உலக மயமாக்கல் மிக வேகமாக எக்கணமும் நடைபெறு கின்றது. இதனாலே உலகின் நாடுகளிடையேயும் நாடு களின் பகுதிகளிடையேயும் தனித்துவமாகவிருந்த பண்பாடு, பழக்கவழக்கம் போன்றவை ஒரு புள்ளியை நோக்கி ஒடுங்குகின்றன. உண்மையிலே அவ்வாறு நகரவேண்டியதால் பணபலம் மட்டும் விலகிச் செல்கின்றது. ஏழைகளுக்கும் பணக்காரருக்குமுள்ள இடைவெளி பெரிதாகுகின்றது. முதலாளித்துவ நாடுகளின் உலகமயமாக்கல் இவ்வாறே இருக்கும். எனவே இக்கட்டுரையிலே கூறப்பட்ட நிலைமைகள் உலகின் எப்பகுதிக்கும் ஓரளவாவது பொருந்தும்.

தியானமும், இறையுணர்வோடு இயற்றும் செயல்களுமே சைவ வாழ்வினுடைய அடிப்படைகள். கணவன் மனைவியின் உடலுறவு உட்பட அனைத் துமே இறையுணர்வோடு செய்யப்பட வேண்டும் என்பதுவே விதி.

இறைவன் அடியவருக்குக் காட்சி தரவே உருவங்களை எடுக்கின்றான். அவன் தன்னலமற்ற அன்பு, பலன் கருதாத கருணை, தூய்மையான அறிவு போன்ற உணர்வுகளே இறைவன் வாழும் இடங்கள். இதனை அறிந்தவர் சிலர். உணர்ந்தவர் மிகவும் குறைவானவர்கள்.

இளைஞர்களின் சிந்தனைக்கு...

மனிதரிலே காணப்படும் குறைகள் குற்றங்கள் ஆகா. ஆனால், இக்குறைகளை மறைப்பதும் ஏனையோர் உணர்த்திய பின்னர்த் தொடர்வதும் குற்றங்களே.

சைவத் தமிழ் இளையோரோடு மனம்விட்டு உறவாடும் தன்மையாலே யான் கண்டுகொண்ட **திருத்துவதற்கான வழிகள் வருமாறு:**

1. குறைகளைச் சுட்டுவோரை எதிரியாகக் கருதலாகாது. நட்பின் முதற்கடமையே தன் நண்பன் விடும் பிழையைச் சுட்டிக்காட்டித் திருத்துவதே.

கருத்து முரண்பாடுகளைத் தமக்கு மேலான தனிப்பட்ட முரண்பாடுகளெனக் கருதுதல் எம்மிலே பலருக்குள்ள குறைபாடாகும். இது அறிவிலே தெளிவற்ற நிலையும் தாழ்வு மனப்பான்மையும் கலந்த நிலையைக் காட்டும்.

கருத்து முரண்பாடுகள் ஆரோக்கியமானவை. அதனை இரு பக்கத்தாரும் ஆய்ந்து தெளிந்து ஒரு முடிவை ஏற்று ஒற்றுமையாக இயங்குவதே யாவரையும் வாழ வைக்கும். கருத்து முரண்பாடுகளைப் பெரிதுபடுத்தித் தாம் சார்ந்த நிறுவனத்தையே கூறு படுத்துவது மிகவும் பிழையான செயலாகும். போட்டியாக இன்னொன்றை உருவாக்குவது அதனினும் பிழையானதாகும்.

2. பொதுநலம் சார்ந்த சேவை மனப்பான்மை இல்லாமை அடுத்த பெரிய குறையாகும். இது அறிவிலே தெளிவற்ற இயல்பும் கல் நெஞ்சத்தின் வெளிப்பாடும் கலந்த நிலை. மனிதத்தை மதிக்கும் பழக்கத்தை உருவாக்கப் பழகுவதே இதனைத் திருத்தும் ஒரே வழி. நாற்பது வயதிற்குப் பின்னராவது பொதுச் சேவை செய்யத் தொடங்காதவர் வாழ்வை வீணாக்கியவரே.

3. சரியான முறையிலே கடைப்பிடித்தால் சைவம் ஒரு சமயமோ மதமோ அல்ல. அது ஆன்மிகம், வாழ்வியல் நீதி. ஆன்மாவின் எல்லாப் பிறப்பு களையும் இணைக்கும் பாலம்.

உலகிலே பிறந்த உயிர்கள் எல்லாமே சைவரே. இதனாலேதான் யாரும் சமயம் மாறத் தேவையில்லை. தான் பிறந்த சமயத்திலே கூறப்பட்ட கடமைகளைச் செம்மையுறச் செய்யும் எவரும் சைவ வாழ்வு வாழ்பவரே.

கடவுள் மறுப்பாளராகினும் உலகியல் நீதிக்கு உட்பட்டு மனித நேயத்தோடு செயலாற்றுவாராயின் அவரும் சைவ வாழ்வை வாழ்பவரே.

எனவே மதங்கடந்த இறைவனைக் காட்ட வல்லது மதங்கடந்த ஆன்மிகமே என்பதை யாவரும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

4. இன விடுதலைக்கு உதவாத நிலைமையும் எதிர்ப்புத் தன்மையும் சைவத்தை அழிப்போரை ஆதரிக்கும் செயல்களாகும்.

இவையும் அறிவிலே தெளிவற்ற இயல்பும் கல் நெஞ்சத்தின் வெளிப்பாடும் கலந்த நிலையே. குறிப்பாக அரசியல் ஞானமில்லாததும் இன்றைய உலகச் சூழலைப் புரிய மாட்டாததும் தன்னலம் மட்டுமே மிகுந்ததுமான தன்மையே இந்த நிலையைத்தரும்.

5 அருளாளரின் வாழ்வையும் அவர் சொன்ன பாடல்களையும் பெரியவர்கள் முதலிலே கற்க வேண்டும். இளையோருக்கு எளிய முறையிலே கற்பிக்க வேண்டும். முக்கியமாகத் திருமூலர் அருளிய திருமந்திரத்தை அடிப்படையாக வைத்து எமது வாழ்வியலை அமைக்க முற்பட வேண்டம்.

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்...
படமாடும் கோயில் பகவற்கொன்று ஈயில்...
என்பே விறகாய் அறுத்திட்டு...
அன்பும் சிவமும் இரண்டு என்பர்...

போன்ற பாடல்களை எல்லோரும் கட்டாயமாகப் படித்து அவற்றின்படி ஒழுகப் பழக வேண்டும்.

வருங்காலம்

சைவம் என்பது வாழ்வியல் நீதி. அதனாலேயே ''மேன்மை கொள்சைவ நீதி விளங்குக உலகம் எல்லாம்'' என்பர் சைவர். சைவம் உள்ளத்து உணர்வு. கடவுள் மறுப்புக் கொள்கையாளரையும் உள்ளடக்கிய சமயம். மனிதரின் முடிவுகள் எல்லாமே அவரவர் ஆன்மிக அறிவுக்கு ஏற்றவகையினவாகவே அமையும். ஆன்மிக அறிவும் அதன்படி வாழ்தலும் இறையுணர்வும் ஏற்பட்டால் மட்டுமே இவ்வுலக வாழ்வு பயன் தருவதாக அமையும். அல்லாவிடில் அனைத்தும் வீணே. இறுதியாகக் கண்களை மூடும்போது அதுவரை கண்டவையும் அனுபவித்த வையும் கானல் நீராகிவிடும்.

இளைஞரும் யுவதியரும் இவற்றைத் தத்தம் உளங்களிலே சிந்தித்து ஏற்ற செயல் புரிந்தால் உலகின் எப்பகுதியிலே வாழினும் நன்மையே விளையும். வருங்காலம் பொற்காலமாகும். ○○○

காரைக்கால் அம்மையாருக்கு
முக்தி வழங்கிய ஆடலரசன்

காரைக்கால் அம்மையாருக்குப் பூர்வீகத்தில் புனிதவதி என்று பெயர். ஒருமுறை கணவன் கேட்டதற்காகத் தன் மாசற்ற பக்தியால் இறைவனிடமிருந்து ஒரு மாங்கனியைப் பெற்றுத் தந்தாள். ஈசனுக்கு நெருக்கமானவளை இல்லறத்தில் ஈடுபடுத்துவதா எனக் கலங்கிக் கணவன் பிரிந்தான். வேறோர் பெண்ணை மணந்தான்.

வாழ்க்கைத் துணையே பிரிந்தபின் வாலிபமும் வனப்பும் எதற்கு? புனிதவதி துறவியானார். காரைக் கால் அம்மையாரானார்.

இமைத்திருக்கும் பொழுதெல்லாம் ஈசனின் புகழ்பாடிக் கயிலையை அடைந்தார். அம்மையாரின் அழுத்தமான பக்திகண்டு ஆண்டவன் அகமகிழ்ந்தான். ''வேண்டும் வரம் கேள்'' என்றான்.

''இறவாத அன்பு வேண்டும், பிறவாமை வேண்டும். மீண்டும் பிறப்பு உண்டேல் உன்னை என்றும் மறவாமை வேண்டும். அறவா! நீ ஆடும் போது உன் அடியின்கீழ் மகிழ்ந்து பாடி இருக்க வேண்டும்''.

''நல்லது'' என்றான் நமசிவாயன். ''உமையின் அம்சமான காளியுடன் நான் ஊர்த்துவ தாண்டவம் ஆடும் ஆலங்காட்டுக்கு வா'' என அருளினான்.

ஆலங்காட்டில் அடியெடுத்து வைத்ததும் காரைக்கால் அம்மையாருக்குப் புதிய சோதனை.

அம்மையாரின் பாதம் பட்ட இடத்தில் எல்லாம் ஒரு லிங்கம் பூமியிலிருந்து பீறிட்டு எழுந்தது. அவர் கதி கலங்கிப் போனார்.

''என் காலடியில் கயிலை நாதனா? அவன் திருவடிக்கீழ் நான் வீழ்ந்து கிடக்கவல்லவா வரம் பெற்றேன்? தலைவன் தாயுடன் நடனம் புரிவதைத் தரணியில் தரிசிக்கத் தடையா?

கால் வைத்தால்தானே கலக்கம் என்று தலை யாலேயே தளராமல் நடந்தார். விடுவானா இறைவன்.

மயான பூமியைக் கடக்கும்போது அடுத்த சோதனை ஆவிகளும் பேய்களும் அம்மையாரைச் சூழ்ந்தன. ''எம்மையன்றி வேறு யாரும் இங்கே நடமாட உரிமையில்லை'' எனக் கொக்கரித்தன.




அயரவில்லை அம்மையார். அன்னையும், ஆண்டவனும் ஆடும் அற்புதம் காண ஆவியாகவும் மாறத் தயார் எனத் துணிந்தார். பேய்வடிவம் பூண்டும் பரமசிவன் தாள்கள் போற்றினார்.

பத்ரகாளியும் பிறைசூடிய பெருமானும் ஆடும் திருநடனம் கண்டு பிறவிப் பயன் பெற்றேன் என்று பரவசமுற்றார்.

அன்னை பரிந்துரைக்க, ஆலங்காட்டில் எண் தோள் வீசி ஆற்றலுடன் நிமிர்ந்தாடும் ஆடலரசன் காரைக் கால் அம்மையாரை ரத்னசபையில் தன் திருவடி களுக்குக் கீழ் இருத்தி முக்தி வழங்கினார். ○○○

சைவசித்தாந்தப் பக்திநெறியும், வினைக்கோட்பாடும்

த. மேரி ஜான்சிராணி,
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.



சைவ சித்தாந்தம் உணர்த்தும் பக்தி நெறியையும், வினைக்கோட்பாட்டையும் இணைத்து நோக்கும் நிலையில் இக்கட்டுரை அமைகிறது. சாத்திரங்கள் என்பனவும், அனுபவங்கள் என்பனவும் தத்துவப் பறவையின் இரு சிறகுகள் என்பர். சைவ சித்தாந்த சாத்திரங்களையும், நீதி இலக்கியங்களையும் நோக்குமிடத்து வினைப்பயன் அனுபவித்தே ஆக வேண்டும் என்ற கருத்து ஏற்கத்தக்க தாயினும் பத்திமை பூண்டொழுகும் பக்தியாளர்களின் அனுபவங்களை நோக்குமிடத்துப் பக்தியினால் வினைப் பயனைக் குறைத்துக் கொள்ளவோ, வேறொன்றாக மாற்றியமைக்கவோ அல்லது அல்லாமலே செய்து விடவோ முடியும் என்ற உண்மையும் உணரத்தக்கது. வினைப்பயனை நுகர்ந்தே ஆகவேண்டும் என்று கூறும் கருத்துகளை,

''தாம்தாம் முன்செய்த வினை தாமே அனுபவிப்பர்''

என்று நல்வழியும்,

''தானே புரிவினையாற் சாரும் இருபயனும்
.....செய்தவனை
நாடிநிற்கும் என்றார் நயந்து''

என்று நீதிவெண்பாவும், ''பசுக் கூட்டத்திற்குள் புகுந்துவிட்ட கன்றானது தனது தாய்ப் பசுவினைத் தானாகச் சென்று சார்ந்துவிடும் திறம் பெற்றதைப் போன்று நாம் முன்பு செய்த வினையின் பயன்கள் பின்பு ஒருகால் செய்தவனை நாடிச்சென்று சேரும் திறமுடைத்து என்று நாலடியாரும்,

''சூழ்வினை நான்முகத்து ஒருவற் சூழினும்
ஊழ்வினை ஒருவரால் ஒழிக்கற் பாலதோ''

என்று கம்பராமாயணமும், கன்மம் என்றே அழைக்கப்படும் வினைப்பயன் சத்தியமாகிய ஆன்ம ஞானமும் அசத்தியமாகிய மாயா காரியமும் கூடியவிடத்திலே உண்டானதாகையால் புண்ணிய பாவச் சொரூபமாகிப் பிரளயத்திலே மறைந்திருந்து மாயையிலேயிருந்து படைத்தல் காலத்திலே ஆன்மாக்களுக்குத் தனுவாதி உண்டாவதற்கு உபயோகமாவதாம் என்று சைவ சித்தாந்த சாத்திரமாகிய சிவஞான சித்தியார் நூலும் எடுத்துக் காட்டுகின்றன. ''அண்ணாமலை தொழுவார் வினைவழுவா வண்ணம் அறுமே''

''பற்ற நின்றாரைப் பற்றா பாவமே''
''அண்ணல் எனாநிலை வார்வினை தீர்ப்பார்''

எனத் தேவாரத்தில் சம்பந்தரும், சுந்தரரும்,

''முன்னை வினையிரண்டும் வேரறுத்து முன்னின்றார்
வருந்துயரம் தீர்க்கும் மருந்து'' (திருவாசகம்)

எனவே சாத்திரப் பொருண்மையுடன் அனுபவமும் தோத்திரப் பொருண்மையும் ஏற்புடைத்து என்றே கொளல் வேண்டும்.

இறைவனின் அருள்நிலை

இறைவனின் அருள் நிலையினை மூன்று வகைகளாகப் பிரிக்கலாம்.

1. இறைவனின் அருட்பதிவு, 2. நால்வரின் வினைநிலையும் இறைவனின் அருளும், 3. இறைக் கருணை

இறைவனின் அருட்பதிவு

அருள் என்றால் தொடர்பு மாறாமல் இயல்பாக

எல்லா உயிர்கள் மேலும் காட்டும் இரக்கம் என்று பொருள்படும். அதன் மற்றொரு பொருள் 'நல்வினை' என்பது ஆகும். இறைவனின் அருள் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நால்வரிடத்தும் தொடர்பு மாறாமல் செலுத்தப்பட்ட போதும் அவர்களது நல்வினைகளுக்கேற்ப அப்பரிடத்து ஒரு தன்மைத் தாயும் மற்ற மூவரிடத்தும் மற்றொரு தன்மைத்தாயும் வந்து எய்தப் பெற்றது எனலாம். சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்னும் மூவருக்கும் இறைவன் தானாகத் தன் இருப்பைக் காட்டி அருள்கின்றார்.

பாலுக்காக ஏங்கிய நிலையில் மூன்று வயதுச் சிறுவனாகச் சம்பந்தர் இருக்கும்போது இறைவியின் மூலம் ஞானப்பால் ஊட்டித் தம் இருப்பை இறைவன் உணரவைத்தான்.

சுந்தரர் மணக்கோலத்தில் திருமணம் செய்து கொள்ள மணமகனாக நின்றபோது தன்னை அறிவித்து இறைவன் ஆட்கொண்டான்.

அரசரிடம் மந்திரியாய் இருந்த மாணிக்கவாசகர் பலகோடிப் பொன்களுடன் பரிகள் வாங்கிவர, அரசரால் அனுப்பப்பட்ட, அங்குள்ள பொழிலில் குருந்தமரத்தின் அடியில் இறைவன் தம் சிவகணங்கள் ஆகிய சீடர்களுடன் குருவாக வந்து ஆட்கொண்டார். ஆனால் அப்பர் பிரானுக்கு அந்நிலை வாய்க்கப் பெற வில்லை. சமணத்தில் இருந்து அப்பரைச் சைவத்திற்கு மாற்ற எண்ணிய அவர்தம் தமக்கை திலகவதியார் இறைவனிடம் மனமுருகி வேண்டி நிற்க இறைவனும் சூலை நோய் எனும் துன்பத்தை அப்பருக்கு அளித்துத் தன்னை அறிவிக்கின்றார் என்பதை அவர்தம் வரலாறு புலப்படுத்துகின்றது.

நால்வரின் வினைநிலையும் இறைவனின் அருளும்

இறைவன் உயிர்களை அடிமையாக வைத் திருப்பதில்லை. பக்குவப்பட்ட உயிர்களுக்குத் திருவருள் துணை செய்கின்றார். திருவருள் துணைபெற்ற மேலோர்களாகிய சமய குரவர்களை நோக்குமிடத்து அப்பரைத் தவிர்த்து மற்ற மூவரும் தங்களது முந்திய பிறவிகளாலேயே இறையை முற்றிலும் உணர்ந்திருந்த பக்குவ நிலையினை எய்தியிருக்க வேண்டும். அதன் பொருட்டே ஏதோ ஒரு காரணத்திற்காகத் தம்மால் அளிக்கப்பட்ட இப்பிறப்பில் மாயைதனில் இடப் படாமல் இருக்கத் தாமாகத் தம்மை மீண்டும் அறிவிக்க வேண்டிய நிலையில் அருள் புரிந்தார் என்று கூறலாம்.

மாணிக்கவாசகரைப் பொறுத்தவரை சம்பந்தர், சுந்தரரைவிட அவரது ஆன்மா பல பிறவிகளில் செய்த நல்வினைப் பயன்களின் காரணமாகச் சாயுச்சிய பதவியை எய்தும் பக்குவ நிலையை அடையப் பெற் றிருந்தது. அதன் பொருட்டே அதி பக்குவமுடைய ஆன்மாவிற்கு இறைவன் உள்நின்று உணர்த்துவதோடு ஆசாரிய கோலத்தில் நின்று உணர்த்தினார்.

இறைக் கருணை

அருளினைத் தம் இயல்பாகக் கொண்ட இறைவன் தம் அடியார்களுக்குத் தம்மையே அளிக்கக் காத்திருப்பார். அடியார்களின் வினைநிலை எப்படி யிருப்பினும் அவர்களின் பக்திமைக்காக அவர்களை ஓர் உயரிய நிலையில் நிறுத்திவைத்துப் பெருமைப் படுத்தத் தவறுவதில்லை. தமது பக்தியினால் பக்குவ நிலையில் உச்சத்தைப் பெற்றிருந்த அப்பர் பெரு மானை இறைவன் சில இடங்களில் பெருமைப் படுத்திக் காட்டுகிறார். விதியின் போக்கை முறையாகப் போகவிட்டுத் தம் அருளிலும் எவ்விதக் குறை பாடும் வந்துவிடாமல் அளித்து அருளும் இறைவன் நாவுக்கரசரும், சம்பந்தரும், திருவீழிமிழலையில் பஞ்சம் தீர்க்கப் பொற்காசு கேட்டுப் பெறும்போது நாவுக்கரசருக்கு மாசில்லாத காசும் சம்பந்தருக்கு மாசுள்ள பொற்காசும் கிடைக்கச் செய்கின்றார்.

இடையிடையே இடர்ப்பாடு வந்துற்றாலும், இறைவனின் அருள்நிலையைத் தம் பக்தியினால் தனதாக்கிக் கொண்ட நாவுக்கரசர் தம் உழவாரத் தொண்டினை இறுதிவரை உறுதியுடன் கடைப்பிடித்துத் தொண்டில் சிறந்து நின்றார். நாவுக்கரசர் பெருமை யினை ஓரிடத்திலேனும் உயர்த்திக் காட்டுதல் வேண்டும் என்பதற்காகவே சம்பந்தரைக் காட்டிலும் அப்பர் பெருமானுக்கு மாசில்லாப் பொன் வழங்கி உயர்த்தினார் போலும் எனலாம்.

மற்றவர்களுக்கு இயற்கை இறந்த நிகழ்ச்சிகளாக அருள்நிலை இருக்குமாறு எவ்வாறு இறைவனின் அருள் இருந்ததுவோ அதைப்போன்றே அப்பருக்கும் வழங்கப்பட்டிருப்பது இறைக்கருணையின் இயல்பே ஆகும்.

வினை நீக்கமும் அதன் விளக்கமும்

உயிர்களின் ஏற்றத் தாழ்விற்கும் இன்பதுன்பங் களுக்கும் வினைப் பயன்களே காரணம் என்பதை மெய்ஞ்ஞானிகளின் அனுபவ வாக்காலும் சைவ சித்தாந்தம் கூறும் தத்துவக் கருத்துகளாலும் அறியலாம். அதனை ஏற்றுக் கொள்ள வேண்டிய ஆறறிவு படைத்த மனிதர்கள் வினைப்பயன் வந்துசேரும் வழியினை விளக்கமாகத் தெரிந்துகொண்டால் வினையின் அடர்வினையும் குறைத்துக் கொள்ளமுடியும் என்று கூறலாம். ஆதிதெய்விகம், ஆதிபௌதிகம், ஆதியான் மிகம் எனும் வினைப்பயன் மட்டுப்படும் வழிகள், 'வினையியலில்' கூறப்பட்டுள்ளன. ○❍○

மட்டக்களப்பு மாவட்டத்தில்


இந்து மதத்தின் இன்றைய போக்கும் இளைஞர்களும்

கி. புண்ணியமூர்த்தி, எம்.ஏ., எம்.எட்.,
விரிவுரையாளர்,
மட்டக்களப்பு தேசிய கல்விக் கல்லூரி

பாரம்பரியமாக இந்துப் பண்பாடு வளர்ச்சி பெற்ற மாவட்டமாக மட்டக்களப்பு மாவட்டம் காணப்படுகிறது. மட்டக்களப்புத் தேசம் என்பது வட திசையில் வெருகல் ஆற்றிலிருந்து தென் திசையில் குமுக்கன் ஆறு வரைக்கும் கிழக்கே வங்காள விரிகுடாக்கரையிலிருந்து மேற்கே வெல்லசைப் பிரிவு வரையும் தொன்மைக் காலத்தில் இருந்து நிலைபெற்றிருந்ததாக வரலாறுகள் சான்று பகர்கின்றன. கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களும் உள் அடங்கியுள்ளன. மட்டக்களப்பு மாவட்டம் கோரளைப் பற்று வடக்கு முதல் மண்முனை தெற்கு எருவில் பற்று வரை 14 பிரதேசச் செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டம் கடந்த காலங்களில் தொடர்ச்சியான அனர்த்தங்களுக்கும் திட்டமிட்ட வன் முறைகளுக்கும் உட்பட்ட பிரதேசமாகக் காணப்படு கிறது. யுத்த கால சூழ்நிலையை எடுத்துக் கொண்டால் மட்டக்களப்பு மாவட்டம் பல இனங்களும் ஒன்றினுள் ஒன்று கலந்து வாழும் மாவட்டமாகக் காணப்படுகிறது. இலங்கைத் தீவில் இன ரீதியான பிரச்சினைகள் எங்கு ஏற்பட்டாலும் அது மட்டக்களப்பு மாவட்டத்தை ஏதோ ஒரு வகையில் பாதிப்பதாகவே இருக்கும். உதாரணமாக பாலஸ்தீனத்தில் அல்லது ஈராக்கில் பிரச்சினை ஏற்படும்போது இங்கு கடை அடைப்பிலும் வீதி மறிப்பிலும் எமது இஸ்லாமிய சகோதரர்கள் ஈடுபடு வார்கள். இது மாவட்டத்தின் சகல மக்களையும் பாதிப்பதாக இருக்கும்.

இது தவிர யுத்தம் ஆரம்பித்தால் தினமும் சுற்றி வளைப்புகளும் கைதுகளும் கொலைகளும் அதிகரித்துக் கொண்டே போகும். இதன் காரணமாக மட்டக்களப்பு வாழ்மக்கள் வாழ்க்கையில் பிடிப்பற்றவர்களாகவும் அர்த்தமில்லாமல் தமது வாழ்க்கையை நடத்துபவர்களாகவுமே காணப்படுகின்றனர். பெற்றோர் தம் பிள்ளைகளை அதிக வட்டிக்குப் பணம் வாங்கி மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்பிவைக்கிறார்கள். நன்கு படித்த இளைஞர்கள்கூடக் குறைந்த வேதனத்துக்கு மிகக் கடுமையான உடலை வருத்தும் வேலைகளைச் செய்வதற்காக வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர். பல இளைஞர்கள் பயத்தினால் மதம் மாறுகின்றனர். வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்து செல்கின்றனர்.



அருள்மிகு நல்லூர் கந்தன் ஆலயம்

இளைஞர் அமைப்புகள்

இச் சூழ்நிலைகளுக்கு மத்தியிலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்து சமயத்தின் வளர்ச்சிப் போக்கினை அவதானிக்க முடிகிறது. இவ்வளர்ச்சிப் போக்கின் அடிநாதமாக இருப்பவர்களும் இளைஞர்களாகவே உள்ளனர். பல இளைஞர் அமைப்புகள் உயிரோட்டமாக இயங்கி வருகின்றன. முதியவர்கள் ஆச்சரியப்படுமளவிற்கு இங்கு இளைஞர்களின் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

குறிப்பாகப் போர்க்காலச் சூழ்நிலையாலும், ஆழ்கடல் பேரலையாலும் பாதிக்கப்பட்ட இளஞ் சிறார்களை ஆதரித்துக் காப்பாற்றுவதுடன் கல்வி வசதிகளையும் சுயதொழில் பயிற்சிகளையும் சில இளைஞர் அமைப்புகள் ஏற்படுத்தி வருகின்றன. இதற்குப் பல புலம் பெயர்ந்த சமூக விருப்பாளர்களும் உள்ளனர். தனவந்தர்களும் உதவி புரிகின்றனர். உதாரணமாக மட்டுநகர் மங்கையர்க்கரசியார் மகளிர் இல்லம், பழுகாமம் விவேகானந்தர் பணிமன்றம், களுவாஞ்சிகுடி சக்தி இல்லம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அறநெறிப் பாடசாலைகள்

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அறநெறிப் பாடசாலைகளின் செயற்பாடுகள் சமாதான ரீதியில் விருத்தி பெற்று வருகின்றன. பல இளைஞர்கள் அர்ப்பண சிந்தையுடன் இதில் ஈடுபடுகின்றனர். ஆலய விழாக்களிலும் சமய சமூக நிகழ்ச்சிகளிலும் அறநெறிப் பாடசாலை மாணவர்கள் தங்கள் திறன்களை வெளிப்படுத்திப் பாராட்டுகளையும் பரிசில்களையும் பெற்றுக் கொள்கின்றனர்.

அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களும் தங்களது வாண்மையை விருத்தி செய்வதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றனர். தர்மாசாரியார்களாகத் தங்களை மாற்றிக் கொள்வதற்கு அவர்கள் மிகுந்த விருப்புக் கொண்டவர்களாக உள்ளனர். இதற்கான பரீட்சைக்குத் தோற்றுவதற்குரிய பயிற்சி வகுப்புகளுக்கு அனேகமான அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கு பற்றியமையை அவதானிக்க முடிந்தது.

தற்போது பல பட்டதாரி இளைஞர்கள் கலாசார உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் மாவட்டத்திலுள்ள இந்து சமயத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்ற புலமையாளர்களை அழைத்துப் பயிற்சி வகுப்புகளை ஏற்பாடு செய்து நடாத்தி வருகின்றனர். இப்பயிற்சி வகுப்புகளுக்குப் பெருமளவு அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள் விருப்புடன் கலந்து கொள்கின்றனர். இவ்வகுப்புகளில் மாணவர்களும் தங்களது திறன்களை வெளிப்படுத்துகின்றனர். பல போட்டி நிகழ்ச்சிகளில் பங்கு பற்றிப் பரிசில்களைப் பெற்றுக்கொள்கின்றனர்.

இளைஞர்களின் சேவைகள்

மேலும் மட்டக்களப்பு மாவட்டத்தில் பல கோயில்களில் நிருவாகம் இன்று இளைஞர்களின் கைகளிலேயே இருக்கின்றது. முதியவர்கள் சாதிக்காத பல விடயங்களை இவர்கள் சாதித்துள்ளனர். கோயில் திருப்பணிகளுடன் சேர்த்து அறப்பணிகளிலும் இவர்கள் ஈடுபடுகின்றனர். நீண்ட காலமாகத் திருப்பணி செய்யப்படாத பல கோயில்களின் நிருவாகத்தினை இளைஞர்கள் தங்கள் கைகளில் எடுத்த பின் கட்டி முடித்துள்ளனர். திருப்பணியுடன் சேர்த்து அறப்பணிகளிலும் இவர்கள் விருப்புடன் ஈடுபடுகின்றனர். இவ்வித்தியாசத்திற்குக் காரணம் தாங்களே நேரடியாகப் பணிகளில் ஈடுபடுவதாகும். அதாவது கொத்தனார் வேலை, தச்சு வேலை, போன்ற வற்றைத் தாங்களே செய்கின்றனர்.

சமத்துவம்

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மிக முக்கிய அம்சம் சாதி வேறுபாடின்றி இளைஞர்கள் இணைந்து செயற்படுவதாகும். இதனை உணர்ந்து கொண்ட முதியவர்கள் மத்தியிலும் நடத்தை மாற்றத்தை அவதானிக்க முடிகிறது. சாதி வேறு பாடின்றி இளைஞர்கள் நட்பு வைத்திருப்பதால் சமய சமூகப் பணிகளில் அனைவரும் இணைந்தே செயற்படுகின்றனர். இதனால் சாதிக் கோயில்களும் இன்று ஜனநாயகப்பட்டு வருவதை அவதானிக்க முடிகிறது. தமிழ் இயக்கங்களின் தோற்றப்பாடும் இதற்கு அடிப் படையாக இருந்திருக்கலாம்.

மூட நம்பிக்கைகள்

மேலும் இம்மாவட்டத்தில் இளைஞர்களின் செயற்பாடுகளின் காரணமாக மூட நம்பிக்கைகள் அருகி வருகின்றன. எடுத்ததற்கெல்லாம் செய்வினை சூனியம் என மந்திரவாதிகளுக்குப் பணத்தை அள்ளி இறைக்கும் நிலைமை அருகி வருகின்றது. மனநோய் வந்தால்கூட வைத்தியரை நாடாமல் மந்திரவாதியை நாடும் செயற்பாடுகள் மட்டக்களப்பில் கிராமியப் பகுதிகளில் இன்னும் பரவலாகக் காணப்படுகிறது. இதற்காக ஏழை மக்கள் வட்டிக்குப் பணம் வாங்கி ஆயிரக்கணக்கில் செலவிடுகின்றனர். ஆனால் தற் காலத்தில் படித்த இளைஞர்கள் இவற்றுக்கெதிராகச் செயற்பட்டு மக்களுக்கு விழிப்புணர்வூட்டி வருகின்றனர்.

உயர் கல்வி நிறுவனங்களும் இளைஞர்களும்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள கிழக்குப் பல்கலைக்கழகம் அதனோடிணைந்த விபுலானந்த இசை, நடனக் கல்லூரி, தேசியக் கல்விக் கல்லூரி ஆகியவற்றில் கல்வி கற்று வெளியேறும் இளைஞர்கள் அவரவர்களின் நிறுவனம் சார்ந்த இயக்கங்களாகிச் சமய சமூக, கலாச்சாரப் பணிகளில் ஈடுபடுகின்றனர். தாம் சார்ந்த சமூகத்தினுள்ளே இவர்கள் ஏற்படுத்தும் விழிப்புணர்வு சமூக விருத்திக்கு இட்டுச் செல்வதாக அமைந்துள்ளது.

உதாரணமாக விபுலானந்த இசை நடனக் கல்லூரி மாணவர்கள் கோயில் விழாக்களின் போதும் சமூக விழாக்களின்போதும் பண்டிகைகளின் போதும் கலை கலாசார நிகழ்ச்சிகளைத் தயாரித்து மேடையேற்று கின்றனர்.

தவிர கிழக்குப் பல்கலைக் கழகத்தின் நுண் கலைப் பிரிவில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் பல நாட்டுக் கூத்துகளுக்குப் புத்துயிருட்டி மேடையேற்றி வருகின்றனர். இதன் காரணமாகப் பல மாணவர்கள் அகில இலங்கை தமிழ்த்தினப் போட்டியில் பதக்கங் களைப் பெற்றுக் கொள்கின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்து மதம் தொடர்பாகவும் இளைஞர்கள் தொடர்பாகவும் குறிப் பிட்டுக் கூறக்கூடிய பல்வேறு சிறப்பான அம்சங்கள் காணப்பட்ட போதும் இந்து மதத்தைப் பின்பற்று பவர்கள் குறிப்பாக இளைஞர்கள் கருத்தில் கொள்ள வேண்டிய அல்லது தங்களது நடத்தையில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டிய சில அம்சங்களைக் குறிப்பிட்டாக வேண்டும்.

பூசகர்கள்

மட்டக்களப்பின் சில கிராமங்களில் ஒருவரே பூசாரியாகவும், சோதிடராகவும், வைத்தியராகவும், கோயில் ஐயராகவும், மந்திரவாதியாகவும் செயற்பட்டு இலட்சக்கணக்கில் உழைக்கும் நிலைமையும் காணப்படவே செய்கிறது. இப்பகுதி கோயில் பூசகர் களிலும் பலர் தமது பிரதான செயற்பாடுகளாகிய நித்திய நைமித்திய கிரியைகளை மேற்கொள்வதில் காட்டும் அக்கறையைவிட அதிக அக்கறையை இவற்றில் காட்டுகின்றனர். அதிக பண வருவாயே இதற்குக் காரணமாகும். இச்செயற்பாடுகளில் இவர்களில் பலர் மிகப் பெரிய தனவந்தர்களாக உள்ளனர். ஆலய நிருவாகச் சீர்கேடுகளையும் இதற்குக் காரணமாகக் கொள்ளலாம்.

ஆலய குருமார்களைப் பொறுத்தவரையில் இவர்களில் பலர் முறைப்படி ஆசாரிய அபிடேகம் பெற்றவர்களாகக் காணப்படவில்லை. இவர்களது ஆசார அனுட்டானங்களிலும் மேற்போக்காகப் பார்க்கும் போது பல குறைபாடுகள் அவதானிக்கத்தக்கதாக உள்ளது. ஒரு சிலர் புத்தகத்தைப் பார்த்தே மந்திரங்களை உச்சரிக்கின்றனர்.

கல்வியறிவு

ஒரு சில பூசகர்கள் கிரியைகள் முடிந்தவுடன் மக்களுக்கு உபதேசம் செய்கின்றனர். ஆனால் இவற்றில் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. சமய வரலாறுகள், தத்துவங்கள் பற்றிய போதிய அறிவு இவர்களிடம் இல்லாமையே இதற்குக் காரணமாகும். அடிப்படைக் கல்வியறிவின்மையும் இதற்குக் காரணமாகலாம். எனவே பூசகர்களை நியமிக்கும்போது பொருத்தமான விதிமுறைகள் பின்பற்றப்படவேண்டும். பிரதேச இளைஞர்கள் இதில் கவனமெடுத்தல் வேண்டும். இவர்களுக்கான பயிற்சிகள் நிறுவனரீதியாக வழங்கப்படுதல் வேண்டும். இந்து கலாசார அமைச்சு அல்லது அகில இலங்கை இந்து மாமன்றம் இதில் கூடிய



மாவிட்டபுரம்
அருள்மிகு
கந்தசுவாமி கோயில்

கவனம் செலுத்துதல் வேண்டும். இல்லையேல் குருவைத் தெய்வமாகப்போற்றும் இந்து மக்கள் பிழையான மூன்மாதிரிகளைப் பின்பற்றுபவர்களாக ஆகிவிடக்கூடும்.

மதமாற்றம்

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள பல இளைஞர்கள் பல்வேறு காரணங்களால் கிறித்தவப் பெண்களைக் காதலிக்கின்றனர். அழகுக்காக, பணத்துக்காக, வெளி நாடு செல்ல, நவீன நாகரிகத்துக்காக எனப் பல காரணங்கள் காணப்படுகின்றன. சாதியால் தாழ்த்தப் பட்டவர்கள் கூட தமது பரம்பரையை மாற்றிக் கொள்ள அல்லது சமூகத்தில் தலை நிமிர்ந்து நிற்க என இவ்வாறான திருமணங்களைச் செய்து கொள்கின்றனர். இதில் முக்கிய விடயங்கள் யாது என்றால் இத் திருமணங்கள் யாவும் கிறித்தவ முறைப்படியே தேவாலயங்களில் இடம்பெறுகின்றன. அதே போலக் கிறித்தவ ஆண்கள் இந்துப் பெண்களைத் திருமணம் செய்யும்போது இதே நிலமையே ஏற்படுகிறது.

எந்த ஒரு ஆணும் அல்லது எந்த ஒரு பெண்ணும் கிறித்தவத்திலிருந்து இந்து மதத்துக்கு மதம் மாறி திருமணம் செய்ததை மட்டக்களப்பு மாவட்டத்தில் அறிய முடியவில்லை. அதேவேளை அவர்களில் சிலர் திருமணத்தின் பின் அவர்கள் கோயிலுக்கும் தேவாலயத்துக்கும் என மாறி மாறி ஓடித் திரிகின்றனர். மேலும் தாங்கள் மாறியதும் அல்லாமல் தமது சகோதரர்களையும் நண்பர்களையும் தீவிர பிரச்சாரத் தின் மூலமும் வசதி வாய்ப்புகளையும் கவர்ச்சியான வாழ்க்கையையும் காரணம் காட்டி மதம் மாற்றி விடுகின்றனர். இவர்களுக்குப் பாரிய நிறுவன ரீதியான ஆதரவும் இங்கு காணப்படுகிறது.

இந்து மக்களிடையே காணப்படுகின்ற சாதிப் பாகுபாடுகளும் நிறுவன ரீதியான ஊக்குவிப்பின்மை யும் இதனை விரிவுபடுத்துகின்றன. எடுத்துக்காட்டாக சுனாமியின் பின் எகெட், போன்ற கிறித்தவ மத சார்பான அரசு சார்பற்ற நிறுவனங்கள் ஆற்றுகின்ற சமூக நிவாரணப் பணிக்கு ஈடாக எந்த ஒரு இந்து அமைப்பும் தொழிற்படவில்லை. அகில இலங்கை இந்து மாமன்றம் சுனாமியின்போது பாதிக்கப்பட்ட ஒரு சிலருக்கு உடனடி நிவாரணத்தினை ஒரு தரம் வழங்கியதுடன் நின்றுவிட்டது. அது முறையாக வழங்கப்பட்டதா? என்பதையாவது இந்து மாமன்றம் ஆய்வு செய்திருக்கலாம்.

திருமண முறைகள்

மட்டக்களப்பு மாவட்ட இளைஞர்களைப் பொறுத்தவரையில் பல இளைஞர்கள் பல்வேறு நிபந்தனைகளுக்கமைவாகவே திருமணம் செய்கின்ற னர். மிக முக்கியமாகத் தமது சாதிக்குள் அல்லது தம்மைவிட உயர்ந்த சாதிக்குள் மாப்பிள்ளையோ பெண்ணோ இருக்க வேண்டும் என எதிர்பார்க்கின் றனர். யுத்த சூழல் இதில் சில மாற்றங்களை ஏற்படுத்தினாலும் அது மிக சிறியதொரு மாற்றமாகவேயுள்ளது.

இந்து அமைப்புகள்

மட்டக்களப்பு மாவட்ட இந்து அமைப்புகளைப் பொறுத்தவரையில் மட்டக்களப்பு இந்து மாமன்றம், கிழக்கு இந்து ஒன்றியம், மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை, பிராமண குருமார் சங்கம், சைவக் குருமார் சங்கம், பிரம்ம குமாரிகள் சமாஜம், சாயி சம்மேளனம், குருமகராஜ் மன்றம், காயத்திரி சித்தர் நிலையம், சிவதொண்டன் நிலையம், பிரதேச ஆலயங்களின் சம்மேளனம், களுவாஞ்சிக்குடி சைவ மகாசபை, மட்டக்களப்பு இந்து வித்தியாவிருத்திச் சங்கம், மட்டக்களப்பு இந்து மகளிர் மன்றம், அம்மா பகவான் அமைப்பு போன்றவை காணப்படுகின்றன. இவை தவிர செட்டிப் பாளையம் திருவருள் சங்கம், குருக்கள்மடம், திருவருள் சங்கம் போன்றவை மிகப் பழைமையான இந்து சங்கங்களாகும். இவை தவிர கிராமங்கள் தோறும் இந்து இளைஞர் மன்றங்கள் ஸ்தாபிக்கப்பட்டுப் பணியாற்றி வருகின்றன.

இவை இந்து விழாக்கள், பண்ணிசைப் போட்டிகள், பண்ணிசை வகுப்புகள், புராணபடனப் பயிற்சி, நாடக அரங்கேற்றம், பஜனைகள், தொழிற் பயிற்சிகள், ஆலய பரிபாலனம், குருகுலம், இந்து நூல் பதிப்பித்தல் எனப் பல்வேறு சேவைகளைப் புரிந்தபோதும் அவை தமது அமைப்புகளைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்படுவதை அவதானிக்க முடிகிறது. உதாரணமாக சாயி சம்மேளனம் அவர்களது கட்டடத்தின் உள்ளேயே பூஜை, பஜனைகளில் ஈடுபடுகின்றனர். அதற்கு வெளியே இந்து சமூகத்தினுள் ஊடுருவுவதாகத் தெரியவில்லை. அதே வேளை கிறித்தவ அமைப்புகள் தமது சமூகத்துக்குள் மாத்திரமின்றி நமது சமூகத்துக்குள்ளும் ஊடுருவி அளப்பரிய பணிகளை ஆற்றுகின்றன.

மட்டக்களப்பிலுள்ள இந்து இளைஞர் அமைப்பு களில் அனேகமாக நாற்பது வயதுக்கு மேற்பட்டவர்களே தலைவர், செயலாளர் போன்ற பதவிகளில் அமர்ந்திருக்கின்றனர். உண்மையிலேயே அனுபவம் வாய்ந்தவர்களாக இவர்கள் இருந்த போதும் இவர்கள் தொடர்ந்திருப்பதால் இளைஞர்களுக்குத் தலைமைத்துவ அனுபவம் கிடைக்காமல் போகிறது. சந்தர்ப்ப மின்மையே இதற்கு முக்கிய காரணமாகும். இளைஞர் அமைப்புகளில் இளைஞர்கள் அங்கத்துவம் பெறுவதே சாலச் சிறந்ததாகும். அது தவிர மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள இந்து அமைப்புகள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் ஒன்றிணையவேண்டும். அப்போது சிறந்த பணியினை மக்களுக்கு வழங்க முடியும். எதிர்கால இந்துத்துவம் இளைஞர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது என்றால் அது மிகையாகாது. ○○○

கோயில்களின் முக்கியத்துவம்



ஓதுவார் கதிர்பாரதி

தமிழ்மொழியில் 'கோயில் இல்லாத ஊரில் குடியிருக்க வேண்டாம்' என்றும், 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்றும் பழமொழிகள் உள்ளன. இப்பழமொழிகள் கோயில்களின் முக்கியத்துவத்தையும், இறை வழிபாட்டின் முக்கியத்துவத்தையும், அதன் சிறப்புகளையும் உள்ளடக்கியே கூறப்பட்டு வந்துள்ளன. அதனால்தான் நாவுக்கரசர் பெருமான் அவர்கள்,

"திருக்கோயி லில்லாத திருவிலூரும் திருவெண்ணீ
றணியாத திருவிலூரும்
பருக்கோடிப் பத்திமையாற் பாடாவூரும் பாங்கி
னொடு பலதளிக ளில்லாவூரும்
விருப்போடு வெண்சங்கம் ஊதாவூரும் விதானமும்
வெண் கொடியு மில்லா(த) வூரும்
அருப்போடு மலர்ப்பறித் திட்டுண்ணா வூரும்
அவையெல்லாம் ஊரல்ல அடவிகாடே..."

என்றும்,

"திருநாமம் அஞ்செழுத்துஞ் செப்பாராகில் தீவண்
ணர் திறமொருகால் பேசாராகில்
ஒருகாலுந் திருக்கோயில் சூழாராகில் உண்பதன்
முன் மலர்பறித்திட் டுண்ணாராகில்
அருநோய்கள் கெடவெண்ணீ றணியாராகில்
அளியற்றார் பிறந்தவா றேதோ வெண்ணிற்
பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ்
செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின்றாரே!"

என்றும் பாடுகின்றார்.

காரணம் கோயில்கள் என்பது வெறும் வழிபாட்டுத் தலமாக மட்டுமின்றி ஒரு நாட்டின் கலையையும், பண்பாட்டையும் அதனை அடுத்த வரலாறுகளையும் தன்னுள் கொண்டுள்ளது. அதனால் அந்நாளில் நாட்டின் மிக முக்கியமான நுண்கலைகளை வளர்க்கும் இடமாகவும் அது இருந்தது. அதனாலேயே கோயில் தூண்களில் செதுக்கப்படும் சிற்பங்களின் மூலம் சிற்பங்களையும், கோயில் சுற்றுச்சுவர்கள் மற்றும் மேற்புறச் சுவர்கள் இவற்றில் தீட்டினார்கள். ஓவியங்கள் தீட்டப்படுவதன் மூலம் ஓவியக் கலையும் வளர்க்கப்பட்டு அந்நாளில் அத்துறை சார்ந்த ஓவியர்களுக்கும், சிற்பிகளுக்கும் தொழில் வழங்கும் இடமாகவும், தொழிலை, தொழிலின் சிறப்பை மறந்துவிடாதபடி பதிவு செய்து வைத்திருக்கக்கூடிய கருவூலமாகவும் திகழ்ந்தது, மேலும் நாட்டின் கட்டடச் சிறப்புகளை விளக்கும் விதமாகவும் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோயிலும் அடுத்த தலைமுறைக்கும் தன்னுடைய சிறப்புகளைக் கூறும் விதமாகவும் கட்டப்பட்டிருப்பது அந்த அந்தக் காலக் கட்டடக் கலை நிபுணர்களின் சிறப்பையும் விளக்குவதாக உள்ளது. அத்துடன் உள்ளமைப்புகளில் விழா நாள்களிலும் மற்ற இதர நாள்களிலும் நாட்டிய நங்கைகளுக்கும் நடன மாதர்கள் தாங்கள் ஒன்றுகூடி நடனப்பயிற்சி அளித்ததாலும், நாட்டியம் வளர்ந்தது. நாட்டியம் ஆடும்பொழுது கருவிகள் இசைக்கப்பட வேண்டும் என்பதால் முழவும், குழலும் கோயிலில் வைத்துப் பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. மேலும் மங்கல வாத்தியங்களான தவிலும், நாதசுரமும் விழா நாள்களில், விழாச் சமயங்களில் வாசிக்கப்பட்டு வந்தன. அதனை மேலும் தொடர்ந்து இசைக்கக் குருகுல முறைப்படி கோயிலில் வைத்து அதனை நன்கு இசைக்கக் கூடியவர்களால் பயிற்சி அளிக்கப்பட்டது. அதனால் கோயில் வெறும் வழிபாட்டுத் தலமாக மட்டும் அல்லாமல் நம் நாட்டின் கலைகளையும், கலாச்சாரத்தையும் வளர்த்த, வளர்க்கும் இடமாகவும் இருந்து வந்துள்ளது என்பதில் ஐயமில்லை. அதனால்தான் ஆதியும் அந்தமும் இல்லாத இறைவன் உறைந்திருக்கக் கூடிய இடமாகக் கோயிலைச் சொல்கிறோம். அதனாலேயே கோயில் என்பது உயர்வான முக்கியமான ஒன்றாக விளங்குகிறது. ○○○



காலப் பழைமையும் சாலப் பெருமையும் மிக்க சைவ ஆகமங்கள்



'கலைமாமணி' 'செந்தமிழ் வாரிதி'
இரா. செல்வகணபதி
சென்னை

இந்தியத் தத்துவச் சிந்தனைகளின் மூலநூல்கள் என்று கருதத்தக்கன வேதங்களும் ஆகமங்களும் ஆகும். இவை காலப் பழைமையும் சாலப் பெருமையும் மிக்கன. இவை ''வினையின் தீங்கி விளங்கிய அறிவின் முதல்வனாகிய இறைவனால் அருளிச் செய்யப்பட்டன'' என்பது வழக்கு. இவற்றின் காலம் இன்னது என்று துல்லியமாக வரையறுக்க இயலாவிடினும், இவை கி.மு. மூவாயிரத்துக்கும் முற்பட்டவை என்று ஆய்வறிஞர்கள் அறுதியிட்டு உரைக்கின்றனர். இறைவன் உடன்பட்டும், மறுத்தும் எழுந்த இந்திய மதங்கள் எதுவாயினும் அது வேத ஆகமங்களோடு, யாதாயினும் ஒருவகையில் தொடர்பு கொண்டிருந்ததை அறிய முடிகிறது. இத்தொன்னூல் தொகுதிகளில், வேதத்தை அடுத்து வந்ததும், அவற்றோடு பெரும்பாலும் முரண்பாடுகள் இல்லாததனவுமாகிய ஆகமங்களைப் பல்வேறு நோக்கில் இக்கட்டுரை ஆராய்ந்து நிறுவ முற்படுகிறது.

ஆகமம் - சொற்பொருள்

''ஆகமம்'' என்பது ஒரு வடசொல் குறியீடு. இதற்குப் பின்வந்தோர் பலரும் பலவாறு பொருள் விரித்தனர். சைவ ஆகமங்களுள் ஒன்றாகிய காமிக ஆகமத்தின் கிரியாபாதப் பர்வபாகத்தில், முதலாவது. தந்திராவதாரப் படலம் ஆகமம் என்ற சொல்லுக்குப் பொருள் விரிக்கிறது. ஆ-சிவஞானம், க-மோட்சம், ம-மலநாசம், எனவே ஆகமம் என்றால், ஆன்மாக்கள் மோட்ச சாதனத்தால் மலங்களை நாசம் செய்து இன்புற உதவுவது என்பது பொருளாகிறது.



டாக்டர் திரு. என்.ஆர். பட் என்பவர், ''இறை வனால் ஆன்மாக்களுக்குச் செல்வமும், வீடும், அருளும் பொருட்டும், பாசநீக்கத்தின் பொருட்டும் அருளப்பெற்ற நம்முடைய ஆசிரியர்வரை, பரம்பரையாக உபதேசிக்கப் பெற்று வருவதால் இவை ஆகமம் என்று பெயர் பெற்றது'' என்று விளக்கம் தருகிறார். இதன் கருத்து பரம்பரையாக ஓதுவிக்கப் பெற்றும், ஓதப்பெற்றும் வருவது என்பதாம்.

இவரே, ''காமம், வெகுளி முதலிய குற்றங்கள் அற்றவரும், பிறரை வஞ்சிக்கும் எண்ணம் அற்றவரு மாகிய சான்றோர் ''ஆப்தர்'' எனப் பெயர் பெறுவர். இத்தகு ஆப்தர்களின் வாக்கியம் ஆகமமாகும்'' என்று வேறு ஒரு பொருளும் விரித்துரைக்கிறார்.

கொழும்பு விவேகானந்த சபை வெளியிட்டுள்ள, ''சைவ சமயம்'' என்ற நூலில், தொன்று தொட்டு வரும் முறை, ஆகமம் எனப்படும், ஆகமம் என்பதற்கு பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருள்களைக் கூறுவது எனவும், மலத்தை நீக்கி ஞானத்தைக் கொடுப்பது எனவும் பொருள் கூறப்பட்டுள்ளது.

பிங்கள மதம் என்னும் நூல், ஆகதம் + கதம் + மதம் என்ற மூன்று சொற்களிலுமுள்ள முதலெழுத்துக்களின் சேர்க்கையால் ஆகமம் என்ற பெயர் தோன்றியது என்று கூறுகிறது. இவற்றுள், ''ஆகதம்'' என்பது சிவபெருமானிடமிருந்து வெளிவருதலையும், ''கதம்'' என்பது உமையம்மையால் கேட்கப்படுதலையும், ''மதம்'' என்பது சிவபக்தர்களின் சமயமாக உலகில் பரவுதலையும் குறிக்கும் என அந்நூல் விளக்கம் தருகிறது.

இவ்வாறு விளக்கங்கள் பலபட அமைந்தாலும், இவை ஒவ்வொன்றும் ஆகம சாத்திரங்களின் ஒவ் வொரு பகுதியைக் கருத்தில் கொண்டு கூறப்பட்டுள்ள தால், எல்லா விளக்கங்களும் ஏற்றுக்கொள்ளத் தக்கனவே என்று டாக்டர் எஸ். பி. சபாரத்தினம் ஒரு முடிவுக்கு வருகிறார்.

ஆகமங்கள் - வேறு பெயர்கள்


ஆகமங்களுக்குத் தந்திரம், மகாதந்திரம், சம்மிதை, சிவஞானம் என வேறு பெயர்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

இவற்றுள், ''தந்திரம்'' என்பது தத்துவங்களிலும், மந்திரங்களிலும் அடங்கியுள்ள பொருள்களை எடுத்துக் கூறுவதாலும், தன்னை அடைந்தோரைக் காப்பாற்றுவதாலும் இப்பெயர் பெற்றதாகக் காமிகம் மற்றும் மகுடாகமங்களுள் விளக்கம் தரப் பெற்றுள்ளன.

சிவாகமங்களின் அமைப்பு முறைகளைக் கருத்திற்கொண்டு, ஆகமங்களைப் பெரிதும் ஆராய்ந்த அகோரசிவாசாரியார், ''மகாதந்திரம்'' என்பது சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு பாதங் களுடன் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளையும் அறிவிக்கக் கூடியது என்று குறித்துள்ளார்.

ஆகமங்களும் சிலவற்றை ''சம்மிதை'' என்று குறிக்கும் வழக்கும் உள்ளது. பௌஷ்கர ஆகமத்தை, முன்னோர் ''பௌஷகர் சம்மிதை'' என்று குறித்து உள்ளனர். பன்னிரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட சுலோ கங்களால் அமைந்து, சமயம், வழிபாட்டு நிகழ்முறை, நித்திய அனுட்டான விதிகள், மருத்துவம், சோதிடம் முதலிய பல கருத்துகளையும் கூறும் நூல்களை ஆகமங்கள், ''சம்மிதை'' என்று குறிக்கின்றன.

''சதரத்தின சங்கிரகம்'' என்ற நூலின் உரையில், ஆகமம், ''சிவஞானம்'' எனக் கூறப்படுதலின் காரணம் ஆராயப்பட்டுள்ளது. ஆன்மாக்களுக்கு, நல்லனவற்றை உபதேசித்து, பிறவிக் கடலிலிருந்து விடுவித்துக்



காப்பாற்றுவதால், நாத வடிவ ஞானமாகிய ஆகமங்கள், ''சிவஞானம்'' என்று கூறப்பட்டன.

பொதுவும் - சிறப்பும்

ஆகமங்களும், வேதங்கள் போல் குரு, சீடர் பரம்பரையாகவே கற்பிக்கப்பட்டு வந்துள்ளன. இவ்வகையில் வேதங்களையும், ஆகமங்கள் என்று குறித்தல் தகும். இவற்றைப் பிரித்து அறிய வேதங்களை நிகமம் என்று குறித்தனர்'' என்றும், நம்முடைய தன்மையையே அறிவிப்பது'' என்ற பொருளில், வேதம் - நிகமம் என்று கூறப்பட்டது. மக்களின் பரிபக்குவநிலை பலவாதலின், அனைவருக்கும் ஏற்ற, பலவழிகளையும் விளக்குவதாலும் இந்திரன், அக்கினி, வருணன் முதலிய பல தேவர்களையும் இறைவன் சொரூபமாகத் துதித்துள்ளதாலும் வேதம் பொது நூல் என்று கூறப்படுகிறது. உத்தம அதிகாரிகளுக்கு உபதேசிக்கப்படுவதாலும், பொது, நீக்கி, ஒரு தெய்வத்திற்கு மட்டுமே முதன்மை கூறப்படுவதாலும் ஆகமம் சிறப்பு நூல் என்று கூறப்படுகிறது.

சம்ஹிதைகள்

சைவம், வைணவம், சாக்தம் முதலிய மூன்று சமயங்களுக்கும் ஆகமங்கள் உள்ளன. இவற்றுள் சைவ ஆகமங்கள், ''சம்ஹிதைகள்'' என்றும் வைணவ ஆகமங்கள் ''பாஞ்சராத்திரம்'' என்றும், சாக்த ஆகமங்கள் ''தந்திரங்கள்'' என்றும் வழங்கப்பெற்று வருகின்றன. சைவ ஆகமங்களுக்கு உப ஆகமங்கள் உண்டு. ஆயின், வைணவ, சாக்த ஆகமங்களுக்கு உப ஆகமங்கள் ஏதும் இல்லை. ஆகமங்கள் யாவும் வடமொழியிலேயே உபதேசிக்கப் பெற்று வந்துள்ளன.

திருமந்திரம்

தமிழில் ஆகமங்கள் பற்றிய முதற் குறிப்புகளைத் திருமூலரின் திருமந்திரத்தில்தான் காண முடிகிறது. இந்நூலின் முதல் தந்திரத்துள், மூன்றாவதாக, ''ஆகமச் சிறப்பு'' என்ற பகுதி இடம் பெற்று உள்ளது. இதில், ஆகமங்கள் பற்றிய பத்துப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. திருமூலர் முதற்பாடலில், சிவ பெருமான் அருளிச் செய்த ஆகமங்கள் இருபத்து எட்டு என்றும், அவற்றை அறுபத்து அறுவர் சிவ பெருமானை வணங்கி அவனது மேன்முகமாகிய ஈசான முகத்தின் வழி கேட்டுணர்ந்தனர் என்றும் குறித்துள்ளார்.

அஞ்சன மேனி அரிவையோர் பாகத்தன்
அஞ்சொடு இருபத்து மூன்றுள ஆகமம்
அஞ்சலி கூப்பி அறுபத்து அறுவரும்
அஞ்சாம் முகத்தில் அரும்பொருள் கேட்டதே-

என்பது மேற்கூறிய கருத்தமைந்த பாடலாகும்.

சைவ - ஆகமங்கள்

சைவ ஆகமங்கள் இருபத்தெட்டு என்று திருமந்திரம் குறித்தாலும், அதனுள் ஏழு ஆகமங்களின் பெயர்கள் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளன. எனினும், இவற்றின் பெயர்களை ஆகம நூல்களே தொகுத்துச் சுட்டியுள்ளன.

அவையாவன:

1. காமிகம், 2. யோகசம், 3. சிந்தியம், 4. காரணம், 5. அசிதம், 6. தீத்தம், 7. சுக்குமம், 8. சகத்திரம், 9. அஞ்சுமான், 10. சுப்பிரபேதம், 11. விசயம், 12. நிகவாசம், 13. சுவாயம்புவம், 14. ஆக்கினேயம், 15. வீரம், 16. இரௌரவம், 17. மகுடம், 18. விமலம், 19. சத்திரஞானம், 20. முகவிம்பம், 21. புரோற்கீதம், 22. இலனிதம், 23. சித்தம், 24. சந்தானம், 25. சர்வோத்தம், 26. பாரமேசுவரம், 27. கிரணம், 28. வாதுளம்.

சிவபெருமானுக்கு நான்கு திசைகள் நோக்கி நான்கு முகங்களும், உச்சியில் வான் நோக்கி ஒன்றுமாக ஐந்து முகங்கள் உண்டு. இவை கீழிருந்து முறையே.

1. சத்யோசாதம் (மேற்கு), 2. வாமதேவம் (வடக்கு), 3. அகோரம் (தெற்கு), 4. தற்புருடம் (கிழக்கு), 5. ஈசானம் (உச்சி) என்பன அவை. சிவபெருமான், நால் வேதங்களையும் கீழ் உள்ள நான்கு முகங்கள் வழி அருளிச் செய்தார் என்றும், ஆகமங்களை மேல் உள்ள ஈசான முகத்தால் அருளிச் செய்தார் என்றும், மேற்குறித்த திருமந்திரத்திற்கு ஒருமுறையில் பொருள் கொள்ளலாம்.

இனி, வேறு சிலர், கீழ் உள்ள நான்கு முகங்களாலும், ஒவ்வொரு முகத்தால் ஐந்து ஐந்தாக, நான்கு முகத்தால் காமிகம் முதல், முகவிம்பம் ஈறாக இருபது ஆகமங்களையும், ஈசான முகத்தால் எஞ்சிய புரோற்கீதம் முதல் வாதுளம் ஈறாகிய எட்டு ஆகமங்களையும் அருளிச் செய்தார் என்று இப்பாடலுக்குப் பொருள் கொள்கின்றனர்.

ஆகமங்கள் பற்றிய நிறைவான குறிப்புகளைத் தேவாரங்களைவிடத் திருவாசகத்தினுள் அதிகமாகக் காண முடிகிறது. ''நிலவுலகில் மகேந்திர மலையில்'' என்ற திருவாசகக் கீர்த்தித் திருவகவல் ஆகமங்கள், சிவபெருமானின் ஐந்து முகங்கள் வழி வெளிப்பட்டபோது, முனிவர் ஐவர் அவற்றைக் கேட்டுணர்ந்தனர் என்று குறிக்கிறது. அவர்கள்:

1. கௌசிகர், 2. காசிபர், 3. பாரத்துவாசர், 4. கௌதமர், 5. அகத்தியர் என்போர். ○○○

அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் விசேட தினங்கள்



பிரதோஷ தினங்களில் மாலை 5.00 மணிக்கு அருள்மிகு அமிர்தலிங்கேஸ்வரர் அபிஷேகம்.

பூர்வபக்ஷ சதுர்த்தி தினத்திலும் அருள்மிகு சக்தி விநாயகப் பெருமானுக்கு மாலை 6.00 மணிக்குச் சிறப்பு அபிஷேகமும், சிறப்புப் பூசையும் தொடர்ந்து சக்திவிநாயகர் திருக்கோயில் வலம் வருதல்.

ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் கடைசி ஞாயிற்றுக் கிழமைகளிலும் மாலை 7.00 மணிக்கு அருள்மிகு ஞான வைரவருக்குச் சிறப்பு அபிஷேகமும், பூசையும்.

சங்கடஹர சதுர்த்தி தினங்களில் அருள்மிகு சுந்தர விநாயகருக்கு மாலை 7.00 மணிக்குச் சிறப்பு அபிஷேகமும் தொடர்ந்து சிறப்புப் பூசையும் பௌர்ணமி தினத்திலும் மாலை 6.00 மணிக்கு மூல அம்மன் சந்நிதியில் பொங்கலும், மூல அம்மனுக்குச் சிறப்பு அபிஷேகமும், ஸ்ரீசக்கர பூசை வழிபாடும், சிறப்பு இரவுப் பூசையும் நடைபெறும். தொடர்ந்து அம்பாள் தங்கரதத்தில் திருக்கோயில் பவனி வருதல்.

பூர்வபக்ஷ ஏகாதசி தினத்திலும் இரவு 7.00 மணிக்கு அருள்மிகு குருவாயூரப்பன் அபிஷேகமும் சிறப்புப் பூசையும் நடைபெறும்.

பிரதி வாரமும் புதன்கிழமைகளில் காலை 10.00 மணிக்கு அருள்மிகு சிவசக்தி (அர்த்தநாரீஸ்வரர்) அபிஷேகமும் சிறப்புப் பூசையும்.

மாதாந்த கார்த்திகைத் தினத்திலும் அருள்மிகு சிவஷண்முகப் பெருமானுக்கு ஷண்முகா அருச்சனையும் சிறப்புப் பூசையும் நடைபெறும்.

தாயகத்தில் உள்ள தருமஸ்தாபனங்களுக்கோ, பாடசாலைகளுக்கோ ஆலயங்களுக்கோ உதவிகள் அல்லது அன்பளிப்புகள் வழங்க விருப்பமுடையோர் நிறுவனத்தின் பெயரைக் குறிப்பிட்டு எமது ஆலய அலுவலகத்தில் வழங்கலாம். தங்கள் குடும்பத்தினரின் பிறந்த நாள் அல்லது ஞாபகார்த்த நாள் ஆகியவற்றில் தாயகத்தில் உள்ள குழந்தைகளுக்கு ஒரு நாள் சாப்பாடோ அல்லது ஒரு வேளைச் சாப்பாடோ கொடுக்க விரும்பினால் அதற்கும் ஒழுங்குகள் செய்து தரப்படும். அதற்கான பற்றுச்சீட்டு வழங்குவதுடன் உரிய நிறுவனத்திடம் கையளிக்கும் பொறுப்பினையும் இவ்வாலய நிருவாகம் ஏற்றுக்கொள்ளுமென்பதை அன்பர்கள் அனைவர்க்கும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எமது ஆலயத்தின் செலவிற்கு மிஞ்சிய வரவுகள் அனைத்தும் தாயகத்தில் அவதியுறுவோர்க்கே அனுப்பப்படுகிறது.

2006 திசெம்பர் வரை சிவயோகத்தின் சார்பில் தாயகத்துக்கு அனுப்பப்பட்ட தொகை £413,928

தாயகத்துக்கு உதவுக!

உலகப் பொதுமறையில் பக்தி உணர்வு

முனைவர் பரிமளா இந்திரமோகன்
சென்னை

தமிழுக்கும் அமுதென்று பெயர் என்பார் பாவேந்தர். இத்தொடரில், தமிழ், அமிழ்து இரண்டும் பெற்றுள்ள இடம் தெய்வீகத் தன்மை கொண்டது. பிறப்பு, வாழ்வு, இறப்பு என்பதை அனைத்து உயிர்களுமே உணர்கின்றன. பிறந்த உயிர்கள், உண்டு, உயிர்த்து, வாழ்ந்து மறைவதைத் தம் வாழ்வின் நோக்கமாகக் கொள்ளுதல் கூடாது. இறைவன், தன் சாயலாகத் தன் படைப்பின் மேலான உயர்ந்த படைப்பாக மனிதனைப் படைத்தான். படைத்தவனான தன்னை உணரவேண்டும் என்பதே இறைவன் மனிதனைப் படைத்ததன் நோக்கம். பிரபஞ்ச தோற்றங்களுக்குப் பின்னால் நித்யமானதாக, அனைத்து உயிர்களின் ஆன்மாவாக ஒரு மெய்ப்பொருள் உள்ளது. வெவ்வேறு விரல்களுக்கு ஒரே கை போலத்தான் அம்மெய்ப்பொருள், அதனை உணர்பவனே பக்திமான்.

தன்னைத் தானே சுயபரிசோதனை செய்து கொள்ள உதவும் முதல்படி பக்தி. பெறற்கரிய மானிடப் பிறவியை பெற்ற மனிதன் அடைந்துள்ள பெருமைகளுள் சிறப்பானது வணங்கும் தன்மை, தன்னைவிட அனைத்திலும் மிக்கவரை வணங்கும் தன்மையுடைய மனிதன், தான் தோன்றியிருக்கும் உலகம், அதன் இயக்கம், அதில் நடைபெறும் சிறப்புகள் எல்லா வற்றிற்கும் தலைமையாக ஒரு பொருள் இருத்தல் வேண்டும் எனக் கருதி அதனைப் பேரன்புடன் வழிபடலானான். இப்படி, மனிதன் ஆற்றும் பணிகள் எல்லாம் அன்பினை அடிப்படையாகக் கொண்டு உள்ளது எனலாம்.

'அன்பு' என்பதும் மூன்றெழுத்து, அதன் உச்சக் கட்டமான 'பக்தி' என்பதும் மூன்றெழுத்து 'அன்பு' எனும் சொல் பல பொருள்களில் குறிப்பிடப்படுகிறது. தனக்குச் சமமாக உள்ளோரிடம் காட்டும் அன்பு, 'நட்பு' என்று கூறப்படுகிறது. (நட்பு மார்க்கத்தில் தன் பக்தியை வெளிப்படுத்திய சுந்தரர் கதையைச் சான்றாகக் கொள்ளலாம்) தமக்குக் கீழோரிடம் காட்டும் அன்பு 'இரக்கம்' அல்லது 'அருளுடைமை' எனப்படுகிறது. பெரியோர்களிடம் காட்டும் அன்பு 'பக்தி' ஆகிறது.

பெற்றோர் தம் மக்களிடம் காட்டும் அன்பு, 'பாசம்' எனப்படுகிறது. இல்வாழ்க்கையில் இதுவே 'காதல்' எனப்படுகிறது. தாய்மொழி, தாய்நாடு இவற்றின் மீது காட்டப்படும் அன்பைப் 'பற்று' என்பர். அந்த அன்பின் முதிர்ந்த நிலை, இறைவன் நம்மீது காட்டும் அன்பு 'அருள்' எனப்படுகிறது. எல்லா உணர்ச்சிகளுக்கும் தாயாக விளங்குவது அன்பு. அன்பின் முதிர்நிலையே பக்தி எனலாம். பக்தியின் வேற்றுருவே அன்பு எனலாம்.

ஆன்மாவுக்கும் பரமாத்வுக்கும் இடையேயுள்ள உறவைக் குறிப்பது சக்தி. உயிர்கள் ஒவ்வொன்றும் இறைத்தன்மை கொண்டவையே. ஒருயிர் இன்னொரு உயிரிடம் கொள்ளும் பக்திதான் அன்பு, பாசம், கருணை, அருள், பற்று, காதல் என்ற பல பெயர்களைக்

அன்பு என்பதும் மூன்றெழுத்து பக்தி என்பதும் மூன்றெழுத்து.

தனக்குச் சமமானவர்களிடம் காட்டும் அன்பு-நட்பு. தமக்குக் கீழோரிடம் காட்டும் அன்பு- இரக்கம். பெற்றோர் மக்களிடம் காட்டும் அன்பு-பாசம். இல்வாழ்க்கையில் இதுவே காதலாகிறது. தாய்நாடு, தாய்மொழி மீது காண்பிக்கப்படும் அன்பு-பற்று. இறைவன் நம்மீது காட்டும் அன்பு - அருள். அன்பின் முதுநிலைதான் - பக்தி.

தெய்வத்தின்மீது கொண்ட நம்பிக்கையைத் தளரவிடாமல் அவனையே கதி எனச் சரணடைவோர் பக்தர்கள்.

பெண்ணுக்குள்ள கற்பு என்ற மிகமிக அரிய அழகிய ஆபரணம் பக்தியால் அலங்கரிக்கப்பட்டு மெருகூட்டப்பட்டுள்ளது.

கற்புடைய பெண், தெய்வத்தைக்கூட வணங்க மாட்டாளாம். பதிலாகத் தினமும் தன் கணவனைத் தொழுதுவிட்டுத்தான் மற்றக் கடமைகளை ஆற்றுவாள்.

கற்பு என்பது மற்ற ஆடவரை இச்சிக்காத குணம் மட்டும் அன்று. அதற்கும் மேலான ஒரு தெய்வீக சக்தியாகும்.



கொண்டுள்ளது. நுட்பமும், திட்பமும் வாய்ந்த அருமையான இவ்வுணர்வைத் தெய்வப் புலவர் தம் உலகப் பொதுமறையில் இங்ஙனம் வெளிப்படுத்தி யுள்ளார்.

துன்பங்களைப் போக்குவதே பிரார்த்தனை

கடவுள் வாழ்த்தில் பக்தி வெளிப்படுமாறு: எழுத்தைக் கொண்டு எழுதியவனை எண்ணிப் பார்க் கின்றோம். அதேபோல உலகத்தைக் கொண்டு அதைப் படைத்த இறைவனை எண்ணிப் பார்க்கவேண்டும். அவனை நாம் வேறெங்கும் தேடவேண்டியதில்லை. நம் மனத்தில் நம் உடனே பிறந்த அவனிடம் அடைக்கலம் புகுந்தோர் நலமாக வாழ்வர். விருப்பு வெறுப்பு இல்லாமல் அவனைச் சரண் புகுந்தால் நல்வினை தீவினைகளாகிய இரு வினைகளும் நம்மைச் சேரா. விருப்பு வெறுப்புகளை விலக்கி, அவற்றிற்குக் காரணமான ஐம்புலன்களின் ஆசைகளைக் குறைக்க வேண்டும். எத்துணைக்கெத்துணை நன்னெறிகளைப் பின்பற்றுகிறோமோ அத்துணைக்கத்துணை நல்வாழ்வு கிட்டும். தன்னிகரில்லா இறைவனைச் சரணடைந்தோர், தம் மனக்கவலைகளைப் போக்கிக் கொள்ள முடியும்.

மனம் என்ற ஒன்று இருக்கும் வரை அது சஞ்சலித்துக் கொண்டே இருக்கும். நல்லதோடு கெட்டதையும் நினைக்கத்தான் செய்யும். புண்ணியத்தோடு பாவத்தையும் செய்து கொண்டேயிருக்கும். இந்தப் பாவத்துக்குரிய விளைவாகத்தான் நமக்கு இறைவன் துன்பங்களைத் தந்து கொண்டிருக்கின்றான். தமக்கு வரும் துன்பங்களைப் போக்குவதற்காகவே பொது வாக அனைவரும் பிரார்த்தனை எனும் வழிபாடு செய்கின்றனர். இதைத்தான் பக்தி என்றும் நினைக் கிறோம். எல்லாம்வல்ல இறைவனைச் சரணடை யாதோர் உலகத் துன்பங்கள் எனும் கவலைகளை நீந்திக் கடக்க இயலாது. 1. தன் வயத்தனாதல், 2. தூய உடம்பினன் ஆதல், 3. இயற்கை உணர்வினனாதல், 4. முற்றும் உணர்தல், 5. பாசங்களால் பந்தப்படாமல் இருத்தல், 6. பேரருளுடைமை, 7. எல்லையில்லா வல்லவனாதல், 8. சச்சிதானந்த மயமாக இருத்தல்.

இப்படிப்பட்ட தன்னிகரில்லாத் தெய்வத்தின் மீது கொண்ட நம்பிக்கையைத் தளர விடாமல், அவனையே கதி எனச் சரணடைவோரே பக்தர்கள். இவர்களால் எத்தகு துன்பத்தையும் சமாளிக்க முடியும். (இது பொய்யா மொழிச் செய்தி, நம் அன்றாட வாழ்வில் கடந்து செல்லும் ஒவ்வொரு கணத்திலும் பெரிய பொருள் பொதிந்துள்ளது. இது ஆண்டவனுடையது என்ற உணர்ச்சியுடன் எந்த ஒரு செயலைச் செய்தாலும் அது புனிதமாகிவிடுகிறது. இது பொதுமறையின் கடவுள் வாழ்த்து உணர்த்தும் பக்தி உணர்வன்றோ!)

நீத்தார் பெருமை வெளிப்படுத்தும் பக்தியுணர்வு

நீத்தார் என்போர் யாவர்? ஆசாபாசங்களை நீக்கிய வாழ்க்கை நடத்தி உலகிற்கு வழிகாட்டிய மகான்கள். இறை வணக்கம் செலுத்தி, இறைவனை உணர்த்தும் மறையின் பெருமை கூறி அதற்கடுத்ததாக இறை சிந்தனையோடு வாழ்ந்து நீத்தார் பெருமையைப் பக்தி வெளிப்பாட்டிற்காக எடுத்துக் கொள்வோமே! நீத்தார் மேற்கொண்ட வாழ்க்கை,

இருமை வகைதெரிந் தீண்டறம் பூண்டோர்
பெருமை பிறங்கிற் றுலகு - குறள்

மனத்தூய்மை பக்திக்கு அடிப்படை

ஒருவன் சாகப் போகிற சமயத்தில் செய்து

கொள்ளலாம் என்று தள்ளிப் போடாமல் அன்றே அப்போதே அறச் செயல்களைச் செய்ய வேண்டும். அப்படிச்செய்வது உடல் அழிந்த பின்பும் அழியாமல் நிலைத்திருந்து உயிருக்கு உதவி செய்யும் என இம்மை மறுமைகளுக்கும் அறவடிவான பக்தி உதவும் வகையை உணர்த்துகிறார் வள்ளுவப் பெருந்தகை. இதைத்தான் பின்வந்தோர்.

அப்போதைக் கிப்போதே சொல்லிவைத்தேன் என்றனரோ!

அன்றறிவாம் என்னா தறம்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை - குறள்

இனி, மனிதனின் இல்வாழ்வில் பக்திநிலை பற்றிய கருத்துகளைக் காண்போம்.

'இல்வாழ்வான்' என்பான், உறவினர், நண்பர், ஏழைகள், தென்புலத்தார் எனும் பிதுர்க்கள், தெய்வம், விருந்தினர், குடும்ப உறுப்பினர், தான் என்ற நிலையில் யாவர்க்கும் செய்ய வேண்டிய கடமைகளை முறைப்படி செய்ய வேண்டியவனாவான். அன்பு கெடாமல் தன் கடமைகளைச் செய்வதே இங்கு மிகமிக முக்கியம்.

தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல் தானென்று
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை - குறள்

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. - குறள்

இவ்விரு குறட்பாக்களில் 'இல்லற பக்தி' எப்படி செலுத்தப்பட வேண்டியது என்பதை உலகிற்கு அறிவுறுத்தியுள்ளார் செந்நாப் போதார். ''உலகிற்கு உழைக்க வேண்டும் என விரும்புகிறீர்களா! முதலில் வீட்டைக் கவனியுங்கள்'' எனப் பின்வந்தோர் கூற வழிகாட்டியுள்ளார் அல்லவா!

இல்லற வாழ்வில் பெண் செலுத்தும் அன்பு பக்தி. ''பதிபக்தி'' எனப்படுகிறது. அது எப்படிப் பட்டது? பெண்ணுக்குள்ள கற்பு என்ற மிகமிக அரிய அழகிய ஆபரணம், பக்தியால் அலங்கரிக்கப்பட்டு மெருகூட்டப்பட்டுள்ளது. கற்புடைய பெண் தெய்வத்தைக் கூட வணங்கமாட்டாளாம். பதிலாகத் தினமும் காலையில் தன் கணவனைத் தொழுது விட்டுத்தான் மற்றக் கடமைகளை ஆற்றுவாள். கற்பு என்பது கணவனைத் தவிர மற்ற ஆடவரை இச்சிக்காத குணம் மட்டும் அன்று. அதற்கும் மேலான ஒரு தெய்வீக சக்தி. அந்த சக்தி - ''கணவனைத் தெய்வமாகக் கருதி, அவன் நலனைத் தன் நலனாகக் கொண்டு அவன் நோக்கமே தன் நோக்கமாக ஏற்று, தன் எல்லா உரிமைகளையும் கணவனுக்குள் அடங்கினதாக நம்பி, அத்தகைய உறுதியில் சிறிதும் பிறழாமல் நடந்து கொள்ளும் திறம்'' பெண்களுக்கு உள்ளது என நம்பப்படுகிறது. இது உண்மையா? இல்லையா? என்ற ஆராய்ச்சி வேறு! அதில் நாம் இறங்க வேண்டாம். கற்பு எனும் தெய்வீக சக்தியைப் பதிபக்தியாகத் தரிசனம் செய்து வைக்கிறார் வள்ளுவ நாயனார்.

குடும்ப வாழ்வில் தம்பதியினரில் பக்தி நிலையை வெளிப்படுத்தியது போன்றே, பிள்ளைகள் பெற்றோரிடம் கொள்ளும் பக்தியையும் எடுத்துக் காட்டியுள்ளது திருக்குறள்.

தம்பதிகள் வருவோரை விருந்து உபசரிக்கும் முறை என்ற தனிப் பெருங்குணம் இருக்கிறதே அதை, 'அதிதி பக்தி' என்கிறோம். விருந்தோம்பல் என்பதற்கு இவ்வளவு அவ்வளவு என்ற கணக்கீடு இல்லை. எவ்வளவுக்கெவ்வளவு விருந்தோம்பல் செய்கிறோமோ அவ்வளவு அறம் செய்த பலன் உண்டு.

இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன். - குறள்

இல்லறத்தில் இருந்துகொண்டு உலக உபகார மாகிய விருந்தோம்பலைச் செய்ய முடியாதவர்கள் தாம் மிகக் கடினமான துறவறத்தை மேற்கொண்டு, ''நாங்கள் பற்றற்றோம்'' எனச் சொல்லிக் கொள்ள வேண்டும். சரியானபடி விருந்தோம்பினாலே உலக இன்பங்களையும் துய்த்து, 'நல்விருந்து வானத் தவர்க்கு' என்ற பதவியையும் பெற முடியுமே!

பரிந்தோம்பிப் பற்றற்றே மென்பர் விருந்தோம்பி
வேள்வி தலைப்படா தார் - குறள்

இதனினும் சிறந்த 'அதிதி பக்தி' வேறுண்டோ!

பக்தி மார்க்கம்

இனி இல்லறத்திலிருந்து துறவறம் நோக்கிப் பயணிக்கிறது. துறவறத்திற்கு இன்றியமையாத விதிகள் விரதம், ஞானம், துறவறம் என்பது. ஒருவன் அனைத்து உலக இன்பங்களையும் நீக்கி, தன் முழு நேரத்தையும், முழு மனத்துடன் இறைவனை நாடுவதில் ஈடுபடுத்துவது.முழு மனமும் ஒருவழிப்பட்டு நிற்க ஐம்புல ஆசைகளை நீக்கவேண்டும். அது கைவரப் பெற இந்திரியங்களை ஒடுக்க வேண்டும். உடல், மனம் இவை வயப்பட்டபின், ஆன்ம உணர்ச்சி அதிகமாகி இறையை நாடுவது எளிதாகும். அப்போது தான் 'ஞானம்' எனும் மெய்யறிவு கைகூடும். (இது ஆன்றோர் வாக்கு. முக்தியாகிய வீடுபேறு அடைவதோ இதன் நோக்கம். வள்ளுவப் பெருந்தகை கூறும் துறவறம் இல்லறத்திற்குப் பிற்பகுதியான வாழ்க்கை அல்ல. 'இல்லறத்தைச் சரியாக நடத்தினாலே வீடுபேறு அடையலாம்' என்பார் அப் பெருமான். உயிர்களிடத்துக் காட்டும் அன்பாகிய

'ஜீவகாருண்யம்' இதற்கு அடிப்படையாகிறது.

பக்தி மார்க்கத்தின் வீடுபேறு, இன்பம், மறுமை போன்றவைகளை நன்கு விளக்கியுள்ளார். ஞான மில்லாதவன் மெய்ப் பொருளைக் காண முடியாது. ஞானமோ அருளில்லாதவனுக்கு வராது. ஆதலால் அருளில்லாதவன் மேற்கொள்ளும் துறவறம், அதன் நோக்கமாகிய மெய்ப்பொருளை அடைய உதவாது. அன்பின் முதிர் நிலையாகிய அருள், துறவறத்திற்கு இன்றியமையாததாகிறது என வலியுறுத்துகிறார் வள்ளுவர்.

இவ்வுலகத்திற்குச் செலவாணி நாணயம் - பொருள், பேரின்ப உலகிற்குச் செலவாணி நாணயம் -அருள். ஆதலால் பொருளை இழந்துவிட்டாலும் அருளை இழக்கக்கூடாது என்கிறார் வள்ளுவர்.

மனிதனின் தேவைகள் குறையக் குறையத்தான் தெய்வ நம்பிக்கை வலுப்பெறும். இந்த தெய்வ பக்தியைத் தான் 'தவம்' எனும் அதிகாரத்தில் எடுத்தியம்பியுள்ளார் தெய்வப் புலவர். சகிப்புத் தன்மையில் அசைவற்றவனாக உறுதியாக இருந்தால்தான் ஆன்ம சக்திகள் வளரும். தவ வலிமையும் ஞானமும் உண்டாகும். அதன் பின்னரே அவன் நாடுகின்ற மெய்ப்பொருள் கிட்டும். தீயிலிட்டுக் காய்ச்சத்தான் தங்கம் ஒளிவிட்டு மிளிரும். அதுபோல, துன்பங்கள் அடுத்தடுத்துவரினும் அவற்றைப் பொருட்படுத்தாமல் தவம் செய்வோர் தான் அதிக தவவலிமை பெறுவர்.

திருக்குறளின் துறவு, மெய்யுணர்வு, அவாவறுத்தல், ஊழ் போன்ற அதிகாரங்கள் பக்திச் சுவை நனி சொட்டச் சொட்ட அமைந்தவை. பக்தி நெறிக் குரிய பக்குவத்தைப் பாங்குறப் படைத்தளித்தவர் வள்ளுவப் பெருந்தகை.

அடுத்து, தொழில் பக்தி - இவ்வுலகில் நமக்கு முதன் முதலாக அறிமுகமாகும். நேரிலும் நின்று பேசும் தெய்வம் தாய். பெற்று வளர்த்த அத் தாயானாவள், உணவின்றிப் பசியால் வாட நேர்ந்தாலும், (அவளுக்கு உணவு கொடுக்க வேண்டும் என்ற நினைவிலேனும்) பழிவரும் செயல்கள் என்று சான்றோரால் விலக்கப்பட்ட தீச்செயல்களை விலக்கி எவன் ஒருவன் தொழில் செய்கிறானோ, அவனே தொழில் பக்திமான் என்பது வள்ளுவர் முடிவு.

ஈன்றாள் பசிகாண்பா ளாயினுஞ் செய்யற்க
சான்றோர் பழிக்கும் வினை - குறள்

இத்தகு தொழில் பக்தியோடு நல்ல முறையில் பெருஞ்செல்வத்தை ஈட்டிக் கொள்வோர் ஏனைய அறம், இன்பம் ஆகிய இரண்டும் தாமே வந்து அடையப் பெறுவர். ○❍○



முதல் வணக்கம் முதல்வனுக்கே

கணபதியை அருளும் அழகும் நிறைந்த மகா கணபதியாய் மனத்தில் நிலைப்படுத்தி அனுதினமும் தியானித்துவர அனைத்து விக்கினங்களும் அகலும். இது அக வழிபாடாகும். இதைத் தவிர இவரை இல்லத்தில் எழுந்தருள வைத்து நிவேதனப் பொருள்களைப் படைத்து வழிபடலாம். இது புறவழிபாடாகும்.

வேத வழிபாடுகள்


வேதம், ஆகமங்கள் சொல்லும் வழிபாடுகள் பலவும் கர்மவினை நிறைந்த நம் வாழ்வில் நற்பலன்களை அள்ளித்தரும் அருட் பொக்கிஷங்களாய்த் திகழ்கின்றன.

உள்ளங்கைத் தரிசனம்

நம் கையில் விரல்களின் நுனியில் செல்வத்தைத் தரும் இலட்சுமியும், நம் உள்ளங்கையில் கல்வியைத் தரும் சரஸ்வதியும் அதனை அடுத்துப் பலத்தையும், தைரியத்தையும் தரும் சக்தியும் வாசம் செய்கின்றனர். ஒரு மனிதனுக்குத் தேவையான கல்வி, செல்வம், வீரம் ஆகியனவற்றுக்கான அதிதேவதைகள் நமது கைகளிலேயே குடிகொண்டுள்ளார்கள்.

எனவே நாம் காலையில் கண் விழித்ததும் அவர்களைக் கைகளில் தரிசனம் செய்து வழிபட்டால் நமது அன்றைய நாள் வெற்றிக்கு வழிவகுக்கும். ஆகவே தினமும் உள்ளங்கைத் தரிசனம் செய்தால் சகல நன்மைகளும் நம்மை நாடி வரும்.

மரகத லிங்கேஸ்வரர்



வாழ்க்கை வளம்பெறுவதற்கு இலிங்க வழிபாடு அவசியமாகும். இதற்கமைய 13 அங்குலம் உயரமுடைய மரகதத்திலான மகா மரகதலிங்கேஸ்வரர் அம்மன் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு தினமும் சிறப்பாக ஆறு கால அபிஷேகம், பூசை என்பன நடைபெற்று வருகின்றன.

மரகதலிங்க வழிபாட்டின் மூலம் கணவன்-மனைவி, பெற்றோர் - பிள்ளைகள், குடும்பச் சச்சரவுகள், மனநிம்மதிக் குறைவு, திருமணத் தடங்கல், மனக்கசப்புப் போன்ற துன்பங்களில் இருந்து விடுபட்டுச் சகல பாக்கியங்களையும் அடையலாம்.

இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயிலிலும், இலண்டன் நடராஜர் திருக்கோயிலிலும் தினமும் சிறப்பாக ஆறு கால அபிஷேகம், பூசை என்பன நடைபெற்று வருகின்றது.

அபிஷேகம் முற்பகல்	பூசை நேரங்கள் பிற்பகல்
முதலாம் காலம் 08.00	நான்காம் காலம் 04.30 (குளிர்காலம் 04.00)
இரண்டாம் காலம் 09.30	ஐந்தாம் காலம் 07.00 (குளிர்காலம் 06.30)
மூன்றாம் காலம் 11.00	ஆறாம் காலம் 09.00 (குளிர்காலம் 08.30)

தினமும் நடைபெற்று வரும் அபிஷேகம், பூசை போன்றவற்றில் அடியார்களும் ஒரு உபய காராகக் கலந்து கொண்டு இறைவன் திருவருளைப் பெற்றுப் பேரின்ப பெருவாழ்வு வாழுமாறு வேண்டுகிறோம்.

1996 குடமுழுக்கு விழாக் காட்சிகள்










ஆன்மீகச் சுடரொளி நா. சீவரத்தினம் அவர்களின்

மாதா, பிதா, குரு, தெய்வம்



முத்துமாரி அம்மன்



சுவாமி கெங்காதரானந்தா



தந்தை திரு. விநாயகர் நாகேந்திரம்



தாய் திருமதி. நவமணி

சிவயோகம் முத்தமிழ் விழாக் காட்சிகள்











ஈழத்து இந்து சமயத்தவரிடையே ஏற்படுத்த வேண்டிய சீர்திருத்தங்கள்



செஞ்சொற் செல்வர்
ஆறு. திருமுருகன்,
உபஅதிபர், யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி

உலக ஆன்மீக வரலாற்றில் உன்னதமான நிலையில் போற்றப்படுகின்ற மதம் இந்துமதம். ஆதி மதமென வரலாற்று ஆய்வாளர்களால் சிறப்பிக்கப்படும் பெருமை இந்து மதத்துக்குரிய சிறப்பம்சமாகும். தென்கிழக்காசிய நாடுகள் முழுவதும் செழிப்புற்று ஒரு காலத்தில் விளங்கிய இந்து மதம் இன்று பல சவால்களை எதிர்நோக்கி நிற்பதைப் பலரும் அறிவர்.

இந்து மதத்தின் பிறப்பிடமாக இந்தியாவைக் கொள்கின்ற மரபு உண்டு. ஆதிக்காலம் முதல் ஈழத்திலும் இந்தியாவிலும் சிவனை முழுமுதற் கடவுளாகக் கொள்கின்ற பாரம்பரியம் நிலைத்திருந்துள்ளது. எனினும் ஆறுவகைச் சமயங்கள் என இன்று கொள்ளப் படுகின்ற சைவம், வைணவம், சாக்தம், காணபத்தியம், சௌரம், கௌமாரம் என்ற மதப்பிரிவுகள் ஒன்றோடு ஒன்று தொடர்புபட்ட நிலையில் இந்தியா முழுவதும் வேதத்தை மூலமாகக் கொண்டு சிறப்புற்றுள்ளது. ஈழத்தில் சிவ வழிபாடு முதன்மை பெற்று விளங்கிய போதிலும் ஏனைய தெய்வங்களையும் சிவ சம்பந்தமான நிலையில் வழிபடும் வழக்கம் தொடர்ந்து வருகிறது. ஆதிமதமாகிய இந்து மதம் உலகளாவிய ரீதியில் பின் தோன்றிய மதங்கள் பரவிய வேகத்தில் பரவாவிட்டாலும் எக்காலத்திலும் அழியாநிலை பெற்ற மதமாக ஆழ்ந்து அகன்ற தத்துவங்களைக் கொண்ட மதமாக விளங்குகின்றது. கிறிஸ்துவுக்கு முன் பல ஆயிரம் ஆண்டுகள் வரலாறு கொண்ட மதமென மேலைத்தேய ஆய்வாளர்களே இந்து மதத்தின் உண்மையை நிரூபித்துள்ளனர். இந்நிலையில் இந்து மதத்தை அழியவிடாது காப்பதில் மன்னர்கள், மகாஞானிகள், மக்கள் ஆரம்பகாலம் முதல் காத்து வந்தனர். இன்று வரை இந்து மதத்தை அழியவிடாது காப்பதில் இந்துக்கள் ஓரளவு அக்கறை கொண்டு செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

எந்தவொரு மதமும், எந்தவொரு மொழியும், எந்தவொரு இனமும் நிலைத்து வாழ்வதற்கு அவற்றைச் சார்ந்தவர்களின் அபிமானமும், காலத்திற் கொவ்வக்கூடிய வகையில் தம்மை இசைவாக்கிக் கொண்டவையே நிலை பெற்றன என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். அவ்வகையில் பாரம்பரிய மதமாகிய இந்துமதம் தன் அடிப்படைக் கொள்கைகளில் மாற்றமுறாது பழைமையையும் புதுமையையும் இணைந்து வாழ்வாங்கு வாழ்ந்துள்ளது. அருவமாய், உருவமாய், அருவுருவமாய் என்ற ஒழுங்கை அன்று மக்கள் அனுசரித்து வந்தனர். தேகசுகம், நல்ல குணம், நீண்ட ஆயுள், ஐஸ்வரியம், இறைநிலை என்ற நிலையில் மனிதர்கள் தம் வாழ்நாளை ஒழுங்குபடுத்துவதற்கு இந்துமதம் வழிகாட்டி இருந்தது. பிறவிகளைக் கடந்து இறைவனை அடைதலே இந்துக்களின் பிரதான குறிக்கோளாகும். பிறவியைக் கடந்து இறைவனை அடைவதற்கு இந்து மதக் கொள்கைகள் வழிகாட்டியுள்ளன. இந்து மதங்களிடையே கடவுள் வழிபாட்டுக் கொள்கைகளில் இரு கொள்கைகள் பிரதான இடம் வகிக்கின்றன.

1. வேதாந்தக் கொள்கை, 2. சித்தாந்தக் கொள்கை

பழமையும், புதுமையும்

இவற்றைவிட இந்துமதத்தில் பல தனித்துவக் கொள்கைகள் எழுந்து அவற்றில் சில அமைதி பெற்றும் உள்ளன. பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையினானே என்ற நன்னூல் கூற்றுப்போல் இந்துக்களிடையே எத்தனையோ பழைமையும், புதுமையும் தொடர்புபட்டமையினை வரலாறுகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. உதாரணமாக ஒரு சாராரிடம் ஆரம்பகாலத்தில் பலியிடும் வழிபாடு முக்கியத்துவம் பெற்று விளங்கியது எனினும் தூய வழிபாட்டில் உயிர்ப்பலியிடல் ஒவ்வாத தருமம் எனப் பல சீர்திருத்தவாதிகள் எடுத்து உரைத்து மக்களை நெறிப்படுத்தியுள்ளனர். கிராமியப் பாமர மக்களிடையே அச்சத்தின் காரணமாகத் தனித்துவம் பெற்ற வழிபாட்டில் பலியிடலும் ஒன்று எனினும் பெரும்பாலான இந்துக்கள் ஆன்ம தத்துவத்தை உணர்ந்து பலியிடும் வழிபாட்டினைத் தவறெனக் கருதிப் பலரை ஆற்றுப்படுத்தினர்.

இந்துக்களின் வாழ்க்கை முறையில் காணப்பட்ட

தவறுகளை அவ்வப்போது சில மகான்கள் தோன்றி நல்வழியூடாக நெறிப்படுத்தினர். இன்று உலகளாவிய ரீதியில் பரவியிருக்கும் இந்துமதம் பல சீர்திருத்தங்களைச் சந்தித்தது. சுமார் 120 வருடங்களுக்கு முன்பு பாரத தேசத்தில் மிகவும் பெருமையான சில மரபுகளைச் சிலர் பின்பற்றினர்.

1. பாலியல் திருமணம் (சிறுபிராயத்தில் குறிப்பாக 12 வயதில் திருமண நிச்சயார்த்தம் செய்தல்), 2. கணவனை இழந்த இந்து விதவைப் பெண்கள் கட்டாயமாக உடன்கட்டை ஏறல், 3. கணவனை இழந்த இந்து விதவைப் பெண்ணிற்கு முடிவழித்து வெண்சேலை அணிவித்தல், 4. உயிர்ப்பலியிடல், 5. தெய்வ சன்னிதானங்களில் வழிபடுவதற்குச் சாதி பேதங்களைக் கடைப்பிடித்தல், 6. சமூக உறவாடலில் கடுமையான வண்ணப்பாகுபாடுகளைக் கடைப்பிடித்தல், 7. இறை வழிபாட்டைச் சில மூட நம்பிக்கைகளோடு செய்தல், 8. அதர்வவேதத்திலுள்ள சில முறைகளைக் கடைப்பிடித்துத் தீமைக்கு அவற்றைப் பயன்படுத்த முனைதல் (செய்வினை, சூனியம், மருத்தீடு)

மேற்குறிப்பிட்ட விடயங்களில் ஊறிப்போயிருந்த இந்துப் பாமர மக்களை இந்தியாவில் சீர்திருத்துவதற்காகப் பல பெரியவர்கள் தம் வாழ்நாளை அர்ப்பணித்தனர். இராஜாராம், மோகன்ராய், தயானந்த சரஸ்வதி, மீராபாய், சுவாமி இராமகிருஷ்ணர், சுவாமி விவேகானந்தர், மகாத்மா காந்தி போன்ற மகான்கள் எடுத்த முயற்சி மேற்குறிப்பிடப்பட்ட காலத்திற்கு ஒவ்வாத கலாச்சாரங்களிலிருந்து இந்துக்களை நவீன சீர்திருத்தத்திற்கு மாற்றம் பெறவைத்தது. சீர்திருத்த வாதிகள் எடுத்த முயற்சியினால் இந்தியாவில் உடன் கட்டை ஏறுதல் தடைச் சட்டம் பிரித்தானிய அரசினால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது. இந்துக்களிடையே காணப்பட்ட சாதி பேதங்களை ஒழிப்பதற்காக மகாத்மா காந்தி அடிகள் இந்துச் சீர்திருத்தப் பணியாகவே தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தை உருவாக்கினார்.

ஈழநாட்டில் அன்னியராட்சியினால் 1505ஆம் ஆண்டிலிருந்து இந்து சமயத்திற்குக் கலாச்சாரத் தாக்கங்கள் இருந்து வந்தன. மத சுதந்திரம் பறிக்கப்பட்ட காலத்திற்கூட மதம் மாறாது வாழ்ந்த பெருந் தொகையான இந்துக்கள் இந்துப் பாரம்பரியங்களைக் காப்பாற்றி வந்தனர். எனினும் இந்துமத மறு மலர்ச்சிக்கு அன்னியராட்சி இடையூறாகவே இருந்தது. 1870களில் நல்லை நகர் நாவலர் பெருமான் இந்துக்களிடையே சீர்திருத்தச் சிந்தனைகளை வெளிப்படுத்தி மக்களைச் சீர்திருத்த முயன்றார். குறிப்பாக சைவ ஆலயங்களில் சீர்திருத்தங்களை ஏற்படுத்துவதற்காக அவர் எடுத்த முயற்சிகள் பெரிதும் வெற்றியளித்தன.

1. ஆலயங்களில் உயிர்ப்பலியிடல் (வேள்வி) நாவலரது முயற்சியினால் தடை செய்யப்பட்டது.
2. ஆலயங்களில் நடத்தப்பட்ட கேளிக்கை நிகழ்ச்சிகளில் ஒன்றான சதுர்க்கச்சேரி தடுக்கப்பட்டது.
3. ஆலயங்களில் அமைதிக்கு இடையூறாகப் பெருந்தொகைப் பணத்தில் அனியாயமாகச் செலவு செய்யப்பட்ட வாணவேடிக்கை நிகழ்ச்சி தடுக்கப்பட்டது.
4. கிராமிய வழிபாட்டில் மது, மாமிசம் உண்டு வெறியாட்டம் ஆடுகின்ற முறையற்ற வழிபாடு தடுக்கப்பட்டது.
5. ஆலயங்களில் சைவ சமய உண்மைகளை எடுத்துரைக்கும் பிரசங்க மரபினை ஏற்படுத்தல்.
6. ஆலயம் தோறும் அறநெறி வாழ்வைக் கூறுகின்ற புராணப் படிப்பு மரபை முதன்மைப் படுத்தல்.
7. ஆலயச் சூழலில் கல்விச்சாலைகளை உருவாக்கல்.
8. ஆலயங்களில் பூசை வழிபாடுகள் நடைபெற வேண்டுமெனப் பிரசாரம் செய்தல்.
9. ஆலயங்களில் பூசகராகப் பணியாற்றுகிறவர்கள் நல்லொழுக்கம் உடையவர்களாகவும் ஆசாரசீலர்களாகவும் சைவ ஆகமங்கள் புராணங்களைக் கற்க வேண்டும் எனப் பிரசுரங்கள் மூலம் பிரசாரம் செய்தமை.
10. ஆலயங்களைப் பராமரிப்பவர்கள் தீட்சை பெற்றவர்களாகவும், பாவங்களை வெறுத்துப் புண்ணியம் செய்பவர்களாகவும் சமூகத்திற்கு முன்னுதாரணமாகவும் இருத்தல் வேண்டும் எனப் பிரசாரம் செய்தமை.

மேற்குறித்த நாவலரின் சீர்திருத்தச் சிந்தனைகள் ஈழத்து இந்து மத மறுமலர்ச்சிக்கு வித்திட்டது எனலாம். அவரது சீர்திருத்தக் கருத்துகள் பல ஈழத்தவர்களால் பின்பற்றப்பட்டன. 20ஆம் நூற்றாண்டில் பாரத தேசத்தில் பல சீர்திருத்தவாதிகள் இந்து சமயத்தவரை நெறிப்படுத்த முனைந்த போதிலும் பெருவெற்றியைச் சந்திக்க முடியாதநிலை அங்கு ஏற்பட்டுள்ளது. இந்திய சனத்தொகையில் 85% ஆனவர்கள் இந்துக்களாக விளங்குகின்ற போதிலும் ஒன்றுபட்ட ஓர் உணர்வு கட்டியெழுப்பப்படாமை வேதனைக்குரியதே.

தென்னாட்டில் தோன்றிய ஆதீனங்கள் இந்துக்களிடையே சில சீர்திருத்தச் சிந்தனைகளை உருவாக்கிச் செயற்படுத்தின எனினும் இந்துக்களை ஒன்று திரட்டுகின்ற முயற்சியை அவர்களால் ஏற்படுத்த முடியவில்லை. ஆதீனங்களுக்கிடையே பல சம்பிரதாய வேறுபாடுகளை இன்றும் வளர்த்துக் கொண்டு உள்ளார்கள். குன்றக்குடி அடிகளாரால் உருவாக்கப் பட்ட ஆதீனம் சில நவீன சீர்திருத்தங்களை முன் வைத்துச் செயற்பட்டது. சாதிப் பாகுபாடு, பழைமையிற் புதுமை காணல் போன்ற விடயங்களில் புதிய சிந்தனையை வெளிப்படுத்தியவர் குன்றக்குடி அடிகளார். சமுதாயப் பணிக்குக் கிரியைகளைவிட முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும் எனத் துணிந்து கருத்தைக் கூறியவர்.

ஈழ நாட்டில் இன்று இந்துக்களிடையே ஏற்பட வேண்டிய சில சீர்திருத்தங்கள்

சமூக வாழ்வு

பிறந்தநாள் விழா

சைவசமயத்தவரிடையே குழந்தைகளின் பிறந்த நாள் விழாவைச் சைவநெறிக்கு மாறாகக் கொண்டாடு வதில் மாற்றம் ஏற்படவேண்டும். இந்துக்கள் வினை யின் காரணமாகப் பிறவி ஏற்படுகின்றது என்ற கொள்கையைப் பிரதானமாகக் கொள்கின்றவர்கள். பிறந்த மாதத்தைப் பகை மாதமாகக் கொள்ளும் வழக்கம் உடையவர்கள். எனவேதான் பிறந்தநாளை வழி பாட்டுக்குரிய நாளாகவும் தருமகாரியங்களைப் பிறந்த நாளுக்குரியவர் பெயரில் செய்யும் நாளாகவும் முன்னோர் செய்து வந்தனர். இன்று இந்துக்களின் பாரம்பரியக் கலாச்சாரத்திற்கு மாறாகப் பெரும்பாலா னோர் வேடிக்கையாகக் கொண்டாடுவது தவறாகும்.

இந்துக்களின் பெயர் மரபு

காலங்காலமாக இந்துக்கள், தம் சமயம், மொழி சார்ந்த கருத்துமிக்க நாமங்களை தம் பிள்ளைகளுக்குச் சூட்டி சமய மரபைக் காத்தனர். இன்று ஈழத்து இந்துக் களிடையே கருத்தற்ற நாமங்களைச் சூட்டுகின்ற அநாகரிகம் வேகமாகப் பரவிவருகின்றது. இதனை ஒவ்வொரு இந்துக்களும் உணர்ந்து தம்மைத்தாம் நிலைநாட்ட இந்து தமிழ் மரபைக் காப்பாற்ற முனைதல் வேண்டும். பிறமொழிப் பெயர்களைத் தம் பிள்ளைகளுக்குச் சூட்டுவது கௌரவம் என நினைப்ப வர்கள் பெரும் வரலாற்றுத் தவற்றை செய்கிறார்கள் என்பதை அறிஞர்கள் அறிவர்.

இல்லற வாழ்வு

இந்துக்களிடையே இல்லற வாழ்வுக்குரிய நிச்சய தார்த்தத்தில் சீதனம் முதன்மை பெறுகின்ற தன்மை வளர்ந்து செல்கின்றது. இது வேதனைக்குரியது. இதனால் பல இந்துப் பெண்களின் திருமண வாழ்வு பாதிப்புக்குள்ளாகியுள்ளது. இன்றைய இளைய தலைமுறையினரிடையே இவ் விடயத்தில் மாற்றம் ஏற்பட வேண்டும். அறத்தின் வழியில் பொருளை ஒருவன் தேட வேண்டும் என்பது இந்துக்களின் புருடார்த்தக் கொள்கையாகும்.

எமது சமயம் கூறாத வழியில் நாம் வாழ வழி தேடுவது தவறாகும். சீதனக் கலாச்சாரம் இந்துக் களிடையே பல இடையூறுகளை ஏற்படுத்தி வரு கின்றது. இக்கலாசாரம் சிலரை மதமாற்றத்திற்கு ஆளாக்கியமையும் உணரமுடிகின்றது. இந்நிலையில் இக்கலாச்சாரத்தைச் சீர்திருத்த வேண்டியது ஈழத்து இந்துக்களின் பிரதான கடனாகும்.

இன்று பல இளைய தலைமுறையினரிடையே கணவன் மனைவி உறவில் விரிசல்கள் ஏற்பட்டு நீதி மன்றங்களுக்குச் செல்கின்றன. இந்துக்களிடையே புனிதமான இல்லற தருமம் புரிந்துணர்வோடு பேணப் படவேண்டியது முக்கியமானதாகும். இன்று இவ் வொழுக்க நெறி சிதைந்துகொண்டிருக்கின்றது. குறிப் பாக மேலை நாடுகளில் வசிக்கும் ஈழத்து இந்துக் களிடையே கணவன் மனைவி விவாகரத்துக்கோரும் தொகை அதிகரித்துச் செல்கின்றது. இது மிகவும் ஆபத்தானது. இந்துப் பண்பாட்டிற்கு ஆபத்தை விளைவிக்கக்கூடியது. எனவே இவற்றைச் சீர்திருத்த அனைவரும் முயற்சிக்க வேண்டும்.

இந்துக்கள் தொகை வீழ்ச்சி

இன்று ஈழத்து இந்துக்களின் குடிசனப் பெருக்கம் மிகவும் குறைந்து கொண்டு செல்கின்றது. 1970 களுக்கு முன்பு இருந்த ஈழத்து இந்துக்களின் குடிசனப் பெருக்கம் இன்று மிக மிக மந்த நிலையை அடைந்து உள்ளது. இதற்குக் காரணம் எம் நாட்டில் தொடரும் போர்ச் சூழலாகும். அது மட்டுமன்றி ஸ்ரீமாசாஸ்திரி ஒப்பந்தத்தின் கீழ் இலட்சக்கணக்கான மலையக இந்துத் தமிழர்கள் இந்தியாவிற்கு அனுப்பப்பட்டமை யும், ஈழத்தமிழர் பலர் அகதிகளாக மேலைநாட்டில் குடியேறியமையும் ஈழத்து இந்துக்களின் குடிசன வளர்ச்சியைப் பெரிதும் பாதித்துள்ளது. இது மட்டு மன்றிக் குடும்பக்கட்டுப்பாட்டு முறையைப் பலர் பின் பற்றுவதனால் இந்துக்களின் தொகை வீழ்ச்சியடைந்து வருகின்றது. இந்துக்கள் இவ்விடயத்தில் மிகுந்த அக்கறையுடன் கருத்திற்கொள்ள வேண்டும். பல இந்துக் குழந்தைகள் போரில் இறந்துள்ளனர். எனவே

ஈழத்து இந்துக்களின் சந்ததி விருத்தியை ஊக்குவிப்பதற்குச் சகல இந்து நிறுவனங்களும் அக்கறை கொள்ள வேண்டும்.

ஈழத்து இந்துக்களின் திருமணச் சடங்குகள், ருதுசாந்தி வைபவங்கள், அர்த்தமுள்ள சடங்குகளாக அமைதல் வேண்டும். அர்த்தமற்ற ஆடம்பரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நிலை மாறவேண்டும்.

இந்துக்களின் ஈமைக்கிரியைகளில்கூடச் சில சீர்திருத்தங்கள் இன்று அவசியமாகின்றது. இறந்த வருக்காக எல்லோருமாகப் பிரார்த்திக்கின்ற மரபு இன்று அற்றுப் போய்க்கொண்டிருக்கின்றது. அபரக் கிரியையின் போது பாடப்படுகின்ற திருமுறைகளுக்கு மதிப்புக் கொடுத்து மௌனம் காப்பதுகூட இன்று அருகி வருகின்றது.

இறந்தவரது உடலைச் சிவமெனக் கொண்டு நடைபெறுவது அபரக்கிரியைகள் ஆகும். மிகவும் அமைதியாகவும் இக்கிரியைகளை அனைவரும் அனுசரிக்க வேண்டும். சில சம்பிராதயங்கள் என நாம் செய்யும் சில வேடிக்கைகள் பொருத்தமற்றவை.

இன்று கலை கலாச்சார மொழி வளர்ச்சியைக் காக்கும் நிறுவனமாகச் செயல்படும் தன்மை அருகி வருகின்றது. ஈழத்தில் அறப்பணிகளுக்கு முதன்மை கொடுக்கின்ற ஒரே ஒரு ஆலயமாகத் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலயம் கடந்த 25 வருடங்களாக அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாகுட்டி அவர்களின் தலைமையில் பல அறப்பணிகளை ஆலயத்தை மையமாகக் கொண்டு செயற்படுத்தி வருகின்றது. இந்து சமய நிறுவனங்கள் இந்து மதத்தைக் காக்கும் முயற்சியில் உண்மையான பங்களிப்பினைச் செய்தல் வேண்டும். பெயரளவில் நிறுவனங்களாகச் செயற்படாது செயல்திறம் மிக்க நிறுவனங்களாக இயங்குதல் வேண்டும். உலக அரங்கில் பிற மத நிறுவனங்கள் தம்மை நிலைநாட்டிக் கொள்வதற்கு எத்தகைய செயல்திட்டங்களை உருவாக்கிச் செயற் படுகிறார்கள் என்பதைச் சிந்திக்க வேண்டும். ஈழத்து இந்து நிறுவனங்கள் சர்வதேச நிலைக்கு வளரவில்லை. 21ஆம் நூற்றாண்டில் புதிய திட்டங்களை உருவாக்கி நிறுவனங்களின் குறிக்கோளை அடைய முனைதல் வேண்டும். ஈழத்தின் இந்து சமய நிறுவனங்கள் ஆதரவற்ற இந்துச் சிறுவர்களை அரவணைக்கும் பணியிலும், அகதிகளாக அவலமுறும் மக்களின் துயர் துடைக்கும் பணியிலும் ஈடுபடவேண்டும். அனைத்து இந்து நிறுவனங்களும் ஒரு தலைமைத்துவத்தின் கீழ் ஒன்றுபடுகின்ற ஒரு கட்டமைப்பு உருவாக வேண்டும். ஈழத்திருநாட்டில் ஏற்படுகின்ற கலாச்சாரச் சீரழிவுகளைத் தடுப்பதற்குக் கடுமையான நடவடிக்கை எடுக்க நிறுவனங்கள் தலைப்படவேண்டும். ஈழத்து இந்துக்களின் உரிமைகள், உடைமைகளைக் காக்கும் முயற்சியில் மிகுந்த அக்கறை எடுத்தல் வேண்டும். ஈழத்தின் இந்துக்களின் அறிவியல் பொருளாதார வளர்ச்சிக்கு உதவும் முகமாக நவீன செயற்றிட்ட நுட்பங்களை உருவாக்கிச் செயற்பட வேண்டும். மது, ஒழுக்கக்கேடுகள், பாலியல் வன்முறைகள், போன்ற வற்றைச் சமூகத்தில் தடுப்பதற்கு நிறுவனங்கள் விழிப்பாக இருத்தல் வேண்டும். இந்து நிறுவனங்கள் பொதுவாக வாசிகசாலை நடத்துவதும், பாலர் பாடசாலை நடத்துவதுமே தமது கடமையெனக் கருது கின்றனர். பல சபைகள்-பொன்விழா, வைரவிழா வினைச் சந்தித்தவையாக விளங்குகின்றன. இவ்விரு பணி மட்டும் இன்றைய நவயுக உலகிற்குப் போது மானதானவையல்ல. எனவே புதிய சீர்திருத்தச் சிந்தனைகளோடு தமது உண்மையான பணிகளைத் தொடர வேண்டும். பல பாரிய இந்து சமய நிறுவனங்கள் மாணவர்களிடையே சமய அறிவுப் பரீட்சைகளை நடத்துகின்ற பணியில் மட்டும் தம்மை ஈடுபடுத்திவிட்டு ஏனைய நிறுவனப் பணிகளை முன்னெடுக்காது இருப்பது இன்றைய சூழலுக்குப் பொருந்தாது. எனவே இந்து நிறுவனங்கள் குறிக் கோளை நோக்கிய பயணத்திற்குத் தம்மைத் தயார்ப் படுத்த வேண்டும். இந்து மதத்தின் உண்மைகளை எடுத்துரைக்கின்ற பிரச்சாரப்பணி இந்த நிறுவனங்களால் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மேற்குறிப்பிட்ட கருத்துகள் இந்து சீர்திருத்தச் சிந்தனைகளாக முன் வைக்கப்படுகின்றன. சீர்திருத்தக் கருத்துகளை முன்வைப்பது இந்து மத வளர்ச்சியில் அக்கறை கொண்டவர்கள் அனைவரும் ஆராய்வதற்கு உதவும் என்பதில் ஐயமில்லை. ஒருவரது சிந்தனைக் கருத்துகளிலிருந்து இன்னொருவரின் மேலான சிந்தனைக் கருத்துகள் உருவாக வாய்ப்பு ஏற்படலாம். அவ்வகையில் இக்கட்டுரை அமைந்த விடயங்களைக் கருத்திற் கொண்டு பல சீர்திருத்தச் சிந்தனைகள் உருவாகி இந்து மதம் என்றும் சிறக்க உதவ வேண்டும். ஈழத்து இந்து மத வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள இடையூறுகள் தவிர்க்கப்படல் வேண்டும். அதற்கான முயற்சியில் அனைவரும் ஒன்றுபட்டு உழைக்க முயல்வோமாக. ○❍○

வானியலும் சோதிடமும்



செ. மோகனப்பிரியா
முனைவர் பட்ட ஆய்வாளர்
பாரதியார் பல்கலைக்கழகம், கோவை.

நாம் காணும் இந்தப் பிரபஞ்சத்தில் கோடானு கோடி நட்சத்திரங்கள் மிதந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் ஒன்றுதான் சூரியன். இதனைத்தான் நாம் வாழும் பூமி சுற்றிக்கொண்டு இருக்கிறது. மற்றும் பல கோள்கள் வலம் வந்து கொண்டிருக்கின்றன. நட்சத்திரங்கள், கோள்கள், துணைக் கோள்கள் பற்றிய ஆய்வினையே நாம் வானியல் என்கிறோம். நட்சத்திரங்களிலும், கோள்களிலுமிருந்து கதிர்வீச்சுகள் வருகின்றன. அவை பூமியில் வாழும் உயிர்களின் மீது படும்போது அவற்றின் உடலிலும், மனத்திலும் மாற்றங்கள் நிகழ்கின்றன. இவற்றைப் பற்றி ஆராய்வது சோதிடம் ஆகும். இவை இரண்டும் விஞ்ஞானத் தத்துவம் ஆகும். இதனை முறையாகப் புரிந்து வாழ்க்கையைப் பயனுள்ளதாக அமைக்க வேண்டும்.

வாழ்க்கையில் ஏற்பட்ட துன்பங்களைத் திரும்பத் திரும்ப நினைத்துத் தனது ஆற்றலை வீணாக்கிக் கொண்டு இருப்பதைவிட அதிலிருந்து விடுபட்டுப் பரந்த பிரபஞ்சத்தை நினைத்தால் மனம் அமைதியும், ஆனந்தமும் அடைகின்றது. வானியலும், சோதிடமும் என்ற சிந்தனையும் இந்த வகையிலேயே அமைகிறது.

அருள் தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் தமது நுட்பமான மனநிலையில் இப்பிரபஞ்சம் பற்றிய பல அரிய உண்மைகளைக் கண்டறிந்துள்ளார். விஞ்ஞானம் அவற்றை எட்டுவதற்கு இன்னும் பல ஆண்டுகள் ஆகலாம். ஆனால் மகரிஷி அவர்கள் அதனைக் கண்டறிந்து எல்லோரும் புரிந்துகொள்ளும் விதத்தில் எளிமையாக விளக்குகிறார். அவர் வழியில் நமது சிந்தனையைச் செலுத்துவோம்.

வானியல்

இவ்வுலக ஆய்வில் ஈடுபட்டிருந்த அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் தனது வியக்கத்தகு சிறப்புகளைக் கவியாக எழுதியிருக்கிறார்.

''பலப்பலவாம் அண்டத்துள் ஒன்றாய் உள்ள
பாரண்டத்தின் சிறப்பு எளிதோ சொல்ல!
நிலப்பரப்பை நீர்ப்பரப்பை யூகித்தாலும்
நெடுங்கடலுள் நிலம் நடுவில் அடங்கியுள்ள
சிவபொருளைக் கண்டாலும் சிந்தனைக்குச்
சிறிதுமெட்டா இரகசியங்கள் கோடா கோடி

எல்லாக் கோள்களும் நன்மையைத்தான் செய்கின்றன. ஒருவன் ஒழுக்கம் காத்தவனாக இருக்கும் பொழுது கிரகங்கள் அவன் வீட்டுப் படிக்கட்டுகளாக இருக்கும். ஒழுக்கத்தை மீறும் பொழுது அவனை மீளாத துன்பத்தில் ஆழ்த்திக் கடைசியில் மரணத்தையும் கொடுக்கும். ஒருவன் அனுபவிக்கும் இன்ப, துன்பத்திற்குக் காரணம் அவனது முற்பிறவிச் செயலே. இதற்குக் கிரகங்கள் காரணமாகா. அறச் செயலைச் செய்து அருங்குணச் சீரமைப்புப் பெற்றால் எப்பொழுதும் இன்பம் பெறலாம்.

விலகிச் சுழன்றே மிதந்து இந்தப் பூமி
வெய்யோனைச் சுற்றிவரும் விதந்தான் என்னே!''

மனித மனத்தால் கணிக்க முடியாத பரந்த சிறப்பாற்றல்கள் நிறைந்த ஒரு பேரியக்கக் களந்தான் இந்தப் பிரபஞ்சம் ஆகும். இப்பிரபஞ்சத்தைப் பற்றி அருள்தந்தை அவர்கள் கீழ்வருமாறு கூறுகிறார்.

''வெட்டவெளி என்ற பெரும் பானைக்குள்ளே
வேகுதுயர் அண்டகோடி எனும் அரிசி
அட்டதிக்கு அறிவாலே துழாவி விட்டேன்
ஆகாகா அதைச் சுவைக்க என்ன இன்பம்
கிட்டிவிட்ட தெந்தனுக்கு இந்தப் பொங்கல்
கேட்டவர்க் கெல்லாம் தருவேன் தகுதியானால்
தொட்டுத்தான் அதைக் கொடுப்பேன் சூடாறாது
சுவைக்க சுவைக்க இன்பமிகும் சூட்சுமப்பொங்கல்''

- ஞானக்களஞ்சியம் 713

நாம் வசிக்கும் இந்தப் பூமி சூரியன் அடங்கிய அண்டத்தைச் சார்ந்தது ஆகும். இந்த அண்டத்தைப் பால்வெளி அண்டம் (Milkyway Galaxy) என்று கூறுகிறோம். அண்டத்தில் சூரியனைப் போன்று பல்லாயிரம் நட்சத்திரங்கள் உள்ளன. அவை வெட்ட வெளியில் மிதந்து கொண்டு இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் உள்ள இடைவெளி வெகு தொலைவு ஆகும். இந்தத் தொலைவினை ஒளியாண்டு என்ற தூர அலகால் அளக்கின்றனர். ஒளியாண்டு என்பது ஒளி 1 ஆண்டில் செல்லும் மொத்தத் தூரத்தைக்

குறிக்கும். அதாவது ஒளி 1 வினாடிக்கு 3,00,000 கி.மீ. செல்லக் கூடியது. இந்த வேகம்தான் ஒளியாண்டில் கணக்கிடப் படும். பால் வெளிமண்டலம் நீள்வடிவமாக அமைந்து உள்ளது. இதன் நீளம் சுமார் 1 இலட்சம் ஒளியாண் டாகும். குறுக்குவாட்டில் நடுவில் அமைந்துள்ள அகலம் 5000 ஒளியாண்டாகும்.

பால் வெளி அண்டத்திற்கு வெளியில் இந்த அமைப்பினைப் போன்று கோடிக்கணக்கான அண்டங்கள் மிதந்துகொண்டு இருக்கின்றன. ஒவ்வோர் அண்டத்திற்குள்ளும் பல ஆயிரம் கோடி நட்சத்திரங்கள் இருக்கின்றன. இந்த நட்சத்திரக் கூட்டங்களைத் தாண்டி வெளியே சென்றால் எவ்வாறு இருக்கும்? அங்கு இருளும், நிசப்தமும் இருக்கும். இருள்வெளி எல்லையில்லாததாக இருக்கும். அதனோடு அண்டங்கள் நிறைந்த பிரபஞ்சத்தை ஒப்பிடும்போது அது தூசி அளவுகூட இருக்காது.

கிரகங்களின் தோற்றம்

வேதான் மண்டல மையப்பகுதியில் கனமான அணுக்கள் நெருங்கி இயங்குவதால் அங்குள்ள சில அணுக்களின் தற்சுழற்சி நின்றுவிட அதனால் பெரும் வெப்பம் ஏற்பட்டு அணுக்கரு ஆற்றல் வெளிப் படுகிறது. இந்த ஆற்றல் பல ஆயிரம் வெடி குண்டுகள் வெடிப்பதற்குச் சமமாகும். அங்கிருந்து வெளியான துகள்கள் பல கோடி மைல் தூரம் வீசி எறியப் படுகின்றன. அவ்வாறு வெளியான துகள்கள் காலத்தால் ஒன்று சேர்ந்து கிரகங்களாக மாறுகின்றன. நமது சூரியனும் இவ்வாறு தோன்றியதுதான். சூரியனில் இருந்து வெளியான துகள்கள்தாம் நமது கிரகங்கள். அவை சுழலும்போது துணைக் கிரகங்கள் உருவாகின்றன. இவ்வகையில்தான் பூமிக்கு - 1, செவ்வாய்க்கு - 2, சந்திரன், குருவுக்கு - 16, சனிக்கு - 18, யுரேனஸ்க்கு - 5, நெப்டியூனுக்கு -2 எனத் துணைக்கோள்கள் உள்ளன. இதனையே சூரிய மண்டலம் என்கிறோம்.

பூமி சுழல்வதேன்?

சூரியனைச் சுற்றியுள்ள எல்லாக் கிரகங்களும் தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனையும் சுற்றி வருகின்றன. இவை சுற்றிக் கொள்வதற்கான காரணம் எலக்ட்ரான், புரோட்டான், நியூட்ரான் என்ற அணுக்களின் ஆற்றலாகும். இந்தக் கூட்டமைப்பில் உள்ள எந்த அமைப்பும் சுழற்சியில்தான் இருக்கின்றன. இவ்வகையில் பூமி முதலான எல்லாக் கிரகங்களும் சுழலுகின்றன. பூமி தன்னைத்தான் சுற்றிக்கொள்ள 1 நாள் ஆகின்றது. புதன் 59 நாள்களும், சுக்கிரன் 243 நாள்களும், சந்திரன் 27½ நாள்களும், செவ்வாய் 24 மணி 37 நிமிடத்திலும், குரு 9 மணி 51 நிமிடத்திலும், சனி 10 மணி 14 நிமிடத்திலும், யூரேனஸ் 17 மணி 15 நிமிடத்திலும், சூரியன் 25 நாள்களுக்கு ஒரு முறையும் தன்னைத்தான் சுற்றிக்கொள்கின்றன.

ஒவ்வொரு வேதானில் இருந்தும் காந்த அலைகள் வெளிவந்து கொண்டிருக்கும். சூரியனிலிருந்து வரக் கூடிய காந்த அலைகள் பல்லாயிரம் கோடி தூரம் பரவியிருக்கும். சூரியன் சுற்றும்போது இந்தக் காந்த மண்டலமும் அதே வேகத்தில் சுற்றும். கோள்களின் பருமன், தூரம் இவற்றைப் பொறுத்துச் சுற்றிவருகின்ற காலம் வேறுபடுகின்றன. புதன் 88 நாள்களிலும், சுக்கிரன் 225 நாள்களிலும், பூமி 1 வருடம், செவ்வாய் 8 மாதம், குரு 12 வருடம், சனி 30 வருடம் என்று எடுத்துக் கொள்கிறது. இதனைக் கொண்டு சோதிடத்தில் மனித வாழ்வின் கிரக அமைப்பைக் கூறுகின்றனர்.

சோதிடம் சோதி + இசம் = சோதிடம். சோதி என்பது ஒளியாகும். இசம் என்பது நெறியாகும். ஜோதிடம் என்பது மனித வாழ்க்கையில் ஒருவன் தன் வினைக் கேற்ப செய்யும் செயல்களின் விளைவாக இன்ப, துன்பம் அமையும். கோள்களின் இயக்கத்தினைக் கணித்து அறிவின் துணையால் சொல்லும் நெறிமுறை சோதிடமாகும். மனிதன் செய்கின்ற செயல் அவனுடைய காந்த களமாகிய கரு மையத்தில் பதிவாகி விடுகிறது. கோளிலிருந்து வரக்கூடிய காந்த ஆற்றல் அவனுள் இருக்கின்ற பதிவுகளை மலர்த்திக் காட்டி இன்ப, துன்பமாக உணர்த்துகிறது.

''வினைப்பதிவே ஒரு தேகம் கண்டாய்'' என்பது ஆன்றோர் வாக்கு. இன்றைய வாழ்க்கை முற்பிறவியில் செய்த செயல்களின் விளைவாகும். இப்பிறவியில் தன்னை உணர்ந்து நல்ல குணத்துடன், இறை சிந்தனையோடு நற்செயல் செய்தால் பிறவிப் பெருங்கடலை நீந்த முடியும்.

''ஏழை நோய் விதி என்று எண்ணி ஏமாந்திருந்தேன்
என்னுள்ளுணர் வெனக்கு இயம்பிய தென்
தெரியுமோ
வாழ்வு தொடங்கும் போதே வளமனைத்துள்ளும்
இணைந்துள்ளதே
வறுமை நோய் செயல் விளைவாய் வந்த பயன்.

- வேதாத்திரி மகரிஷி

சாதக அமைப்பு

மனிதன் பிறக்கும்போது பூமிக்கும் மற்றக் கோள்களுக்கும் இடையே உள்ள நிலை, தூரம், கோணம் இவற்றை அடிப்படையாகக் கொண்டும், சூரியனை மையமாகக் கொண்டும், சாதகத்தைக் கணித்தனர். சூரியக் குடும்பத்திற்கு அப்பாலுள்ள நட்சத்திரங்கள் அனைத்தும் அடங்கிய அமைப்பை ஒரு கோளமாகப் பாவித்து அதனை 12 பிரிவுகள் ஆக்கி அதற்கு மேஷம், ரிஷபம், மிதுனம், கடகம்,

சிம்மம், கன்னி, துலாம், விருச்சிகம், தனுசு, மகரம், கும்பம், மீனம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஒரு வட்டம் என்பது 360 பாகை கொண்டதாக அமையும். அதனை 12 பிரிவுகளாகப் பிரிக்கும் பொழுது 30 பாகை என்ற அளவில் ஒவ்வொரு பிரிவும் இருக்கும். இதில் முதன்மையான நட்சத்திரங்களை இணைக்கும் போது ஓர் உருவ அமைப்பு கிடைக்கும். அதனை ராசிகளின் பெயராக வைத்துள்ளனர். 27 நட்சத்திரங்களை 12 இராசிக் கட்டங்களுக்கு முறைப்படுத்தி எந்தக் கட்டத்திற்கு நேராகச் சூரியனோ மற்றக் கோள்களோ வரும்போது அவற்றின் காந்த அலைகள் உடல், மனம், நட்பு, பொருள், ஆன்மிகம், அறிவு இவற்றில் மாற்றத்தை நிகழ்த்தும்.

கோள்களின் அலையியக்கம்

இப்பிரபஞ்சத்தில் எல்லாப் பொருள்களும் அணுக்களின் கூட்டமாகும். ஒவ்வோர் அணுவிலும் சுழற்சி நடைபெறும்பொழுது காந்த அலைகள் வெளியேறுகின்றன. அந்த அலைகள் மற்றப் பொருள்களின் அலையோடு மோதும்போது மோதல், பிரதிபலித்தல், சிதறுதல், ஊடுருவுதல் அவற்றோடு முன்பின் ஓட்டம் என 5 வித அலையியக்கம் ஏற்படுகின்றது. கோள்களிலிருந்து வருகின்ற அலை எந்த உயிரின் மீது மோதுகின்றதோ அங்குப் பாதிப்பை ஏற்படுத்தும்.

கோள்களிலிருந்து வருகின்ற காந்த அலைகள் உடலின் சில பகுதியில் அதிக ஆக்கம் செலுத்துகின்றன. சூரியன் எலும்புகளோடும், புதன் தோல் மீதும், சுக்கிரன் வித்து ஆற்றலோடும், சந்திரன் இரத்தத்தோடும், செவ்வாய் எலும்புக்குள் அமைந்த மஜ்ஜை யோடும், குரு மூளையோடும், சனி நரம்புகளோடும், ராகு, கேது மனத்தோடும் தொடர்பு கொள்கின்றன. யூரேனஸ், நெப்டியூன், புளோட்டோ போன்ற கோள்கள் சோதிடசாஸ்திரம் கணக்கிடப்பட்ட காலத்தில் கண்டு பிடிக்கப்படவில்லை. மேலும் அவை வெகு தொலைவில் இருப்பதால் அதன் பாதிப்புகள் குறைவாக இருக்கும் என்ற யூகத்தில் இவற்றைக் கணக்கில் எடுத்துக் கொள்வதில்லை.

கிரகணங்கள்

பூமி, சந்திரன், சூரியன் மூன்றும் ஒரே கோட்டில் வரும்போது இவற்றைக் கிரகண காலங்கள் என்று கூறுவர். கோள்கள் ஒரே தளத்தில் அமையும். ஆனால் ஒரே கோட்டில் கிரகண காலத்தில் மட்டுமே வரும். எந்தப் பௌர்ணமியில் ''சூரியன்-பூமி-சந்திரன்'' என்ற வரிசையில் மூன்றும் இருக்கிறதோ அப்பொழுது சந்திர கிரகணம் உண்டாகும். எந்த அமாவாசையன்று ''சூரியன்-சந்திரன்-பூமி'' மூன்றும் ஒரே கோட்டில் அமையும் பொழுது அது சூரியகிரகணமாகும். அச் சமயம் ராகு, கேது, அலை வீச்சால் சூரிய, சந்திர ஒளி பாதிக்கப்படும். அதனால் நம் உடலில் இரசாயண மாற்றம் ஏற்படும். உணவுச் செரிமானம் குறைவாக நடக்கும். கரு உருவானால் அது உடலாலும், மனத்தாலும் பாதிக்கப்படும். ஆகவே கிரகண நாள்களைப் பெரியோர்கள் விரத நாள்களாக அறிவித்தனர்.

எல்லாக் கோள்களும் நன்மையைத்தான் செய்கின்றன. ஒருவன் ஒழுக்கம் காத்தவனாக இருக்கும் பொழுது கிரகங்கள் அவன் வீட்டுப் படிக்கட்டுகளாக இருக்கும். ஒழுக்கத்தை மீறும் பொழுது அவனை மீளாத துன்பத்தில் ஆழ்த்திக் கடைசியில் மரணத்தையும் கொடுக்கும். ஒருவன் அனுபவிக்கும் இன்ப, துன்பத்திற்குக் காரணம் அவனது முற்பிறவிச் செயலே. இதற்குக் கிரகங்கள் காரணமாகா. அறச் செயலைச் செய்து அருங்குணச் சீரமைப்புப் பெற்றால் எப்பொழுதும் இன்பம் பெறலாம்.

○○○

யாகக் குச்சிகளைக் கொண்டுவந்த யானைகள்



மலைவளமும், நிலவளமும், பொருள்வளமும் நிறைந்த கொங்குநாடு பழங்காலத்தில் இருந்தே மனநலமிக்க பகுதியாகவும் திகழ்ந்து வருகின்றது.

மனநலச் சிறப்பினை

'மனநலம் மன்னுயிர்க் குஆக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்'

எனத் திருவள்ளுவர் குறிப்பிட்டுள்ளார்.

மனநலம் மிக்க நாடாதலால் சிவநெறி வளர்க்கும் திருக்கோயில்களும், சித்தர்கள் தவம் செய்து புகழ் அடைந்த மலைக் கோயில்களும் நிறைந்துள்ளன.

முனிவர்களும், சித்தர்களும், அருளாளர்களும் இந்நாட்டில் திருநெறியாகிய செந்நெறியைச் செழிக்கச் செய்தனர்.


தவம் செய்வதற்கு ஏற்ற நிலமாகக் கொங்குநாடு விளங்குகிறது. இயற்கை அமைப்பே இதற்குக் காரணமாகும். மலைகளும், அங்குள்ள குகைகளும், காடுகளும் தவச்சூழலுக்கு மிக ஏற்றவையாகும்.

பெரும்பாணாற்றுப்படை இம் மலைநாட்டைப் பற்றிக் கூறும் பொழுது இங்கு வேள்வி செய்தும், தவம் புரிந்தும் வந்த முனிவர்களுக்குக் கானக யானைகள் வேள்விக்கான யாகசாலைக்கு வேண்டிய குச்சிகளை ஒடித்துக் கொண்டு வந்து கொடுத்ததாக ஒரு பாடலில் கூறியுள்ளது

அப்பாடல் வருமாறு :

'செந்தீப் பேணிய முனிவர் வெண்கோட்டு
களிறு தரு விறகின் வேட்கும்
ஒளிறு இலங்கு அருவிய மலைகிழவோனே'

தமிழகத்தின் இணைப்புப் பாலம் கவிஞர் இரா. இரவி



இலண்டன் அருள்மிகு முத்துமாரி அம்மன் திருக்கோயில், சிவயோகம் அறக்கட்டளை ஆகிய வற்றுடன் மிக நெருங்கிய உறவு வைத்திருப் பவர் மதுரைக் கவிஞர் இரா. இரவி அவர்கள். தமிழ் நாட்டின் இணைப்புப் பாலம் இவர் என்றுகூறலாம்.

2001ஆம் ஆண்டில் ஆலயம் வெளியிட்ட ''சிவயோகம்'' சாதனை படைத்த மலராக மக்கள் மத்தியில் பாராட்டைப் பெற உழைத்தவர்களில் இரவி அவர்கள் முதன்மை பெற்றவர்.

மனிதநேயம் இரவியின் பிரபல்யத்திற்கான முத்திரை. நேர்மை, நம்பிக்கை இவரது அசையாத சொத்துக்கள். எல்லோருடனும் அன்பாகப் பழகும் பண்பாளர். கவிஞர்களை ஊக்குவிப்பது, எழுத் தாளர்களை அறிமுகம் செய்வது, கடல் கடந்த தமிழர்களை அணைப்பது, பாராட்டு விழாக்களுக்கு உந்து சக்தியாக இருந்து கவிஞர்கள், எழுத்தாளர் களைக் கௌரவிப்பது, உழைப்பால் உயர வேண்டு மென்ற நோக்கத்தைச் செயற்படுத்துவது, எங்கு வாழ்ந்தாலும் தமிழர்கள் வளத்துடன் வாழ்ந்து தமிழ்ப் பணிக்குத் தம்மை அர்ப்பணிக்க ஊக்கப் படுத்துவது - இவை இரவியின் வாழ்க்கையின் சாமுத்திரிகா இலட்சணங்கள்.

இவரது தலையாய தமிழ்ப்பணி www.kavimalar.com என்னும் இணையத்தளம் மூலம் நடக்கிறது. கணினி மூலம் உலகில் வாழும் தமிழர்களுடன் உறவுப் பாலம் அமைத்துக் கொண்டிருக்கும் இந்த இணையத்தளத்தை இதுவரையில் மூன்று இலட்சம் பேர் வரை பார்த்தும் படித்தும் இருக்கிறார்கள் என்கிறார் இவர். தமிழ்நாடு சுற்றுலாத் துறையின் பராமரிப்பிலுள்ள மதுரை திருமலை நாயக்கர் மகாலில் கடமையாற்றுகிறார். ''சிறப்புப் பணியாளர்'' என்ற விருது பெற்றவர். தமிழ்நாடு சுற்றுலாத்துறையின் நடமாடும் தனிமனித பிரசாரப் பீரங்கியாகச் செயற்படுவது கவிஞர் இரவியின் பெருமையாகும்.

திருமலைநாயக்கர் மகாலின் பெருமை சிவ யோகம் மலருக்கு இருக்க வேண்டுமென்ற ஆசை மேலீட்டால் அதன் சிறப்பு வெளியீட்டுக்கு அயராது உழைத்து எமக்கு ஆதரவு தருபவர். இம்மலரில் வெளிவந்திருக்கும் ''தமிழக சிற்பக்கலை'' சில்பியின் ஓவியங்களை எமக்கு அனுப்பி ''மலரைச் சிறப்பியுங்கள்'' என அன்பான வேண்டுகோளை முன்வைத்த இரவி அவர்களுக்கு எமது நன்றி.

1973ஆம் ஆண்டில் இந்த ஓவியங்களைப் புகழ்பூத்த ஓவியர் ''சில்பி'' அவர்கள் தீட்டியிருந் தார். தமிழ்நாடு சுற்றுலாத்துறை வெளியிட்டிருந்தது. இன்று 35 வருடங்களுக்குப் பின்னர் இரவி அவர் களின் ஆர்வமேலீட்டாலும், இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில் நிறுவனர் திருமிகு. நா. சீவராத்தினம் அவர்களின் ஆலயக் கலைகள் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற ஆசை யினாலும் இம்மலரில் பிரசுரமாகிறது.

கவிஞர் இரவி அவர்களின் தமிழ்ப்பணி தொடரட்டும்.

ooo



மதுரை திருமலை நாயக்கர் மகால்

The oldest Religion

HINDUISM

Hinduism is one of the oldest religions of the world. It is definitely the oldest among the living religions. The European historians of early 20th century grudgingly accepted the period around 2500 B.C. as the earliest available evidence of the origin of the Vedic religion, which is a precursor to Hinduism. But many present day scholars, especially from India, do not agree with this opinion and believe it to be around 8000 B.C.

The Evidence

The antiquity of Hinduism can be better estimated from the astronomical evidence available in the Hindu Scriptures, the folk-traditions and anthropological studies peculiar to the Indian sub-continent, and some geographical and etymological references mentioned in the Vedic literature. These evidences suggest that Hinduism has a long and checkered history of at least 6000 years or more.

Whatever be the truth, the Rig Vedic Aryans did not start a new religion in the sub-continent when they occupied the Indus Valley. They were practicing a religion that was already centuries old. Many of the hymns and rituals of the Rigveda stand testimony to this fact. To the new inhabitants of the land of the five rivers, the Vedic hymns were products of a very ancient wisdom. received by them through oral tradition and through generations of scholars and seers starting from the time of the first man on earth.

Old as the primitive man!

If we accept this as a religious truth, for there seems to be no reason why we should not, then the Vedic religion, which is a precursor to the present day Hinduism, might probably have its antecedents in the prehistoric days, when the aboriginal men were slowly trying to understand the mysteries of their own existence and the mysteries of the world around them!

Differs from other religions?

Hinduism differs from other organized religions in the following aspects:

- It is not based upon a particular founder.
- It is not based upon a particular book.
- It is not controlled by a central institution or authority such as a church or an association.
- It is not averse to examine and assimilate fundamentally diverse thoughts and beliefs into its system.
- It accepts other religions as various paths to salvation and does not favour organised attempts to convert people.
- It has been evolving continuously, through internal reforms and as a reaction to the

HINDUISM

threats and challenges. Hinduism is a way of life

Hinduism, we are told, is not a religion at all, but a way of life. In a way this is quite true. According to the tenets of Hinduism, life and religion are inseparable Religion is there every where, dominating and regulating every aspect of human life, infusing it with divine presence and making life more meaningful and purposeful to its followers.

Though there are some core beliefs common to virtually all Hindus, there really is no "Hindu orthodoxy" - no hard and fast dogma that all Hindus must believe. It's actually a family of gradually developing beliefs and practices.

There are no specifically laid out rules constricting a person's eating/drinking habits, or clothing style or something like that. In fact, it is on a much higher platform, where such petty things are inconsiderate. It deals with the spiritual aspects of trying to understand God and to approach Him through many varied means (principal of which is love). As a natural fallout, it also shows how to lead a meaningful life full of bliss, peace and love.

The historical process

Throughout its entire history, Hinduism was never static. It evolved continuously from stage to stage and went on transforming itself continuously. This was due to the selfless and extraordinary contribution by many scholars, seers, sages, institutions, kings and emperors, over a vast period of time.

By correcting, moulding, modifying and integrating various aspects of the religion to suit the social, political, material, intellectual and spiritual requirements of the times, these great souls kept the religious lamp shining and vibrating. These great sages and saints provided knowledge and guidance to the multitude of beings, while barbarism and savagery still ruled many parts of the world.

Like an Ocean

It was they who gave the religion the depth and complexity for which it is known today, making it, as far as possible, acceptable to a great majority of the Indian people. Because of them Hinduism became more or less like an ocean that would absorb every thing that flowed into it from all directions.

Like an ocean it remained stable and firmly entrenched in its place and went or absorbing new knowledge and religious insights from all directions, without losing in the process, its moorings and its original character. It did not compromise on its basic ideals, nor suffered unduly from the process of assimilation and adaptation.

INCOMPREHENSIBILITIES This flexible approach helped it to survive against the onslaught of new religious movements and invasion of foreign ideas. But in the process it also amassed a great body of inner contradictions, which today stand out prominently, making it incomprehensive to many outsiders. It is sincerely hoped that this site will help resolve some of those incom- prehensibilities! ○○○

ஈழத்தில் சிவயோகத்தினால் பராமரிக்கப்படும்
இல்லங்களும், குழந்தைகளும்

தமிழ் ஈழத்தில் இடம் பெயர்ந்து அகதி முகாம்களிலும் அரசப் பொருளாதாரத் தடையால் சொந்தக் கிராமங்களிலும் கஷ்டப்படும். முக்கியமாகப் பெற்றோரை இழந்த பிள்ளைகளைச் சிவயோகம் அங்கிருப்பவர்களுடன் இணைந்து பராமரித்துவருகிறது.

ஒரு குழந்தையைப் பராமரிப்பதற்கு மாதம் குறைந்தது **£20** செலவாகிறது.

தயவுசெய்து இப்பெரும் பணிக்கு நீங்களும் உதவி செய்வதுடன் உங்களுக்குத் தெரிந்தவர்களையும் உதவு செய்யும்படி வேண்டுவதால் நீங்கள் ஒரு பிள்ளையின் எதிர்காலத்தைச் சிறப்பாக்குவதற்கு வழிசெய்யும் பெரும் புண்ணியத்தைச் செய்தவர்களாவீர்கள்.

அன்புடன்

சிவசக்தியின் பணியில்

நாகேந்திரம் சீவரத்தினம்

தலைவர், அறங்காவலர் சபை

சிவயோகம் அறக்கட்டளை பற்றிய சில விவரங்கள்

1. கோயில் 1996 ஆம் ஆண்டு சித்திரை மாதம் ஆரம்பிக்கப்பட்டது.
2. கோயிலுக்கு அங்கத்தவர்கள் இல்லை. அதனால் அங்கத்தவர் சந்தாப் பணம் இல்லை.
3. கோயில் வாடகைக் கட்டடத்தில் இயங்குகிறது. அதன் மாத வாடகை **£7500**.
4. கோயிலுக்கு இன்று (April 2006) **£1,164,351** கடன் உள்ளது (வெம்பிளி இந்து கலாசார நிலையக் காணி கொள்வனவு உட்பட)
5. கோயிலுக்கு வரும் அடியார்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக 14 குருக்கள்மார்கள் நிரந்தரமாகப் பணியாற்றுகிறார்கள்.
6. கோயிலைப் பராமரிப்பதற்கு நிரந்தரமாக ஒருவர் வேலை செய்கிறார்.



7. திருக்கோயில் மண்டபம், எமது நாட்டில் அல்லல்படும் மக்களுக்குப் பணம் சேகரிப்பதற்காக நடாத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு இலவசமாகக் கொடுக்கப்படுவதுடன் செலவுகளையும் கோயில் பொறுப்பேற்கிறது.
8. எமது கலை, கலாசாரம் பற்றியும், நாட்டுப் பிரச்சினை பற்றியும் பிரச்சாரம் செய்ய இலண்டனுக்கு வரும் ஒவ்வொருவரையும் கௌரவித்து நிதியுதவியும் செய்யப்படுகிறது.
9. எமது சமய, கலை, கலாசார வளர்ச்சியில் வருங்காலச் சந்ததியினரை ஊக்குவிப்பதற்காக வகுப்புகள் விழாக்கள் ஆகிய வழிகள் மூலம் திருக்கோயில் முயற்சி செய்கிறது.
10. தமிழ், சமய, பொதுச்சேவை மற்றும் சில துறைகளில் சேவை செய்த பெரியோர்களை வருடாவருடம் கௌரவிக்கிறது. தமிழ் ஈழம் மற்றும் தமிழ்நாட்டிலிருந்தும் சிலர் அழைக்கப்பட்டுக் இக்கோயிலில் கௌரவிக்கப்படுகின்றனர்.



இலண்டன் சிவயோகம் அறக்கட்டளை சிறுவர் பராமரிப்பு நிதியத்தினரால் வழங்கப்பட்ட துவிச்சக்கர வண்டில்கள்.

தாயகத்தில்

1. பெற்றோரை இழந்து நிற்கும் 257 குழந்தைகள் பொறுப்பேற்றுப் பராமரிக்கப்படுகிறார்கள்.
2. சிவயோகம் 5 இல்லங்களைப் பராமரிப்பதுடன், 54 அறநெறிப் பாடசாலைகளை இயக்குகின்றது. அதில் 3620 பிள்ளைகள் கல்வி கற்கின்றார்கள். 114 பகுதி நேர ஆசிரியர்கள் கடமையாற்றுகிறார்கள்.
3. கணவரை இழந்து அகதிமுகாமில் வாழும் இளம் குடும்பங்கள் சிலவற்றிற்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகிறது.
4. புற்று நோயால் பாதிக்கப்பட்ட வசதியற்ற சிலருக்குச் சிகிச்சைக்காகப் பண உதவி செய்யப்படுகிறது.
5. யாழ், பல்கலைக்கழக வசதி குறைந்த மருத்துவ பட்டதாரி மாணவர்களுக்குப் பண உதவி செய்யப்படுகிறது.

அறம் செய்ய விரும்பு



இலண்டன் சிவயோகம் சிறுமியர் இல்லம்
மட்டக்களப்பு



இல்லச் சிறார்களின் பாவனைக்கு இலண்டன் சிவயோகம் அறக்கட்டளை சிறுவர் பராமரிப்பு நிதியத்தினரால் வழங்கப்பட்ட வர்ண தொலைக்காட்சிப் பெட்டியும், வானொலிப் பெட்டியும்.

சிவயோகம

To facilitate here and beyond...

அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

புனராவர்த்தன குடமுழுக்கும் பெருஞ்சாந்தி விழா



அம்பிகை அடியார்களே !


அகண்ட பரிபூரண சச்சிதானந்த பரப்பிரமமாய், சர்வமங்கள சொரூபியாய், ஆதியும் அந்தமும் இல்லாத அநாதியாய் விளங்குகின்ற பரமாத்மாவால் படைக்கப்பட்ட இப்பூவுலகின் கண்ணே! நீர்வளம், நிலவளம், மலைவளம், கனிவளம் யாவும் ஒருங்கே அமைந்த அழகாபுரி, செல்வம் கொழிக்கும் சுவர்ண பூமி என்று அழைக்கப்படுவதுமான இங்கிலாந்து நாட்டின் இலண்டன் மாநகரிலே குட்டிங் என்னும் திவ்விய பதியிலே அடியார்களுக்கெல்லாம் அருளையும், முத்தியையும் கொடுத்து சுகவாழ்வு அளிக்கின்ற அருட்தாய் "சிவயோகம்" அருள்மிகு முத்துமாரி அம்மனுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும்

நிகழும் சுபமங்களகரமான சர்வசித்து வருடம் உத்தராயணம், சிசிரருது, மீன (பங்குனி) மாதம் 8ம் நாள் (21.03.2008) சுக்கிரவாரம் (வெள்ளிக் கிழமை) பூர்வ பட்ச பௌர்ணமித் திதியும் உத்தர நட்சத்திரமும் சித்தயோகமும் கூடிய சுபதினத்தில் காலை 9.26 மணிமுதல் 10.34 மணிக்குள் மிதுன லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில் பெருஞ்சாந்தி என்று விதந்து கூறப்படும் குடமுழுக்கு பெருவிழா நடைபெறத் திருவருள் கை கூடியுள்ளது.

அடியார்கள் அனைவரும் குடமுழுக்கு பெருவிழாவிலும் அதற்குமுதல் நடைபெறும் கிரியா காலங்களிலும் ஆலயத்திற்கு வருகை தந்து அம்பிகையை வழிபட்டு திவ்ய தரிசனம் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

குடமுழுக்குக் கிரியாகால நிகழ்வுகள்

நாள் கிழமை	நேரம் காலை	நிகழ்வுகள்	நேரம் மாலை	நிகழ்வுகள்
16.03.08 பங்குனி 03 ஞாயிறு SUN	09.00	அனுக்ஞை, விக்னேஸ்வர பூசை, புண்யாக வாசனம், தனபூசை, திரவிய விபாகம், கணபதி ஹோமம், பிரம்மச்சாரி பூசை, விநாயகர் அபிஷேகம், பிரார்த்தனை Anukgnai,Vigneswara Pooja, Dhana Pooja, Ganapathy Homam, Abhishekam	5.30 6.00	கிராம சாந்தி, பிரவேசபலி, திசாஹோமம், இரட்சோக்ன ஹோமம் Kirama Shanthy, Piravesa Pali, Dhisa Homam, Rakshokna Homam
17.03.08 பங்குனி 04 திங்கள் MON	08.00	நவக்கிரக ஹோமம், வாஸ்து சாந்தி, திவாகர பூசை, அக்னி சங்கிரகணம், குண்ட மண்டல வேதிகாஸ் தாபனம் Navagraha Homam, Vasthu Shanthi	5.00 5.00 8.00	மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம், ரட்சாபந்தனம் பிரசன்னாபிஷேக பூசை, கடஸ்தாபனம், கலாகர்ஷணம், யாகசாலைப் பிரவேசம், முதற்கால யாகபூசை, நவாக்னி விபஜனம் ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை இரவு 8.00 மணிக்குமேல் தீபஸ்தாபனம், விம்பஸ்தாபனம், அஷ்டபந்தனம் Miruthsankiraganam, Angurarpanam, Pirasanna Abishekam, 1st Yaaga Pooja Homam, Aarthi Theepasthapanam,Vimpasthapanam
18.03.08 பங்குனி 05 செவ்வாய் TUE	09.00	விஷேச சந்தி, இரண்டாம் கால யாகபூசை பாவநாபிஷேகம், ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, வேத, திருமுறை, ஆசீர்வாதம், திருமுறை, ஆசீர்வாதம் காலை 10.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை அடியார்கள் தேவிக்கு சுவர்ணா அபிஷேகம் செய்தல் 2nd Yaaga Pooja, Dheeparadhanai 10.00am to 8.00pm SORNAA ABISHEKAM	5.00	விஷேசசந்தி, பூதசுத்தி, மூன்றாம்கால யாகபூசை, ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, வேத, திருமுறை, ஆசீர்வாதம் 3rd Yaaga Pooja, Dheeparadahanai
19.03.08 பங்குனி 06 புதன் WED	09.00	விஷேச சந்தி, நான்காம் கால யாக பூசை ஸ்தாலி பாகம், ஹோமம், அன்னாகுதி, பூர்ணாகுதி, தீபாராதனை, வேத, திருமுறை, ஆசீர்வாதம் காலை 9.00 மணி முதல் இரவு 8.00 மணிவரை அடியார்கள் எண்ணைக் காப்புச் சாத்துதல் 4th Yaaga Pooja, Dheeparadhanai, 9.00am to 8.00pm ENNAI KAPPU	5.00	விஷேசசந்தி, பூதசுத்தி, ஐந்தாம்கால யாகபூசை ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, வேத, திருமுறை, ஆசீர்வாதம் 5th Yaaga Pooja, Dheeparadahanai
20.03.08 பங்குனி 07 வியாழன் THU	09.00	விஷேச சந்தி, ஆறாம்கால யாகபூசை, விசேஷ திரவிய ஹோமம், பூர்ணாகுதி, தீபாராதனை, வேத, திருமுறை, ஆசீர்வாதம். பிம்ப சுத்தி, பிம்ப ரட்சாபந்தனம் 6th Yaaga Pooja, Dheeparadhanai, Vimpa Suththi	5.00	பூதசுத்தி, தத்வ நியாசம், ஷடத்வ நியாசம் ஏழாம் கால யாகபூசை, ஹோமம், ஸ்பர்சாகுதி பூர்ணாகுதி, வேத, திருமுறை, ஆசீர்வாதம், சிவாச்சார்ய உபசார பூஜனம். Niasam, 7th Yaaga Pooja, Dheeparadahanai
21.03.08 பங்குனி 08 வெள்ளி FRI	07.00	புண்ணியாக வாசனம், ஆச்சாரிய யாகசாலாப்பிரவேசம் எட்டாம் கால யாக பூசை, ஹோமம், நவாக்னி மூர்த்தி சம்யோஜனம், மகா பூர்ணாகுதி, அந்தர் பலி, பகிர் பலி, சோடச உபசார பூசை, யாத்ரா தானம், தசதானம், வேதகோச சர்வ மங்கள வாத்திய சகிதம் பிரதான, பரிவார கும்பங்கள் புறப்பாடு. வீதிப்பிரதக்சனம், புஷ்பாஞ்சலி, மூலாலய பிரவேசம், மூர்த்தி ஆவாகனம், குறித்த சுப முகூர்த்தத்தில் அனைத்து மூர்த்திகளுக்கும் மகாகும்பாபிஷேகம் திருக்கடைக்காப்பு, ஸ்திராகுதி, யாக உத்வாசனம் தச மங்கள தர்சனம், யஜமான் அபிஷேகம், உபசாரங்கள், ஆசி உரைகள், மலர் வெளியீடு, ஆசீர்வாதம், மகாபிரசாதம் வழங்கல். 8th Yaaga Pooja, Dheeparadhanai, Kumbabhishekam	5.00 6.00	மஹா அபிஷேகம், யந்திர பூசை, மஹாஹவிர் நிவேதனம், விஷேடபூசை, அம்பிகை விஷேட தங்க ரதத்தில் திரு வீதி உலாக் காட்சி, திருவருட் பிரசாதம் வழங்குதல் Mahabishekam, Special Pooja, Golden Chariot Procession



குடமுழுக்கு யாகபூசைக் காலங்களில் தினமும் கிரியா விளக்கங்களும் சிறப்புச் சொற்பொழிவுகளும் நடைபெறும்.

குடமுழுக்கு விழாவைத் தொடர்ந்து பன்னிரண்டு தினங்களுக்கு காலை 09.00 மணிக்கும் மாலை 05.00 மணிக்கும் மண்டலாபிஷேகமும் சிறப்புப் பூசையும் நடைபெறும்.

மண்டல பூர்த்தித் தினமாகிய 02.04.2008 புதன்கிழமை காலை 09.00 மணிக்கு 108 வலம்புரிச் சங்குகளால் அபிஷேகமும், மண்டல பூர்த்தியும், சிறப்புப் பூசையைத் தொடர்ந்து அம்பிகை ஆலயத்தை வலம் வருதலும் நடைபெறும்.

அம்பிகையின் குடமுழுக்கு விழாவைக்கண்டு தரிசித்து திருவருள் பெறுமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

— ஆலய திருவாக சபையினர்

180-186 Upper Tooting Road, London SW17 7EJ
Tel: 020 8767 9881 Fax: 020 8767 2337
www.sivayogam.org Email:sivayogam1050398@yahoo.co.uk

சிவயோகம்

31.03.2007 வரையிலான நிதிநிலைச் செயற்பாட்டறிக்கை

வரவு - செலவு	வருடம் 1 முடிவு 31.03.97	வருடம் 2 முடிவு 31.03.98	வருடம் 3 முடிவு 31.03.99	வருடம் 4 முடிவு 31.03.00	வருடம் 5 முடிவு 31.03.01	வருடம் 6 முடிவு 31.03.02	வருடம் 7 முடிவு 31.03.03	வருடம் 8 முடிவு 31.03.04	வருடம் 9 முடிவு 31.03.05
வருமான வளங்கள்	£	£	£	£	£	£	£	£	£
நன்கொடைகள்	39,802	23,839	27,146	25,421	25,154	32,142	41,380	78,200	141,017
தவணைச்சந்தா கணிக்கைகள்	6,371	7,527	9,368	11,971	11,165	15,637	19,134	18,681	16,110
மீளப்பெற்ற நன்கொடை வரி									24,430
கோயிற் பணிகள்	51,360	70,957	90,535	111,940	159,427	160,977	167,593	200,183	244,647
மண்டப வாடகை	14,183	28,350	45,600	44,540	52,725	59,800	63,270	44,870	37,645
மறு வரவுகள்	3,948	3,940	582	446	517	4,004	3,812	4,315	8,021
மொத்தம்	115,664	134,613	173,231	194,318	248,988	272,560	295,189	346,249	471,870
செலவான வளங்கள்									
நேரடி தர்மச் செலவினங்கள்									
கட்டிட வகை, பராமரிப்பு	24,824	42,003	44,290	41,325	44,739	76,253	82,460	80,986	79,610
நீர் வெளிச்சம், வெப்பமூட்டல்	3,652	6,167	4,266	6,770	6,172	4,702	5,317	5,168	8,913
பராமரித்தல், புதுப்பித்தல்	50,576	20,084	14,402	27,947	28,606	27,386	16,527	12,356	10,925
கந்தம் செய்தல்	2,279	1,468	3,837	3,931	3,095	2,428	1,937	2,202	2,496
தொலைபேசி, காப்புறுதி	1,981	1,270	2,338	2,378	1,420	2,368	2,353	3,031	3,862
அச்சிடுதல்,தபால்,பணிமனை பொருட்கள்	2,423	2,563	2,521	6,608	7,655	7,171	6,171	4,760	6,899
பூசைப் பொருட்கள்	20,626	19,876	16,650	21,067	35,207	39,150	38,076	36,609	51,300
ஊதியம், தேசிய காப்புறுதி	6,153	9,919	13,853	21,762	37,709	44,166	57,649	65,584	65,909
மேகதேவத்து பொருட்கள் இறக்குமதிச் செலவு	1,445	3,864	2,934	5,808	5,088	9,162	8,970	6,839	5,040
சட்டச்செலவுகள்									
நிலையான ஆதன சட்டுகுறிய வட்டி									
மறு செலவினம்	2,847	3,732	5,871	771	2,712	664	7,054	7,621	398
தேய்மானம்	10,080	11,161	13,939	17,145	14,397	18,170	14,456	15,806	14,786
நிர்வாகச் செலவினம்	1,880	2,920	2,909	3,011	3,288	4,881	5,174	5,040	5,311
மொத்தம்	128,766	125,027	127,810	158,522	190,088	236,501	246,144	246,002	255,449
வஞ்சிய வளங்கள்	- 13,102	9,586	45,421	35,795	58,900	36,059	49,045	100,247	216,421
காணிக்கைகள்	1,483	1,896	5,546	15,146	34,919	41,648	45,460	53,422	171,573
நிதியம்	- 14,585	7,690	39,875	20,649	23,982	- 5,590	3,583	46,825	44,848
முன் கொண்டுவரப்பட்ட நிதியம்	-	- 14,585	- 6,895	32,980	53,630	77,610	72,021	75,604	122,429
முன் எடுத்துச் செல்லப்படும் நிதியம்	- 14,585	- 6,895	32,980	53,629	77,612	72,020	75,604	122,429	167,277
	31.03.97	31.03.98	31.03.99	31.03.00	31.03.01	31.03.02	31.03.03	31.03.04	31.03.05
நிலையான சொத்துக்கள்									
கொள்வனவு விலை	84,822	106,356	137,070	180,473	198,133	248,835	276,889	312,129	331,608
தேய்மானம் போக	10,280	21,620	35,721	52,010	66,539	84,826	99,388	115,289	130,162
	74,542	84,736	101,349	128,463	131,594	164,009	177,501	196,840	201,446
நிலையற்ற சொத்துக்களும், நிலையற்ற கொடுபணங்களும்	- 9,370	- 20,476	- 19,669	- 35,731	55,850	74,363	88,922	74,898	173,310
ஒரு வருடத்தின் பின் கொடுக்க வேண்டிய கடன்கள்	- 79,757	- 71,155	- 48,700	- 39,103	- 109,834	- 166,352	- 190,819	- 149,309	- 207,479
வஞ்சிய (தேர்ந்த) சொத்துக்கள்	- 14,585	- 6,895	32,980	53,629	77,610	72,020	75,604	122,429	167,277
நிதியங்கள்	- 14,585	- 6,895	32,980	53,629	77,610	72,020	75,604	122,429	167,277
மொத்த அர்ச்சகர்கள் (சராசரி)	2	3	3	5	8	9	10	12	12

TRUSTEES AND ADVISORS AS AT 21 MARCH 2008

FOUNDER AND LEADER OF THE TEMPLES
Sakthy Aanmeehach Chudaroli
Mr Nagendram Seevaratnam, ACA, ACMA

PATRONS
Dr.K. Nadesalingam M.B.B.S (Cey.), D.P.M.(Lond), M.R.C.Psych.(U.K.)
Mr Kanagaratnam Kanendran
Mr Sellathurai Yoganathan

TEMPLE OMBUDSMEN
Mr. Kathiripillai Jegatheeswarampillai
Mr. Sathasivam Anandathiyagar
Dr. Sivagnanapirakasam Gnanachelvan

BOARD OF TRUSTEES
Executive Chair
Mr Nagendram Seevaratnam, ACA, ACMA
Secretary
Mr Nimalan Seevaratnam
Treasurer
Dr Jeyakanthan Saravanamuthu
Deputy Chair
Mr Kanagasabesan Thiyagarajah
Asst Secretary
Mr Sivasanmugasarma Kanapathychamy Iyer

BANKERS
Barclays Bank PLC
Upper Tooting Road Branch
Tooting, London SW17

Clydesdale Bank
35, Regent Street
London SW1Y 4ND

CULTURAL COMMITEE
Kavignar. W. Jeyabalan
Mr. Pon. Balasundram
Mr. S. Arumugasamy
Mrs. Vijayalakshmi Arumugasamy
Mr. K Visakesa Sarma

SIVAYOGAM MALAR
Editor
Thamil Nerikilar Mr Pon BalaSundaram

FINANCIAL ADVISORS
Mr. M.T. Manikkavasagan B.A., F.C.A.
7, Manning Gardens, Kenton
Harrow, Middlesex HA0 2DF

Mr.V.R. Ramanathan, FInstSMM, CertPFS, CertCII(MP)
3, The Orchard Road
Wickford, Essex SS12 0HB

AUDITORS
Shan & Co, Certified Accountants
92, Grand Avenue, Surbiton,
Surrey KT5 9HX

SOLICITORS
Krish Solicitors
86A High Street, Southhall
Middlesex UB1 3DB

"MUTHTHUMARI AMMAN TIRUPANI SABAI"
Mr. M. Jeyaseelan
Mr. T. Ratnavadivel
Mr. N Thirukumaran
Mr. T. Atputhasigamani
Mr. B Sivayogan
Mr. S Suri
Mr. A Ravi
Mr. V Santha Kumar
Mrs. Rani Ravinthan
Mr. S Sithirarajah
Mr. M Balasundaram
Mr. M Vivekananthan
Mr. S Thevan
Mr. A Partheeban

"NADARAJAR TIRUPANI SABAI"
Mr. Selvarajah Tharmarajah
Mr. Pushpanathan Jeyakanthan
Mr. Sinnathamby Vijayaratnam
Mr. Sivalingam Kanthan
Mr. Sivanathan Sureshkumar
Mr. Sivaruban Rajendran



நெகிழும் நன்றிகள்



மாதா, பிதா, குரு, தெய்வம்.

என்னைப் பெற்றெடுத்து, பாலுடன் அன்பையும், அறிவையும், கருணையையும் உவந்தளித்து வளர்த்த அமரத்துவம் அடைந்த என் அன்புத்தாய் நவமணி அவர்களுக்கும்,

என்னை முறைப்படி வளர்த்து ஆளாக்கி இன்று அடைந்துள்ள நிலைக்கு அத்திவாரமிட்ட என் அன்புத் தந்தையார் விநாயகர் நாகேந்திரம் அவர்களுக்கும்,

தாய்க்குப் பின் தாரம் என்றபடி மனையாளாகி என்னை முப்பது ஆண்டுகள் பாசத்தோடு ஆதரித்து, மந்திரியாய், பக்கத் துணையாக இருந்து உதவி, என்னாலும், உறவுகளினாலும் தெய்வமாக மதிக்கப் படும் என் முதலாவது மனைவி உத்தமி சுமதி அவர்களுக்கும்,

தற்பொழுது என் மனைவியாகி என்னை நான் மேற்கொண்டுள்ள அம்பாளின் அறப்பணிக்கே அர்ப்பணம் செய்திருப்பதுடன் எனது அறப்பணி களுக்கு எல்லாம் உறுதுணையாக நிற்கும் சரஸ்வதி மனோகரி அவர்களுக்கும்,

அன்புடைய மாமனும், மாமியும் என்பதற்கு உதாரணமாக என்னை வளர்த்த அமரத்துவமடைந்த தாய்மாமா குமாரசாமி, தற்பொழுது திருச்சியில் வசித்துவரும் அன்பு மாமி காந்தியம்மா, அமரர்கள் அம்மாவின் தாய் தந்தையரான சின்னத்துரை, இலச்சுமிப்பிள்ளை ஆகிய நால்வரும் எனக்குத் திருமணமாகிக் குழந்தைகளைப் பெற்றெடுத்த பின்னரும் என்னைச் செல்லமாக அணைத்துக் காத்த அவர்களுக்கும்,

எனக்கு ஆன்மீகக் குருவாக இருந்து சிவ யோகம் இங்கு தோன்றுவதற்கு என்னை ஆயத்தப்படுத்திய சுவாமி கங்காதரானந்தா அவர்களுக்கும்,

எனது ஆன்மீக வாழ்வின் ஆரம்ப காலத்தில் திருமலையில் எமது வளர்ச்சிக்குக் காரணமாக இருந்த சிவயோக சமாஜத்தைச் சார்ந்த திரு. திருமதி பராசக்தி நவரத்தினம், பண்டிதர் வடிவேல் அவர்களுக்கும்,

நாம் அறிந்த மனிதர்களில் அதிக பக்குவம் அடைந்தும், எமக்கு உதாரண புருஷனாக வாழ்ந்து வருபவருமான "காந்தி ஐயா" என அழைக்கப்படும் திருமலையில் வாழ்ந்து வரும் உயர்திரு. கந்தையா அவர்களுக்கும்,

சைவ உலகிற்கே இன்று தாயாகவும், கோயில் நிருவாகத்திற்கு உதாரணமாகவும் விளங்குபவர் சிவத் தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாகுட்டி அம்மா அவர்கள். நான் திக்கற்ற ஒருவனாகச் சில வருடங் களுக்கு முன்னர் யாழ்ப்பாணம் சென்றபோது தாய்க்குத் தாயாக ஆறுதல் கூறி, மடத்தில் தங்க வைத்து, உபசரித்து என்னை இங்கு அனுப்பிவைத்த அம்மா அவர்களுக்கும்,

எனக்குப் பல துறைகளிலும் அறிவை ஊட்டிய ஆசிரியர்கள், பெரியோர்கள், நண்பர்கள் ஆகியோருக்கும்.

சிவனையே இயக்கும் ஆதி பராசக்தியின் அம்சமான அருள்மிகு அம்மனையும் போற்றிப் பணிந்து கைகூப்பி நிற்கின்றேன்.

புனிதமான கும்பாபிஷேக விழாவைச் சைவ ஆகம விதி முறைகளுக்கமைய நடத்துவதற்கு முன்னின்றுழைக்கும் அடியார்கள், பெரியோர்கள், நண்பர்கள், அன்பர்கள், இளைஞர்கள் உட்பட எல்லாக் கடமை வீரர்களுக்கும்,

திருக்கோயில் சிவாச்சாரியார்களுக்கும்,

அறங்காவலர் சபையில் முன்னர் உறுப்பினர்களாக இருந்து பணியாற்றியவர்களுக்கும், தற்போதைய அங்கத்தவர்களுக்கும்,

எனக்குத் தேவையான நேரங்களில் அறிவுரை களையும், ஆக்கபூர்வமான யோசனைகளையும் தந்துதவும் அன்பர்களுக்கும்,

திருக்கோயில் ஆரம்பித்த காலத்திலிருந்து இன்றுவரை ஆலயத்திற்குப் பல வகைகளிலும் உறு துணையாகவும், உதவியாகவும் இருந்து செயற்பட்டு வரும் அனைவருக்கும். அவர்களது குடும்பத்தினருக்கும்,

1996 ஆம் ஆண்டில் நடைபெற்ற ஆலய கும்பாபிஷேக விழாவை முன்னின்று நடத்தி ஆசியும், அறிவுரையும் நல்கிய சிவஸ்ரீ நாகநாத சிவம் குருக்கள் அவர்களுக்கும்,

ஆரம்ப காலத்தில் ஆலயத்தின் பிரதம குருவாக

இருந்த சிவஸ்ரீ சங்கர குருக்கள் அவர்களுக்கும்,

நீங்கள் இன்று பார்த்து ரசிக்கும் ''சிவயோகம் கும்பாபிஷேக மலர்'' ஒரு புனிதமான படைப்பு. அறிவுப் பெட்டகம். கலைக் களஞ்சியம். ஆன்மீகக் கருவூலம். அறிஞர்களின் அறிவாலயம். இவ்வளவு சிறப்புகளுடனும் இம்மலரை உருவாக்கிய பெருமைக் குரியவர் மூத்த பத்திரிகையாளர் ''தமிழ் நெறிக்கிழார்'' பொன் பாலசுந்தரம் ஐயா அவர்கள்.

தமிழ் மக்கள் வதியும் ஊர்களில் வெளிவந்த மலர்களுக்கு எல்லாம் இம்மலர் தலையாய மலராக வெளிவந்திருப்பது பாலசுந்தரம் ஐயா அவர்களின் அனுபவத்திற்கும், ஆற்றலுக்கும் நல்ல உதாரணமாகும். இதுபோன்ற இன்னும் பல படைப்புகளை வெளியிட அவருக்கு அம்பாள் துணை நிற்பாளாக.

இம்மலர் சிறப்பாக வெளிவர பக்கத் துணையாகச் செயற்பட்டவர் ஸ்ரீ சத்தீஸ் ஐயா அவர்கள். ஆலயத்திற்குரிய படங்களை எல்லாம் கணினியில் பதித்தும், மலர் சிறப்பாக வெளிவரவும் அயராது உழைத்தவர்.

ஆலயத்தின் ஆரம்ப காலத்திலிருந்து அறங்காவலர் சபையின் உறுப்பினராகவும், தற்போது அறங்காவலர் சபையின் போஷகராகவும் செயலாற்றிவரும் வைத்திய கலாநிதி க. நடேசலிங்கம் அவர்களுக்கும், அவரது குடும்பத்தினருக்கும். கோயிலின் ஆரம்ப காலத்திலிருந்தும் ஆலயத்தின் பல தேவைகளுக்குக் கைகொடுத்துக் கொண்டிருக்கும் ''டயமன்ட் பலஸ்'' உரிமையாளர் திரு. செ. யோகநாதன், அருள்மிகு நாடராஜர் திருக்கோயிலுக்குக் காணியை விலைக்கு வாங்கிய காலத்தில் இருமுறை 45.000.00 பவுண்ட்ஸ், 25.000.00 பவுண்ட்ஸ் கடனாகக் கேட்ட உடன் தந்து உதவிய "Best Food" உரிமையாளர் திரு. க. கணேந்திரன் ஆகியோர்களுக்கும்,

சிவயோகக் கண்காணிப்பாளர்களான வைத்திய கலாநிதி எஸ். ஞானச்செல்வன், திருவாளர்கள் கே. வைத்தீஸ்வரம்பிள்ளை, எஸ். ஆனந்ததியாகர் ஆகியோர்களுக்கும்,

ஆலய நிருவாகத்தை இன்று பொறுப்பேற்றுச் சிறப்பாக நடத்திவரும் அன்புத் தம்பி கருணாநிதி தனது பதவியைத் துறந்து ஆலயப் பணிக்குத் தம்மை அர்ப்பணிக்க முன்வந்தமையும் அம்பாள் கருணைதான். நிருவாகத் திறனுடைய அவரின் சேவை ஆலயத்தின் புனிதமான வளர்ச்சிக்குத் தேவை. இவரின் பணிகளைக் கவனித்த ஒரு பெரியவர் என்னிடத்தில் வந்து ''இராமருக்கு இலட்சுமணன் தம்பியாக அமைந்ததைப்போல உங்களுக்கு உங்கள் தம்பி கருணாநிதி அமைந்துள்ளார்'' என வாழ்த்தி விட்டுச் சென்றார். இந்தப் பெரியவரின் வாக்கை இங்குக் குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.



இரு ஆலயங்களின் திருப்பணிச் சபைகளில் அங்கத்துவம் வகிக்கும் உறுப்பினர்களுக்கும், பிரதி வெள்ளிக் கிழமைகளில் நள்ளிரவுவரை ஆலயத்தைச் சுத்தம் செய்யும் இளைஞர்களுக்கும்,



அம்பாளையும், ஏனைய பரிவார மூர்த்திகளையும் அலங்கரிக்கும் பூமாலைகளைத் தொடர்ந்து அழகாகக் கட்டித்தரும் தொண்டினைப் புரியும் திரு-திருமதி. ப. கேதீஸ்வரன் குடும்பத்தினருக்கும்,



கடல் கடந்த நாடுகளிலும் இருந்து ''சிவ யோகத்'' தொண்டர்கள் பணியாற்றுகிறார்கள். நாகேந்திரம் கேசவமூர்த்தி (வவுனியா). நாகேந்திரம் இராசரத்தினம் (சென்னை) ஆகியவர்களின் சேவை ஆலய வளர்ச்சிக்குத் தேவை.

இன்னல்களை எதிர்கொண்ட போதிலும் அம்பாளின் பணிகளுக்குத் தம்மை அர்ப்பணித்திருக்கும் தொண்டர்கள். ஈழத்தில் ''சிவயோகம்'' மேற்கொள்ளும் பணிகளுடன் தம்மை இணைத்துக்கொண்டிருக்கும் செஞ் சொற் செல்வர் ஆறு திருமுருகன், வைத்திய கலாநிதி குகதாசன் உட்பட அவர்களுக்குப் பக்கபலமாக இருந்து உதவியவர்களுக்கும்,



ஆலயம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து ஆலயத்தில் நடைபெற்ற சமய விழாக்களிலும், முத்தமிழ் விழாக்களிலும் ஆன்மிகப் பேருரைகள், சொற்பொழிவுகள், உரையாடல்கள், பிரசங்கங்கள், பட்டிமன்றங்கள் ஆகியவற்றில் கலந்துகொண்ட அறிஞர்களுக்கும், பெரியவர்களுக்கும்.



ஆன்மிகப் பேருரையாளர் சுகி சிவம், திருமதி. சரஸ்வதி இராமநாதன், ஆறு திருமுருகன், கவிஞர் அறிவுமதி, தென்கச்சி











சுவாமிநாதன் ஆகியவர்களுக்கும், இப்படி இன்னும் பல அன்பர்களுக்கும்,

இசைவிருந்தளித்தும், ஆலயத்துக்கான இசைத் தட்டு வெளியிட்டும் உதவிய சங்கீத மேதைகள் யோகேஸ்வரன், சுதா ரகுநாதன், பூஷணி கல்யாணராமன், இராமச்சந்திரன் சந்தானம், பொன் சுந்தரலிங்கம், எம்.ஆர். விஜயா ஆகியவர்களுக்கும்,

தேர் வீதி உலா வருதலின்போது மைதானத்தில் நடைபெறும் கலை, இசை நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பித்த சிறுவர், சிறுமியர், அவர்களது அன்புப் பெற்றோர்களுக்கும்

நாதஸ்வரக் கச்சேரி செய்து மகிழ்விக்கும் அளவெட்டியூர் கேதீஸ்வரன் அவர்களுக்கும் அவரது குழுவினருக்கும்,

ஆலயத்திற்குத் தேவையான பொருள்களைத் தமிழ் நாட்டிலிருந்து தருவித்தும், விழாக்களில் பேச்சாளர்களாகக் கலந்துகொண்டு சிறப்பிக்க தமிழக அறிஞர்களை அறிமுகம் செய்துவைத்தும் உதவிய சிவானந்தஜோதி அவர்களுக்கும்,

முத்தமிழ் விழா ஏற்பாடுகளைச் சிறப்பாக மேற்கொண்டு அதை ஆர்வத்துடன் வருடா வருடம் நடத்தி வரும் கவிஞர் ப.வை. ஜெயபாலன் அவர்களுக்கும்,

ஆலய விழாக்களில் முன்னின்று உதவும் வ.இ. இராமநாதன் அவர்களுக்கும்,

சைவ முன்னேற்றச் சங்க சமயத்துறைச் செயலாளர் ஆனந்ததியாகர் அவர்களுக்கும்,

இலங்கை இந்து மாமன்றச் செயலாளர் ''நந்திக் கொடி'' சின்னத்துரை தனபாலாவும் அவர்தம் துணைவியாரும் இலங்கை எழுத்தாளர்களின் படைப்புகள் வெளிவர சிரமம் பாராமல் உழைத்த பெருமைக் குரியவர்கள். கருமமே கண்ணாக இருந்து கட்டுரைகளைப் பெற உதவியவர்கள்.

கட்டுரைகளைச் சீரமைத்தும், திருத்தங்களைச் செய்ய உதவியும், பாதுகாத்து வைப்பதில் கண்ணுங் கருத்துமாக இருந்த திருமதி. யோகேஸ்வரி பாலசுந்தரம், திருமதி. உமா கிருபானந்தன் ஆகியோருக்கும்,

ஆலயத்திற்குத் தேவையான சகல பொருள்களையும் தமிழ்நாட்டிலிருந்து அனுப்புவதில் அக்கறையுடன் செயலாற்றும் முருகன் அவர்களுக்கும்,

மலரைத் தமது படைப்புகள் மூலம் சிறப்பித்த பேராசிரியர்கள், முனைவர்கள், விரிவுரையாளர்கள், சிறப்புக் கவிஞர்கள், ஓவியர்கள் ஆகியோருக்கும்,

கோயம்புத்தூரின் (தமிழ்நாடு) கிராமப்புறத்திலிருந்து சிறந்த இளம் ஓவியர் செந்தில்குமார் என்பவரைத் தேடிக் கண்டுபிடித்து அறிமுகம் செய்து வைப்பதில் பெருமை அடைகிறோம். இவர் தமது கைவண்ணச் சித்திரங்களுடன் உங்களுக்குக் கலை விருந்தளிக்கிறார்.

''சிவயோகத்துடன்'' மிக நெருங்கிய உறவைப் பேணிவருபவர் மதுரைக் கவிஞர் இரா. இரவி அவர்கள். 2001ஆம் ஆண்டில் வெளிவந்த சிவயோகம் மலருடன் இணைந்து கொண்டவர். கட்டுரையாளர்களை நேரில் அணுகி விடயங்களைச் சேகரித்து அனுப்பி மலரைச் சிறப்பித்த அவருக்கும்.

தமிழ்நாடு சுற்றுலாத்துறைச் செயலர், மற்றும் பண்பாட்டுத் துறைச் செயலர் வெ. இறையன்பு, ஐ.ஏ.எஸ். அவர்களுக்கும்,

குடமுழுக்கு விழாவுக்காக காமாட்சி குங்குமத்தைப் பிரசாதமாக வழங்க உதவிய கோவை பி. மணி அவர்களுக்கும்,

பிழைகளின்றிச் செம்மையாக இம்மலர் வெளிவரப் பிழை திருத்தும் பணிகளை மேற்கொண்ட புலவர், வெற்றியழகன் அவர்களுக்கும், படைப்புகளைக் கணினியச்சு செய்த திருமதி. பிரேமா அவர்களுக்கும், மலரை அழகுற வடிவமைத்த மு. கார்த்திக் அவர்களுக்கும்,

குடமுழுக்கு மலரை ஒரு சிறந்த மலராக அச்சிட்டுப் பதிப்பித்துத் தந்திருப்பவர் உலகத் தமிழர் பதிப்பக உரிமையாளர் ''உழைப்புச் செம்மல்'' இரா. மதிவாணன் அவர்கள். அவரது பதிப்புத் திறமைக்கு இம்மலர் ஒரு சான்றிதழாகும். அவருக்கும்

எமது இதயம் கலந்த நன்றிகள்.

அன்னை அம்பாளின் திருவடிகளைப் போற்றி நிற்போம்.

நாகேஸ்வரம் சிவரத்தினம்
நிறுவனர்
இலண்டன் சிவயோகம்

இலண்டன்,
பெப்ரவரி 2008

SIVAYOGAM HALL



ஒளிமயமான திருமண வாழ்விற்கு
இராசியான திருமண மண்டபம்







மங்கல விளக்குகள், உணவு வசதிகள், சிறந்த ஒ அமைப்பு
அழகிய மூன்று கட்ட முத்து மணவறை
இலவச வாகனத்தரிப்பிட வசதிகள்

180-186 Upper Tooting Road, London SW17 7EJ
Tel: 020 8767 9881 | Fax: 020 8711 5333 | Contact: 020 8767 9881
Email: amman@sivayogam.org | Website: www.sivayogam.org

ஐரோப்பிய, மத்தியகிழக்கு நாடுகளில் 24 மணிநேரமும்
ஒளிரும் தமிழ் தொலைக்காட்சி

- செய்திகள்
- காலைக்கதிர்
- சின்னத்திரை தொடர்கள்
- அரசியல் ஆய்வு விவரணங்கள்
- மகளிர் - சிறுவர் நிகழ்ச்சிகள்
- நீங்களும் நாங்களும் இணையும் பல நிகழ்ச்சிகள்
- இசை நடன நிகழ்ச்சிகள்
- புத்தம் புதிய திரைப்படங்கள்

உலகத் தமிழருக்கு ஒரு தொலைக்காட்சி

DEEPAM TV

EAST WEST BROADCAST LTD
UNIT 1, EBURY BUSINESS CENTRE
161-163 , STAINES ROAD
HOUNSLOW, MIDDLESEX,
TW3 3JB, U.K.

Tel :+44(0)208 8146565
Fax :+44(0)208 8141144
E-mail : info@deepamtv.tv
Web : www.deepamtv.tv